தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1981, மே 12.

சித்திரை 30, துன்மதி திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்''

மனம் கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலந்தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மின்வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள்.

*வினா எண். 1064. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் எத்தனை?

(ஆ) மின்சார வாரியம் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதில் மேற்கொள்ளும் விதிமுறைகள் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒன்பது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் பணியாளர் தொகுதிச் சங்கங்கள் உள்ளன.

ஆ) தொழில் ஒழுங்குமுறை விதிகள் (Code of discipline (industry) மற்றும் தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்காக 1963 ஆம் ஆண்டில் வாரியத்தால் உருவாக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் தொழிற்சங்கங்கள்/பணியாளர் தொகுதிச் சங்கங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தொழிற்சங்கங்களுடைய அங்கீகாரத்திற்காக மின்வாரியத்தால் குறிப்பிடக்கூடிய சில ஒழுங்குவிதிமுறைகளை ஏற்றுக்கொண்டு அந்த சங்கங்களை அங்கீகரிப்பது என்பது இப்போது நடக்கிற முறை. அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையைப் பரிசீலனை செய்து நடத்தப்படு? கிறதா? அல்லது வேறு எந்த விதத்தில் நடத்தப்படுகிறது சங்கங்களுக்கு பேலட் வைத்து அதிலே பெருவாரியாக

128/106—1

[1981 மே 12

வோட்டு கிடைக்கக்கூடிய அவர்களை அங்கீகரிக்க அந்த ஒழுங்கு விதிமுறைகளை வைத்துக்கொண்டு அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்வாரியத்தில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 45லிருந்து 50சங்கங்கள் வரையில் உள்ளன. அவற்றில் 1963 ஆம் ஆண்டு சங்கங்களை அங்கீகரிப்பதற்கு சில விதிமுறைகள் மின்வாரியத்தாலே வகுக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் 1967 ஆம் ஆண்டு பெடரேஷன், அக்கவுன்டன்ட்ஸ் சபார்டினேட் யூனியன் அங்கீகரிக்கப்பட்டன. அதற்கு அடுத்து கோட் ஆப் டிசிப்ளின்படி அந்த சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன. பெடரேஷனைப்பொறுத்தவரையில் அவர்கள் அங்கீகாரம் கேட்டபோது வேறு எந்த சங்கமும் அங்கீகாரம் கேட்காததாலே 1963 ஆம் ஆண்டே அங்கீகாரம் பெற்று தொடர்ந்து வைத்திருக்கின்றனர். ஏ. எஸ். யு.—வைப் பொறுத்தவரையில் மெம்பர்களை வெரிபிகேஷன் பண்ணி 1969 இல் கோட் ஆப் டிசிப்ளின்படி அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கின்றன. மற்ற சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்படாமல் இருக்கின்றன. பழைய 1963 ஆம் ஆண்டு விதிகளின்படி தனியாக, வர்ஸ்ட் கிரேட் சர்வென்ட்ஸ் சங்கம், சூப்ரவைசர்ஸ் சங்கம் என்றெல்லாம் 6 சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கின்றன. மெம்பர்களைச் சரிபார்த்து கணக்குப் பார்த்து அங்கீகாரம் வழங்கப்பட்டமுறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் ரகசிய வாக்கெடுப்பிலே அதைச் செய்யமுடியுமா என்று கேட்கிறார்கள். அது கொள்கை பற்றிய பிரச்சினை,

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1963வது ஆண்டின் விதியின் பிரகாரம் 9 சங்கங்கள் அங்கீகாரம் செய்யப்பட்டதாகவும் 1969 ஆம் ஆண்டு 6 சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்டதாகவும் கூறினார்கள். அந்த 9 சங்கங்களிலே தொழில்நுட்பம் சார்ந்த அலுவலர்கள் சங்கங்கள் எத்தனை, எழுத்தர்கள் சங்கங்கள் எத்தனை, கடைநிலை ஊழியர்கள்-லைன்மேன் போன்றவர்கள் இருக்கின்ற சங்கங்கள் எத்தனை? எந்த ஆண்டிலே அவைகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தொழிலாளர்களுக்காக 1963—வது ஆண்டு விதிகளின்படி 1967 இல் பெடரேஷன் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. கணக்காயர்களுக்காக 1969 லிருந்து அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடைநிலை ஊழியர்களுக்கு 1969 ஆம் ஆண்டு அங்கீகாரம் பகுதி சர்வீஸ் அசோஸியேஷன் ரூல்ஸிலே, அங்கீகாரம் தரப்பட்டு இருக்கிறது. சூப்ரவைசர்ஸ் சங்கங்களுக்கு அங்கீகாரம் தரப்பட்டு இருக்கிறது.

1981 மே 12]

அக்கவுண்ட்ஸ் அன்ட் ஆடிட் ஸ்டாஃப் யூனியன் தமிழ்நாடு செயலகத்திலே இருக்கக்கூடிய அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரம் 70 ஆம் ஆண்டிலிருந்து தரப்பட்டிருக்கிறது. டி.என்.இ.பி. செக்ரட்டேரியட் அசோசியேஷனுக்கு 70 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. டிராப்ட்ஸ்மென் அன்ட் டிரேசர்ஸ் யூனியனுக்கு 70 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. அக்கவுண்ட்ஸ் ஆபீசர்ஸ் அசோசியேஷனுக்கும் 70 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது. என்ஜினியர்ஸ் அசோசியேஷனுக்கு 1957 ஆம் ஆண்டிலிருந்து அதாவது போர்டு உருவாவதற்கு முன்னரேயே சர்வீஸ் அசோசியேஷன் என்கிற முறையிலே அங்கீகாரம் தரப்பட்டு அது தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இரகசிய வாக்கெடுப்பு விஷயமாகக் கொள்கைப் பிரச்னை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் இப்பொழுது ஒரு ஃபேக்ட் பிரச்னைக்குப் போகிறேன். அதை வைத்துத்தான் நான் கேள்வி கேட்கப் போகிறேன். இங்கே பக்கத்தில் இருக்கும் செக்ரட்டேரியட் அசோசியேஷன்—மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கத்தினராக இருந்து கொண்டிருக்கும் அதே கேபினட்டின் கீழ் செக்ரட்டேரியட் அசோசியேஷனிலே செக்ஷன் ஆபீசர்களைப் பொறுத்தவரைக்கும் தனியாக வாக்கெடுப்பு வைத்துக்கொண்டு, கடைசியிலே அவர்களுக்கு அங்கீகாரம் வாக்கெடுப்பு அடிப்படையில் கொடுத்திருக்கும்பொழுது அரசாங்கம் வாக்கெடுப்பு என்பதை ஏற்றுக்கொண்டாகிவிட்டது என்று வந்தபிறகு, அந்த ஃபேக்டை ஏன் எலக்ட்ரிசிட்டி போர்டிலே அப்ளை செய்யக்கூடாது?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின் வாரிய ஆலோசனைக் குழுவில் பரிசிலிக்கலாம்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்கின்ற கொள்கையை ஏற்று அதுவும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அதில் எது பிரதானமுள்ள சங்கம் என்பதைத் தீர்மானிப்பதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதில் அரசுக்கு ஒன்றும் சிரமமில்லை. தொழிலாளர்கள்தான் பல சங்கங்களை வைத்துக் கொள்கிறார்கள்.

மேலசெழுவனூர் காட்டு நிலப்பகுதிகள்

*வினா எண். 1065– திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் வட்டம் மேலசெழுவனூர் ரிசர்வ் பாரஸ்டில் உள்ள இடங்களை நிலமில்லாத ஏழைகளுக்கு பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) புலன் எண். 205-ல் 424.78 ஏக்கர் சாகுபடிக்சாகப் பட்டா 1978-ல் வழங்கப்பட்டது.

(ஆ) ஆம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, அங்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் முட்செடிகள் நிறைந்து எந்தப் பலனும் இல்லாமல் இருக்கிறது, அதனை நிலம் இல்லாத, சுற்று வட்டாரக் கிராமங்களிலே உள்ள ஏழைகளுக்குப் பட்டா கொடுப்பதாகச் சொல்லி, ஒவ்வொருவரும் குறிப்பிட்ட பகுதியைச் சுத்தம் செய்த பிற்பாடு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அது ஏன் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு தெரிவிக்க இயலுமா என்று வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, ஆயிரக்கணக்கான ஏக்கர் என்றாலே அதை யாருக்கும் பட்டா பண்ணிக் கொடுக்க வேண்டுமென்ற முடிவுக்கு வரக்கூடாது ஆயிரக்கணக்கான ஏக்கர் என்று சொல்லுகின்றபொழுது 203 புலன் எண்ணில் 1735.81 ஏக்கர் ரிசர்வ் ஃபாரஸ்ட். ரிசர்வ் ஃபாரஸ்டைப் பட்டா போட்டு கொடுக்க முடியாது, அதை மத்திய அரசு கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதற்குப்பிறகு அதிலே உள்ள 204, 205 புலன் எண்களில் உள்ள நிலங்களில் 205 மட்டும்-424.78 ஏக்கர் 1978 ஆம் ஆண்டு பட்டா போடப்பட்டது. அதற்குப் பிறகு அதை என்ன செய்ய வேண்டுமென்றால், மாநில அரசு வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்பதற்காக இந்த 996.61 ஏக்கர் நிலத்தையும் 204, 205 புலன் எண்களிலே உள்ளதை அதற்காகப் பயன்படுத்திக் கொள்வதற்காக வைக்கப்பட்டது. இப்பொழுது மாநில அரசு அங்கே வெடிமருந்து தொழிற்சாலை வைப்பதை மாற்றி வடார்க்காடு மாவட்டத்தில் வைப்பதாக இருப்பதினால் இப்பொழுது அந்த இடத்தை மட்டும் பட்டா கொடுப்பதற்காக ஆவன செய்யலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, பட்டா வழங்கலாம் என்று கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே தருணத்தில் பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிப்பதாக இருந்த வெடி மருந்து தொழிற்சாலையை இன்னொரு பின் தங்கிய மாவட்டமாகிய வடார்க்காடு மாவட்டத்தோடு ஒப்பிட்டு அந்த வடார்க்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கலாம் என்று முடிவெடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிப்பதாக இருந்த அந்த வெடி மருந்துத்

[1981 மே 12]

தொழிற்சாலையை வடார்க்காடு மாவட்டத்திற்கு மாற்றியதற்கு என்ன காரணம் என்பதை அரசு அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.10]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வேண்டிய தகவல் இங்கே இல்லை. எனக்குத் தெரிந்தவரையில் சொல்ல வேண்டுமானால், முதலிலே ஏழைகளுக்கெல்லாம் பட்டா கொடுக்கப்பட்டது 1978ல். அதை 'கான்சல்' செய்துவிட்டு, அதற்குப் பிறகு அங்கே வெடி மருந்து தொழிற்சாலையைக் கொண்டு வர அரசு எண்ணி இருந்தது. ஆனால், ஏன் அப்படி தேர்ந்திரவு செய்ய வேண்டுமென்று வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற ரிசர்வ் ஃபாரஸ்டில் யாருக்கும் உபயோகப்படாதிருக்கிற நிலத்திற்கு மாற்றப்பட்டிருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ பட்டா கொடுத்ததற்காக வெடி மருந்து தொழிற்சாலையை வட ஆற்காடு மாவட்டத்திற்குக் கொண்டு சென்றதாகச் சொன்னார்கள். பின் தங்கிய மாவட்டம் என்ற கருத்தில் தான் பெரிய தொழிற்சாலை வரவேண்டுமென்ற ஆசையாலே நாங்கள் கேட்டுக் கொண்டோம். அரசும் அதற்குச் செவி சாய்த்து, மத்திய சர்க்காருடைய வெடி மருந்து தொழிற்சாலையை அங்கே ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டத்திலே குறிப்பிட்ட இடம் தவிர வேறு இடமே கிடையாதா? அதற்கு அண்மையிலே கிடையாதா? நானே எங்கள் கலெக்டரிடமும், டி. ஆர். ஓ. விடமும் வேண்டிய இடம் சிவகங்கையைச் சுற்றியும், காரைக்குடியைச் சுற்றியும் தரத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியுங்கூட, அது மாற்றப்பட்டது விரும்பத்தகாதது. மீண்டும் பரிசீலனை செய்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் உணர்ச்சிகளும், உணர்வுகளும் என்றால், வேகமான உணர்வுகளை, உணர்ச்சிகளைக் கொண்டுள்ள மாவட்டம், அவர்களுக்கு இந்த வெடி மருந்து இல்லாமல் வேறு நல்ல தொழிற்சாலைகள் வரும்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாவட்டத்தைப் பற்றி மக்களை இப்படி அமைச்சர் சொல்வது நியாயம்தானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வீரமுள்ள மாவட்டம் என்பதற்கு வேகமான உணர்ச்சிகளைக் கொண்டுள்ள மாவட்டம் என்று சொல்லியிருப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாவட்டத்து மக்களை நான் குறை கூறவில்லை. அந்த மாவட்டத்து மக்களிடத்திலே உங்களுக்கு எந்த அளவு அன்பிருக்குமோ அதிலே

எந்த அளவுக்கும் குறைவில்லாது அதிகமான அன்புள்ளவன்தான் நான் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, மிகவும் பிற்பட்ட மாவட்டம் என்பதாலே நல்லதொரு தொழிற்சாலை வருவதற்கு அரசு ஆவன செய்யும்.

திருப்பூரில் கொடிகாத்த குமரனின் உருவச்சிலை அமைத்தல்,

*வினா எண். 1066-திரு. ஏ. சந்திரசேகரன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் கொடிகாத்த குமரன் அவர்களுடைய உருவச் சிலையை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) தனியார்கள் சிலை அமைக்க முன்வந்தால் ஒப்புதல் அளித்து அதை அரசே பராமரிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: திருப்பூரில் கொடிகாத்த குமரன் அவர்களுடைய உருவச் சிலையை அமைக்க தனியார்கள் முன்வந்தால் அரசு ஒப்புதல் அளிக்கும். விதிகளின்படி, சிலை செய்து நிறுவுவது தொடர்பாக ஏற்படக்கூடிய முழுச் செலவுக்குச் சமமான தொகையை சிலை அமைப்பாளர்கள் நகராட்சியிடம் கொடுத்தால், அந்தச் சிலையின் பராமரிப்பு நகராட்சியால் கவனிக்கப்படும்.

திரு. ஏ. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, தனியார்கள் முன்வந்தால் அரசு அதை ஏற்றுச் செயல்படும் என்று சொல்லியதற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே உள்ள தனி நபர்கள் சிலை வைக்க முன்வருவதாக என்னிடம் சொன்னார்கள் அதை ஏற்று, அரசே அதைப் பராமரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கான பதிலை நான் முன்னாலேயே தெரிவித்திருக்கிறேன். அப்படி தனியார் யாராவது வைப்பது என்று முடிவு செய்து அரசுக்குத் தெரிவிப்பார்களானால், அதற்கு ஆட்சேபணை இல்லை. அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து நகராட்சியிடமாக இருந்தால், நகராட்சியிடம் அனுமதி பெற வேண்டும். அல்லது அரசு இடமாக இருந்தால், அரசிடம் அனுமதி பெற வேண்டும். அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் வந்தால் அது பரிசீலிக்கப்படும். ஆனால், ஒரு தகவலைத் தெரிவிக்கிறேன். ஏற்கனவே, திருப்பூர் நகரத்திலே, தனியார் உருவாக்கிய கொடிகாத்த குமரனுடைய சிலை ஒன்று அங்கே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே குமரன் அவர்களுடைய சிலை இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், அவருடைய சிலை அங்கே இல்லை. அவருடைய நினைவுக் கம்பம்தான் அங்கே எழுப்பப்பட்டிருக்கிறதே தவிர, ஸ்தூபி என்கிற அளவிலேதான் அதை

1981 மே 12]

அழைத்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறதே தவிர, உருவச் சிலை இல்லை. அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகரக் கழகத்தினுடைய சார்பாக, குமரனுடைய சிலை வைப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றி ஒரு வருட காலத்திற்கு முன்பே நாங்கள் தெரியப்படுத்தி இருக்கிறோம். அந்தத் தீர்மானத்தை நகராட்சி மன்றமோ, அரசோ ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது 25 வீழுக்காடுகள் பராமரிப்பிற்காகக் கட்ட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். குமரனுடைய அந்தச் சிலையை முன்னிட்டு, அதைத் தள்ளுபடி செய்கிற முறையில் அரசே அதைப் பராமரிக்கிற செலவை ஏற்றுக்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னிடத்திலே இருக்கிற தகவல்படி, திருப்பூர் நகரில் ஜீவாபாய் உயர்நிலைப் பள்ளி சாலையும் திருப்பூர் குமரன் சாலையும் சந்திக்கும் இடத்திற்கு அருகிலுள்ள குமரன் பூங்காவில் தனியார் சிலரின் முயற்சியால் ஏற்கனவே திருப்பூர் குமரனின் முழு உருவச் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அந்தச் சிலை, கையில் கொடியேந்திய வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலை தற்சமயம் நகராட்சியால் பராமரிக்கப்படுகிறது என்று தெளிவாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் சிலை இல்லை, நினைவுத் தூண்தான் இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், தெளிவாக இங்கே தகவலைச் சேகரித்துத் தந்திருக்கிறார்கள். என்றாலும், அதைப் பின்னாலே பரிசீலிக்கலாம். அப்படியே ஒரு சிலை இருந்தாலும், மீண்டும் ஒரு சிலை திருப்பூரிலே வேண்டுமென்று விரும்பினால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஓராண்டிற்கு முன்பே அரசிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேண்டுகோள் அரசிற்கு வந்ததாகத் தெரியவில்லை. அப்படி வந்திருக்குமேயானால் அதை அரசு உடனடியாகப் பரிசீலிக்கும். பராமரிப்புச் செலவு என்பது நகராட்சி ஏற்றுக்கொள்கிற செலவாகும். ஆகவே, தொடர்ந்து அந்தச் சிலை பராமரிக்கப்பட வேண்டுமானால், அதற்கென ஓரளவுக் கட்டணத்தையாவது முதலிலே செலுத்த வேண்டுமென்பதுதான் இன்றைக்கிருக்கிற விதி. தொடர்ந்து செலுத்த வேண்டுமென்பது அல்ல. அப்படிச் செலுத்தினால்தான் அதை நிறுவுபவர்களுக்கு ஒரு அக்கறை இருக்கிறது என்பதும் புலப்படும். ஆகவே, குறைந்த கட்டணத்தை முன்னாலே செலுத்துவதிலே, இவ்வளவு செலவு செய்து சிலை செய்பவர்களுக்கு ஒன்றும் சங்கடம் இருக்காது. என்றாலும், சிலை நிறுவுவது என்ற முடிவை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் அனுமதிக்கிறபொழுது அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தில் இருந்து ஈடுபட்டு உயர் நீத்து, சரித்திரத்திலே அழியாத இடம்

பெற்றவர் திருப்பூர் குமரன். அத்தகைய தியாக சீலருக்கு அரசே திருப்பூரிலே ஒரு மணிமண்டபத்தினை அமைக்க முன் வரவேண்டும். மற்ற விஷயங்களைப் போல இதைக் கருதாமல், தமிழகத்திற்குப் பெருமை தேடித்தந்தவர் என்ற முறையிலே அவருக்கு மணி மண்டபம் அரசு செலவிலேயே அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இதைப் போன்ற நினைவுச் சின்னங்கள் அல்லது உருவச் சிலைகளை அமைக்கவேண்டும் என்ற கோரிக்கைகள் இப்போது அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. இது நல்ல அறிகுறியைக் காட்டுகிறது. குறிப்பாக இந்த அரசு வந்ததற்குப் பிறகு, அப்படி தேசியத் தலைவர்களுக்கும், நாட்டிலே மிகச் சிறந்த தொண்டாற்றிய தலைவர்களுக்கும் மரியாதை வழங்குகின்றது என்கின்ற உணர்வின் வெளிப்பாடாகத்தான் அதைக் கருதுகிறோம். அப்படிப்பட்ட வேண்டுகோள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், அதைப் பரிசீலிப்பதற்கும், எந்தக் கோரிக்கைக்கு முக்கியத்துவம், முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றும், எதை நிறைவேற்ற வேண்டும் என்றும் முடிவெடுத்து அரசுக்கு அறிவிப்பதற்காக ஒரு குழு அமைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப்பட்ட குழு அமைக்கப்பட்ட தற்குப் பிறகு, அந்தக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இப்படிப்பட்ட நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, நெஞ்சிலே உரமும், நேர்மைத் திறனும் மிக்கவராக தாயின் மணிக்கொடியைக் கையிலே ஏந்தி உயிர் போகின்ற வரையில் போராடிய அந்த வீர மறவனை உலகெங்கிலும் இருந்து வருகின்றவர்கள் பார்த்துப் பாராட்டுகின்ற அளவுக்கு, ஏன் சென்னையிலேயே அரசு ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பக் கூடாது? அதை பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சித்தன் அவர்களுடைய கேள்வியின் தொடர்பான கேள்விக்குத்தான் நான் விரிவாக இப்போது பதில் அளித்திருக்கிறேன்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சி மருந்து, விதைகள் வழங்கும் திட்டம்.

*வினா எண். 1067. திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சி மருந்து மற்றும் விதைப் பொருட்கள் ஆண்டு முழுவதும் எல்லாக் காலங்களிலும் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1981 மே 12]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு சில பணப்பயிர்களுக்கும், நெல் பயிர்களுக்கும் பூச்சி மருந்து, விதை போன்ற பொருள்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. அது இப்போதும் தொடர்ந்து வழங்கப்படுகிறதா? அப்படி வழங்கப்படுகிற நேரத்தில் தேவையான மருந்து கொடுக்காமல் வேறு மருந்தை உபயோகம் அற்ற முறையில் கொடுக்கப்படுகிறது. ஆகவே அப்படிக் கொடுக்கப்படும் மானியத்தைப் பணமாகவே கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இப்போதும் நெற்பயிருக்கு புகையான் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பூச்சிமருந்துகள் 50 சதவிகிதத்தில் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. அதைப்போலவே பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பூச்சிமருந்துகள் 25 சதவிகிதத்தில் ஒரு ஹெக்டேருக்கு 30 க்கும் மேற்படாமல் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. மாநில அரசு நிதி உதவியோடு செயல்முறைப்படுத்துகின்ற பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பூச்சி மருந்துகள் 25 சதவிகிதத்தில் ஒரு ஹெக்டேருக்கு 15-க்கு மேற்படாமல் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. மானியத்தைப் பணமாகக் கொடுக்கிற உத்தேசம் இல்லை.

[முற்பகல் 9.20]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, இப்போது சில பூச்சி மருந்துகள், மற்றப்பொருள்கள் எல்லாம் மானியத்திலே கொடுப்பதாகச் சொன்னார்கள். விதைப்பொருள்கள்—ஹைபிரீட் வகைகள்—அதிகமான விலையில் இருப்பதால், அதனை வாங்கி சிறிய விவசாயிகள் உபயோகிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு டெப்போக்களில் அந்த விதைகளை லாப நோக்கத்தோடு அல்லாமல், மலிவான விலையில் விற்றால் ஏழை எளிய விவசாயிகள் அதை வாங்கிப் பயன்படுத்த முடியும். அப்படி மலிவான விலையில் விற்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, டெப்போக்கள் மூலமாக விதைகள் வழங்க ஏற்பாடு செய்தாலும் மலிவான விலையில் வழங்க முடியாது. லாப நோக்கம் இல்லாமல் கொள்முதல் விலையிலே அதனை வழங்க நாம் ஆவன செய்யலாம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, மானிய விலையில் பூச்சிமருந்துகள் கொடுப்பதில் சில தவறுகள் இருப்பதாக புகார்கள் வருகின்றன. ஆகவே மானிய விலையில் இந்தப் பூச்சி மருந்துகளை வழங்குவதைத் தவிர்த்து, அந்த மானிய விலையில் கொடுப்பதற்கு ஆகும் செலவிற்கு ஈடாக, தொகையை வைத்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்

கொள்முதல் விலையில் கூட்டிக் கொடுத்து, அரசுக்கு விற்பனை செய்யும் அனைத்து விவசாயிகளும் நன்மையடைய அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதிலே சில திட்டங்கள் மத்திய அரசின் திட்டமாக இருப்பதால் நாம் அது குறித்து பரிசீலனை செய்து முடிவு செய்ய வழியில்லை.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுபோன்ற மானிய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விதை பொருள்கள், பூச்சி மருந்துகள் திரும்பத் திரும்ப ஏற்கனவே அளிக்கப்பட்டவர்களுக்கே அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுவதால், ஊராட்சி ஒன்றியங்களில் யார் யாருக்கு எப்போது அவைகள் வழங்கப்பட்டன என்பதைக் குறித்து பெயர் பட்டியல் போர்டு வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு என்னென்ன முறைகளை, என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அவற்றை எடுப்பதற்கு அரசு முயற்சிக்கும்.

பலநிற பருத்தி உற்பத்தி

*வினா எண். 1068 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல நிற பருத்தி உற்பத்தியாவதை அரசு அறியுமா?

(ஆ) அவற்றை தமிழ்நாடு பூராவும் அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) பல நிற பருத்தி உற்பத்தியாவதை அரசு அறியும்.

(ஆ) பலநிற பருத்தியை அபிவிருத்தி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் என்றால், இந்த பருத்திகள் வியாபார நோக்குடன் பயிர் செய்யப்படுவதில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல துணிகளில் சாயம் வெளுத்துப் போய்விடுகின்றன. பல நிற பருத்தி கிடைத்தால், அந்த இயற்கையான நிறம் அப்படியே இருக்கும். சாயம் வெளுத்துப் போகாமல் இருப்பதையொட்டி, இந்த பலநிற பருத்தி விதையை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு அதிகமாக விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பல நிற பருத்தி பெரும்பாலும் ரஷ்யாவில் காணப்படுகிறது. அங்கே கூட காட்சிப்பொருளாகத்தான் அந்தப் பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறதே தவிர, சாயம் வெளுக்காமல் இருப்பதற்கு அதைப் பயன்படுத்த இயலாது. ஏனென்றால் இந்தப் பருத்தியின் சாயமும் வெளுத்து விடும்.

1981 மே 12]

மல்லிக்கருகில் பழுதடைந்துள்ள பாலம்.

*வினா எண் 1069. திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சாத்தூருக்கும் திருவில்லிப்புத்தூருக்கும் இடையே பெருவழித்துறைக்குப் பாத்தியப்பட்ட சாலையில் மல்லிக்கு அருகில் பழுதடைந்து உள்ள பாலம் 1974-75-ஆம் ஆண்டு டெண்டர் விட்டும் வேலை இன்னும் நடைபெறாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி வேலையை காலதாமதம் செய்த ஒப்பந்தக்காரர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

(இ) எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டிற்கு காண்ட்ராக்ட் விடப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, (அ) வேலை முடிந்து போக்குவரத்துக்கு அந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) காலதாமதத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு தாக்கீதுகள் கொடுக்கப்பட்டதுடன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

(இ) ரூ. 19,441.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமாக சாத்தூருக்கும் திருவில்லிப்புத்தூருக்கும் இடையே பெருவழித்துறைக்கு பாத்தியப்பட்ட மல்லிக்கு அருகில் உள்ள பாலமாகும். இந்த முக்கியமான சாலையில் உள்ள இந்தப் பாலம் கட்டுவதற்கு 7-8 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட முக்கியமான பாலமாக இருக்கின்ற இடங்களில் டெண்டர் விடாமல் அரசே அவற்றை கட்டுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது 1974—இல் அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகும். அந்தப் பணி நின்றுவிட்ட காரணத்தால், வேலைகள் துவங்கப்பட காலதாமதம் ஆகிவிட்டது. தற்போது அந்த வேலைகள் முடிக்கப்பட்டு, போக்குவரத்தும் செல்வதால், அதற்காக நன்றி சொல்லும் கடமைப்பாட்டு உணர்வோடு மாண்புமிகு உறுப் பினர்கள் இருப்பார்கள் என்று நம்புகிறேன். இதுபோன்ற பாலங்கள் நல்ல முறையில் கட்டுவதற்கான திட்டங்களைத்தான் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையிலுள்ள பல்கலை நகரை நகரியமாக்குதல்

*வினா எண் 1070 திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை பல்கலைக் கழகம் அமைந்துள்ள 'பல்கலை நகர் நகரியமாக (டவுன்ஷிப்) அறிவிக்கப்படுமா?

[1981 மே 12

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இது பற்றிய செயற் குறிப்பு ஏதும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பு. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் குடியிருப்பு—பல்கலைக் கழக நகர் என்கிற முறையில் விரிந்து, வளர்ந்து வருகிற ஒரு சிறு நகரமாக அமைந்து இருக்கிறது. அதற்கு அருகிலேயே ஆழ்வார் நகர் என்ற பெயரிலே என்.ஜ.ஓ. காலனி இருக்கிறது. இதற்குப் பக்கத்திலே நாகமலைப் புதுக்கோட்டை என்ற ஊராட்சி இருக்கிறது. வடபழஞ்சி என்ற ஊராட்சி இருக்கிறது. இவை எல்லாவற்றிலும் மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள், அலுவலர்கள் நிறையபேர் குடியிருந்து வருகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளுக்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்கின்ற வகையிலே, அதை நகரியமாக அறிவித்தால், அந்தப் பகுதி வளர்ச்சி அடைவதற்கு உதவும் என்பதால், அதை நகரியமாக ஆக்குவதற்கு இந்த அரசு மீண்டும் ஆராயுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 4(1)-ல் ஒரு ஊராட்சியை அல்லது நகரத்தை நகரியமாக்க வேண்டுமென்றால் அந்த ஊராட்சி அல்லது நகரம் தொழிலாளர் குடியிருப்பாக அல்லது சுகவாசஸ்தலமாக இருக்க வேண்டும். அவை இரண்டுமே இந்த பல்கலை நகரில் இல்லை. மேலும், வடபழஞ்சி ஊராட்சியின் ஒரு பகுதியாக இந்த பல்கலை நகர் சேர்க்கப்பட்டிருப்பதாலும், இதை தனியாகப் பிரித்தால் அந்த ஊராட்சிக்கு வருமானம் குறைந்துவிடும் என்பதாலும் மேற்கொண்டு நல்ல திட்டங்களை அந்த ஊராட்சியின் மூலம் செயல்படுத்த முடியாது என்கின்ற காரணத்தாலும் இதைப் பிரிக்க முடியாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, பல்கலை நகர் என்பது திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது, வடபழஞ்சி பஞ்சாயத்தில் அடங்கும். திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியமும் வடபழஞ்சி பஞ்சாயத்தும் அந்த பல்கலை நகருக்கு மாபெரும் தலைவர், உத்தமத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பெயரை வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த பல்கலை நகருக்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மூலக்கேள்வி பல்கலை நகரை தனியாகப் பிரித்து, நகரியமாக்கும் திட்டம் பற்றியது. பெயர் வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரியவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 மே 12]

விளவங்கோடு தாலுகாவில் குழித்துறை ஆற்றுக்குச் செல்லும் பாதையில் பயன்படுத்தப்படாமலுள்ள தார் டின்கள்

*வினா எண் 1071—திரு. டி. மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுகாவில் வெட்டுவந்தி சாஸ்தா கோயில் பக்கத்தில் குழித்துறை ஆற்றிற்கு வரும் பாதையில் நூறு டின்களுக்கு மேல் தார் பல ஆண்டுகளுக்கு முன் அடுக்கி வைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் டின்கள் கெட்டுப்போய் தார் முழுவதும் ரோடில் ஒழுகுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதனால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது?

(இ) அதற்குக் காரணமானவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ). ஆம்.

(ஆ) ரூ. 37,000

(இ) இப்பணி சம்பந்தப்பட்ட இளநிலைப் பொறியாளர் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், அரசுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை இவரிடம் வசூலிக்கத் தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. டி. மணி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்டவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். ஆனால், இன்னும் அந்தப் பகுதியிலே ஏராளமான பள்ளங்களும், உடைவுகளும் இருந்து வருகின்றன. ஆகவே, அந்த தாரை எடுத்து, அவைகளை செப்பனிட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏற்கெனவே 1978-79-ல் தேசிய நெடுஞ்சாலைக்கு தார் இல்லை என்று சொல்லி, களியக்காவிளையிலிருந்து கன்னியாகுமரி வரையிலான அந்த ரோடு பழுது பார்க்கப்படாமல், குண்டும் குழியுமாக இருந்து வருகிறது. ஆகவே, தார் போட்டு உடனடியாக அந்த ரோடு செப்பனிடப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வெட்டுவந்தி சாஸ்தாகோயில் அருகில் 241 தார் டின்கள் சேகரம் செய்து வைக்கப்பட்டிருந்தன. அவை வெளியிலே இருந்த காரணத்தால் 119 டின்கள் காலியாகி கிடக்கின்றன. அந்த 119 டின் தாரின் மதிப்பு 37,000 ரூபாய். அவை ஒழுங்காக வைக்கப்படவில்லை; வெளியிலே வைத்த காரணத்தால் நஷ்டத்தை ஏற்படுத்தியிருப்பதன் காரணமாக அங்கிருக்கிற இளநிலைப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுத்து, அவர் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அந்தப் பகுதிக்கு இன்னும் தார் தேவை என்பதால் உடனடியாக தார் அனுப்பப்பட்டு, வேலை தொடங்கப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள செய்யூர் பஞ்சாயத்தில் நடைபெற்ற கையாடல்.

*வினா எண் 1072 திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் லத்தூர் ஊராட்சி ஒன்றியம் செய்யூர் பஞ்சாயத்தில் கையாடல் நடைபெற்றுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பு எவ்வளவு?

(இ) கையாடல் செய்தவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ரூ. 30,000

(இ) செங்கற்பட்டு நீதிமன்றத்தில் போலீஸ் துறையினரால் வழக்கு தொடரப்பட்டு விசாரணையில் உள்ளது.

திரு எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, செய்யூர் பஞ்சாயத்தில் சுமார் 89,000 ரூபாய் கையாடல் நடைபெற்றதாக 1974 ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை கொடுத்திருக்கிறார். ஆனால் இன்று வரை சுமார் 30,000 ரூபாய்க்குத் தான் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த வழக்கு போடுவதில் தாமதம் ஏற்பட்டால் இந்த வழக்கில் சம்பந்தப் பட்டவர்கள் தப்பித்துக்கொள்ள வழிவகை இருக்கிறது. ஆகையால் வழக்கை துரிதமாக நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கையாடல் செய்யப்பட்ட பணம் 30,000 ரூபாய் என்றுதான் குறிப்புகள் கூறுகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 80,000 ரூபாய்க்கு மேல் என்று சொல்கிறார்கள். அது பரிசீலிக்கப்படும். அதேநேரத்தில் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் தொழில் வரி, வாகன வரி வசூல் செய்து, அதில் கையாடல் செய்துள்ளார். அவருடைய பெயர் ஏ. மாரியப்பன் என்பது. 1971 முதல் 1974 வரையிலான கணக்குகள் சம்பந்தமாக, குற்றப்பிரிவு காவல்துறையினரால் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. ஆகவே அந்த நடவடிக்கை முடியும் தருவாயில் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேனி தொகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 1073—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1981 மே 12]

தேனி சட்டமன்றத் தொகுதியில் அம்பாசமுத்திரத்தையும் கண்ட மனூரையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ஒரு புதிய பாலம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

''சட்ட மன்ற வினாவில் சொல்லப்பட்ட பாலம் அமைக்கும் திட்டம் 1981–82 ஆம் ஆண்டு இரண்டாம் பாகத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட இருக்கிறது

மருத்துவமனைகளில் 'லோகோ மார்க்' உள்ள மருந்துகளை வாங்குதல்

* வினா எண். 1074—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் ''லோகோ மார்க்' இல்லாத எந்த மருந்துகளும் வாங்கக் கூடாது என்று உத்திரவு போடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணமாக பல மருந்துகள் வாங்க முடியாமல் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க முடியாமல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது உண்மையா?

(இ) இந்த நெருக்கடியைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) உயிர்காக்கும் மருந்துகளைத் தவிர எந்த மருந்துகளும் லோகோ முத்திரையில்லாமல் வாங்கக்கூடாது என்று அரசு உத்திரவிட்டுள்ளது.

(ஆ) இல்லை

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

[முற்பகல் 9.30]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த லோகோ மார்க் உள்ள மருந்துகளைத்தான் வாங்கவேண்டும் என்ற கட்டாயமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதன் விளைவாக உயிர்காக்கும் மருந்துகள் சில சந்தர்ப்பங்களில் திடீரென்று தீர்ந்து போய் விடுவதால் அவற்றை வாங்க முடியாத ஒரு நெருக்கடி ஏற்படுகின்றது. இதன் காரணமாக சில முக்கியமான நேரங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாமல் கஷ்டம் ஏற்படுகின்றது, இதுபற்றி ஏற்கெனவே அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே சில முக்கியமான மருந்துகள் திடீரென்று தீர்ந்து போகின்ற நேரங்களில் அவற்றை வாங்குவதற்கான தாராளமான அனுமதியை அரசு அளிக்க முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கிறார்கள். இந்த முறை அமலுக்கு கொண்டுவரப் பட்டபோது ஒருகாலத்தில் அப்படிப்பட்ட சிரமங்கள் இருந்தன. ஆனால் இப்போது முன்கூட்டியே எவ்வளவு மருந்துகள் எந்தெந்தத் துறைக்குத் தேவை என்பதை எல்லாம் கவனித்து அதற்கு எவ்வளவு மருந்துகள் வாங்கவேண்டும் என்ற வகையிலே திட்டமிட்டு வாங்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே இப்போது லோகோ முத்திரையிடப்பட்ட மாத்திரைகளே ஏராளமாக இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறோம்.

The Government have approved the essential drugs for purchase by Government Medical Institutions carrying Logo. The Government have also approved the life saving drugs which may be purchased without Logo emblem.

அந்த மாதிரியாக இரண்டு பிரிவுகளாகப் பிரித்து கீழ்க்கண்ட மருந்துகளை நீங்கள் டிப்பார்ட்மென்ட் மூலமாக வாங்கலாம் என்று அரசு உத்தரவிட்டிருக்கின்றது. ஆகவே இந்தப் பிரச்சினை எதுவும் எழவில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் சில நாட்களுக்கு முன்பு கோவை சி. எம். சி. ஹாஸ்பிட்டலுக்கு வந்திருந்தபோது அவரை ஸ்டோருக்குள்ளேயே அழைத்துக் கொண்டுபோய் அங்கே இருக்கின்ற டாக்டரைக்கொண்டே நிலைமைகள் எல்லாம் விளக்கப்பட்டன என்பது அவர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். மூட்டைப்பூச்சி மருந்து சாப்பிட்டுவிட்டு அவசர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நோயாளிக்குக் கொடுக்கப்பட வேண்டிய இன்ஜெக்ஷன் மருந்து கூட அங்கே தீர்ந்துவிடுகின்ற நேரத்திலே அதை வெளியிலே வாங்க முடியாத நெருக்கடி இருக்கின்றது என்று எனக்கு அங்கிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்பவில்லை. சில சந்தர்ப்பங்களில் சில மருந்துகள் இப்படி திடீரென்று தீர்ந்துவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது உடனடியாக அந்த ஆஸ்பத்திரி சம்பந்தப்பட்ட டீன் அல்லது மேலாளர் குறிப்பிட்ட மருந்துகளை லோகோ முத்திரை பார்க்காமல் வாங்குவதற்கு திட்டவட்டமான ஒரு அனுமதியை அரசு கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே' அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். லைஃப் சேவிங் ட்ரக்ஸ் என்ற, உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நேரங்களிலே தேவைப்படுகின்ற மருந்துகளை லோகோ முத்திரை இல்லை என்றாலும் வாங்கவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கக்கூடியது கொஞ்சம் வேறுபட்டது. அதாவது காம்போஸ் என்ற

1981 மே 12]

மருந்தைப் பொறுத்தவரையிலே ஒரு குறிப்பிட்ட கம்பெனி தயாரிக்கின்ற மருந்து கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் கம்பெனியைப்பற்றி ஒன்றும் இல்லை, அதேமாதிரியான மருந்து வேறு கம்பெனிகளின் மூலம் தயாரிக்கப்பட்டு கிடைத்தாலும் அதை வாங்குங்கள் என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே இப்போது அதிலே எந்த விதமான பிரச்சினையும் இல்லை. ஏறத்தாழ 20, 29, 01, 193 ரூபாய்க்கு மருந்துகள் 1980-81 ஆண்டு வாங்கி இருக்கிறோம். இவ்வளவு மருந்துகள் வாங்கப்பட்டிருப்பதால் எந்தவிதமான பற்றாக்குறையும் கிடையாது. ஆகவே எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு இருக்கின்றது. எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. லோகோ முத்திரை இட வேண்டும் என்ற அந்த கொள்கையிலிருந்து மாறுவதாகவும் இல்லை. அந்தக் கொள்கை இருக்கிற காரணத்தால் ஆபத்தான நிலைமைகளில் மிக மிக முக்கியமாகத் தேவைப்படும் தேவையான மருந்துகளை, அந்த முத்திரையில்லாமல் வாங்காமலும் இல்லை. ஆகவே, இதில் எந்தவிதமான கொள்கை மாற்றமும் கிடையாது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மருந்துகளை வாங்கி உபயோகிப்பதிலே சில முறைகேடுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பாக இருப்பதினால், அவற்றை தவிர்க்கும் முகமாக, இயக்குநரின் மூலமாக மருந்துகளை இயக்குநர் மூலமாக மருந்துகளை வாங்க வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளதா? இனிமேலாவது அப்படி இயக்குநர் மூலமாக மருந்துகளை வாங்கி விநியோகிக்கும் முறையை அமல் படுத்த ஆவன செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அப்படிப்பட்ட பிரச்னைகள் எழக் கூடாது என்பதற்காகத்தான், இயக்குநர் லெவலிலே மருந்துகளை வாங்கி வைத்துக்கொண்டு, அவரிடத்திலிருந்து மருந்துகளை வினியோகிக்கும் முறை இருக்கலாம் என்று சொன்னது மட்டுமல்லாமல், இயக்குநர் அலுவலகங்களில் இப்படிப்பட்ட மருந்துகளுக்கான இன்டென்டை தாமதமாக சில நேரங்களில் போடுவார்கள்—அப்படி இல்லாமல், முன்கூட்டியே தேவையான அத்தனை மருந்துகளையும் என்னென்ன என்று பட்டியல் போட்டு முன்கூட்டியே வாங்கி வைத்திருக்க வேண்டும் என்று அதற்கான ஒரு அறிக்கையை நான் 2. 3. 1981 அன்று கொடுத்திருக்கிறேன்.

ஆத்தூர் நகரப் பஞ்சாயத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை

*வினா எண் 1075 திரு. சி. கேசவ ஆதித்தன்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1981 மே 12

திருச்செந்தூர் தொகுதி ஆத்தூர் நகர பஞ்சாயத்தில் உள்ள ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான மருத்துவமனையை அரசாங்கம் ஏற்று நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே இல்லை

திரு. எஸ். என். இராமசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, ஆத்தூரில் இருக்கிற பஞ்சாயத்து மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்று பொது மக்களால் நிதிவசூல் செய்யப்பட்டு, அதற்கென சுமார் 2 ஏக்கர் நிலம் கூட அவர்களால் வாங்கி அரசுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு சுமார் 4 ஆண்டுகள் ஆகியும் அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் ஏற்கெனவே இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன். பெட்டிஷன் மூலமாகவும் எழுதி கொடுத்திருக்கிறேன். ஆகவே அங்குள்ள பொதுமக்களின் நலனைக் கருதி, இந்த அரசு உடனடியாக அந்த பஞ்சாயத்து ஆஸ்பத்திரியை எடுத்து நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பஞ்சாயத்து யூனியன்களின் ஆஸ்பத்திரிகளும் சரிவர நடைபெறவில்லை, ஆகவே அந்த மருத்துவமனைகளையெல்லாம் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு கொள்கைப் பிரச்னையாக இருக்கிறது. நாம் அப்படி ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தால் எவ்வளவு செலவாகும், என்னென்ன செய்யவேண்டும் என்றெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படி இவைகள் கொள்கை ரீதியாக முடிவு எடுக்கப் பட வேண்டிய காரணத்தால் இவைகளை பார்ட் II ஸ்கீமில் சேர்காமல் நிறுத்தி வைத்திருக்கிறோம். கொள்கை அளவில் முடிவு எடுத்த பிறகு, பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனை களை அரசு மருத்துவமனைகளாக எடுத்துக் கொள்வது பற்றி நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை அரசு மருத்துவ மனைகளாக ஏற்றுக் கொள்வதற்கு என்னென்ன நிபந்தனை களைப் போட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகளைப் பற்றி இப்பொழுது பிரச்னை இல்லை. அந்த மருத்துவமனைகளுக்காக நாம் எவ்வளவு செலவு செய்யத் தயாராக இருக்கிறோம், ஏற்கெனவே எவ்வளவு செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம்

பார்க்க வேண்டியிருக்கிறது. செலவுகள் அனைத்தையும் இப்பொழுது அரசு பொறுப்பேற்றுக் கொள்வதா இல்லையா என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது.

கந்திலி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துமனை

*வினா எண் 1076 திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் கந்திலி ஊராட்சி ஒன்றியம் விஷமங்கலம், கந்திலி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவமனையாக ஏற்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் போதிய அளவில் மருந்துகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த ஒன்றியங்களில் உள்ள மக்கள் தேவையான மருந்துகள் இல்லாத காரணத்தால் அல்லலுறுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அதை அரசு மருத்துவ மனையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்தைய கேள்விக்கு நான் அளித்த விடையைத்தான் இந்த கேள்விக்கும் அளிக்க வேண்டியிருக்கிறது இதற்கு ஒரு கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டிய நிலை இருக்கிறது என்றுதான் ஏற்கனவே சொன்னேன் இந்த அரசாங்கம் ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறது. The Commissioner and Secretary to Govenment Health and Family Welfare, Commissioner and Secretary to Goverment, R. D. L. A., Director of Medical Services, Director of Rural Development, Joint Secetary (Finance). உறுப்பினர்கள் The Deput Secretaryto Govenment (Health and Family Welfare கன்வீனராகக் கொண்ட குழுவை ஏற்படுத்தியிருக்றோம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதினால் இன்னும் விவரமாக பதில் கிடைக்கிறது இப்போது.

[முற்பகல் 9·40]

ஆகவே. இந்தக் குழுவை ஏற்படுத்தி கொள்கை ரீதியாக எப்படி அணுகலாம், எந்தெந்த முறையில் பஞ்சாயத்து யூனியன்கள் சார்பாக நடத்திவருகிற மருத்துமனைகளை அரசு ஏற்றுக்கொள்ளலாம் என்று அந்த குழு பரிசீலித்து பிறகு ஒரு முடிவு எடுத்துக்கொள்கிறோம்.

[1981 மே 12

சென்னை கருணாநிதி நகரிலுள்ள செயற்கை அவயவங்கள் நிலையம்

*வினா எண். 1077—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கருணாநிதி நகரில் உள்ள செயற்கை அவயவங்கள் நிலையத்தில் (Artificial Limb Centre) 1978 முதல் 1980 வரை உடல் ஊனமுற்றோர் செயற்கை அவயவங்களுக்காக பதிந்து வைத்த நபர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் எத்தனை நபர்களுக்கு அவயவங்கள் வழங்கப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) சென்னை கருணாநிதி நகரிலுள்ள செயற்கை அவயவங்கள் நிலையத்தில் (H. L. C.) 1978 முதல் 1980 வரை செயற்கை அவயவங்கள் வேண்டுமென்று 1,177 நபர்கள் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) அதில் 576 நபர்களுக்கு இதுவரை செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டு விட்டன.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டு. ஏற்கனவே பதிவு செய்திருப்பவர்களில் பாதிப் பேர்களுக்குக்கூட இந்த செயற்கை அவயவங்கள் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்த ஊனமுற்றோர் ஆண்டிலாவது பதிவு செய்துள்ள அத்தனை ஊனமுற்றோர்களுக்கும் இந்த செயற்கை அவயவங்கள் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இதற்கு ஏராளமான தொகை செலவாகிறது. ஒரு நபருக்கு ஏறத்தாழ ரூ. 500—ல் இருந்து ரூ. 1000 வரை செலவாகிறது. நாம் வாங்குகிற தொகை ரூ. 25 சிலநேரங்களில் அதைக் கூட வாங்க முடியாமல் இருக்கிறோம். ஆகவே இவ்வளவு தொகை செலவாவதால் இந்தச் சங்கடம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுமாதிரி இந்த ஆண்டிலாவது அதை கொஞ்சம் அதிகமாக, 600 பேர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது, அதில் 300 பேர்களுக்காவது கொடுப்பதற்கு இந்த ஆண்டு ஏற்பாடு செய்யலாமா என்பதுபற்றி சிந்தித்துக்கொண்டு இருக்கிறோம், யோசனை செய்துகொண்டிருக்கிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன்: ரூ. 500-ல் இருந்து ரூ. 1000 வரை ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒரு மனிதபிமான உணர்வோடு, அவர்கள் வாழ்க்கையில் நொந்திருக்கிற சூழ்நிலையில், அவர்கள் அத்தனை பேர்களுக்கும் அதாவது அந்த 600 பேர்களுக்கும் உடனடியாக வழங்

க

1981 மே 12]

அரசாங்கம் இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? அந்த 600 பேர்களுக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் மறு பரிசீலனை செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நிச்சயமாக பரிசீலிக்கும்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு குமுளியில் பணிமனை கட்டும் திட்டம்

*வினா எண். 1078. திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமுளியில் பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் நிற்பதற்கு டிப்போ கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

பாண்டியன் சாலைப் போக்குவரத்து கழகத்திற்குச் சொந்தமான பணிமனை ஒன்று ஏற்கெனவே குமுளியில் உள்ளது. அங்கு ஒரு பேருந்து நிலயம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்று மேற்படி கழகத்தின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஆர். டி. கோபாலன்: அங்கே பல்லவன் டிப்போ முதலில் இருந்தது. அதை இப்பொழுது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் எடுத்துள்ளது. ஆனால் அங்கே பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. ஆகவே அந்தப் பேருந்துகள் நிற்பதற்கு வேண்டிய வசதிகள், ஏற்பாடுகள் செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் சார்பாக அங்கே ஒரு பணிமனை இருக்கிறது. அதில் 11 பேருந்துகள் இப்போது நிற்கின்றன. ஆனால் பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தப்படுகிற பஸ்கள்—பஸ் ஸ்டாண்ட் இல்லை என்ற காரணத்தால் இப்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதற்காக பணத்தை ஒதுக்கி ஏறக்குறைய ஐந்து ஏக்கர் நிலம் அதற்கு தேவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டிருக்கிறது.

அரசுப் பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்லுவதை தடுக்கும் திட்டம்

வினா எண். 1015—திரு. த. வேணுகோபால்: மற்றும் திரு. இரா. தாமரைக்கனி:— மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

[1981 மே 12

அரசு பஸ்களில் ஓவர் லோடு ஏற்றுவதை தடுக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அனுமதிக்கப்பட்ட பயணிகளுக்கு மேல் பேருந்துகளில் ஏற்றிச் செல்லக் கூடாது. இதனை மீறினால் மோட்டார் வண்டிகள் சட்டம் 60 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்து உரிமத்தினை கான்சல் செய்யவோ அல்லது தற்காலிக நீக்கம் செய்யவோ போக்குவரத்து அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க விதி செய்யப் பட்டுள்ளது. விழாக் காலங்கள் மற்றும் பண்டிகை நாட்களில் அனுமதிக்கப்பட்ட பயணிகளுக்கு மேல் குறிப்பிட்ட பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதியளிக்கவும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றை மீறி, அதிக பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளை போக்குவரத்துத் துறை அலுவலர்கள் மூலமாக தணிக்கை செய்து அவர்களின் சோதனை அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: அரசாங்கப் பஸ்களில் ஓவர்லோடு ஏற்றி வசூல் செய்த தொகையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசுக்குக் கட்டியிருக்கிறார்களா? அப்படிக் கட்டாதவர்கள் மீது எவ்வளவு பேர்கள் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஓவர்லோடு போடுவதன் மூலம் வருகிற வருமானத்தை அரசாங்க அதிகாரிகள் வசூலிப் பதற்கு எந்த அதிகாரமும் இல்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு இருக்கிற உரிமத்தை ரத்து செய்யலாமே தவிர அந்தப் பணத்தை வசூல் செய்யமுடியாது. நீதிமன்றங் களுக்குப் போகிறபோது அவர்களுக்கு வேண்டுமானால் அங்கே அபராதம் என்ற முறையில் விதிக்கப்பட்டு அது வசூலிக்கப் படுகிறது. அதிகாரிகள் நேரடியாக வாங்கமுடியாது, வாங்கினால் தவறுகள் ஏற்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மோட்டார் வாகன ஆய்வாளர்களும் ஆர்.டி.ஓ.க்களும் அரசாங்கப் பேருந்துகளில் ஓவர்லோடு ஏற்றினால் கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் தனியார் பஸ்களில் ஓவர்லோடு போடுவதை அனுமதிக் கிறார்கள். அதற்கும் கடுமையான முறையில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதிகாரிகளைப் பொறுத்தவரை நாம் எந்தப் பேருந்துகளிலும் ஓவர்லோட் ஏற்றக்கூடாது என்று தகவல் கொடுத்திருக்கிறோம். அதிக எண்ணிக்கை இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1981 மே 12]

அதிலே, அரசாங்சப் போக்குவரத்துக் கழகத்தை விட்டு விடுவதில்லை. அரசாங்க போக்குவரத்து என்ற அடிப்படையிலே அதிக நடவடிக்கையும் எடுக்கக்கூடாது. சரிசமமான நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவல் வந்து கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த அரசு பஸ்களில் ஓவர்லோட் சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட கொள்கையை வைத்திருப்பதாக அமைச்சர் சொன்னார். நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த ஓவர்லோட் சில பகுதிகளிலே கடுமையாக்க வேண்டியிருக்கிறது; சில பகுதிகளிலே அதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. மலைப் பிரதேசங்களைப் பார்க்கும்போது கண்டிப்பாக ஓவர் லோட் இருக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்தவும் சில ஊர்களுக்கு போக்குவரத்து வசதியற்று இருக்கும் ஊர்களுக்கு, பொதுமக்கள் கடைசி பஸ்களில் போகவேண்டியிருப்பதால், அவர்களை ஓவர் லோட் இருந்தாலும் அனுமதிக்கும்படியான கொள்கையை அரசு அனுஷ்டிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நாம் ஒரே ஒரு கருத்திற்கு இரு வேறு கொள்கையைக் கொண்டு வர முடியாது என்று சொன்னாலும், நடைமுறையில் பல இடங்களில் அப்படித்தான் வைத்திருக்கிறோம். சட்டப்படி ஓவர்லோட் ஏற்றக்கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தாலும், பல இடங்களில் பொதுமக்கள் ஏறிக் கொண்டால், அதைத் தடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆனால், மலைப்பாங்கான பகுதிகளில் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஓவர்லோட் ஏற்றுவதில்லை. ஏறினாலும் நடத்துனர்கள் அதை அனுமதிப்பதில்லை.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, சிடி பஸ்களில் ஓவர்லோட் ஏறுவதால், நடத்துனர்கள் டிக்கட் கொடுக்க முடியாத நிலையில், சில நேரங்களில் அவர்கள் *** ஆக்கப்பட்டு, பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள். அந்தக் குறையைப் போக்க அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியபடி, அவர்கள் ஓவர்லோட் ஏற்றவேண்டுமென்ற உணர்வோடு செய்வதில்லை. அங்கு வருகின்ற பொதுமக்கள் உடனடியாகப் போகவேண்டுமென்ற காரணத்தினால், வேறு பேருந்து வருகின்றவரை பொறுத்திராமல், அதிலேயே ஏறவேண்டுமென்ற நிலை ஏற்படுவதன் காரணமாக, அப்பேர்ப்பட்ட குறைகள் பல இடங்களிலே நடக்கிறது இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆகவே, இந்தக் குறையைப் போக்குவதற்குத்தான் பேருந்துகளில் இரண்டு நடத்துனர்கள் வேண்டுமென்ற முறையையும், அதேபோன்று அதிகமான

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க் அகற்றப்பெற்றது.

பேருந்துகள் விடுகின்ற ஏற்பாட்டையும் நாம் நடைமுறையில் செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் இதற்கு முடிவுக்காண திட்டம் போட்டு, செயலாற்றிக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் நிலையங்களில் அரசு பஸ்களும், தனியார் பஸ்களும், ஒன்றாக போக்குவரத்து வேலைகளைச் செய்கின்ற காரணத்தினால், தனியார் பஸ் முதலாளிகள் புரோக்கர் என்று சொல்லக்கூடிய ஆட்களை நியமித்து, அரசு பஸ்களில் பயணிகள் ஏறாமல் தடுத்து வருகின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிலைமை பேருந்து நிலையங்களில் இல்லாமல், அவர்களை வெளியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? உதாரணமாக, வேலூர் பஸ் நிலையத்திலே இப்படிப்பட்ட நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, புரோக்கர் என்று வைத்துக் கொண்டு, வருகின்ற பயணிகளை எந்த வண்டியில் போய் ஏற வேண்டுமென்று சொல்வதற்காக வைத்திருக்கிறார்கள். அதைத் தடுக்க முடியாது. ஆனால், நம்முடைய பேருந்துகளில் ஏறுவதைத் தடுப்பார்கள் என்று சொன்னால், கடுமையான நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருக்கிறது. அதை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய நடத்துநர்கள் அப்படி விடுவதில்லை என்ற தகவல் இருக்கிறது. எனவே, தனியாக அதைப்பற்றித் தகவல் சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *** ஆக்கப்பட்டு என்று உறுப்பினர் வின்சென்ட் அவர்கள் பேசும்போது சொன்ன வார்த்தையில் *** என்பதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.

*வினா எண். 1016—திரு. சி. கோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாகளுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் பரிசிலனையில் உள்ளதா?

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 மே 12]

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) ஆம்.

(ஆ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஒன்றை அமைத்து அதற்கான விண்ணப்பத்தினை துணைப் பதிவாளர் கூட்டுறவு சங்கம் கடலூருக்கு அனுப்பியுள்ளது. சங்கம் பதியப்பட்டவுடனும், மனைகள் கிடைத்தவுடனும் வீடு கட்டும் பணியை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கும்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல போக்குவரத்து நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கி வந்தாலும், அந்தப் போக்குவரத்துக் கழகங்களில் எல்லாம் இப்படிப்பட்ட வசதிகளை தொழிலாளர் களுக்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை நல்ல முறையில் நடத்திச் செல்லப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, உடனடியாக அந்தத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறேன். ஒரு தனி அதிகாரியை நியமித்து, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் குறைந்தபட்சம் 100 வீடுகள் கட்டவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலும் 300 வீடுகள் கட்டுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 9.50]

21-2-1981 அன்று இந்த சங்கம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே நடவடிக்கை தீவிரமாக எடுக்கப்படும்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து தொழிலாளர்கள் தங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை எந்த ஆட்சிக் காலத்தில் வைத்தார்கள்? முதல் கட்டமாக எந்த போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கு, எவ்வளவு மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, போக்குவரத்து தோன்றிய காலத்திலிருந்து இந்த கோரிக்கைகள் இருக்கின்றன. ஆனால் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே மட்டும்தான் இதற்கான நடவடிக்கை முதன் முதலாக எடுக்கப் பட்டது. எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டது என்று கணக்குகள் எல்லாம் என்னிடத்தில் இல்லை. காரணம்

பொதுவாக இல்லாமல் தனிப்பட்ட முறையிலே கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. எனவே விவரங்கள் இல்லையென்று சொன்னாலும், சேரன் போக்குவரத்துக் கழகம்தான் முதன் முதலில் அதற்கான முழு முயற்சியை எடுத்தது என்பதை சொல்ல முடியும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற வீடு கட்டித் தரும் திட்டம் பல்லவன் போக்குவரத்துக் கழகம் புறநகர் பிரிவிற்கும் விரிவு படுத்த செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒட்டுமொத்தமாக சொல்லிவிடுகிறேன். ஒன்பது போக்குவரத்துக் கழகங்களுக்கும் அதை விரிவுபடுத்துகிற திட்டம் இருக்கிறதென்று சொல்லி நடந்துமுடிந்த மானியத்திலே 27-ம் தேதி சொல்லியிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கான படகு போக்குவரத்துப் பணி.

*வினா எண் 1017 திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டி விவேகானந்தர் நினைவுச் சின்னத்திற்கு செல்லும் படகு போக்குவரத்தை நிறுத்துவதாக அறிவித்து உள்ளதா?

(ஆ) இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கமிட்டி அமைக்கப் பட்டதா?

(இ) படகு போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி படகுத்துறையில் மணலைத் தூர் வாரி எடுப்பதில் உள்ளூர் மீனவர்களுக்கும் விவேகானந்தா கேந்திரத்தினருக்குமிடையே தகராறு இருந்து வருகிறது. இப்பிரச்சினையில் ஒரு நிரந்தரத் தீர்வைக் காண ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடுத்த அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

1981 மே 12]

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவரவர்களே, கன்னியாகுமரி விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டிக்கும், அங்கேயுள்ள மீனவர் சங்க பிரதிநிதிகளுக்குமிடையே ஏற்கனவே சிறிது காலமாக தகராறு இருந்து வருகிறது. இந்த தகராறை தீர்ப்பதற்காக எத்தனை முறை பேச்சு வார்த்தை நடத்தப் பட்டிருக்கிறது? அதைப்போல அரசு அந்த விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டிக்கு பேக் வாட்டர் வால் கட்டுவதற்கும், இன்னும் ஏனைய உதவிகளுக்காகவும் எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இரண்டு முறை அங்கேயிருக்கிற விவேகானந்தா கேந்திர பொறுப்பாளர்களுடன், மீனவத் தலைவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவர்களை இரண்டு முறை சந்தித்து இருக்கிறார்கள். அதற்கு பின்னால் அதிகாரிகள் மட்டத்திலே இதற்கான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. பேச்சு வார்த்தைகளில் சுமூகம் ஏற்படுகிற அளவிற்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு பணம் எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது என்பதை கேட்டார்கள். நிரந்தரமாக சில வேலைகளைச் செய்ய இப்போது திட்டங்கள் போடப்பட்டிருக் கிறதேயொழிய செலவழிக்கப்படவில்லை. ஆனால் தற்காலிகமாக சில நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒரு இலட்சத்து நாற்பது ஆயிரம் ரூபாய் நாம் செலவழித்திருக்கிறோம். இன்னும் கூட பல்வேறு திட்டங்களை அந்த குழு கொடுத்திருக்கிறது. இன்னும் ஒரு அறிக்கையை அவர்கள் கொடுப்பது பாக்கியாக இருக்கிறது. அது வந்தபிறகு முழுமையாக விவரங்களை சொல்ல முடியும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு தலைவரவர்களே, விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டியின் சார்பில் இப்போது போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஓட்டிக்கொண்டிருக்கிற அந்த இரண்டு படகுகளும் பழுது பட்டு விட்டதென்று சொல்லி படகு போக்குவரத்தை அவர்கள் நிறுத்தி விட்டதாகக் கூட அவர்கள் அறிவித்து இருந்தார்கள். பாராளு மன்றத்திலே ஒரு மத்திய அமைச்சர் ஒரு உறுப்பினருடைய கேள்விக்கு, படகு நாங்கள் இலவசமாக கொடுத்திருக் கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த படகு, அந்த படகு போக்குவரத்தை ஆரம்பித்த சமயத்திலே, சுமார் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட படகு. அதுதான் இப்போது பழுதடைந்து இருக்கிறது. ஆகவே விவேகானந்தா ராக் மெமோரியல் கமிட்டி நம்முடைய அரசிடம் மறுபடியும் நல்ல முறையிலே படகு போக்குவரத்தை நடத்த வேண்டுமென்பதற்காக ஏதாவது உதவியை கேட்டிருக்கிறதா? இல்லையெனில் பழுது பட்ட படகுகளை சரி செய்து தருவதற்காக என்ன உதவியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல

அந்த கேந்திரத்தின் சார்பில் என்னென்ன உதவிகள் அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அந்த படகு இப்போது கொஞ்சம் பழுது பட்டிருப்பது என்பது உண்மைதான். தமிழக அரசைப் பொறுத்தவரை அவர்களுக்கு என்னென்ன உதவிகள் வேண்டுமோ அதை செய்வதற்கு தயாராக இருக்கிறோம். காரணம் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் அங்கே வந்து கொண்டிருக்கிற காரணத்தால் அதற்கான உதவிகளை செய்கிறோம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அவர்களுக்கென்று தனியாக ஒரு படகு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இப்போது அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு பின்னால் இருக்கிற பிரச்சினைகள் எல்லாம் சாதாரண பிரச்சினைகள். நாம் ஒரு படகை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று பார்த்த போது பொருத்தமான படகுகள் நம்மிடத்திலே இல்லையென்ற நிலைமை இருக்கிறது. அதற்காக தான் இந்த இடத்தை மாற்றியமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக இந்தப் பிரச்சினைகள் தானாகத் தீர்ந்துவிடும் என்று நம்புகிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது டெக்னிக்கல் குழு அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அங்கே அந்த மீனவ சமுதாய மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் மனக்கருத்து வேறுபாடு ஏற்பட்டு தகராறு இருந்தது. குழு அமைக்கப்பட்டதே, அந்த குழுவில் அறிக்கை மூலமாக இரண்டு தரப்பார்களுக்கும் சமரசம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டதா? முதலமைச்சரைச் சந்தித்ததற்குப் பிறகு என்ன முடிவு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்த பின்புதான் அந்தக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு சில அறிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் ஒரு கோப்பிலே உத்தரவிட்டிருக்கிறார்கள், அறிக்கைகள் முழுமையாகக் கிடைக்கிற வரையில் இதை வெளியிடக் கூடாது., வெளிவந்தால் சில கருத்து வேறுபாடுகள் உருவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள், முழுமையான அறிக்கை கிடைத்ததற்குப் பிறகு தெரிந்து கொள்ளலாம். ஆனால் ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கான வாய்ப்பு எங்களுக்கு தென்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: விவேகானந்தா ராக் மெமோரியலில் அந்த ஊர் மக்களுக்கும் அந்த கமிட்டிக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் அங்கே

1981 மே 12]

நினைவாலயத்தைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே அங்கே ஒரு பாலத்தை அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இங்கே தன்னந்தனியாக செய்யமுடியுமா செய்யமுடியாதா என்றெல்லாம் சொல்ல முடியாது. அதற்காகத்தான் குழுவை அமைத்திருக்கிறோம். அந்தக் குழுவின் பரிந்துரை என்ன என்று பார்த்து நாம் கருத்துக்களைச் சொல்ல முடியும். அரசு, வேண்டுமானால் இங்கே தெரிவிக்கபட்ட மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளை அந்தக் குழுவுக்கு அனுப்பி வைக்கலாம்.

மாதவரம் பால் பண்ணை

* வினா எண் 1018—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் மில்க் காலனியில் உள்ள கறவை மாட்டுத் தொழுவங்களில் எத்தனை கறவை மாடுகள் தங்க வசதியுள்ளது?

(ஆ) அவற்றை எத்தனை உரிமைதாரர்கள் பயன்படுத்துகின்றனர்?

(இ) மொத்தம் அங்கு தற்போது உள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:

(அ) 4000 கறவை மாடுகளும், 800 பால் வற்றிய கர்ப்பமுள்ள மாடுகளும் மாதவரம் அரசு பால் பண்ணையிலுள்ள 8 மாட்டுத் தொழுவங்களிலிருக்க வசதியுள்ளது.

(ஆ) தனியார்	14
பட்டதாரி உரிமைதாரர்	7
மொத்தம்	21

(இ) தற்போதுள்ள கறவை மாடுகளின் எண்ணிக்கை 241,

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, மாதவரம் மில்க் காலனியிலே உள்ள தொழுவத்திலே 4,800 மாடுகள் இருப்பதற்கான எல்லா வசதிகளும் மற்றவைகளும் கட்டடங்களும் இருக்கின்றன. ஆனால் 241 கறவை மாடுகள்தான் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்தத் தொழுவத்திலே 4 ஆயிரம் கறவை மாடுகளைக் கட்டி பராமரிக்கக்கூடிய வகையிலே வருவதற்கு நிறைய விவசாயிகளோ அல்லது பால் உற்பத்தியாளர்களோ தயாராக இருந்தும் அவர்களுக்கு கடன் வசதிகள் போன்ற மற்ற வசதிகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செய்து கொடுக்காததால் தான் வராமல் இருக்கிறார்கள், இவ்வளவு செலவு செய்து பெரிய காலனி அமைத்தும் வர வில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கே 4,800 கறவை மாடுகளை வைத்து பராமரிப்புச் செய்து அதிகமான பாலை உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே அங்கே கடன் வசதி கள் பராமரிப்புக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; தலைவர் அவர்களே உரிமைதாரர்கள் கடன் பெற்றவுடன் அந்தக் கடனைத் திருப்பிச் சரியான முறையிலே கொடுக்கவில்லையென்றால் உரிமதாரர் களுக்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க மாட்டார்கள். கடன் பெறுவது மட்டுமல்ல, திருப்பி நல்ல முறையிலே செலுத்தினால் தான் வேண்டிய உதவிகளை செய்து கொடுப்பார்கள். அந்த வகையில் மாதவரத்தில் டி.பி.யினால் மாடுகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பால் பெருக்குப்பண்ணை நோயுற்ற கால்நடைகளினால் கடுமையான பிரச்சினைக்கு ஆளாகியது. எனவே தற்போது உள்ளது போலவே இப்பண்ணை தொடர்ந்து செயல்பட வேண்டுமா என்பது பற்றி பரிசீலிக்க அரசு முடிவு எடுத்து, மாதவரம் பால் பெருக்குப பண்ணை மற்றும் கால்நடை குடியிருப்பு செயல்படும் விதம் குறித்து விரிவாக ஆராயும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையை விரிவாக ஆய்ந்த பின்னர் அரசு தனது அரசாணை எண். 669, நாள் 31-3-1979-ல் தற்போதுள்ள உரிமம் பெற்றவர்களும், பட்டதாரி, மெட்ரிகுலேட் கால்நடை உரிமையாளர்களையும் மட்டுமே தொடர்ந்து இருக்க அனுமதிக்கலாமென்றும், புதிதாக யாரையும் இவ்விடத்தில் அனுமதிக்க வேண்டாமென்றும் ஆணை பிறப்பித்தது.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மேலும் இப்பண்ணை கால்நடை குடியிருப்பு மற்றும் பசுந்தீவனப் பண்ணை, இங்கு பணியாற்றும் ஊழியர்கள் அனைவரையும் பால் பெருக்குத் துறை யிலிருந்து கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றியது. அடுத்து, எலும்புருக்கி வியாதியினால் இப்பண்ணையிலுள்ள கால் நடைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு இக்கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. எலும்புருக்கி நோயை விரட்ட ஸ்கீரினிங் குழுவின் ஆலோசனையின்படி ''பாங்கிங் முறைப்படி' நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. அதேபோன்று மற்றப் பகுதிகளில் நிறைய நிலமும் 4000 கால்நடைகள் பராமரிக்க வசதிகளும் இருப்பதால் அவற்றில் நோய்க் கிருமி நாசினி முறை கள் மாற்று வரிசைக் கிரமமாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அந்த நோயினால் பாதிக்கப்பட்டு நிறைய மாடுகள் காணப்படுவதால் அதை இடபொழுது பெருக்கும் வசதி இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால்பண்ணையை, பம்பாயிலுள்ள ஆர்ரே பண்ணை மாதிரிப் பெரிதாக்க வேண்டுமென்றுதான் ஆரம்பக் காலத்திலே துவக்கப்பட்டது. இப்போழுது சமபத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களோடு அங்கே போய் பார்த்தோம். அங்கே நல்ல வசதிகளோடு அதிகமான பால் கறக்கும் தரமுள்ள பசுக்களை வளர்த்து வருகிறார்கள். ஆகவே, தனிப்பட்ட உரிமைதாரர்கள் வரவில்லை என்றாலும்கூட அரசே நம்முடைய கால்நடைத் துறையின் மூலமாக அங்கேயுள்ள வசதிகளையும் மற்றவைகளையும் பயன்படுத்தி அதிகமான கறவை மாடுகளை வாங்கி வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பம்பாயிலுள்ள பால்பண்ணையைப் போல இங்கே பெருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்பண்ணையைக் கால்நடைப் பராமரிப்புத் துறை பொறுப்பு ஏற்கும்போது 18 உரிமைதாரர்களும் 12 பட்டதாரி உரிமைதாரர்களும் இருந்தனர். புதிய உரிமைதாரர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் கூடாது என்று தடை இருந்ததினால் உரிமைதாரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. சில உரிமைதாரர்கள் தங்களது உரிமத்தை ரத்து செய்து விட்டுச் சென்றுவிட்டனர். தற்போது 14 உரிமைதாரர்கள் உள்ளனர். பொறுப்பேற்றபின் 5 பட்டதாரி உரிமைதாரர்கள் கால்நடைகளைச் சரிவர பராமரிக்காமல் இருந்ததினாலும் பண உதவி செய்த வங்கிகளுக்குச் சரிவர தொகையினைக் கட்டாததினாலும் அவர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. தற்போது 7 பட்டதாரி உரிமைதாரர்கள் உள்ளனர். ஆகவே அவர்களுடைய கால்நடைகளைச் சரியான முறையில் பராமரிக்காத காரணத்தால்தான் அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்பட்டது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கப்பலூரிலுள்ள கோழிப்பண்ணை

* (வினா எண். 1019) திரு என். எஸ். வி.சித்தன்; மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் கப்பலூரிலுள்ள கோழிப்பண்ணை நட்டத்தில் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூர், டாப்கோ குஞ்சு பொரிக்கும் நிலையம் லாபத்தில் இயங்குகிறது. 1,4.80 முதல் 31-1-81 முடிய ரூ. 32,000- லாபம் ஈட்டியுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலுள்ள கட்பலூரில் இருக்கின்ற கோழிப்பண்ணை நீண்ட நாட்களாக நட்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த காரணத்தாலே தான் இப்படிக் கேள்வி கேட்கப்பட்டது. இப்பொழுது இலாபத்தில் இயங்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள், மெத்த மகிழ்ச்சி. இந்தக் குஞ்சு பொறிக்கும் நிலையத்தை இந்தப் பண்ணையை மேலும் விரிவாக்குவதற்காக அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய இருக்கிறதா? இந்த நிலையத்திலிருந்து கோழி இறைச்சி மலிவான விலையில் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது: அது இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் மீண்டும் துவக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குஞ்சு பொறிக்கும் வீரியத்தை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. அடுத்து, இந்த இறச்சியைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசுக்குத் தெரிந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோழி இறைச்சி விற்பனை என்பது நீண்ட நாட்களாக செய்யப்பட்டு வந்தது; ஆனால் இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குஞ்சு பொறிக்கும் நிலையத்தைப் பொறுத்தவரையிலும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த விவரத்தை சொல்ல முடியுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது விவரம் இல்லை. விவரம் தெரிந்தவுடன் நான் கூறுகிறேன்.

*சின்னசேலத்தில் கட்டப்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையம்

குறுகிய கால வினா எண். 16—திரு எஸ். சிவராமன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்ன சேலத்தில் கட்டப்பட்டு வரும் பால் குளிரூட்டும் நிலையம் எப்பொழுது துவங்கப்படும்?

ஆ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி;

(அ) சின்ன சேலத்தில் தற்பொழுது கட்டப்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையத்தில் கட்டுமானப் பணிகளும் இயந்திரங்கள் நிறுவுதலும் முடிவடைந்து, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இக்குளிரூட்டும் நிலையம் விரைவில் முழு அளவில் இயங்க ஆரம்பிக்கும்.

1981 மே 12]

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 10 இலட்சமாகும். இதில் கட்டுமானப் பணி ரூ. 5 இலட்சம். இயந்திரங்கள் ரூ. 5 இலட்சம்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே பால் குளிரூட்டும் நிலையம் விரைவில் இயங்கப்படும் என்று சொன்னார்கள், மிக்க நன்றி. ஆனால், அங்கே பால் குளிரூட்டும் நிலையத்தினுடைய கொள்ளளவு, 30,000 லிட்டர் பால் வாங்குவதாக திட்டம் இருக்கிறது. ஆனால், தற்சமயம் 15,000 லிட்டர்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் ஆத்தூர் பகுதியிலிருந்து 9,000 லிட்டர் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆத்தூரிலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் கட்டுவதாக எண்ணம் இருக்கிறது. அதைக் கட்டுவதனால் அங்கேயிருந்து வருகிற 9,000 லிட்டர் பால் நின்றுவிடும். ஆகவே அதைப் போக்குவதற்கு அந்தப் பகுதியிலே உள்ள விவசாய பெருமக்கள் கறவை மாடுகள் வாங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அதே சின்னசேலம் பகுதியிலேயிருக்கிற விவசாயிகளுக்கு நன்மை தருகிற வகையில், அதிக அளவுக்குச் சின்னசேலம் குளிரூட்டும் நிலையம் துவக்கிய உடன் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்க இருக்கிறோம். அதன் காரணமாக அந்தப்பகுதியில் மட்டும் ஏறத்தாழ 15,000 விவசாயிகளை உள்ளடக்கிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, அவர்களிடமிருந்து பாலைப் பெற்று அந்த நிறுவனம் இயங்கும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே நேரத்தில் அங்கே பணியாற்றக்கூடிய கால் நடை டாக்டர்களும் இன்ஜினீயர்களும் இருக்கிறார்கள். இப்பொழுது கட்டக்கூடிய நிலையமானது சின்னசேலத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திலே இருப்பதால், அதிலே பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்கு அந்தப்பால் குளிரூட்டும் நிலையத்தின் அருகில் வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வுகளைக் கருத்திலே கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத்தலைவர் அவர்களே, பால் குளிரூட்டும் நிலையங்களின் மூலம் சேகரிக்கப்படும் பாலானது மின்தடை ஏற்படக்கூடிய காலங்களில் எல்லாம் கெட்டு விடுகின்றது. அதனால், சின்னசேலம், ஆத்தூர் போன்ற பகுதிகளிலிருந்து சேலத்திற்கு வரவேண்டிய பாலில் ஒரு நாளைக்கு 2,000 , 3,000 லிட்டர்கள் கெட்டு விடுகின்றது. ஆகையால், இம்மாதிரி மின் தடைகள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு ஜெனரேட்டர்களை வைக்கக்கூடிய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண்கள் 17 ம், 18-ம் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சந்தனமர ஏற்றுமதிக்கான தடை.

* குறுகிய கால வினா எண் 17.—திரு. ப. நெடுமாறன் : மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து சந்தனக்கட்டை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு விதித்திருந்த தடை அகற்றப்பட்டு விட்டதா ?

(ஆ) இது சம்பந்தமாக மத்திய அரசிடம் இருந்து வந்த பதில் என்ன ?

* குறுகிய கால வினா எண். 18 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சந்தனமர ஏற்றுமதியை மத்திய அரசு தடுத்துள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) தமிழக அரசு எடுத்துள்ள முயற்சி என்ன?

(ஈ) அதன் பலன் என்ன?

[குறுகிய கால வினா எண்கள் 17, 18 ஆகிய இரண்டிற்குமான விடை]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—

(அ) ஆம்.

(ஆ) 1-4-80 முதல் மத்திய அரசு சந்தனமர ஏற்றுமதியை முழுமையாக தடை செய்துள்ளது.

(இ) தமிழக அரசு மத்திய அரசிடம் சந்தனமர ஏற்றுமதிக்கான தடையை முழுமையாக நீக்கும்படி கடித மூலமும், தந்தி மூலமும், நேரிலும் கேட்கப்பட்டது.

(ஈ) சந்தனமர ஏற்றுமதிக்கான தடையை நீக்க வேண்டியதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்தியப் பிரதமர் அவர்கள் முதல்வருக்கு அறிவித்துள்ளார்கள்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயிருந்து சந்தனக் கட்டை ஏற்றுமதி தடை செய்யப்பட்டு விட்டது. அந்தத் தடையை நீக்க வேண்டு

மென்று நம்முடைய அரசு கேட்டபொழுது மத்திய அரசு அதற்கு இணங்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலேயும், உத்திரப்பிரதேச மாநிலத்திலேயும் சந்தனக் கட்டையிலிருந்து தைலம் எடுக்கிற தொழிற்சாலைகள் வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகளுக்குப் போதுமான சந்தனக் கட்டை இல்லையென்ற காரணத்தினால்தான் அவர்கள் சந்தனக் கட்டை வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவதைத் தடுத்து, அந்த மாநிலங்களுக்கே நம்முடைய சந்தனக் கட்டைகளைக் குறைந்த விலையிலே பெற்றுக்கொள்வதற்காக, அவர்கள் மத்திய அரசை அணுகி இன்ஃப்ளுயன்ஸ் செய்திருக்கிற காரணத்தினால்தான் அந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. என்று சொல்லப்படுகிறது அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.10]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு சந்தனமர ஏற்றுமதிக்கு விதித்துள்ள தடையை நீக்க முடியாது. அது ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது என்கின்ற பதில்தான் மாண்புமிகு இந்திய பிரதம அமைச்சரிடம் இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தகவலாக வந்திருக்கின்றது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தில் கர்நாடக மாநிலம் உத்திரப்பிரதேச மாநிலங்களில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மரங்களை இங்கே கிடைக்கச் செய்யவேண்டும் என்ற காரணத்தினாலே, அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியினாலே இந்தத் தடை ஏற்பட்டதா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த முயற்சியை அவர்கள் எடுத்துக் கொண்டார்களா என்பது இந்த அரசுக்குத் தெரியாது. இருந்தாலும் இங்கே கர்நாடக மாநிலத்திற்கோ அல்லது உத்தரப் பிரதேசத்திலே அவர்கள் வைத்திருக்கின்ற எண்ணெய்த் தொழிற்சாலைக்கோ தேவையான மரங்களை நாம் கொடுத்துக் கொண்டு தான் இருந்தோம். அவர்களும் ஆண்டுதோறும் ஏலத்திலே எடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் நான் கலந்து கொண்ட வனத்துறை அமைச்சர்கள் மாநாட்டிலே டெல்லியிலே மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் ராவ்பிரேந்திர சிங் அவர்கள் தலைமையிலே நடைபெற்ற அந்த மாநாட்டில், நாங்கள் தமிழக அரசின் சார்பில் இந்த சந்தன மரத்திற்கு ஏற்றுமதித் தடையை நீக்கவேண்டும் என்று நான் ஆதாரங்களோடு கடுமையாக எடுத்துச் சொன்ன நேரத்தில், மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக பதில் அளிக்காமல், கர்நாடக மாநிலத்தினுடைய பிரதிநிதியைப் பார்த்து 'உங்களுடைய கருத்து என்ன' என்று கேட்டார்கள். கர்நாடக மாநிலத்தினுடைய முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தும், அன்றைக்கு அந்த மாநாட்டிலே கலந்து கொள்ளாத சூழ்நிலையில் அவருடைய சார்பிலே வந்திருந்த பிரதிநிதி ஏற்றுமதிக்குள்ள தடையை நீக்கக் கூடாது என்று அந்த மாநாட்டிலே தெரிவித்

தார்கள். ஆகவே எந்த மாநிலம் மத்திய அரசினிடத்திலே இந்தக் கருத்தை தெரிவித்திருக்கிறது என்பது இதன் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறதே தவிர, வேறு தகவல்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் அதை திட்டமிட்டு எந்த மாநிலம் என்பதை சொல்ல முடியவில்லை ; இதிலிருந்து யூகித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி கர்நாடக மாநிலத்திலே, வனத்துறையிலே சந்தனக் கட்டைகளை ஒரு டன்னுக்கு 30,000 ரூபாய்களுக்கு அந்தத் தொழிற்சாலைகளுக்கு விற்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே அதே தொழிற்சாலைகள் ஏலம் எடுப்பதன் பேரிலே நம்முடைய வனத்துறையிலே இருந்து சந்தனக் கட்டைகளை ஒரு டன்னுக்கு 17 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஆகவே இதன் மூலம் நம்முடைய அரசுக்கு ஏற்படுகிற நஷ்டம் ஆண்டுக்கு எத்தனை கோடி இருக்கும் என்பதையும், அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளாக இந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. 1978 ஆம் ஆண்டினுடைய இறுதியிலே, இருந்த மத்திய அரசு முதலிலே இந்த ஏற்றுமதிக்குத் தடையை ஏற்படுத்தினார்கள். அதற்குப் பிறகு நம்முடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே சுமார் 300 டன் ஏற்றுமதி செய்யலாம் என்று தெரிவித்தார்கள். அதுவும் நமக்குப் போதாது, விலை குறைந்து விட்டது என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, மீண்டும் மத்திய அரசை நாம் கேட்டோம். ஆனால் 980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத வாக்கில் முழுமையான தடையை மத்திய அரசு ஏற்படுத்திவிட்டார்கள். இதனுடைய விளைவாக 1977 ஜூலை மாதத்திலே ஒரு டன்னுக்கு 53,968 ரூபாய் என்று ஏலம் போன சந்தன மரம் படிப்படியாக குறைந்து, கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்பார்களே அதைப்போல 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஏலத்திலே ஒரு டன் 16,934 ரூபாயாக குறைந்து விட்டது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் இந்த அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என்பதை நாம் மத்திய அரசுக்கு தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறோம். இன்றைக்கு நிதி ஆதாரங்களை தேடிக் கொண்டு இருக்கின்ற சூழ்நிலையிலே மாநில அரசினுடைய வருமானத்திலே, இயற்கையாக ஏற்படக் கூடிய வருமானத்திலே 3 கோடி ரூபாய்கள் இழப்பு என்பது சாதாரண விஷயம் அல்ல என்பதையும் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அதே நேரத்தில் கர்நாடக அரசுக்குத் தேவையான மரங்களையும் நாம் பேசி குறிப்பிட்ட விலைக்கு அவர்கள் மாநிலத்தில் எந்த விலைக்கு எடுத்துக் கொள்வார்களோ, அதை ஒட்டிய விலைக்குத் தருவோம் என்று சொல்லி இருக்கிறோம் இதிலே இன்னொரு கருத்து என்னவென்றால், நாம் ஏற்றுமதிக்

1981 மே 12]

அனுமதி கேட்ட மரங்கள், அங்கே எண்ணெய் தயாரிப்பதற்குத் தேவையில்லாத மரங்கள். மிக உயர்ந்த மரங்களைத்தான் நாம் ஏற்றுமதி செய்கிறோம். அவைகள் கிட்டத்தட்ட ஒரு டன்னுக்கு 70 ஆயிரம் ரூபாய்க்குப் போகிறது. அந்த மரங்களை எண்ணெய் எடுப்பதற்குப் பயன்படுத்தத் தேவையில்லை. எண்ணெய் எடுப்பதற்கு சாதாரண மரங்கள் 20 அல்லது 25, 30 ஆயிரம் டன்னுக்கு விலை உள்ள மரங்களே போதும்.

கார்விங் என்று சொல்கிறார்களே அப்படி மிகப் பெரிய, சிற்ப வேலை, செதுக்குகிற வேலைக்குத்தான் வெளிநாட்டிற்கு இந்த உயர்ந்த ரக மரங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதற்காகவே குறைந்த அளவிற்கு ஒரு 1000 டன்னாவது ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி செய்யுங்கள் என்று நாம் 2 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். நேரடியாகவும் கேட்போம், முதலமைச்சர் அவர்களே, இந்தியப் பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதியும் கேட்டார்கள். இறுதியாக இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து பதில் வருகிறது— ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு தடையை அகற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு எடுத்துள்ளதாக பதில் அளித்து இருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் ஒரு புள்ளி விவரத்தைத் தர நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1978 ஆம் ஆண்டிலே இந்தத் தடையை விதித்தபிறகு, அந்த ஆண்டு நமக்கு இரண்டு ஏலத்திலேயும் சேர்ந்து ரூ. 3.84 கோடி தான் வருமானம். 944 டன் விற்றோம். 1979-லே 1165 டன் விற்றோம். ஆனால் வருமானம் 3.64 கோடியாகக் குறைந்து விட்டது. 80 டிசம்பரிலே இரண்டு ஏலங்களிலும் சேர்த்து சுமார் 1550 டன் விற்றோம். வந்த வருமானம் 2.86 கோடியாகக் குறைந்து விட்டது. சுத்தம் செய்யப்பட்ட சந்தன மரங்கள் நம்முடைய கிடங்குகளிலே இன்றைக்கு ஆயிரம் டன் கையிலே வைத்து இருக்கிறோம். சுத்தம் செய்யப்படாத மரங்களாகவே, ஏறத்தாழ 5 லட்சத்து 52 ஆயிரத்து 785 மரங்களைக் கொண்டுவந்து போட்டு இருக்கிறோம் இதை அப்படியே கிடங்குகளிலே கொண்டு வந்து வைக்க முடியாத சூழ்நிலையிலே காடுகளிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அதிகமான அளவு திருட்டுப் போகிறது. கடத்தல் நடைபெறுகிறது என்பதை எல்லாம் நாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் கிடைத்து இருக்கும் பதில் இது தான்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே சந்தன மர உற்பத்தி அதிக அளவிலே இருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் சிறிய சிறிய சந்தனத் தொழிற்சாலைகளுக்குத்தான் தமிழ்நாட்டிற்கு அனுமதி கொடுத்து இருக்கிறது. திருப்பத்தூரில் அந்த வேலை இன்னும் முடியவில்லை. ஆகவே, பெரிய சந்தனத் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் ஏற்படுத்த மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் நல்ல முறையில் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலேயும் ஒரு சிக்கல் கடந்த மத்திய சர்க்கார் இருந்தபோது நமக்கு ஏற்பட்டது. நாம் சந்தன மரத்தைப் பயன்படுத்தி இங்கே ஒரு எண்ணெய் எடுக்கிற தொழிற்சாலையை துவக்கலாம் என்று திட்டமிட்டு இருந்தோம். ஜனதா ஆட்சியில் சந்தனத் தொழிற்சாலை என்பதை கிராமத் தொழில்கள் பட்டியலில் சேர்த்து விட்டோம், ஆகவே, பெரிய அளவில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கக் கூடாது என்று சொன்னார்கள். ஆகவே, உடனே நம்முடைய கருத்துக்களை மாற்றிகொண்டு நான்கு சிறிய தொழிற்சாலைகளைத் துவக்கலாம் என்று திட்டமிட்டு இருந்தோம். அதற்குப் பிறகு இந்த அரசுவந்த பிறகு, நம்முடைய தொழில் துறை நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள் பரிசீலித்து, இப்படி சிறிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதால் பலன் இல்லை, லாபகரமாக இருக்காது என்பதை தெரிவித்ததால், சுமார் 50 லட்சம் செலவில் 400 டன் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க இன்றைக்குத் திட்டங்களைத் தீட்டி, அதற்காக வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கருநாடக மாநிலத்தில் சந்தன எண்ணெய், சந்தனசோப் தயாரிப்பதுபோல், தமிழ்நாட்டிலும் சந்தனசோப்பு — அண்ணா சந்தன சோப்பு — என்ற பெயரில் தயாரிக்க, அதற்கான தொழிற்சாலையை உருவாக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே. உறுப்பினர் தெரிவித்த கருத்திலே ஒரு சிறிய மாற்றத்தைச் செய்து கொள்ளவேண்டும். இன்று சந்தன மரங்கள் கருநாடக மாநிலத்திலும், தமிழ்நாட்டிலும் தான் கிடைக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டிலே தான் கருநாடக மாநிலத்தைவிட அதிகமாகக் கிடைக்கின்றது. கருநாடக மாநிலத்தில் கிடைப்பது குறைந்து கொண்டு வருகிறது. நம் முடைய மாநிலத்தில் தான் பாதுகாத்து வருகிறோம். இன்று சுமார் 3500 டன் ஆண்டுக்குக் கிடைக்கிறது என்று சொன்னால், அதிலே 2000 டன் வரை நம்முடைய மாநிலத்தில் தான் கிடைக்கிறது. ஆகவே, அந்த அளவிற்கு நாம் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், இந்த எண்ணைத் தொழிற்சாலையைத் துவங்கியதற்கு பிறகு, அதிலே இருந்து கிடைக்கின்ற பொருள்களை வைத்துக்கொண்டு சோப் போன்ற மற்ற வாசனைப் பொருள்களைத் தயாரிப்பது பற்றி பரிசீலனை செய்ய இயலும்.

[முற்பகல் 10-20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து மத்தியிலே இருக்கிற அரசு தமிழ் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தைத் தடுப்பதற்கு என்ன காரணம்? மத்தியிலே இருக்கிற அரசு—

1981 மே 12]

ஜனதா அரசாக இருந்தாலும் சரி அல்லது இன்றைக்கு இருக்கிற இந்திரா காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி—நடவடிக்கையின் காரணமாக இவ்வளவு பெரிய இழப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்றுவிளக்கமாகச் சொல்லியும் ஒரே வரியில் ஆழ்ந்த பரிசீலனை என்று சொல்லி, இதுவரையில் இழப்பைக் குறைக்க வழி ஏற்பட வில்லை. ஒரு பாரபட்சமான போக்காக மத்திய அரசின் போக்கு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்தத் தடையினால் அவர்கள் கர்நாடக மக்கள் நலனைத்தான் பார்க் கிறார்களே தவிர தமிழக மக்கள் நலனை அவர்கள் புறக்கணிக் கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்த அரசுக்கு ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுஇந்த நடவடிக்கைக்கு இருக்கிறது. ஆகவே, இதை ஆட்சேபிக்கும் வகையில் தமிழ் நாட்டில் இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த அல்லது சர்வகட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்டு ஒரு தூதுக் குழுவை மத்திய அரசுக்கு அனுப்பி, நமக்கு சாதகமான சூழ் நிலையை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மத்திய அரசு இந்தத் தடையை விதித்திருக்கிறது என்பதற்கு என்ன காரணம் என்று நான் தெரிவிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்றே மத்திய அரசு இந்தத் தடையை ஏற்படுத்தியிருக்கிறது என்ற முறையில் சொன்னார்கள் அந்தக் கருத்தை அந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் நான் இருக்கிறேன். என்றாலும் உள்நாட்டுத் தேவைக்கு சந்தன மரம் வேண்டுமென்று மற்ற மாநில அரசுகள் அல்லது கர்நாடக அரசு மத்திய அரசிடம் வற்புறுத்திக்கொண் டிருக்கிறது. அதை ஒட்டித்தான் அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதேநேரத்தில் இந்த அவைக்கு உங்கள் மூலமாக ஒரு தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு கர்நாடக மாநிலத்தில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழில் அரசு நடத்துகிற ஒரு தொழிலாகும். இந்த சந்தன மரத்தை அவர்கள் வாங்கி, எண்ணெய் தயாரித்து இந்த நாட்டுக்குள் மட்டும் பயன்படுத் தாமல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். நாம் கட்டையாக ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கிறார்கள். கர்நாடக மாநிலம் குறைந்த விலைக்கு மரத்தை வாங்கி, எண்ணெய் தயாரித்து, அதிக விலை பெற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்திருக்கிறார்கள். அதைத்தான் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அமைச்சர்கள் கூட்டத்தில் இதை ஏன் எங்கள்தலையில் கைவைத்து, அவர்கள் வருமானத்தை தேடுகிறீர்கள் என்று நாம் சொன்னோம். அவர்களும் இதை ஒரு தொழிலாக நடத்து கிறார்கள்; வருவாய் தேடுகிறார்கள். நாங்களும் வருவாய்க்குத்தான் நடத்துகிறோம். அவர்களிடம் சந்தன மரம் குறைந்துவிட்டது. நாம் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம். அதற்கு இந்தத் தண்டனையா என்று கேட்டோம். இன்னைக்கு மீண்டும் பிரதமஅமைச்சருக்கு தெரிவிக்க இருக்கிறோம். இந்த

சூழ்நிலைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, கர்நாடக மாநிலத் திற்கு தேவையான மரத்தை எந்த அளவுக்கு நியாயமான நிலையில் தர முடியுமோ அந்த அளவுக்குத் தருவதாக இருக்கிறோம். இந்த இரண்டு மாநில அரசுகளும் அதைப்பற்றி பேசி முடிவு செய்து கொள்ளலாம். இந்த உயர்ந்த ரக மரத்தை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநில மக்களையும் ஒரே மாதிரி பார்க்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு நல்ல முறையில் இருக்கும். அந்தமுறையில்தான் பார்க்க வேண்டும். ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ''ஏன் எங்கள் தலையில் கைவைத்து'' என்று சொன்னார்கள். அதைக்கூட பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் இது ஒரு கண்ணிலே வெண்ணெயும், ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் வைப்பதுபோல் அல்லவா இருக்கிறது. கர்நாடக மாநில மக்கள் கண்ணிலே வெண்ணெயை வைத்து, தமிழக மக்கள் கண்ணிலே சுண்ணாம்பை வைத்தால் கண்ணே கெட்டுப்போகும் அபாயம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. தமிழ் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் இதனால் கிடைக் காமல் போய்விடுகிறது, தமிழ்நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்கிறார்கள். முதுகில் அடித்தால் பொறுத்துக்கொள்ளலாம். அவர்கள் வயிற்றில் அடிக்கிற காரணத்தால் அமைச்சர் மூலம் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் மட்டுமல்ல, அனைத்துக் கட்சியினர்களும் தமிழக மக்களும் சேர்ந்து முயற்சி செய்தால்தான், தொடர்ந்து போராடினால்தான் தமிழக நலனைப் பாதுகாக்க முடியும். ஆகவே, இது சம்பந்தமாக சர்வ கட்சி தூது குழு ன்றை ஏற்படுத்தி, மத்திய அரசுக்கு அனுப்ப தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இந்த ஒரு சாதாரணப் பிரச்சனைக்கு இவ்வளவு பெரிய முயற்சிகள் எடுக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று கருதுகிறேன். எப்படியும் நம்முடைய கோரிக்கையை நம்முடைய வேண்டு கோளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நிச்சயமாக நம்புகிறேன். காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் எழுத இருக்கிறார்கள். கர்நாடக மாநில அரசு அதிகாரிகளிடம் கூட சொல்லியிருக்கிறோம்! அகில இந்திய சந்தன மர கருத்தரங்களில் கலந்து கொண்ட போது வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். உங்களுக்கு வேண்டிய மரங்களைத் தந்துவிடுகி றோம். எவ்வளவுதேவை என்பதையும் மற்ற விவரங்களையும் நாம் இருவரும் உட்கார்ந்து பேசுவோம் என்று தெரிவித்திருக்கிறோம். ஆகவே சர்வ கட்சி தூதுக்குழு போய் ஒரு சாதாரண பிரச் சனைக்கு மத்திய அரசிடம் கேட்க வேண்டிய அவசியம் எழாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கிற முயற்சியின் காரணமாக—ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுக்கப்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 மே 12]

மாட்டார்களா என்பதைப்போல-இரண்டாண்டுக்காலமாக நஷ்டமடைந்திருக்கிறோம் இன்னும் சிறிது பொறுத்திருப்போம், முதலமைச்சர் முயற்சியின் காரணமாக நல்ல பலன் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே சர்வ கட்சி தூதுக்குழு அனுப்ப வேண்டிய அளவுக்கு, அவ்வளவு பெரிய முயற்சி எல்லாம் தேவை இல்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் கருதுகிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இதற்கு முன்னாலே பதில் சொல்கின்ற போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சந்தன எண்ணை தயாரிப்பதற்குப் பயன்படாத மரங்களை ஏற்றுமதி செய்யத்தான் நாம் மத்திய அரசிடம் அனுமதி கேட்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே கர்நாடக மாநிலம் எண்ணெய் தயாரிப்பதற்காகத்தான் மத்திய அரசு நமக்குத் தடையாக இருக்கிறார்கள் என்ற வாதம் இங்கே எழாமல் போகிறது. மேலும் நம்முடைய நியாயமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கின்ற மத்திய அரசு என்ன காரணத்திற்காக ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கின்றது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மூலமாகத் தமிழகத்திற்குச் சொல்வார்களா? நிச்சயமாக நியாயமான கோரிக்கைக்கு மத்திய அரசு செவி சாய்க்கும் என நாம் எதிர்பார்க்கலாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இங்கே எண்ணை எடுப்பதற்குத் தேவையில்லாத மரம் அவை என்பது பொருள் அல்ல. எண்ணை எடுப்பதற்குக் குறைந்த தரம் உள்ள மரமே போதும். மிக விலை உயர்ந்த மரம் காட்பட்லா என்பது அதனுடைய பெயர் என்று கருதுகிறேன் அதாவது ஹார்ட் வுட் என்ற கனமான பகுதி அதிகமாக இருக்கின்ற மரங்கள்தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றது. அதை சந்தன எண்ணை தயாரிக்க உபயோகப்படுத் தலாம். ஆனால் சந்தன எண்ணை தயாரிக்க அவ்வளவு விலை உயர்ந்த மரங்கள் தேவையில்லை. குறைந்த தரமுள்ள மரங்களே போதும். ஆனால் ஏற்றுமதி செய்வதற்கு தடை ஏற்படுவதன் மூலம் அதனுடைய மார்க்கெட் விலையை குறைக்க முடியும். நாம் ஏலம் விடுகின்றபோது வெளிநாட்டிலே இருந்து வியபாரிகள் வந்து விலையை ஏற்றினால்தான முதல்தர மரத்திற்கு 70.000 ரூபாய் என்ற விலை ஆரம்பித்து கடைசித் தர மரத்திற்கு 30,000 ரூபாய் என்ற அளவுக்காவது வந்து நிற்கும். ஆனால் ஏற்றுமதிக்குத் தடை ஏற்படுத்துவதன் மூலம் மற்ற வியபாரிகள் வரவில்லை என்றால் முதல் தர மரத்தின் விலையையே 20,000 ரூபாயிலே ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவேதான் நாம் அந்த வேண்டுகோளை மத்திய அரசுக்கு வைத்தோம். மத்திய அரசு ஏற்றுமதிக்குத் தடைவிதிப்பதற்கு என்ன காரணம் சொல்லி இருக்கிறது என்று கேட்கிறார்கள், நம்முடைய இந்தியப் பிரதமர் அவர்கள் நமது முதலமைச்சர் அவர்களுக்கு எழுதி இருக்கின்ற கடிதத்தில் We have considered the matter in depth and decided not to lift the ban on export of sandal wood.

என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதைத்தான் நான் இங்கே தெரிவிக்கிறேன்.

187 வயது வந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி

குறுகிய காலவினா எண். 19 திரு மி. வின்செண்ட் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகளில் 17 வயது வந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி எப்போது துவங்கும்?

(ஆ) துவங்கப்பட்டு எவ்வளவு காலத்தில் இப்பணி முடிவடையும்

மாண்புமிகு. திரு. ப. குழந்தைவேலு: (அ) 1-6-1981 முதல்.

(ஆ) நான்கு திங்களுக்குள் முடிவடையலாம்.

திரு. மி. வின்செண்ட்: தலைவர் அவர்களே, நகராட்சிகளில் தற்போதுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை என்ன? 18 வயது வந்தவர்களை வாக்காளர் பட்டியலிலே சேர்த்தற்குப் பிறகு வாக்காளர்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகரிக்கும் என்று அரசு எதிர்பார்க்கின்றது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே தற்போதுள்ள வாக்காளர்கள் 37 லட்சம் பேர். இனிமேல் 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் துணை வாக்காளர் பட்டியலைத் தயார் செய்தால் ஏறத்தாழ 8 இலட்சம் பேர் அதிகரிக்கலாம்.

திரு. மி. வின்செண்ட்: தலைவர் அவர்களே, நகராட்சிகளில் வாக்காளர் பட்டியல் சேர்க்கும் பணி முடிவடைந்து எவ்வளவு காலத்தில் உள்ளாட்சித் தேர்தலை அரசு நடத்தும். இந்தத் தேர்தலில் வேட்பாளரின் வயது வரம்பு 25-லிருந்து 21ஆக குறைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1—6—81-லே ஆரம்பித்து 4 மாதங்களுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முடிவடைந்ததற்குப் பிறகு ஆகஸ்ட் திங்கள் முதல் வாரத்தில் ஆரம்ப வெளியீடு செய்யப் பட்டவுடன் 4 உள்ளூர் பிரமுகர்கள் அடங்கிய அரசால் நியமிக்கப் படும் ஒரு குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படும். அக்குழு தெரிவிக்கும் ஆலோசனைகளையும், விதிமுறைகளையும் பின்பற்றி வாக்காளர் பட்டியல்களில் தக்க திருத்தங்கள் செய்யப்படும், அதற்குப் பின்னால் தான் தேர்தலைப் பற்றி யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு) ஓர் உரையின் தொடக்கத்தில் (* உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.].

1981 மே 12]

2. தகவலகள் கோரல்;

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் உரிமைப்பிரச்சினை ஒன்று கொடுத்திருக்கிறேன். அதை என்றைக்கு எடுத்துக் கொள்வீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அது முக்கியமான பிரச்சினை.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களுக்கு கூறிக் கொள்கிறேன். காலையில் கொடுக்கப்பட்ட அந்த உரிமை மீறல் பிரச்னையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு விளக்கம் கேட்டு, எழுதியிருக்கிறோம். அதில் தற்போது வேறொரு உரிமை மீறல் பிரச்னை இருக்கிறது. அதை இன்று எடுத்துக் கொண்டு, பிறகு உங்களுடைய உரிமை மீறல் பிரச்னையை, எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து அமர வேண்டும்.

3. உரிமைப் பிரச்சினை

மக்கள் நவாழ்வுத்துறை அமைச்சர் மீது

பேரவையின் 246 வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் பிரச்னை குறித்து, பேரவையில் எழுப்ப டாக்டர் கே. சௌரிராஜன் அவர்கள் என்னுடைய இசைவை கேட்டுள்ளார்கள். அதற்கான இசைவை ஏன் அளிக்க வேண்டும் என்பதற்காக காரணங்களை சுருக்கமாக விளக்குமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

DR.K SOURIRAJAN; Hon. Speaker Sir, under Rule 246, r give notice of the following previlege motion against Hon. Ministel for Health. The Hon. Minister for Health during his reply to the debate on the demand under Medical and public Health on 8.4.81 has stated that no un-qualified person was working in the Anaesthesia Departments of the various Hospital in the City and that the death of the patient which occureed in the Government Hospital for Women and Children Egmore on the operation table itself was due to cardiac arrest and the anaesthesia was administered by a qualified anaethestist. The statement is contrary to facts and I understand that the following Docters who are not qualified in the anaesthesia, are working in the anaesthesia departments of the various Government Hospitals and the death which occured during anaesthesia in Government Hospitals for Women and Children while the anaesthesia was administered by ordinary Medical Graduate, without any qualificaioni in Anaesthesia.

I have also given a list of Doctors who do not have any quas fication in Anaesthesia but working in the Anaethesia epartment or the various hospitals. At the outset I would like to express that thr object of this privilege motion is not to discredit or to disgrace oe

o cast any aspersions on the Government or on the Hon: Ministery I know certainly that it is not possible for the Minister to remembel. the qualifications of the doctors working in the various hospitals, in the whole of Tamil Nadu. I would only like to tone up the adminis tration in the interest of the public of Madras City so that only qualified persons could be empowered to administer Anaesthesia for big operations.

At the same time I want to express that whenever I make a statement in this August House as a Doctor who has been in the medical profession for the past 27 years and also having worked for 7 years as a Hony. Assistant Medical Officer in the S anly Hospital. I am no there to make any irresponsible statement. The statements which I have been making on the floor of the House, rather you may call them as allegations, they are all facts.

Thirdly Sir, I want to bring to the attention of the House and the Administration and the Government the necessity of having a clinically experienced man as a Director of Medical Education. Because the very fact that the present Director has no clinical experience he is not able to understand the necessity of having qualified people in the Anaesthesia department of various hospitals. If you proceed at this rate, there is also a fear that an I.A.S. Officer can be appointed as a Director. I do not know what will be the fate of the various hospitals in the Madras State if an I,A.S. Officer is going to become a Director. With that in view I have presented this privilege motion.

At the same time the Hon. Minister has said that persons who are trained in Anaesthesia are working in various institutions Training is different from qualification. A Nurse may be trained to give an injection of Penicillin. But if the patient dies the responsi bility is much more graveif an uuqualified person gives an injectino In the same way if a Doctor who is trained in Anaesthesia gives anaesthesia the responsibility may bel ess. But if an untrained Doctor gives anaesthesia the offence becomes more grave. I would like to impress upon the Hon. Minister the necessity of having qualified anaesthesists in the various hospitals in the Anaesthesia Department.

I also want to bring to the notice of the Hon. Minister another fallacy. People who are qualified in one Faculty are later on allowed to be selected in some other Faculty in M.D. Course as Post-graduate. (Interruption If a man is selected for a particular Post-graduate course he has already acquired a particular Diploma he should not be given a postgraduation, an M.D. conrse in some other aculty, while he is already holding a particular Diploma in some

other course. All these things have been brought by me only to draw the attention of the Hon. Minister and the Government to know the necessitty of having a Clinical man as the Director of Medical Education.

உரிமை பிரச்சனை

Mr. SPEAKER: As a Doctor, Dr. Sourirajan knows so many thingr about the medical profession. Let him brief his speech.

Dr. SOURIRAJAN; Mr. Speakea Sir, our Health Minister says that the patients died of cardiac a rest. Once the heart stops beating tha patient automatically dies. This is only a vague terminology. As a Doctor I have also said tha . Under these conditions I would like to impress upon the Hon. Minister and also the Government, the necessity and urgency of having qualified anaesthesists- Various representations from various heads of the Anaesthesis Departments of the various hopitals to provide more qualified anaesthesists have not been heeded to by the present Director of Medicel Education. I request the Hon. Minister for an explanatory statement on this matte

Mr. SPEAKER; If the Hon. Health Minister has got anr explanatory statement he can give.

HON. DR. H.V. HANDE; Mr. Speaker Sir, Hon. Member Dr. Sourirajan in his privilege issue has brought certain extraneous matters which are not direcrly pertaining to the privilege issue he has given notice of. He has brought out three extrananeos matters.

Firstly, lhe qualification that is needed for the post of the Director of Medical Education. I would like to explain to him that Directol cannot possess all the qualifications that are requires for different specialists which a e brought under his control. For instauce the Director of Medicel Education has to look after the Surgica Department, Medical Department....

திரு. பொ. உத்திராபதி : நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டு மல்லவா ? தமிழிலே பேசுங்கள்

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பல்வேறு கருத்துக்களை, இங்கே கொண்டு வந்திருக்கிற உரிமை பிரச்னை சம்பந்தப்பட்ட கருத்துக்களோடு சேர்த்து இன்னும் பல விஷயங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மருத்துவக்கல்வி இயக்குநர்கள் அவர்களுக்கு என்ன தகுதி இருக்கவேண்டும் என்பதை இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

அந்தத் தகுதியைப் பொறுத்தவரையில், அவர்கள் கீழ் இயங்குகின்ற பல்வேறு இலாகாக்களில் அறுவை சிகிச்சை இலாகாவும் இருக்கிறது, மருத்துவ இலாகாவும் இருக்கிறது. அதேமாதிரி டயரக்டர் ஆஃப் கிங் இன்ஸ்டிட்யூட் அவர்களும் அந்த மருத்துவக் கல்வி இயக்குநரின் கீழ் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு மருத்துவக் கல்வி இயக்குநருக்கு இந்தத் தகுதிதான இருக்கவேண்டும், சர்ஜீக்கல் டிப்பார்ட்மெண்ட்டை அவர்கள் பராமரிக் வேண்டுமென்றால் அறுவைச் சிகிச்சையில் க்வாலிபிக்கேஷன் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதோ இல்லை அவர்கள் மருத்துவ இலாக்காவில் எம். டி. யாக இருக்கவேண்டும் என்று சொல்வதோ பொறுத்தமாகயிருக்காது. ஏதாவது ஒரு க்வாலிபிக்கேஷன் தான் அவர்களுக்கு இருக்க முடியும். அவர்கள் ஏற்கனவே பல ஆண்டுகளாக கிங் இன்ஸ்டிட்யூட்டில் பணியாற்றி பல தகுதிகளைப் பெற்று இன்றைக்கு மருத்துவ கல்வி இயக்குநராக ஆகியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு என்ன க்வாலிபிக்கேஷன், என்ன தகுதி என்ற பிரச்னை இங்கே எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு பிரச்னையை இங்கே எழுப்பி இருக்கிறார்கள். அந்தப் பிரச்னை என்னவென்றால், ஒரு மருத்துவ நிபுணர், அவர்கள் எம். டி. யாக இருந்தால் எந்தத் துறையில் இருக்கவேண்டும், எம். எஸ். ஆக இருந்தால் எந்தத் துறையில் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் அந்தத் துறையில்தான் அமர்த்தி பணியாற்ற வாய்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். சில நேரங்களில் அவர்கள் ஜாஸ்தியாக இருக்கும்போது கொடுக்கப்படுகிற பணி அதற்கு கொஞ்சம் குறைவாகக் கூட இருக்கக்கூடும். அதை, நிர்வாகத்தின் நிலைமைகளையொட்டி நாம் செய்து கொண்டிருக்கிறோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒருவர் தனக்குத் தெரியாத ஒரு விஷயத்தை அவர்கள் பராமரிக்கவேண்டும் என்று நான் வற்புறுத்துவது இல்லை. ஆக, இப்படிப்பட்ட பிரச்னைகளையெல்லாம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

மற்றபடியாக இப்போது 8–4–1981 ஆம் ஆண்டு நான் பேசிய பேச்சைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு திருத்தம். அவர் ஆங்கிலத்தில் பேசியதை நான் எழுதி வைத்திருக்கிறேன்.

[முற்பகல் 10.40]

In his letter to the Hon. Speaker, Dr. K. Sourirajan, MLA has stated that during my reply to the debate on the demand under 'Medieal and Public Health' on 8.4.1981, I had said that 'no unqualified person was working in the Anaesthesia Depatment of the various hospitals in the city and that the death of the patient which occured in the Government hospital for Women and Children in Egmore on the operation table due to cardiac arrest, during anaesthesia, the anaesthesia was administered by a qualified Anaesthetist'-

1981 மே 12] [டாக்டர் எச். வி. ஹண்டே]

இது டாக்டர் சௌரிராஜன் அவர்களால் கொடுத்திருக்கக்கூடிய வாசகத்திலே கொடுத்திருக்கக்கூடிய குற்றச்சாட்டு.

Dr.Sourirajan contends that the above statement is contrary to fact and that I had given wrong and misleading information to the house.

இதிலே தவறான தகவல் என்ற முறையிலே, திசை திருப்பக்கூடிய முறையிலே, எண்ணத்தை வேறு திசையிலே திருப்பக்கூடிய முறையிலே கொடுத்திருக்கிறார்கள். குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்கள்.

A perusal of the Assembly proceedings would show that the above statementof Dr. Sowrirajan is not wholly correct. Presumally Dr. Sowrirajan had missed the distinction tht I had made between technically qualified.

Anaesithetist (Diploma or degree holder in anaesthesia) and trained anaesthestist. In his speech on 8.4.81, in the Assembly.
however Dr.Sourirajan has made this distinction. I extract below the relevant portion of his speech:
அவருடைய பேச்சு, மயக்க மருந்தைக் கொடுப்பதிலே பயிற்சி பெற்றவர்கள் அல்லது அவர் சொல்கிறார், டிப்ளமா இன் அனிஸ்தீசியா படித்தவர்கள்தான் மயக்க மருந்தைக் கொடுக்க வேண்டும். பயிற்சி பெற்றவர்கள் அல்லது டிப்ளமோ இன் அனஸ்தீசியா படித்தவர்கள்தான் மயக்க மருந்தைக் கொடுக்க வேண்டும். ஆனால், அதிலே பயிற்சி பெறாதவர்கள் எல்லாம் அந்த மயக்க மருந்தைக் கொடுக்கிறார்கள் என்று டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி கொடுத்ததினால், ஆபரேஷன் டேபிளிலேயே பல பேஷண்டுகள் செத்துவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

In the course of my reply I menti oned that it is not correct to say that anaesthesia is being given by unqualified or untrained anaesthetist. I give below the relevant extract from my speech in the Assembly on 8.4.81;
என்னுடைய பேச்சு. நான் என்ன சொல்லியிருக்கிறேன். ',அங்கே என்ன நிலைமை என்றால் அனஸ்தீசியாவிலே மொத்தம் 50 டாக்டர்கள் நல்ல வகையிலே பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். டிப்ளமோ இன் இனஸ்தீசியா ஆஸ் வெல் ஆஸ் எம். டி. அவ்வளவு பேர் இருக்கிறார்கள். அவர்கள் 13 பேர்கள் அங்கே இவர்கள் பார்வையிலே பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது'' என்று சொல்லியிருக்கிறேன். இப்போது நமக்கு கிடைத்திருக்கக்கூடிய புள்ளிவிவரங்கள் சரியான புள்ளி விவரங்களாக இருக்கின்றன.

Actually in the city hospitals out of 93 anaesthetists, 79 are diploma or degree holders in Anaesthesia. நான் சொல்லியிருப்பது 50 அதைவிட ஜாஸ்தி-ஆகவே 79 பேர்கள்.

The remaining 14 have been given in-service training in anaesthesia, by senior technically qualified anaesthetist. It is the intention of Government to replace the trained anaesthetists as soon as technically pualified (M.D. or Diploma in Anaesthesia) are available. ஆகவே, டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்தும், நான் சொல்லியிருக்கக்கூடிய கருத்தும் ஏறத்தாழ ஒன்றாகத்தான் இருக்கிறது. படிப்படியாக அவ்வப்போது பயிற்சி பெற்றவர்களை நாம் எடுத்து, டிப்ளமோ படித்தவர்களைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று நான் இப்போது சொல்லக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தப் பயிற்சி பெற்றவர்கள் எப்படிப் பட்டவர்கள்? 9 மாதத்திலிருந்து 5 ஆண்டுகள் வரை இதே துறையிலே பயிற்சி பெற்றவர்கள். இப்படி 13, 14 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இங்கே இருக்கக்கூடிய பிரச்னை யெல்லாம், நாம் பயிற்சி பெற்றவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. டிப்ளமா படித்தவர்கள் கொடுக்வேண்டும் என்று டாக்டர் சௌரிராஜன் அவர்கள் வற்புறுத்துகின்ற காரணத்தினால், இதிலே தெளிவான நிலைமையை நான் விளக்கியிருக்கிறேன். ஆகவே, இதிலே இருக்கக்கூடிய ஒரு சின்ன வித்தியாசம், வேறுபாடு—பயிற்சி கொடுத்து, பயிற்சி பெற்றவர்கள் மயக்க மருந்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அந்த வாதத் திற்கும், டிப்ளமா, டிகிரி படித்தவர்கள் கொடுக்க வேண்டு மென்ற அந்த வாதத்திற்கும் சிறு இடைவெளி. அதை மாண்புமிகு உறுப்பினர் கவனித்திருந்தால், இதைக் கொண்டு வந்திருக்க மாட்டார்கள். ஆகவே அது தான் விஷயம். இதிலே எந்தவிதமான உரிமை மீறலும் இல்லை என்று தான் கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினையை பொறுத்தவரை இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டிய தேவையில்லை என்பதைக் கூறி, இதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சௌரிராஜன் அவர்கள் பேசுகின்ற போது மருத்துவத் துறையிலே நடை பெறுகிற பணிகளை சீர்படுத்தவும்' அந்தப் பணிகளை ஒழுங்கு படுத்துகிற தன்மையிலேயும் தான் இந்த பிரச்சினையில் விவாதத்தை அனுமதித்தேன்ஆகவேஇந்த பிரச்சினையை அவர்கள் வற்புறுத்த மாட்டார் என்று நான் நம்புகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, நான் இங்கே ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை பற்றி சொன்னேன். அங்கே எனக்கு நன்றாகத் தெரியும். மயக்க மருந்தை கொடுத்த டாக்டர் வெறும் எம்.பி.,பி.எஸ். படித்த டாக்டர் தான், சென்னை மகப்பேறு மருத்துவ மனையிலே, அந்த

டாக்டர் மூன்று மாதத்திற்கு கூட பயிற்சி பெறாமல் கொடுத்தது. ஆகவே உரிமைப் பிரச்சினை இல்லையென்று மறுக்கிறார்கள். ஆகவே இதை நான் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இதிலே ஒரு சிறு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் 'எக்சைட்' ஆகாமல் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறேன், பயிற்சி பெற்றவர் என்று; இன்னொன்று ஒரு நோயாளி இறந்துவிட்டார் என்று சொன்னார்கள்; அந்த ஆபரேஷன் தியேட்டரில்; ஆனால் உறுப்பினர் அவர்களுடைய பேச்சிலே பல நோயாளிகள் இறந்திருக்கிறார்கள் என்று கூட சொன்னார்கள். அதைக்கூட நான் பிரிவிலேஜ்ஜாக எடுத்து வற்புறுத்தவில்லை. ஏனென்றால் சொல்கிற உணர்ச்சி வேகத்தில் பல நோயாளிகள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னால் மக்கள் மத்தியிலே ஒரு அநாவசியமான பீதி ஏற்படத் தேவையில்லை என்பதால் தான் அதை விளக்கமாக சொல்லியிருக்கிறேன். நான் உடனடியாக பல நோயாளிகள் யார் என்று கேட்க முடியும். ஆனால் அப்படி கேட்கவில்லை. ஏனென்றால் மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறேன். இதில் எந்தவிதமான பீதிக்கும் இடம் தரக் கூடாது என்பதற்காக நான் சொல்லியிருக்கிறேன். இதிலே இந்த குறிப்பிட்ட டாக்டர் எம்.பி.பி.எஸ். படித்ததற்கு பிறகு நல்ல 'இன் சர்வீஸ் ட்ரெயினிங்' பெற்றிருக்கிறார். அவருக்கு இந்த டிரெயினிங் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்கள் இல்லை என்று சொல்கிறார், அவ்வளவு தான்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஏற்றுக் கொள்ள முடியாது....தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒரு கருத்தைச் சொன்னீர்கள். ஆங்கிலத்திலே மிக நன்றாகச் சொன்னீர்கள். மருத்துவத் துறையிலே நடைபெறுகிற பணிகளை சீர்திருத்தவும், நல்லபடி தொடர்ந்து நடைபெறவும் இந்த கருத்துக்களை நீங்கள் எடுத்துச் சொல்கிறேன் என்று சொன்னீர்கள். நீங்கள் அவை உரிமை மீறலிலே கூட ஒரு குற்றச்சாட்டாக சொல்ல ஆரம்பிக்க வில்லை. ஏனென்றால் நீங்கள் ஒரு நல்ல டாக்டர், பொறுப் புணர்ந்து நீங்கள் சொன்னதை நான் பாராட்டுகிறேன்; மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே இந்த அவை உரிமை மீறலிலே......(குறுக்கீடு)

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, தவறு நடந்திருக்கிறது. அதனால் தான்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறு திருத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது சொல்லப்படுகிற கருத்துக்கள் மக்கள் மத்தியிலே பீதி ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக பொதுப்படையாக சில

கருத்துக்களை அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது இரண்டு பேருக்கும் தெரிந்த இரகசியம். மேற்கொண்டு இந்த பிரச்சினையை வலியுறுத்தாமல், வற்புறுத்த மாட்டார் என்று நம்புகிறேன். இந்த பிரச்சினையிலே மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று தீர்மானிக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்

(அ) விதி 58 ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஒரு நாளில் ஒரு பொருளுக்கு மேல் பேரவையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றுள்ள பேரவை விதி 58-ஐ தளர்த்தி இன்று பேரவையில் இரண்டு பொருள்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மொழிகிறேன்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் க. அன்பழகன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், ப. நெடுமாறன், ரா. உமாநாத், ரா. கிருஷ்ணன்' மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, சி. சிவசாமி, எஸ். ஆண்டித்தேவர், கே. தனக்கோடித் தேவர், எஸ். இராஜாராமன், சோ. அழகர்சாமி, பி. எம். தங்கவேல்ராஜ், என். எஸ். வி. சித்தன் ஆகியோர், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜே எஸ். ராசு அவர்களைத் தலைவராகவும் திரு. ஈஸ்வரன் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இருக்கின்ற இந்த தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி பெரும்பான்மையான அசிரியர்களிடத்திலே ஒரு கணிசமான ஆதரவுள்ள ஒரு அமைப்பு, அந்த அமைப்பின் சார்பாக சமீபத்திலே நடைபெற்ற மாநில மாநாட்டில் மாண்புமிகு மாநில முதல் அமைச்சர் அவர்கள் பங்கு கொண்டார்கள்.

அந்த மாநாட்டிலே தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கைகள் பலவற்றைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் அறிவிக்க இருந்தார்கள், ஆனால் அந்த ஆசிரியப் பெருமக்கள் அந்த மாநாட்டிலே அப்படி ஒரு அறிவிப்பை வெளியிடவேண்டாம் வருகிற பட்ஜெட் கூட்டத்திலே எங்களுக்கு நலன்கள் பயக்கக்கூடிய சில. அறிவிப்புகளை அரசு வெளியிடவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கேட்டுக்கொண்டார்கள். சமீபத்திலே நாம் வெளியிட்ட பட்ஜெட்டைப் பார்த்தவுடனே அவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்புகள் இந்த அறிவிப்பிலே இல்லை என்பதைப் பார்த்தார்கள். அதற்குப் பின்னால் 12 அம்ச கோரிக்கை என்பதை அரசுக்குக் கொடுத்து அவற்றிலே முக்கியமான கோரிக்கைகள் என்று அனைத்து ஊழியர்களுக்கு மாதம் 10 வீதம் பிடித்துக்கொண்டு ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் வழங்குதல்; ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அகவிலைப் படிக்கு மாறாக புதிய அகவிலைப்படி அறிவிக்கப்பட வேண்டும்; ஊழியர்களுக்கு ஏதாவது ஒரு பண்டிகையின்போது ஒரு மாத சம்பளம் போனஸ் ஆகக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை உள்ளிட்ட 12 கோரிக்கைகளை சமர்ப்பித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்து அரசின் கவனத்தை ஈர்த்தார்கள். அந்த நேரத்திலேயே அந்தப் பிரச்சினையில் தலையிட்டு அதைச் சுமுகப்படுத்த வேண்டிய அவகாசத்தை அவர்கள் அரசுக்கு ஜனநாயக முறையிலே வழங்கினார்கள், அதிலேயும் அவர்கள் சரியான நிலைமை வராத காரணத்தினால் தேர்வுகளை முடித்துக்கொண்டு பரீட்சைகளை எழுதிய மாணவர்களுக்கு தேர்வு மார்க்குகளைப் போட்டு வெற்றி தோல்விகளை நிர்ணயித்து பேப்பர்களை கொடுத்துவிட்டு பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டதற்குப் பின்னாலே அவர்கள் தங்களுடைய உணர்வுகளைத் தெரியப்படுத்துகின்ற முறையிலே 4–5–81 அன்று தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டார்கள். நேற்றைய தினம் 42,10 பேர்கள் தமிழ்நாட்டிலே மறியலிலே னகதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே ஆசிரியைகள் 452 பேர்கள் கைதாகி இருக்கிறார்கள். இன்றைக்கு பொதுவான ஸ்தாபனம் ஆக இருக்கிறது. பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்கள் கணிசமாக இணைந்திருக்கிற ஒரு ஸ்தாபனமாக இருக்கிறது, வேண்டுமென்றே ஒரு இயக்கத்திலே ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலே இல்லாத ஸ்தாபனம், அவர்கள் ஜனநாயக முறையிலே வைத்த கோரிக்கையை அரசு அலட்சியப்படுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று கைது ஆகியிருக்கிறவர்களை விடுதலை செய்து உடனுக்குடன் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுக நிலையை உருவாக்கிவிட, விவாதித்து நல்ல முடிவைக் கண்டிட அரசு தன்னுடைய நிலையில் ஒரு மாறுதலை ஏற்படுத்திடக்கூடிய முறையிலே இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்திலே ஈடுபட்டு ஏறத்தாழ 4 ஆயிரம் பேர்களுக்கு மேலே சிறை புகுந்திருக்கிறார்கள். அதிலே சுமார் 500 ஆசிரியைகளும் இருக்கிறார்கள். இந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது. பொதுவான கோரிக்கைகள் ஐந்தையும் ஆசிரியர்கள் கோரிக்கைகள் ஏழினையும் வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் திடீரென்று நடத்தப்படவில்லை. பல மாதக் கணக்கிலே அவர்களுடைய கோரிக்கைகளை வைத்து இந்த அரசுக்குத் தெரியப்படுத்தி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதற்குப் பின்னாலே அந்தக் கோரிக்கைகள் அரசால் ஏற்கப்படவில்லை. சென்ற மார்ச் 14 ஆம் தேதி தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நடத்திய மாநாடு வெறும் ஆசிரியர்கள் மாநாடாக இல்லை. ஆசிரியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்துகிற மாநாடாகத்தான் நடத்தினார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்களே அந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். அவர்கள் கலந்து கொண்டு, அந்த மாநாட்டிலேயே தெளிவாகவும், திட்டவட்டமாகவும் ஆசிரியர்கள் மத்தியிலே பின்வருமாறு அறிவித்தார்கள். இது வெறும் மாநாடு என்று சொல்லி என்னைக் கூட்டிவந்து உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் சொல்வதற்குப் பதில் முதலிலேயே இதையொரு கோரிக்கை மாநாடு என்று என்னை அழைக்க வந்தபொழுதே சொன்னீர்கள். ஆகவே நான் முன் கூட்டியே உங்கள் கோரிக்கைகள் என்ன என்பதை அறிந்து கொள்ள வழி செய்தீர்கள். நான் அவற்றையெல்லாம் அறிந்து கொண்டபின் இந்த மாநாட்டிற்கு வந்திருக்கிறேன். உங்களுடைய கோரிக்கைகளைப் பார்க்கும்பொழுது இது தேவைக்கு அதிகமான கோரிக்கை என்று யாரும் சொல்ல முடியாது. ஒரு வாரம் பொறுத்திருங்கள், இந்த பட்ஜெட்டிலே அதற்கு வழிவகை செய்யப்படும் என்று ஆசிரியர்கள் மாநாட்டிலே நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள்,

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் — திரு. வி. வி. சுவாமிநாதன் தலைமை)

அதை ஏற்று ஆசிரியர்கள் மகிழ்ச்சியடைந்து, தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், இந்த பட்ஜெட்டிலே அந்தக் கோரிக்கைகள் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை என்பத நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போராடிக் கொண்டிருக்கக் கூடிய ஆசிரியர்கள் ஏற்கெனவே அரசு ஏற்றுக்கொண்ட அல்லது நியாயமானவை எப்படியாவது செய்ய வேண்டியதுதான் என்று ஏற்றுக்கொண்ட பல கோரிக்கைகளை வைத்துத்தான் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அமைதியான அறப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 4,000 பேர்களுக்கு மேலே சிறைச்சாலைக்கு சென்றிருக்கிறார்கள். சிறைச்சாலையிலே பலருக்கு உடல்நலம் இல்லாத நிலைமைகள் ஏற்பட்டிருக்கிறது

மெட்ராஸ் ஐ ஏற்பட்டு ஆயிரக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே திரு. எம். எம். இராமசாமி என்ற ஆசிரியர் அவர்களுக்கு ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் தலைவர் திரு. ஜே. எஸ். இராசு அவர்களுக்குக் கால் முறிவு ஏற்பட்டு, அத்துடன் மறியலில் ஈடுபட்டு அவரும் சிறைச்சாலையில் இருக்கிறார்.

ஆசிரியர்களின் இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கு நம்முடைய கல்வியமைச்சரவர்கள் முன் வரவேண்டும். ஆசிரியர்கள்பால் அவர்களுக்கு இருக்கக்கூடிய அனுதாபத்தை இந்த நாடறியும். எனவே, சிறையில் இருக்கும் ஆசிரியர்களை விடுதலை செய்து அவர்களின் பிரதிநிதிகளை வரவழைத்து நம்முடைய கல்வியமைச்சரவர்களும் முதலமைச்சரவர்களும் பேசி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு வசதியாக இந்த அவையின் இதர அலுவல்களை இன்றைக்கு ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, ஆசிரியர்கள் 4–5–81 முதல் 12 அம்சக் கோரிக்கைகளின் அடிப்படையிலே படிப்புக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாமல் மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். கிட்டத்தட்ட 4,000 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், கிட்டத்தட்ட 400 ஆசிரியைகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திடீரென்று இது நிகழ்ந்து விடவில்லை. 14–3–81 மாநாட்டிலே முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு 4–4–81–இல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நியாயமான கோரிக்கைகள் என்னவென்றால் நாம் தொடர்ச்சியாக இந்த மாமன்றத்தில் விவாதித்த பல விஷயங்களைப் பற்றியவைதான். அவைகளை முன்வைத்துத்தான் அந்த அடிப்படையிலே அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அகவிலைப்படி 1–9–80 முதல் அளிக்கப்பட வேண்டும்; மத்திய அரசு அறிவித்துள்ள அடுத்த அகவிலைப்படியை 1–12–80 முதல் அளிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் அனைத்துத் தனியார் பள்ளிகளையும் அரசுடைமையாக்க வேண்டும். இதுபற்றித் தொடர்ச்சியாக நாம் விவாதித்துக் கொண்டு வருகிறோம். அரசுகூட கொள்கையளவிலே ஏற்றுக்கொண்டு இருக்கிறது.

இப்படி நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையிலே இந்தப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே இன்றைக்கு அதிகமான பேர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அரெஸ்டாகி உள்ளே இருப்பவர்களுக்குச் சாப்பாடு கூட ஒழுங்காகக் கொடுக்கப்படாத ஆபத்தான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஆசிரியர்கள் இன்றைக்குத் தந்தி மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

Arrests, teachers not provided with food, Pray Justice என்று இன்றைக்கு ஜஸ்டிஸ் கோரி அவர்கள் தந்தி கொடுக்கும் அவல நிலைமை இருக்கிறது. இப்படி ஆபத்தான நிலைமை இருப்பதால் தமிழகம் முழுவதும் கொந்தளிப்பான நிலைமைகள் இருப்பதால் இன்றைக்கு பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே திரு. ஜே. எஸ். இராசு அவர்களைத் தலைவராகவும், திரு. ஈஸ்வரன் அவர்களைச் செயலாளராகவும் கொண்ட தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தமிழ்நாடு முழுவதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தப் போராட்டத்தைத் திடீரென்று நடத்தி விடவில்லை. சென்ற மாதம் 14 ஆம் தேதி 12 அம்சக் கோரிக்கையை வைத்து, மாநில மாநாட்டை நடத்தினார்கள், அதிலே நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் கலந்து கொண்டார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் நானும் கலந்து கொண்ட அந்த மாநாட்டிலே நமது தமிழக முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்தக் கோரிக்கைகளைப் பார்க்கும்போது தேவைக்கு அதிகமானவை என்று யாரும் சொல்ல முடியாது என்று. ஆனால், அந்த மாநாட்டிலே அந்தக் கோரிக்கைகளுக்கு என்ன பரிகாரம் என்று அறிவிக்க முடியவில்லை. பட்ஜெட் வருகிற காரணத்தால், அப்படிப்பட்ட கோரிக்கைகளுக்குப் பரிகாரம் அறிவிக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிக்கவில்லை. ஆனால், பட்ஜெட்டிலே அறிவிப்பார்களென எதிர்பார்த்த தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பட்ஜெட்டிலே ஒன்றும் அறிவிக்கப்படவில்லையென்ற நிலையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் நியாயமான கோரிக்கைகள். அரசு உத்தரவிடப் பட்டவை நிறைவேற்றப்படவில்லையென்பன போன்ற 12 கோரிக்கைகள். அந்த 12 கோரிக்கைகளை நாம் பார்ப்போமே யானால், ஏறத்தாழ இந்த அரசு ஊராட்சி ஒன்றியப் பள்ளி களிலே இருக்கிற ஆசிரியர் பணிகளை, அரசுப் பணியாக ஏற்றுக்கொண்டோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் அந்தப் பணியை அரசுப் பணியாக ஏற்று உத்திரவு வரவில்லை என்பது போன்ற 12 கோரிக்கைகள். ஓய்வு பெறும் போது ரூ. 10,000 கொடுக்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. மாதந்தோறும் ரூ. 10 அதற்காகக் கட்ட ஆசிரியர்கள் தயாராக இருக்கிறார்கள். அதைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் ஓய்வு பெறும் போது ரூ. 10,000 கொடுப்பது பெரிய தொகையாக இருக்காது. அல்லது நஷ்டமாக இருக்காது என்ற அளவுக்கு ஆசிரியர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை, இந்த அரசுக்கும், நாட்டுக்கும் தெரியும். அரசு கொடுக்கின்ற தொகையே அந்த ஆசிரியர்களுக்குப் போய்ச் சேரவில்லை. ஆகவே, அதை அரசு நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை ஒன்று. மாநகராட்சி பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க •வேண்டுமென்பது போன்ற 12 அம்சக் கோரிக்கைகளை வைத்து, இந்த அரசுக்கு முன்னதாகவே அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக. அப்படி இருந்தும் அவர்களைக் கூப்பிட்டுப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு ஆவன செய்யவில்லை என்ற காரணத்தால், இப்பொழுது தமிழகம் முழுவதும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களின் முன்னால் மறியல் போராட்டத்திலே ஈடுபட்டு, 4,000-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே இருக்கிறார்கள்.

அவர்கள் இந்த அரசுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, பள்ளிக் காலங்களை எல்லாம் முடித்துவிட்டு, மாணவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் செய்துவிட்டு இப்பொழுது விடுமுறைக் காலத்திலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராடுகின்ற அந்தச் சமயத்தில், நேற்றைய தினம் மட்டும் தமிழகம் முழுவதும் பெண் ஆசிரியர்கள் போராடி 400-க்கு மேற்பட்டவர்கள் சிறை சென்றிருக்கிறார்கள். இந்த நிலை இன்னும் நீடித்துக் கொண்டே போகுமானால் சரியல்ல. தமிழகத்திலே பதட்டமான நிலை உருவாகியிருக்கிறது. அந்த நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சிறையிலே இருக்கிற ஆசிரியர்களை விடுதலை செய்து, அந்த ஆசிரியர் பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தெளிவாக விவாதிக்க வேண்டிய காரணத்தினால், இன்றைய இந்த அவையினுடைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த ஆசிரியர் பெருமக்கள், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல, 4,000 க்கு அதிகமானவர்கள் இன்றைக்குச் சிறைக் கூடங்களிலே இருக்கிறார்கள், எழுத்தறிவிக்கின்ற பணி இறை நிகரான பணி என்று சொன்னார்கள். சிறு பிராயத்திலே இருக்கிற பிஞ்சு உள்ளங்களுக்குப் பதிகின்ற வகையிலே, கல்வி கற்பிக்கின்ற தொழிலைச் செய்கின்ற அந்த ஆசிரியப் பெருமக்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி, படிப்படியாக வலியுறுத்தி, அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு வேறு வழியில்லாமல், சிறைக்கூடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசியவர்கள் சொன்னதைப் போல, கடந்த

மார்ச் மாதம் அவர்கள் நடத்திய மாநாட்டிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு பேசுகின்ற நேரத்திலே, இந்தக் கோரிக்கைகளைப் பார்க்கின்றபொழுது தேவைக்கு அதிகமானவைகள் என்று யாரும் சொல்ல முடியாது. ஒரு வாரம் பொறுத்திருங்கள், பட்ஜெட் வரும் என்று அவர்கள் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பிரதிநிதிகள் இருக்கிற அந்த மாநாட்டிலே கூறியதிலிருந்து, நிச்சயமாகத் தங்களுக்கு விடிவு வரும், தங்களுடைய கோரிக்கைகளை அரசு பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளும் என்ற ஆசையிலிருந்து, அந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் வராத காரணத்தினாலேதான் இன்றைக்கு இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றம் நன்றாக உணரும். அந்த ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த பெருமக்கள் எத்தனை பொறுப்பானவர்கள் என்பது விடுமுறை நாட்களிலே அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்ததி லிருந்து நன்கு தெரிகிறது.

வேறு நாட்களிலே போராட்டத்தைத் தொடங்குவார்களே யானால் கல்விக் கூடங்களில் கல்வி பயிலுகின்ற இளம் சிறார் களுக்குத் தொல்லை ஏற்படும், பாதிப்பு ஏற்படும் என்கிற காரணத்தினால், விடுமுறை நாட்களைத் தேர்ந்தெடுத்து தங்களைத் தாங்களே இந்த துயரத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆட் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

12 அம்சக் கோரிக்கைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே ஒரு கோரிக்கை காவல் துறையிலே சில பிரிவினருக்கு மலிவு விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வழங்கப் படுவதைப்போல ஆசிரியர்களுக்கும் அதே வசதியம், மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்கப்பட வேண்டும் என்றும், நகராட்சி மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருடைய நிர்வாகம் கல்வித் துறையால் ஏற்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை எல்லாம் வைத்திருக்கி றார்கள். ஆகவே இன்றைய தினம் சிறையிலே இருக்கின்ற அந்த ஆசிரிய பெருமக்களை எல்லாம் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். ஏனென்றால் சிறைக் கூடங்களிலே அவர் களுக்கு அத்தியாவசியமான வசதி கூட செய்யப்பட முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது எனவே அவர்களை உடனடி யாக விடுதலை செய்து அந்த ஆசிரியர்களை அழைத்து அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தி, ஒரு சுமுக சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அமைச்சரவையிலே கூட முன்பு ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள் 3,4 பேர்கள் இருக்கிற காரணத்தினாலே இந்த நியாயமான கோரிக்கைகளுக்கு இந்த அரசு இணங்க வேண்டும் என்ற காரணத்தினால் இதுபோன்று பல்வேறு தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ள காரணத்தாலே, தமிழகத்திலே மாணவர்கள் மத்தியிலேயும் பெற்றோர்கள் மத்தியிலேயும், பொதுமக்கள் மத்தியிலேயும் பதட்டநிலை இந்த

1981 மே 12] [திரு. என். எஸ். வி. சித்தன்]

ஆசிரியர்கள் போராட்டத்தினால் உருவாகி இருக்கிற காரணத்தினாலே, இன்றைக்கு மட்டுமாவது இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள், தோழர் ஜே. எஸ். ராசு, ஈஸ்வரன் தலைமையிலே 11—4—81 அன்று மதுரையில் கூடி, தங்களுடைய கோரிக்கையான மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகரான பஞ்சப் படி, ஒய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் உள்ளிட்ட 12 கோரிக்கைகளை வலியுறுத்தி, தலைமைச் செயலகம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் செய்வது என்று முடிவு செய்தனர். மாநில அளவில் நடவடிக்கைக் குழுவும் அமைக்கப்பட்டது. உறுப்பினர்கள் மறியல் செய்து கைதாகும்போது ஜாமீனில் வெளிவரக்கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட முடிவிற்கேற்ப 4—5—81 முதல் தமிழ்நாடு முழுவதிலும் மறியல் செய்வது என்று முடிவு செய்தார்கள். இந்த முடிவிற்கேற்ப சங்க உறுப்பினர்கள் சென்னையிலும் மற்ற மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களின் முன்பும் தடை உத்தரவை மீறி மறியல் செய்து 4—5—81 முதல் 11—5—81 முடிய தமிழ்நாடு முழுவதும் 4,158 பேர்கள் கைதாகி உள்ளனர். அவர்களில் 2,247 பேர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மீதி 1,411 பேர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்றைக்கு பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் இப்போது 12 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று அவர்களும் கூற முடியாது, மற்றவர்களும் கூற முடியாது. இதிலே பெரும்பாலான கோரிக்கைகள் அவர்களுக்கு மட்டுமல்லாது மற்ற அரசு அலுவலர்களுக்கும் பொதுவான கோரிக்கைகளாக இருக்கின்றன. இந்த 10 ஆயிரம் ரூபாய், மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்குதல் போன்ற பெரும்பாலான கோரிக்கைகள் மற்ற அலுவலர்களுக்கும் பொதுவாக இருக்கிறது. ஆகவே அவை ஆசிரியர்களுக்குத் தனிப்பட்ட நிலையிலே இல்லை. அதைப் பொதுவாக அரசு பரிசீலிக்கக் கூடிய வாய்ப்பு பெற்று பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை எடுக்கும். அவர்களுடைய முக்கியமான கோரிக்கையான, அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொண்டு ஜுன் 1-ந்தேதி முதல் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற உத்தரவை போட்டிருக்கிறோம். அதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கூட விரைவிலே சட்ட சபையிலே அல்லது வேறு வகையில் கொண்டு வந்து இந்த 1-ந் தேதியிலிருந்து அரசு ஊழியர்களாக ஆக்க இருக்கிறோம். அது ஒரு பெரும் சாதனையாக அல்லது பெரும் காரியமாக கருதப் பட வேண்டும். காரணம் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களை நாம் ஒரே சமயத்தில் அரசு ஊழியர்களாக ஆக்குகிறோம்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1981 மே 12

அதற்குத் தேவையான அதிகாரிகளை அமைத்து இப்போது ஒரு முடிவை செயல்படுத்த இருக்கிறோம் அதைக் கொண்டு வந்ததற்குப் பிறகு தான் நகராட்சி, மாநகராட்சி ஆசிரியர்களைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோமே தவிர, இப்போது இதையே நாம் முடிக்க முடியாத நிலையிலே அவர்களைப் பற்றி நாம் சிந்திக்கின்ற சூழ்நிலையில் இல்லை. ஆகவே இதை நாம் செய்ததற்குப் பிறகு அவர்களைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றக் கோரிக்கைகளைக் கூட நாம் தேவையான அளவுக்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். போராட்டம் நடத்தினால் தான் அரசு ஆசிரியர்களுடைய பிரச்சினையைக் கவனிக்கிறது என்கிற ஒரு குறைபாட்டை நாம் கடந்த 2, 3 ஆண்டு காலமாக வைத்துக் கொண்டு இருக்கவில்லை.

[முற்பகல் 11.10]

ஒவ்வொரு பிரச்னையையும், பரிசீலனை செய்து முடிவு எடுத்து உத்தரவுகளை அவ்வப்போது வெளியிட்டுக் கொண்டு இருக்கிறோம். போராட்டம் நடத்தினால் தான் பேச்சு வார்த்தை என்ற நிலைமையை வைக்கவில்லை. அவ்வப்போது தேவையான நேரங்களில் அவர்களைச் சந்தித்துப் பேசிக் கொண்டு இருக்கிறோம். முன்பு ஒரு பிரச்னையில் நான் பேசிய போது குறிப்பிட்டேன். இந்த ஆண்டு எல்லா சங்கத்தினரையும் நாங்களே கூப்பிட்டு பேசி, அவர்களுடைய பிரச்னைகளைக் குறித்து விவாதித்து இருக்கிறோம். அந்த அடிப்படையிலே நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியில் கல்வித் துறை ஈடுபட்டு இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்கள் கோரிக்கைகளை, பிரச்னைகளை இந்த அரசு பரிசீலிக்கவில்லை, கூப்பிட்டுப் பேசவில்லை என்ற குறையை வைக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அனுதாப உணர்வோடு தான் இருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் போராட்டம் இன்றியே அவர்கள் தங்களுடைய காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியும். ஆகவே, இப்படிப்பட்ட போராட்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அவர்கள் போராட்டத்தை நிறுத்தி விட்டு, ஒரு அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி, அரசுக்கும் அது குறித்து சிந்திப்பதற்கு அவகாசம் தந்து, அவர்கள் காரியங்களைச் செய்து கொள்வதற்கு முன்வர வேண்டும்.

இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு அகவிலைப்படி தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிற சூழ்நிலையிலும் நிலைமை அமைதியாக இருக்கிறது. ஆகவே, இப்பிரச்னை குறித்து விவாதிக்க

(பல உறுப்பினர்கள் எழுந்தனர்)

திரு. ரா. உமாநாத்: அந்த கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் ஜெயிலில் இருக்கிறபோது எப்படி போரட்டத்தை வாபஸ் வாங்குவது? அது குறித்து அமைச்சர் ஏதாவது அறிவிப்பு செய்தால் நல்லது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கிறபோது நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. போராட்டத்தை நிறுத்திவிட்டு, அரசோடு கலந்து பேசும் சூழ்நிலையை அவர்கள்தான் செய்ய வேண்டும்: அரசு அவர்களோடு விரோத மனப்பான்மை கொண்டோ அல்லது வேறு வகையிலோ இல்லை என்பதைத் தெரிவித்து, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(ஆ) வேளாண்மைத் துறை தொழில்நுட்ப ஊழியர்கள் உண்ணாவிரதம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): திருவாளர்கள் மு. அம்பிகாபதி, இரா. கருப்பையா, தி. கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, செ. சிவசாமி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், என். பழனிவேல், சொ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், கே. எம். தங்கமணி, பி எம். தங்கவேல் ராஜ், எஸ். ஆண்டித்தேவர், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர் ''தமிழ்நாடு வேளாண்மைத் துறை தொழில் நுட்ப ஊழியர்கள் உண்ணாவிரதம் குறித்து, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. அழகர்சாமி

திரு. சோ. அழகர்சாமி: பேரவை தற்காலிகச் சபாநாயகர் அவர்களே, இந்த தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் நுட்ப அலுவலர்கள் ஏற்கனவே நம்முடைய தமிழ்நாட்டிலே உற்பத்தி அதிகமாகப் பெருகி, ஓரளவுக்கு தன்னிறைவு பெறுவதற்கு காரணமாக இருந்த அலுவலர்கள். நீண்டகாலமாக அவர்களிடத்தில் இருக்கும் குறைகளை அரசுக்குப் பல முறை சொல்லி

யும் கூட அது நிறைவேறவில்லை என்ற காரணத்திற்காக அவர்கள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். 800க்கு மேற்பட்டவர்கள் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். கடந்த 5 நாட்களாக சாகும் வரை உண்ணாவிரதம் என்று இருந்தார்கள். நேற்றைய தினம் பொதுவாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளை அடிப்படையாக வைத்து, நாங்கள் எல்லாம் சென்று சட்டமன்றத்தில் உங்கள் பிரச்னைகளை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம், உங்களுடைய கோரிக்கைகள் நியாயமானது என்பதை வலியுறுத்துகிறோம் என்று சொன்னதற்குப் பிறகு, அவர்கள் அந்த உண்ணாவிரதத்தை நிறுத்தி இருக்கிறார்கள்.

ஆகவே, இன்றைய தினம் அவர்கள் மிகவும் வலியுறுத்தும் ஒரு கோரிக்கை பொறுப்புடன் பணியாற்றும் எங்களுக்கும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்திற்குச் சமமான ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்பதாகும். பி. எஸ். ஸி. அக்ரி படித்து விட்டு வந்தவர்களுக்கு 600 ரூ. ஆரம்பச் சம்பளம் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இவர்கள் இந்தத் துறையில் ஒரு 10—15 ஆண்டுகள் ஏற்கனவே பதவியில் இருந்து பதவி உயர்வு பெற்று வந்தவர்கள்; என்றாலும், அவர்களுக்கு 525- என்றுதான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே இவர்கள் அந்தத் துறையில் பல ஆண்டு காலம் பணி செய்து இருப்பதால், படித்து விட்டு கல்லூரியில் இருந்து நேரடியாக வருகின்றவர்களுக்குக் கொடுக்கப்படும் அந்த ரூ. 600 அடிப்படை ஊதியத்தை அளிக்க வேண்டியது நியாயமானது. அந்தக் கோரிக்கை அநியாயமானது அல்ல. ஆகவே, அந்த நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எஸ். எஸ். எல். சி. வரை படித்து, இரண்டாண்டுகள் பயிற்சி பெற்று, 20 ஆண்டுகளாக உதவி வேளாண்மை அலுவலர்களாகப் பணியாற்றியவர்கள் தங்களுக்குப் பதவி உயர்வு வேண்டுமென்று கேட்கும்போது அவர்களுக்கு துணை வேளாண்மை அலுவலர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் அளவுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்.

அடுத்து, வயல் விளக்க அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 8-வது வகுப்பு வரை படித்தவர்கள். அதற்குப் பின்னால் ஓராண்டு பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு 250 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அடிப்படை ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற இந்த ஊதியத்தை மாற்றி, மாதம் ரூ. 310/- என்று நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இதுவும் நியாயமான கோரிக்கைதான்.

அதே மாதிரி உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு பதவி உயர்வு 10% என்று முன்னால் இருந்தது. நம்முடைய அரசு 25% என்று அதை உயர்த்தி ஜி. ஓ. போட்டது. அதுகூட இன்றைக்கு அரசாங்கத்தின் தடை மூலம் அமுலுக்கு வரவில்லை. அதை அமுல்படுத்த வேண்டுமென்று கூறி இருக்கிறார்கள்.

ஆகவே, அமைச்சரவர்கள் அது சம்பந்தப்பட்ட ஊழியர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கைகளான இந்த நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய மனக்குறையைப் போக்குவது பற்றி எல்லாம் விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தற்காலிகத் தலைவரவர்களே, இந்த தமிழ்நாடு வேளாண்மை துறை தொழில் நுட்ப அலுவலர்கள் கூட்டமைப்பின் சார்பிலே விடுக்கப்பட்ட வேண்டுகோள் அடிப்படையிலே மே 2-ந்தேதி தங்களுடைய கோரிக்கைகளை அரசுக்கு வலியுறுத்துவதற்காக ஊர்வலமாக வந்தார்கள். அப்படி ஊர்வலம் வந்தவர்கள் கிட்டத்தட்ட 879 பேர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காக வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் என்னவென்றால்,

சமமான பொறுப்புடன் பணியாற்றி வரும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கு வேளாண்மை அலுவலர்களுக்கு வழங்கும் இணையான ஊதியத்தையும் ஒரே மாதிரியான பதவிப் பெயரையும் திரும்ப அளிக்க வேண்டும்;

தகுதிமிகு வயல் விளக்க அலுவலர்களை உதவி வேளாண்மை அலுவலர்களாக உயர்த்த வேண்டும்;

அனைத்து கலவை உர ஆய்வாளர்களையும் வேளாண்மை அலுவலர்களாக உயர்த்த வேண்டும்;

உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு 450 ரூபாய் அடிப்படையில் தேர்வுநிலைப் பதவிகள் வழங்க வேண்டும்;

வயல் விளக்க அலுவலர்களுக்கு அடிப்படை ஊதியம் 310 ரூபாய் என்ற விகிதத்தில் நிர்ணயிக்க வேண்டும்;

தேர்வு நிலை வயல் விளக்க அலுவலர்களுக்கு 350 ரூபாய் அடிப்படை ஊதியம் அளிக்க வேண்டும்;

வயல் விளக்க அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு மாநில அளவில் முதுநிலைப் பட்டியல் தயாரித்து சீரான முறையில் பதவி உயர்வு அளிக்க வேண்டும்;

மற்றும் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக ஊர்வலம் வந்தார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டி

ருக்கிறார்கள். அதன் பிறகு அவர்கள் கூடி மறியல், ஊர்வலம் என்பதற்குப் பதிலாக அவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக 7—5—81 முதல் காலவரையற்ற உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்துகின்ற அதே நேரத்தில் வேலைகளுக்கு பாதகம் ஏற்படாமல், வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் 2—5—81 அன்று கைது செய்யப்பட்ட 879 பேர்களை 15 நாள் ரிமாண்டில் வைத்திருக்கிறார்கள். நேற்று சர்வ கட்சித் தலைவர்கள் சென்று உண்ணாவிரதம் இருந்தவர்களை சந்தித்து, உங்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற நாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறோம்; அரசிடம் இதைப்பற்றி வற்புறுத்துகிறோம் என்று சொல்லி, வாக்குறுதி கொடுத்ததின் பேரில் அவர்கள் உண்ணாவிரதத்தை நேற்று முதல் கைவிட்டிருப்பதாக அறிகிறோம். 879 பேர் சிறையிலே இருந்தாலும், வேலைகள் தடையில்லாமல் நடைபெறுவதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். எனவே, அவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை நல்ல முறையில் பரிசீலித்து, ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க, அந்த 879 பேர்களையும் உடனடியாக விடுதலை செய்ய அரசாங்கம் முன்வந்தால் பேச்சு வார்த்தை சுமுகமாக நடக்கவும், அரசு வேலைகள் ஒழுங்காக நடைபெறவும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே இதுபோன்ற பல பிரச்சினைகளைப்பற்றி விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் சட்டசபையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைத் துறை தொழில் நுட்ப அலுவலர்கள் சார்பிலே தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை, 9 அம்ச கோரிக்கைகளை அரசாங்கத்தின் காதுக்கு எட்டச் செய்து, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக ஊர்வலம் வந்தபோது கடந்த 2-ந்தேதி கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் தங்களுடைய கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இது அண்ணா தி. மு. க. அரசு என்ற அடிப்படையிலே பேரறிஞர் அண்ணா சமாதி அருகே, 'எதையும் தாங்கும் இதயம் உறங்கிக் கொண்டிருக்கிறதே, அதற்கு முன்னால், எரிகின்ற மெழுகுவர்த்தியைப் போன்று தங்களைத் தாங்களே வருத்திக் கொண்டு பட்டினி கிடந்து அரசாங்கத்தின் கவனத்திற்கு அவர்களுடைய கோரிக்கைகளைக் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

1981 மே 12] [திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்]
[முற்பகல் 11. 20]

நேற்றைக்கு முன்தினம் இந்த அவையிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் மற்றும் சர்வகட்சித் தலைவர்கள் ஆகியோர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்தி இருக்கிறார்கள். ஆகவே இப்படிப் பட்ட சூழ்நிலையிலே நாம் கௌரவம் பார்க்காமல் சிறையிலே வாடுகின்றவர்களை • வெளியேவிட வேண்டும். சிறையிலே வாடுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சிறையிலே இருப்பது என்பது வருந்துவதற்குரியதுதான். ஆனால் சிறைச் சாலை என்பது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று பாரதிதாசன் அவர்கள் சொல்லியதற்கேற்ப அவர்கள் ஏற்றுக் கொண்டு சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த நேரத்தில் நம்முடைய அரசு கௌரவம் பார்க்காமல் பாதிக்கப்பட்டு சிறைச்சாலைக்குச் சென்ற அவர்களை எல்லாம் வெளியிலே விட்டு பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு சுமுகமான சூழ்நிலையை உண்டாக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் போராட்டத்தை நிறுத்துவதா அல்லது நாம் அவர்களை அழைத்துப்பேசுவதா என்ற கௌரவம் பார்க்காமல் தயவு செய்து அரசாங்கம் சிறையிலே இருப்பவர்களை எல்லாம் வெளியே விட்டு அதற்குப் பிறகு சுமுகமான ஒரு முடிவு காண வேண்டும் என்ற அடிப்படையிலே இன்றையதினம் இந்த சபையின் மற்ற அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு அது குறித்து விவாதிக்கவேண்டும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: இந்த அவையின் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 2.5.81 அன்று வேளாண்மைத் துறையைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த அரசுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் ஊர்வலமாக வந்தபோது 879 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கை பற்றி இந்த அரசுக்கு பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே முக்கியமானதொரு கோரிக்கை என்னவென்றால் 10 ஆண்டுகள் 15 ஆண்டுகள் பணியாற்றி விட்டதற்குப் பிறகும் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்றும், வேளாண்மைத் துறையிலே படித்து வந்தவர்களுக்கு இணையான பதவி உயர்வு கொடுக்கவேண்டும் என்றும் அவர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்றும்கோரிக்கை விட்டதற்குப் பின்னர் அவர்களுக்கு 25 சதவீதம் பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்று ஒத்துக்கொண்டதற்குப் பிறகும் அது கொடுக் கப்படாமல் அதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது, அந்தத் தடையை நீக்கவேண்டும் என்றும் 25 சதவீதம் பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கையை வலியுறுத்தி அவர்கள் போராடுகின்றபோது 879 பேர்கள் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அவை முன்னவர் அவர்களின் அறிவிப்பிற்குப் பிறகும் மற்ற இயக்கத்தின் தலைவர்கள் எல்லாம்

போய்ச் சொன்னதற்குப் பிறகும் அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்தி இருக்கிறார்கள். ஆகவே 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்ற நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இப்போது இருக்கின்ற வறட்சி நிலையிலே விவசாயத்திற்கு அவர்கள் தமிழகம் முழுவதும் ஆற்றவேண்டிய பணியினைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு அந்தப் பணியிலே அவர்கள் எல்லாம் துரிதமாக ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களைச் சிறையிலே இருந்து விடுதலை செய்து பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமான உறவினை ஏற்படுத்தி அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித்தருதல் போன்றவை பற்றி எல்லாம் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் உதவி வேளாண்மை அலுவலர்களின் சங்கம் மற்றும் வயல் விளக்க அலுவலர்கள் சங்கம் ஆகிய இரண்டும் சேர்ந்த கூட்டு அமைப்பின் மூலமாக சில கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தினார்கள். அவர்களுடைய கோரிக்கைகளிலே பெரும்பாலானவை 3—வது சம்பளக்குழுவாலே ஏற்கப்படாமல் அதற்குப் பிறகு தனிநபர் குழு ஏற்படுத்தப்பட்ட பிறகு அந்த தனி நபர் குழுவாலேயும் ஏற்கபடாத கோரிக்கைகளை வைத்துத்தான் போராட்டம் நடத்துகிறார்கள். இருந்தாலும் அவர்கள் போராட்டம் தொடர்பாக என்னிடத்திலே தெரிவித்தபோது அமர்ந்து பேசி முடிவு செய்யலாம் என்றுதான் நான் குறிப்பிட்டேன். ஆனால் அதற்கும் மீறி அவர்கள் இந்த போராட்டத்தினை நடத்தினார்கள். சர்வ கட்சித் தலைவர்களின் வேண்டுகோளை முன்னிட்டு உண்ணாவிரதத்தை அவர்கள் நிறுத்தியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களோடு கலந்து பேசி முறையாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. இப்பொழுதுகூட, அந்தக் கூட்டத்தினுடைய ஒரு பிரிவினர் என்னை சந்திப்பதற்காக வருவதாக கூறியிருக்கிறார்கள். ஆகவே இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு பேசிமுடித்தபிறகு அரசு முடிவு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த அவையை மேற்கொண்டு ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி அமர்கிறேன். (குறுக்கீடு)

தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கு பிரச்னையில் நான் எந்தவித கருத்தையும் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன். அவர்களோடு கலந்து பேசி, மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க முடிவு எடுக்கிறேன் என்று கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு மற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

6. அறிக்கை அளித்தல்.

(அ) விவசாய மின் இணைப்புகளுக்குக் கூடுதல் மின்சக்தி வழங்கல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்வெட்டு அமுலில் இருக்கும்பொழுது கிராமப்புறங்களுக்கும், விவசாயமின்இணைப்புகளுக்கும் சீரான மின் விநியோகத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன், உயர் அழுத்த மற்றும் இதர மின் இணைப்புகளுக்குக் கூடுதல் கட்டுப்பாடுகளை அரசு அமுல்படுத்தி அதைப்பற்றி சட்டமன்றப் பேரவையில் 7-3-1981ல் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 9-3-1981 முதல் விவசாயமின்இணைப்புகள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிற்கும் நாள் ஒன்றுக்கு பகலில் ஆறுமணி நேரம் அல்லது இரவில் 9 மணி நேரம் தடையின்றி மின்சாரம் வழங்க வகை செய்யப்பட்டது. இதனால் கிராமப்புறப் பகுதிகளில் முன் அறிவிப்பு இல்லாத மின்சுமை குறைப்பு (Unscheduled loadshedding) தவிர்க்கப்பட முடிந்தது. ஆயினும் 2-4-1981 முதல் 11-4-1981 முடிய உள்ள நாட்களில் 110 கே. வி. பீடர்களில் மின்சுமைக் குறைப்பு அமுலாக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இதற்குக் காரணம் அதிக நுகர்வு, மற்றும் எண்ணூர் தூத்துக்குடி, நெய்வேலி ஆகியவற்றிலிருந்து குறைந்த மின்வரத்து இவையாகும். நிலைமை திருந்தியபின், அதாவது 12-4-1981 முதல் மின்சுமை குறைப்பு இல்லை. சீரான விநியோகம் தொடர்ந்து வருகிறது. மேலும் இரவு நேரத்தில் மின்சக்தி பெறுகின்ற விவசாய மின் இணைப்புகளுக்கு ஆங்காங்கே உள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பகலில் இரண்டு மணி நேரமாவது மின்சக்தி வழங்கப்படவேண்டுமென்று மேற்பார்வைப் பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விநியோக நிலைமையை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற 7-வது பேரவையில்உருவாக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக—

"(1) மீனளத் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின்நான்காவது அறிக்கையையும்;

(2) எழுது பொருள்—அச்சுத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கையினையும்," பேரவை முன் வைக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்—(தொடர்ச்சி)

(ஆ) விதி 54–(6)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்கு கொண்டு வரக்கூடாது என்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 54(6)ஐ இன்று தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

7. கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை மாநகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): "சென்னை மாநகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து" திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், இரா. கருப்பையா ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இரா. கருப்பையா.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, "சென்னை மாநகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றினை நான் வைக்கிறேன்.

அறிக்கை

வேலைவாய்ப்பு நிறுவனத்தை ஆலோசிக்காமல் எந்த ஒரு பதவிக்கும் எவரையும் நேரடியாக நியமனம் செய்யக்கூடாது என தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையில் கண்டிப்பான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் 31–12–77 வரை வேலை வாய்ப்பு நிறுவனம் பரிந்துரைக்காமல் செய்யப்பட்ட நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்து அவர்கள் பணியை

நிரந்தரமாக்க ஆணையிடப்பட்டது. எனவே மாநகராட்சி துடபுரவு தொழிலாளர்கள் மற்றும் குப்பை வண்டி ஒட்டுநர்கள் பதவிகளுக்கு தக்க நபர்களைப் பரிந்துரைக்கும்படி வேலை வாய்டபு நிறுவனத்தை சென்னை மாநகராட்சி ஆணையாளர் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க வேலைவாய்ப்பு நிறுவனமும் ஒரு பட்டியலை அனுப்பிவைத்தது. ஆனால் அப்பட்டியலில் இடம் பெற்றவர்களில் பெரும்பாலோர் நேர்முகத் தேர்வுக்கு வரவில்லை. வந்த ஒரு சிலரும் துப்புரவு பணியை ஏற்றுககொள்ள விரும்பவில்லை. எனவே துப்புரவு பணியாளர் மற்றும் குப்பை வண்டி ஒட்டுநர் பதவிகளுக்கு நேரடியாக நியமனம் செய்யலா மென்றும் வேலைவாய்ப்பு நிறுவனத்தை கலந்து ஆலோசிக்கத் தேவையில்லை என்றும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் கருத்துத் தெரிவித்தார். அவருடைய கருத்தினை வேலைவாய்ப்பு துறை இயக்குநரிடமிருந்து அரசு கோரியுள்ளது.

இதற்கிடையில் துப்புரவு பணியாளர் பதவிகளுக்கு வேலை வாய்ப்பு நிறுவனத்தை கலந்து ஆலோசிக்கக்கூடாது என மாநகராட்சி துப்புரவு பணியாளர்களின் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 19-4-81ம் நாள் அன்று அவர்களை சந்தித்து மேலே கூறிய உண்மை நிலையை மாநகராட்சி ஆணை யாளர் அவர்களுக்கு தெரிவிக்க, அன்று முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. தற்பொழுது நிலைமை சீராக உள்ளது.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள், குப்பை வண்டிகளை ஓட்டக்கூடிய தொழிலாளர்கள், நகரத்தின் அசுத்தங்களை அவர்கள் தாங்கிக் கொண்டு, நகரத்தை சுத்தம் செய்யக்கூடிய, நகரத்தின் சுகாதாரத்தை பாதுகாக்கக் கூடிய தொழிலாளர்களாக இருந்து வருகிறார்கள். அந்த வேலை களுக்கு எந்த விதமான கல்வித் தகுதியும் தேவையில்லை என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த துப்புரவுத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான கல்வித் தகுதியும் தேவை யில்லை.

[முற்பகல் 11. 30]

இந்தத் தொழிலைச் செய்து வருபவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாவார்கள். அவர்கள்தான் இந்தத் துப்புரவு வேலைகளைச் செய்து வருகிறார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். வாழையடிவாழையாக சில குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களே இந்தத் தொழிலைச் செய்து வருகிறார்கள். புதிதாக யாரும் இந்தத் தொழிலுக்கு போட்டியிடுவது என்பது கிடையாது. அப்படிப்பட்ட ஒரு தொழிலாக இந்தத் தொழில் அமைந்து விட்டது. நாகரீகம் வளர வளர எதிர் காலத்தில் இந்தத் தொழிலுக்குஆட்கள் கிடைப் பார்களோ என்பதே சந்தேகத்திற்குரிய விஷயமாயிருக்கிறது. ஏற்கனவே சென்னை மாநகராட்சி வேலை வாய்ப்பு நிறுவனத் திடம் ஆட்களை கேட்டு எடுக்கிறோம் என்ற முறையில்......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. வி, சுவாமிநாதன்) : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. கருப்பையா : ஏற்கனவே அங்கே வேலை செய்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நீண்ட நாட்களாக வேலை பார்த்து வந்தவர்கள் இருக்கிறார்கள். தாற்காலிகமாக வேலை செய்திருக்கக்கூடிய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்காமல் சென்னை மாநகராட்சி வேலைவாய்ப்பு நிறுவனத்திடம் ஆட்கள் கேட்டதால் சென்னை மாநகராட்சியில் ஒரு வேலைநிறுத்தமே நடைபெற்றிருக்கிறது. ஆகவே இம்மாதிரியான வேலைநிறுத்தங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு இந்தக் காரணத்தால் வேலைநிறுத்தம் ஏற்படுவதைத் தடுக்கக் கூடிய முறையில் ஏற்கனவே அமலில் இருந்த முறையில் இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு, ஏற்கனவே வேலை செய்தவர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய முறையில் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளும் அந்த முடிவை ஏற்று அவர்களை எடுத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் கூட இந்த கருத்தைத்தான் தெரிவித்து வேலை வாய்ப்புத்துறை மூலமாக எடுக்கப்படாமல் நேரடியாக நியமனம் செய்யலாம் என்று வேலை வாய்ப்புத்துறை இயக்குநரிடம் கூட தெரிவித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்தப் போராட்டம் நடத்தியதன் காரணமே, இந்த அடிப்படையல்தான் நடத்தப்பட்டது. கடந்த 13—4—81 ம் தேதி அவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து பேசியதற்குப் பின்னால் போராட்டம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. ஆகவே இது அரசாங்கத்தினுடைய கவனத்தில் இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : இதேமாதிரி அனைத்து நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் இந்த முறை அமல் செய்யப்பட்டு இம்மாதிரியான வேலை நிறுத்தங்கள் வெடிப்பதற்குள்ள நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இம்மாதிரி வேலைவாய்ப்புத் துறை மூலமாக இல்லாமல் ஏற்கனவே இருக்கக்கூடிய முறயில் அங்கே வேலைக்கு ஆள்களை எடுக்க வேண்டும் என்ற முறையில், வேலை வாய்ப்புத் துறை மூலம் எடுக்க வேண்டும் என்ற உத்தரவை அமல்செய்வதை இடைக்காலத்தில் நிறுத்தி வைப்பதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : எந்த வேலையாக இருந்தாலும் வேலைவாய்ப்புத்துறை மூலமாகத்தான் எடுக்க வேண்டும் என்று ஏற்கனவே அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆகவே அதை ஸ்ட்ரிக்ட்டாக பாலோ செய்ய வேண்டுமென்ற

1981 மே 12] [திரு. ப. குழந்தைவேலு]

ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் இந்தப் பணிக்கு, துப்புரவுப் பணிக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியினர் மட்டும் வருகிற காரணத்தால் வேலை வாய்ப்புத்துறை மூலம் அல்லாமல், பட்டியலில் இடம் பெற்றவர்கள் அவர்கள் நேரடியாக அந்தத் துறைக்கு வர முடிவதில்லை என்ற காரணத்தால் இவைகளையெல்லாம் அரசாங்கம் கவனித்து நேர்முகத்தேர்வு மூலம் நேரடியாக அவர்களையெல்லாம் அழைத்து உடனடியாக வேலைவாய்ப்பு தேடிக்கொடுக்கிற ஒரு நிலையை உருவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

ஆ. பீடித் தொழிலாளர்கள் மூலப்பொருள் கிடைக்காததால் வேலையின்றி இருத்தல்.

மாண்புமிகு மற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : ' பீடித் தொழிலுக்குத் தேவையான மூலதனப் பொருள் கிடைக்காததால் பீடித்தொழிலாளர்கள வேலையின்றியிருப்பது குறித்து 'திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், கு. ரமணி, என். வரதராஜன், ரா. கிருஷ்ணன், ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர், அவர்களுள் திரு கே. ஆர். சுந்தரம் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, 'பீடித் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள் கிடைக்காததால் பீடித் தொழிலாளர்கள் வேலையின்றியிருப்பது குறித்து, அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

வேலூர், தமிழ்நாடு பீடித் தொழிலாளர் சம்மேளனத்தின் (சி. ஐ. டி. யு.) பொதுச் செயலாளர், தமது மனுவில் மத்தியப் பிரதேச அரசு பீடி இலைகளை மற்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்வதை தடை செய்திருப்பதால் தமிழ்நாட்டில் பீடி இலைகள் கிடைப்பது அரிதாக உள்ளதாகவும், மேலும் தமிழ்நாட்டில் பீடி இலைகளின் விலை உயர்ந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். பீடித் தொழிலுக்குத் தேவையான கச்சாப் பொருளை பீடித் தொழிலதிபர்கள் தேவையான அளவு கொடுக்காததால் பீடித் தொழிலாளர்களின் ஊதியத்தில் வெட்டு ஏற்படுகிறது எனவும் அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கோரியுள்ளார்.

2. மத்திய பிரதேச மாநில தடை உத்தரவு குறித்து இவ்வரசுக்கு தகவல் ஏதும் இல்லை. தடை குறித்த விவரம் உண்மையானால், அது முறையானதாக இராது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். இராகவானந்தம்] [1981 மே 12

3. மேற்கண்ட சூழ்நிலைக்கு மத்திய பிரதேச அரசின் நடவடிக்கை காரணமாக இருப்பதால், மத்திய அரசுடன் கலந்து மாநில அரசு நடவடிக்கை எடுக்கலாம் என தொழிலாளர் நல ஆணையர் கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து தமிழ்நாடு அரசு மேல் நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

4. இச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன் :—

பீடி சுற்றும் தொழில் ஆண்டு முழுவதும் நடக்காத தொழிலாதலால், பீடித் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் கொடுக்க முடியாத நாட்களுக்கு அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ஏதுவாக நிர்வாகத்தினர், 500 பீடிகள் சுற்றுவதற்கும், நிர்வாகத்தினர் மூலப் பொருட்கள் விநியோகித்தாலும், 1000 பீடிகள் சுற்றுவதற்கு கொடுக்க வேண்டிய கூலியில் பாதியை கொடுக்க வேண்டும் என்பதை கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் சட்ட ரீதியாக நிறுவன உரிமையாளர்களை கட்டுப்படுத்த மராட்டிய மாநிலத்தில் வகை செய்துள்ளது போல், இம்மாநிலத்திலும் வகை செய்ய 6—10—80 ம் நாளிட்ட அரசு ஆணை எண். 2337-ல் ஓர் முன்னறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது :—

(1) குறைந்தது நாளொன்றுக்கு 500 பீடிகள் சுற்றுவதற்குரிய போதுமான நல்ல மூலப்பொருட்களைக் கொடுக்க தொழிலதிபா தவறினால் நாளொன்றுக்கு 1000 பீடிகள் சுற்றுவதற்குரிய குறைந்தளவு ஊதியத்தில் 50% உத்திரவாதக் கூலியாகப் பெறுவதற்கு தொழிலாளருக்கு உரிமையுண்டு.

(2) தொழிலதிபர்கள் கொடுத்த மூலப் பொருள்கள். அவைகள் 500 பீடிகள் சுற்றுவதற்கான மூலப்பொருள்களுக்கும் குறைந்திருந்தாலும், அந்த மூலப் பொருள்களை பயன்படுத்த தொழிலாளர்கள் தவறுவார்களேயானால் அவர்கள் உத்திரவாத ஊதியம் பெற தகுதியற்றவர்களாவார்கள்.

(3) ஏதாவது ஒரு நாள் ஒரு தொழிலாளி விருப்பமில்லாமலோ அல்லது வேறு எக்காரணத்தை முன்னிட்டோ வேலை செய்யாவிடில் அவர் உத்திரவாதம் அளிக்கப்பட்ட கூலியைப் பெறுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

(4) தொழிலதிபர் புயல், தீ, மழை, எந்திரங்கள் பழுதுடுபதல், மின்வெட்டு, தொற்றுநோய், உள்நாட்டுக் குழப்பம், உற்பத்தியான பொருட்கள் தேங்குதல் அல்லது தொழிலதிபர்களால் கட்டுப்பாடு செய்யமுடியாத வேறு எந்தக் காரணங்களினாலோ மூலப் பொருட்கள் கொடுக்க முடியாவிட்டால் தொழிலாளிக்கு உத்திரவாதக் கூலி கிடையாது.

1981 மே 12] (திரு. எஸ். இராகவானந்தம்)

இந்த அறிக்கையின் மேல்வந்த ஆட்சேபணைகளையும் கருத்துக்களையும் தொழிலாளர் நல ஆணையர் பரிசீலித்து தன் கருத்துக்களுடன் அரசுக்கு அனுப்பியுள்ளார். இது ஆய்வில் உள்ளது. இறுதி அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் மத்தியப் பிரதேசத்திலிருந்து இலைகள் வருவதில் தாமதப்படுவது பற்றி மத்திய அரசைக் கலந்து ஆலோசிக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய பிரதேசம் என்று மட்டுமல்லாமல் ஆந்திரா, ஒரிசா, போன்ற மாநிலங்களில் கூட இத்தகைய நிலை இருக்கிறது. அவர்களும் மத்திய அரசோடு பேசி வேறு தக்க ஏற்பாடுகள் செய்யலாம். இன்று பீடி உற்பத்தி செய்வதில் ஆயிரம் பீடி உற்பத்தி செய்ய வேண்டிய மூலப்பொருள் இலை 750 கிராம்ஸ் கொடுப்பதற்குப் பதிலாக 500 கிராம்ஸ் கொடுத்து மீதி 250 கிராம்ஸ் மூலப்பொருள் குறைந்து விட்டது என்று சொல்லி அவர்கள் கூலியில் ரூ. 6ல் இரண்டு மூன்று ரூபாய் குறைத்துக் கொடுக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஆவண செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது பீடித் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைக்காதது பற்றியதாகும். மேற்கண்ட சூழ்நிலைக்கு மத்தியப் பிரதேச அரசின் நடவடிக்கை காரணமாக இருப்பதால், மத்திய அரசுடன் கலந்து மாநில அரசு நடவடிக்கை எடுக்கலாம் என தொழிலாளர் நல ஆணையர் கருத்து தெரிவித்துள்ளார். எனவே, இது குறித்து, தமிழ்நாடு அரசு மேல் நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிலே பீடித் தொழிலாளர்கள் வேலையில்லாமல் பாதிக்கப்படுகின்ற நேரத்திலே, அவர்களுக்கு சம்பளம் தர அரசு ஏற்பாடு செய்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இந்த ஊதியம் கிடைக்காமல் இருப்பதற்கான காரணங்களைக் கூறுகின்ற நேரத்தில், குறிப்பாக மழை, தீ, புயல் போன்ற காரணங்களினால் மூலப்பொருட்கள் கொடுக்க முடியாவிட்டால், கூலி கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இன்றைக்கு பீடித் தொழில் உரிமையாளர் வேலையில்லாத இந்த நிலைமை இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையிருப்பதால், அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி கிடைக்கும் வாய்ப்பில்லை. ஆகவே, இந்தக் குறிப்பிலே உள்ளதை பீடித் தொழிலாளர்கள் சங்கங்கள் கொடுத்துள்ள திருத்தங்களைக் கவனித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு எது நன்மை என்பதை இந்த அரசு ஆய்ந்து தான், இந்த 'பால் பே வேஜஸ் என்ற ஊதியத்தைத் தருவதற்கு இந்த அறிவிப்பைக் கொடுத் திருக்கிறது. இந்த அறிக்கைமேல் ஆட்சேபணை வந்திருக்கிறது. ஆணையாளர் அனுப்பிய கருத்தை இந்த அரசு பரிசீலனை செய்கிறது. இறுதி அறிக்கை விரைவிலே வெளிடப்படும். அப்போது தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், எது அவர்களுக்கு நன்மை பயக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்த்து ஆவன செய்யப்படும்.

(இ) இளம்பிள்ளை வாத நோய்த்தடுப்பு மருந்து.

திரு. மி. வின்சென்ட் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து கிடைக்காதது குறித்து'' மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாத நோயைத் தடுப்பதற்கான மருந்து இந்திய அரசினால் பம்பாயிலுள்ள ஹாப்கின் பேயோபார்மாசுடிகல் கார்ப்பரேஷன் லிமிடெட் (Haffkine Bio Pharmaceutical Corporation Limited) என்ற நிறுவனத்தின் மூலமாக இலவசமாக வழங்கப்படுகிறது. 10-4-81 வரை தமிழ் நாட்டிற்கு 6, 52,000 வேளை மருந்துகள் (Doses) வழங்கப்பட்டுள்ளன. 1981—82 ஆம் ஆண்டில் மாதந்தோறும் 50,000 டோஸ் மருந்துகள் வழங்கவும், தேவையானால் அதிகமான அளவும் வழங்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னையில் இந்த வியாதியால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்த போது, பம்பாயில் உள்ள ஹாப்கின் நிறுவனத்திடமிருந்து 50,000 டோஸ் மருந்துகள் விமானம் மூலம் தருவிக்கப்பட்டு மாநகராட்சி தாய் சேய் மருத்துவ மனைக்கு வழங்கப்பட்டது,

தமிழ்நாட்டில் தாதா மருந்து நிறுவனம் மற்றும் கெமிக் ஆய்வகம் (Chemech Laboratory) மருத்துவர்களுக்கும், தனியார் மருத்துவமனைகளுக்கும் மருத்துவ விடுதிகளுக்கும் ஏனைய மருந்துக் கடைகளுக்கும் அவரவர்கள் தேவைக்கேற்ப இந்த மருந்தை வழங்குகிறார்கள்.

மேற்படி தனியார் நிறுவனங்களிலும், தனியார் மருந்துக் கடைகளிலும் மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும் மற்றும் மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மருத்துவ மனைகளிலும் போதிய அளவு இம்மருந்து கைவசம் உள்ளது, எனவே எந்த பதட்டமும் அடையத் தேவையில்லை.

1981 மே 12]

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போலியோ ஓரல் டிராப், மைனஸ் 2 சென்டி கிரேடிலே வைக்கவேண்டும். அதை வைக்கத் தவறினால், சில நேரங்களிலே சக்தி இழந்தும், சில சமயங்களிலே குழந்தைகளுக்கு ஆபத்தும் விளைவிக்கக் கூடும் என்பது அரசுக்குத் தெரியுமா? அம்மாதிரி உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய அந்த வயால் பிராசஸ் சரியான முறையிலே வைக்கப்படாமல் உள்ள விநியோகஸ்தர்களுடைய லைசன்சை இந்த அரசு பறிமுதல் செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வயாலைக் கூலாக உள்ள ஐஸ் பெட்டியில் வைக்க வேண்டுமென்று நாம் ஆணையிட்டிருக்கிறோம். சரியான வகையில் அதை வைத்திருக்கிறார்களா, இல்லையா என்பதை அவ்வப்போது கண்காணிக்க டிரக் இன்ஸ்பெக்டர்கள் மூலமாக ஆங்காங்கு அனுப்பி, அந்த வயால்களை சோதனை செய்து, கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறோம். அந்த பிராசஸ் என்னவென்றால், அது எந்த இடத்தில் தயாரிக்கப்படுகின்றதோ, அந்த இடத்திலிருந்து விநியோகம் செய்யக்கூடிய இடம் வரையில், கூலாக வைக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட இடத்திலேயே கூலாக வைக்க வேண்டும். அதற்குப் பிறகு ஹோல்-சேல் வியாபாரம் செய்யக்கூடிய இடத்திலும் கூலாக வைக்கவேண்டும். பிறகு மருத்துவமனையாக இருந்தாலும், அல்லது வேறு கடைகளாக இருந்தாலும், கூலாக வைக்கவேண்டும். அதற்குப் பிறகு டாக்டர்களுக்கு வருகின்ற நேரத்தில் அங்கும் கூலாக வைக்க வேண்டும். ஆகவே, எல்லா இடங்களிலும் நாம் என்ன சொல்லியிருக்கிறோம் என்றால், ரெப்ரிஜிரேட்டரில் மட்டும் வைத்தால் போதாது; பல நேரங்களில் கரண்ட் நின்று விட்டால், அது 'வார்ம்'-ஆக ஆகிவிடும். அந்த கூலிங் எபெக்ட் பிரேக் ஆகும் போது, ரேப்ரிஜிரேட்டரில் வைத்தாலும், தெர்மாஸ் பிளாஸ்கில் பக்கத்திலே ஐஸ் கட்டிகளை வைத்து, குளிர்ந்த நிலையிலே வைக்கவேண்டும் என்று மிகத் தெளிவாக ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று சொல்லியிருப்பதோடு. அதைக் கண்காணித்துக் கொண்டும் வருகிறோம். இந்த விஷயத்தில் தவறு ஒன்றும் இல்லை. நடைமுறையில் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வயாலிலும் ஓபன் பண்ணினால் 15 டோஸ் இருக்கிறது. ரஷ்யன் வயாலில் 25 டோஸ் இருக்கிறது, பெல்ஜியம் வயாலில் 50 டோஸ் இருப்பதாகச் சொல்லப்படுகிறது ஒரு, வயாலை ஓபன் பண்ணினால், அதை முழுமையாக ஒரே நாளில் போடவேண்டுமென்பது உண்மையா? ஆனால் பல டாக்டர்கள் அதை 2. 3 நாட்கள் வைத்து போடுவதால். அதன் பொடன்சி குறைகிறது என்பதும், அதனால் குழந்தைகளுக்கு ஆபத்து ஏற்படுகிறது என்பதும் உண்மையா? உயிரைக்

காப்பதற்காக படித்து பட்டம் பெற்ற டாக்டர்கள் இத்தகைய தவறுகளைச் செய்தால் அவர்கள் மீது கடும் தண்டனை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே. அதிலே ஒரு வயாலை ஓபன் செய்துவிட்டால் எல்லா டோசும் உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இல்லை. ஏனென்றால் கொடுத்தவுடனே, அதை எடுத்து ரிப்பிரிஜீரேட்டரில் வைக்க வேண்டியது மிகவும் அவசியம். அத்தோடு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரியாக உடனடியாக கொடுக்க வேண்டுமென்ற ஒரு தவறான கருத்தைப் பரப்ப வேண்டாம் என்பதற்காக, உங்களுக்கு திட்டவட்டமாக சொல்கிறேன், அப்படிப்பட்ட நிலைமை இல்லை,

[முற்பகல் 11.40]

இப்போது கூட அநாவசியமாக எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம். போலியோ வேக்சின் கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி அச்சப்படத் தேவையில்லை. இதற்காக ஒரு புள்ளிவிவரத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தருகிறேன். நம்முடைய 'சைல்ட் ஹெல்த் ஆஸ்பத்திரியில் எக்மோரில், உள்ளது, அதில் 4.025 டோஸ் கைவசம் வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு தாதா பார்மசிடிகல்ஸில் 4,000 டோஸ் இருக்கிறது. ஸ்பென்சர்ஸ் அன்ட் கோவில் 3,000 டோஸ் கைவசம் வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் மற்ற இடங்களில் திருச்சி, மதுரை போன்ற இடங்களிலும் ஏராளமான அளவு நாம் இந்த மருந்தை வைத்திருக்கிறோம். எந்தவிதமான பற்றாக்குறையும் இல்லை. எந்தவிதமான பீதிக்கும் இடமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(ஈ). கண்நோய் தொற்றுநோயாகப் பரவுதல்

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வி. வி. சுவாமிநாதன்); "சென்னையில் கண் நோய் தொற்று நோயாகப் பரவுவது குறித்து" திருவாளர்கள் செ. இராமலிங்கம், இரா. தாமரைக்கனி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், தி. கா. நல்லப்பன், ஜே. ஹேமச்சந்திரன். ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னையில் கண் நோய் தொற்று நோயாகப் பரவுவது குறித்த, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

1981 மே 12]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவரவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னையில் கடந்த ஒரு வாரகாலமாக (Madras Eye) எனப்படும் கண்நோய் அதிகமாகி சென்னையிலுள்ள நான்கு மருத்துவமனை கண் பிரிவில் பொதுமக்கள் வந்து வைத்தியம் செய்து கொள்கிறார்கள். சென்னை எழும்பூர் கண் மருத்துவ மனையில் தினமும் சராசரி 200 பேர்களும், சென்னை ஸ்டான்லி மருத்துவமனை கண் பிரிவில் 50 பேர்களும், கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை கண் பிரிவில் 30 பேர்களும், சென்னை இராயப் பேட்டை கண் மருத்துவ மனை பிரிவில் 130 முதல் 150 பேர் வரையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு கண்ணில் போட சொட்டு மருந்தும் உள்ளுக்கு மாத்திரையும் வழங்கப்படுகிறது. கண்களுக்கு குளிர்ந்த ஒத்தடமும் கொடுக்க அறிவுரை வழங்கப்படுகிறது. கடந்த இரண்டு நாட்களாக இந்த எண்ணிக்கை கொஞ்சம் குறைந்திருக்கிறது. ஆகவே இது கட்டுப் பாட்டில் உள்ளதாக கண் மருத்துவர்கள் நினைக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவரவர்களே, சென்னையில் கண் நோய் பொது மக்களுக்கு மட்டுமல்லாமல் பேரவைத் தலைவர் முதற்கொண்டு, மந்திரிகள் முதற்கொண்டு ஏம்.எல்.ஏக்கள் முதற்கொண்டு. நடிகர், நடிகைகளுக்கும் அது பரவி சூட்டிங் எல்லாம் ரத்து ஆகியிருக்கிறது. ஆதலால் மலேசியாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு விமான பயணிகள் மூலமாகத்தான் பரவி வருவதாக டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள். விமான நிலையத்தில் 'குவாரன்டைன்' பரிசோதனை செய்ய அரசு ஆவண செய்யுமா? தற்காலிகமாக வெளிநாட்டிலிருந்து வருவதற்கு தடை செய்யுமா? சென்னை மாநகரம் முழுவதும் தடுப்பு ஊசி போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இதற்கு 'குவாரன்டைன்' எல்லாம் தேவை யில்லை. சாதாரணமாக வரக்கூடிய ஒரு வியாதிதான். இது சாதாரணமாக இது மூன்று நான்கு நாட்களுக்கு இருக்கும். உடனடியாக சிகிச்சை செய்யப்படுமானால் இரண்டு, மூன்று நாளிலே சரியாகிவிடும். இதற்கு 'குவாரண்டைன்' எல்லாம் வைத்து அநாவசியமாக சென்னையிலே நம் நாட்டுக்கு வரக் கூடியவர்களுக்கு பீதியை உண்டாக்கத் தேவையில்லை. இது இப்போது ஓரளவு குறைந்து கொண்டு வருகிறது, படிப்படி யாகக் குறைந்து வருகிறது. பெரிய பிரச்சினையாக இப்போது வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவரவர்களே, சென்னையில் கண் வியாதி நுண் அணுக்கிருமிகளால் ஏற்படுகின் தென்றும், தண்ணீராலும் கண் வியாதியால் அவதிப்படுகிறவர்கள் பயன்படுத்துகிற கர்சீப், துணி மூலமாகவும் பரவிவிடுகிறது என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே கண் வியாதி வந்தவர்கள் துணியை மற்றவர்கள் உபயோகப்படுத்தக் கூடாது. சினிமா

[திரு. இரா. தாமரைக்கனி] [1981 மே 12

பார்ப்பது, சிறிய எழுத்துக்களைப் படிப்பது புத்தகங்கள் படிப்பது போன்று கண்களை கஷ்டப்படுத்துகிற காரியங்களை செய்யக் கூடாது என்று அரசு செய்தித் துறையின் மூலமாக விளம்பரப் படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி.. ஹண்டே: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாமர்த்தியமாக செய்தித் துறை அமைச்சர் அவர்களையும் இதிலே இழுத்திருக் கிறார்கள். இது ஒரு இன்ஸ்பெக்ஷன். இது வரக்கூடியது பல்வேறு வகைகளில் இருக்கிறது. அதற்கு ஒரு யோசனையும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். 'கர்சீப்' மூலமாக, துணிகள் மூலமாக பரவுகிறது என்பதில் உண்மை இருக்கிறது. ஆகவே 'ஷேக் ஹாண்ட்ஸ்' என்று கூறுவதைக் குறைத்துக் கொண்டு, வணக்கம் என்று சொல்லுவதிலேயே அது பரவக்கூடிய வேகம் 50 சதவீதம் குறைந்து விடுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையிலே தேதியே இல்லை. ஏன் இதை சொல்கிறேன், என்றால், சென்னையிலே கடந்த ஒரு வார காலமாக என்றிருக் கிறது. எதிலேயிருந்து ஒரு வாரமாக எடுத்துக் கொள்ளலாம்? இப்படிப்பட்ட விவர அறிக்கை சரிதானா என்பதைக் கேட்டுக் கொண்டு, ஒரு வாரம் என்று சொல்லும்போது, துணை சபாநாயகர் அவர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே வந்து விட்டது. அதைப்போல பலருக்கு வந்திருந்தது. கடைசியிலே இது எங்கெங்கெல்லாமோ பரவி இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானத்தை வாங்கி வைக்கிற எஸ். ஓ. அவர்களையே தாக்குகிற அளவிற்கு வந்து மாண்புமிகு சபாநாயகருக்கும் கண் நோய் இப்போது பரவியிருக்கிறது. இந்த வியாதியைப் பொறுத்த வரையில் இது தொற்றுநோய் என்று சொல்லப்படுகிறது. இதை தடுப்பதற்கு முன் ஜாக்கிரதையாக என்ன நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் ஒரு வாரமாக என்று சொன்னால் அதன் எண்ணிக்கையின் அடிப்படையிலே சொல்லியிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் viru Conjunctivitis என்ற வியாதி மருத்துவ மனைகளிலே வருகிறவர்களைப் பார்த்தால் ஒரளவுக்கு இருக்கும். 300 நோயாளிகள் கண் சிகிச்சைக்காக செல்கிறார்கள் என்றால் 30 பேர்களுக்கு ACCO இந்த வியாதி இருக்கும். ஒரு பெரிய எபிடமிக் ஆக பரவியிருப்பது சென்ற சில நாட்களாகத் தான் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறோம். அந்த அடிப் படையிலேதான் அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு தடுப்பு ஊசி கிடையாது, நோய் வந்துவிட்டால் வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே இருப்பது தனக்கும் நல்லது சமுதாயத்திற்கும் நல்லது. எனக்கே வந்தாகிவிட்டது

இன்னொருவருக்கும் பரவவேண்டுமென்ற முறையிலே நிலைமை வரக்கூடாது, எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன், நோய் வருமானால் அவரவர்கள் தாங்கள் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். அதைத்தான் நான் முன்னமேயே சொன்னேன் கர்ச்சிப் வைத்திருக்கிறோம், கையைத் துடைத்துக் கொண்டிருக்கிறோம், அதன் மூலம் வைரஸ் போய்விடும், கையைக் குலுக்குகிறோம், அதன் மூலமாகப போய்விடுகிறது, அதனால் தான் வணக்கம் போட்டால் போதும் என்று சொன்னேன். ஆகவே யாருக்கு இந்த வியாதி வந்திருக்கிறதோ அவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இன்னொருவரை நெருங்காமல், இன்னொருவருக்கு வராமல் இருப்பது அவசியம். நல்ல மருந்துகள் மூலமாக 5, 6 நாட்களில் குணமாகிவிடும், 2, 3 நாட்களில் போகாது. காம்பிளிகேஷன்ஸ் வராமல் பார்த்துக் கொண்டால் குறைத்துவிடலாம். அதற்காக தடுப்பு நடவடிக்கை உலகத்திலேயே இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே. நாங்கள்.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் விரிவான பதிலைச் சொல்லியிருக்கிறார். ஆகவே அதிகமாகக் கேட்க வேண்டாம், அடுத்து திரு. தி. கா. நல்லப்பன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: நான் அதிலே வேறுபாடு கொள்ளவில்லை. நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் முதலிலே இரண்டுக்கு அனுமதித்து இருக்கக்கூடாது.

திரு. தி. கா. நல்லப்பன்: அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே கண்ணுக்கு சொட்டு மருந்தும் மாத்திரையும் கொடுக்கிற காரணத்தினால் சிறுக சிறுக குணம் அடைந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னுடைய அனுபவத்திலே சொல்கிறேன். 15 தினங்களுக்கு முன்னாலே வந்தபோது மருந்தும் மாத்திரையும் போட்டும் எந்தவிதமான பயனும் இல்லை. சிறந்த முறையில் மருத்துவர்களை வைத்து இந்த வியாதியைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? வராமல் இருக்கச் செய்வதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: உண்மை நிலையை நான் தெளிவாக்கி இருக்கிறேன். இதைத் தடுப்பதற்கு இன்னும் வகை கண்டுபிடிக்கப்படவில்லை. இது பாக்டிரியாவை விட சிறியதாக இருக்கின்ற காரணத்தினால் தான் வைரஸ் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கண்களை அவ்வப்போது சுத்தமாக வைத்துக்கொள்ள வார்ம் வாட்டர் போட்டு கழுவவேண்டும். இன்னொருவருக்கு வராமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இதன் மூலம் 50%

கட்டுப்படுத்தலாம். முழுக்கமுழுக்க முடியாது. மருந்துகளை போட்டுக் கொள்ளலாம். இது பயங்கரமான ஒரு வியாதி இல்லை, ஆனால் இதற்கு நியூசென்ஸ் டிஸீஸ் என்ற பெயர் ஆங்கிலத்திலே சூட்டப்பட்டிருக்கிறது. ஆகவே நான் சொல்கிறவைகள் மூலமாக அதைக் குறைக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, கண் நோய் வந்தவர்களுக்குத்தான் அந்த வேதனை தெரியும். விவர அறிக்கையில் ஒரு வார காலத்திற்குள்ளாக ஆஸ்பத்திரியிலே கண் நோயாளிகள் எத்தனை பேர்கள் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. எனக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னாலே வந்தபோது அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் சென்று 2, 3 நாட்கள் மருந்துபோட்டும் குணமாக வில்லை. தனியார் மருத்துவ மனைக்குச் சென்று மருந்து போட்டுக்கொண்ட பிறகுதான் குணம் அடைந்தது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு கண் நோய் வந்ததாகத் தெரியவில்லை. ஏதாவது வழிகளை பின்பற்றுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: திரு. நவநீத கிருஷ்ண பாண்டியன் அவர்களுடைய திருஷ்டி படாமல் இருந்தால் போதும் எனக்கு. அவர்களுடைய கருத்துக்களைச் சொன்னார் கள். அரசாங்க மருத்துவ மனைக்கு 2, 3 நாட்கள் சென்று வைத்தியம் செய்தும் குணம் அடையவில்லை, ஆனால் தனியார் மருத்துவ மனைக்கு சென்றவுடன் குணம் அடைந்தது என்று சொன்னார்கள். அதைத்தான் நான் சொன்னேன், என் கருத்துக்கு வலுவூட்டுகிற முறையிலே அவர்கள் கருத்து இருக்கிறது, இரண்டு மூன்று நாட்களிலே மருந்து போட்டாலும் குணம் ஆகாது, அந்த 2 3 நாட்கள் முதலிலே தனியார் மருத்துவ மனையிலே மருந்து போட்டிருந்தாலும் குணமாயிருக்காது, 2, 3 நாட்கள் சுழித்துத் தான் குணமாகும்.

[முற்பகல் 11.50]

ஆகவே முதலில் தனியார் மருத்துவமனைக்குச் சென்றிருந் தால் பிறகு அரசாங்க மருத்துவமனைக்கு நான்காவது நாள் வந்திருந்தால் அரசாங்க மருத்துவமனையைப் பாராட்டியிருப் பார்கள். ஆகவே, அரசாங்க மருத்துவமனை, தனியார் மருத்துவமனை என்பது அல்ல; O~gerol medicine போடுகிறார்கள் sophisticated medicines வந்திருக்கிறது, போடுகிறார்கள், அப்படி போட்டாலும்கூட மூன்று நான்கு நாட்கள் ஆகும்; 1 நாள் $1\frac{1}{2}$ நாள் குறைக்கலாம்.

[1981 மே 12

அரசினர் சட்ட முன்வடிவு எண்கள்

(அ) பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் திருத்த சட்டமுன் வடிவு 1081

மாண்புமிகு திரு. ப. குழைந்தைவேலு: தலைவர் அவர்களே தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொதுமக்கள் வழக்கமாய்க் கூடும் இடங்கள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4, அரசினர்தீர்மானம் (தொடர்ச்சி)

இ. பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ''இன்றைய நிகழ்ச்சி நிரலில், ''இனம்-6-அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)'' என்ற தலைப்பின் கீழ் 'எண். (3) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு'

மற்றும்

'எண். (4) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன்வடிவு' இவைகள் 'எண், (1) 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்ட முன்வடிவிற்கு முன் எடுக்கப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) இந்து சமய அறக் கட்டளைகள் திருத்த-சிறப்பு விதித் துறைகள் திருத்தச் சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:— தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 44/1981) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

*1981ம் ஆண்டு மே மாதம் 8ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் குறித்து மீண்டும் ஓராண்டுக் காலம் நீடிக்க வேண்டுமென்று இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அறங்காவலர்கள் நியமிக்கப்படுவது என்பது ஒரு சாதாரண வேலை. இந்தச் சாதாரண வேலையைக் கூட குறிப்பிட்ட காலத்திற்குள் செய்ய முடியவில்லை என்றால் இந்த என்னவென்று சொல்வது என்றே புரியவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டுமென்பதற்காக இந்த ஓராண்டுக் காலம் நீடிக்கிறார்களா என்ற ஐய வினாவை எழுப்புவதற்கான வழிவகை இருக்கிறது. இந்தத் துறையிலே இருப்பவர்கள் மற்ற அலுவல்களைக் கவனிக்கின்றபொழுது இந்த அறங்காவலர்களை நியமிக்கின்ற விஷயத்தில் மட்டும் ஏன் காலதாமதம். ஏன் நீட்டிக்கப்பட்டது என்று தெரியவில்லை. அறங்காவலர்களை நியமிக்கும் பொழுது ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் நியமிக்காமல், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள் மிகவும் இளைஞர்களாக இருத்தல் கூடாது. மிகவும் இளைஞர்களாக இருந்தால் தெய்வ பக்தி குறைந்தவர்களாக இருப்பார்களேயானால் சரியாக நடக்காது. தெய்வம் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குழுக்களை நியமிக்கின்ற பொழுது சுவாமி பக்தி உடைய பக்திமான்களையே நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமித்தால்தான் அதில் இருப்பவர்கள் கோவில் நிர்வாகத்தைச் சரிவர நடத்திச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே தெய்வப்பற்று, பண்பாடு உள்ளவர்களையே அதில் நியமிக்க வேண்டும். முதியவர்களையும், அனுபவம் மிக்கவர்களையும் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும்.

கிராமங்களில் பழைய காலக் கோயில்கள் அரசாங்கக் கோயில்களாக இருந்துகொண்டிருக்கின்றன. உதரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் எனது தொகுதியான சின்ன சேலத்தில் உலகிய நல்லூர் என்ற ஊரில் அர்த்தநாரீஸ்வரர் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு 3 அறங்காவலர்களை நியமிக்க வேண்டும் ஆனால், அதிலே 4 பேர்களை நியமித்திருக்கிறார்கள் 4 பேர்களை நியமித்ததனால் அதிலே இருக்கக்கூடியவர்கள் நிர்வாகத்தைச் செயல்படுத்த முடியாமல் யாராவது ஒருவர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் அப்பொழுதுதான் செயல்பட முடியும் என்று சொல்கிறார்கள் ஆனால், யார் அதிலேயிருந்து விலகுவது என்ற ஒரு ஐய உணர்வு இருந்து கொண்டிருக்கிறது. அதனால் கோயில் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதே நேரத்தில் சிறிய கோயில்களுக்கு, கடந்த 20 ஆண்டு களுக்கு முன்பாக, கோயில்களின் நிர்வாகச் செலவுக்காக, ரூ. 600, ரூ. 700 என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் பிறகு, இதுவரையில், பல நேரங்களிலே, நமது நாட்டிலே, ஒரு முறை அல்ல, பல முறை விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்கின்றன. அதே நேரத்தில் அரசாங்க அலுவலகர்களுக்கு ஊதியமும், விவசாயிகளுக்கு அவர்களுடைய விளைபொருள் களுக்கும் விலையைக் கூட்டிக் கொடுத்திருக்கிறோம். அதே நேரத்தில் நிர்வாகச் செலவுகளுக்கும் கூட்டிக் கொடுக்கிறோம். ஆனால் அறங்காவலர்களாக நியமிக்க பட்ட குழுக்களுக்கும் சரி, அல்லது, நிர்வாகத்திற்கும் சரி உயர்த்தவில்லை. அந்தக் கோயில்களில் உள்ள சாமிகள் பேசாது என்ற காரணத்திற்காக இந்நிலையா என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கே இருக்கக்கூடிய சாமிகள் பேசாது என்ற காரணத்திற்காக, நிர்வாகச் செலவை உயர்த்திக் கொடுக்காமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையைப் பொறுத்த அளவில் ஓரளவு நல்ல முறையிலே செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள். மற்ற துறைகளிலே இருப்பவர்களுக்கும் அரசாங்கத்திலே இருக்கக் கூடியவர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஊதியத்தைக் கூட்டிக் கொடுப்பதைப் போல, அந்தத் தெய்வங்களுக்கும், அவற்றி னுடைய நிர்வாகத்தைச் சரிவர கவனிப்பதற்கும் ஊதியத் தொகையை, நிர்வாகத் தொகையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், ரூ.600 என்று சொன்னால், அங்கேயிருக்கிற பூசாரிக்குக் கொடுக்க, பூஜைக்குச் செலவு செய்யக்கூட அந்தத் தொகை போதவில்லை. அவர்களுக்கு மாதம் ரூ.30 சம்பளம் கொடுக்கப்படுகிறது. சாதாரண கூலி ஆளுக்குக்கூட ரூ.5 கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று சொல்லி, அரசாங்கத் துறையிலும் மற்றும் கிராமங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அங்கே பூஜை செய்யக்கூடிய பூசாரிகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்ற முறையில் 30 நாட்களுக்கு ரூ. 30 சம்பளம் கொடுத்தால், அது போதுமா? அவர்கள் வேறு வேலை கவனிக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கும் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கவேண்டும். நிர்வாகச் செலவுக் குரிய தொகையையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், கிராமங்களிலிருக்கக்கூடிய சிறுசிறு கோயில்கள், அரசாங்கத்திற்குட்பட்ட கோயில்கள், பாழடைந்த கோயில்களாக, பாதுகாக்கப்படாமல் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகளைப் பாதுகாப்பதற்கு எந்த விதமான நிதி ஆதாரமும் இல்லையென்று அரசாங்கமே சொல்லலாம். ஆனால், என்னுடைய சிறிய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன், பெரிய, பெரிய கோயில்கள் இருக்கின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோயில், முருகன் கோயில் போன்ற பல கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களில் வரக்கூடிய வருமானத்தைப்

பயன்படுத்தி, அங்கங்கு கிராமங்களில் இருக்கக்கூடிய சிறிய கோயில்கள் பாழடைந்திருப்பதைச் செப்பனிட்டு, அவைகளைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, கிராமங்களிலே இருக்கக்கூடிய கோயில்களுக்கு மரப் பட்டா என்று, 4 ஏக்கர், 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தைக் கோயிலுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டும். அந்த மரங்கள் பழுதடைந்திருக்கின்றன, பட்டுப் போயிருக்கின்றன. அந்த மரங்களை எல்லாம் வெட்டி விட்டு, மீண்டும் அந்நிலத்தைக் குத்தகைக்கு விடலாம். மானாவாரி நிலமாக குத்தகைக்கு விடுவதை விட அந்த 4 ஏக்கர், 10 ஏக்கர் என்று சொல்லக்கூடிய பகுதியிலே ஆழ் குழாய்க் கிணறு அமைத்து, விவசாயம் செய்து, அந்த வருமானத்தின் மூலம் அந்தக் கோயிலினுடைய நிர்வாகச் செலவைச் சீர் செய்யலாம் என்ற கருத்தினையும் தெரிவிக்கிறேன்.

அதேபோன்று, பெரிய கோயில்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்து, கிராமங்களிலே இருக்கக்கூடிய கோயில்களைப் பாதுகாக்க வேண்டும், பாழடைந்த கோயில்களை மீண்டும் செப்பனிட வேண்டும். வருமானம் இல்லாத கோயில்களுக்கு நிர்வாகச் செலவைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். அந்தக் கோயில்களில் நிரந்தர பூஜை செய்து கொண்டிருக்கிற பூசாரிகளுக்குச் சம்பளத் தொகையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அறங்காவலர்களாக ஆளுங் கட்சிக்காரர்களை மட்டுமல்லாமல், வயதானவர்களை, தெய்வ பக்தி உடையவர்களை, அறங்காவலர்களாக நியமிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

[நண்பகல் 12-00]

* திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய அறநிலையங்களில் இரண்டு வகை தர்மகர்த்தாக்கள் இருக்கின்றனர். ஒன்று பரம்பரை தர்மகர்த்தாக்கள் மற்றது இப்போது நம்முடைய ஆட்சி மாற்றத்தால் ஏற்படக்கூடியது. நம்முடைய அரசின் சட்டத்தின் அடிப்படையில், அறங்காவலர்களை நியமிக்கும் இந்த சட்டத்தின் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அறங்காவலர்களை நியமிப்பதில் எவ்வளவு பெரிய நெருக்கடி வரும் என்பது அமைச்சர் அவர்கள் தங்களுடைய அனுபவத்தில்

கண்டிருப்பார்கள். இன்றைக்கு ஆலயங்களில் இருக்கின்ற பொது நிதியை வெறும் விழாக்களுக்கு மட்டும் செலவழிக்காமல், எந்த நோக்கத்திற்காக இந்த நிதி வழங்கப்பட்டிருக்கின்றதோ, அந்த நோக்கம் நிறைவேறுகின்ற வகையில் ஏழை எளியவர்களுக்கு அந்த நிதி பயன்படத்தக்க வகையில் செம்மையாகவும், சீராகவும் செலவழிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குப் பல்வேறு ஆலயங்களிலே கோடிக்கணக்கான ரூபாய்கள் இருக்கின்றன. கோடிக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அவைகளில் அடங்கி இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்களை, அங்கே சாகுபடி செய்கின்ற ஏழை எளியவர்களுக்கு விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேங்கிக் கிடக்கின்ற கோடிக்கணக்கான பணத்தை கல்விச் சாலைகள், மருத்துவமனைகள் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தி மக்கள் நல்வாழ்வுக்காக பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பொதுநிதியை ஏழை எளியவர்களுக்குச் செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அறங்காவலர்கள் குழுவில் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களைப் போன்றவர்களை அரசு நியமிக்கவேண்டும் என்று அரசு விரும்பினாலும் கூட, நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். ஆனால் அதற்காக ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களை நியமனம் செய்யாமல் யார் என்பது பிரச்சினை அல்ல, அவர் எப்படிப்பட்டவர் என்பதுதான் பிரச்சினை. அப்படிப்பட்ட நல்லவர்களை, வல்லவர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்து சமய அறநிலை (திருத்த) சட்டத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரம்பரை இல்லாத அறங்காவலர்கள் நியமிப்பதற்கு காலக்கெடு இன்னும் ஓராண்டு காலம் நீட்டிப்புக் கொண்டு வருகிற இந்த சட்டத்தை வரவேற்று, இதன் மூலமாக நல்ல அறங்காவலர்களை கோவில்களைப் பராமரிக்கின்ற பணியினைச் செய்ய நியமிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிற வகையிலே இதை வரவேற்று, இப்போது அறங்காவலர்களை நியமிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்பட்டதற்குப் பிறகு அறங்காவலர்களை நியமிப்பதற்காக அமைக்கப்பட்ட அந்தக் குழுக்கள் தங்கள் பணிகளை, இடைக்காலத்திலே இந்த ஆட்சி அகற்றப்பட்டு, ஆளுநர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, செய்யக்கூடாது, அந்தக் குழுக்கள் கூடக் கூடாது என்றெல்லாம் தடுத்து விட்டார்கள். மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே

தான் இந்தக் குழுக்கள் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இடையிலே அந்தப் பணிகளை தடுத்து நிறுத்தி தாங்களே எப்படியும் வரவேண்டும் என்பதற்காக இதைத் தடைப்படுத்தவேண்டும் என்றெல்லாம் விரும்பினார்கள். ஆனால் இந்தக் குழுக்கள் இப்போது தொடர்ந்து செயலாற்றிக் கொண்டு வருகின்றன.

இந்தக் குழுவிலே ஆளுங்கட்சிக்காரர்கள் மட்டும் தான இருக்கிறார்கள் என்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் கூட எங்கள் பகுதியைச் சேர்ந்த அந்த அறங்காவலர் நியமனக் குழுவில் இருக்கிறேன். அங்கே ஒரு உறுப்பினர், காங்கிரஸ் இயக்கத்தின் சார்பில், திருத்துறைப்பூண்டி தொகுதியிலே சட்டப்பேரவைத் தேர்தலிலே போட்டியிட்டவர். அப்படி காங்கிரஸ் சார்பிலே போட்டியிட்டவர் அந்த உறுப்பினராக இருக்கிறார். அதைப் போல நாங்கள் அந்தக் குழுவிலே நியமனம் செய்கிற போது வயது குறைந்தவர்கள் என்றோ, வயது அதிகமானவர்கள் என்றோ பார்க்காமல், அந்தக் கோவில்களிலே சிறப்பான முறையில் நடத்தக்கூடியவர்களாக பார்த்துத்தான் நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். அப்படித்தான் தமிழ்நாடு பூராவும் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்காமல் அந்த அறநிலையங்கள் சிறப்பான முறையிலே நிர்வகிக்கின்றார்களா என்று பார்த்து நியமனம் செய்து வருகிறார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். குழுக்கள் போடுகிறபோது ஒரு நாளைக்கு 30 கோவில்கள், 40 கோவில்களுக்குத்தான் போட முடிகிறது. ஒரு குழுவிற்கு 1000 கோவில்கள் வரை போடுகின்ற நிலைமை இருக்கிற காரணத்தினாலே இந்தப் பணிகளை எல்லாம் இன்று தடைபட்டு, விரைவிலே செயல் படாத நிலைமையிலே இருக்கின்றது. அதைப்போல சில கோவில்களில் அறங்காவலர்களுக்கு விண்ணப்பங்கள் வேண்டும் என்று சொன்னால், ஒருவர் கூட வருவது இல்லை. அதனாலே இப்படிப்பட்ட கோவில்களுக்கு எங்கள் பக்கத்திலே 300 கோவில்களுக்கு மேல் யாரும் விண்ணப்பம் போடவில்லை. யாரும் போட முடியாத நிலை இருக்கிறது. அப்படி இருக்கிற போது அங்கே இருக்கிற அதிகாரிகள் அங்கே இருக்கிற தகுதி வாய்ந்தவர்களைப் பார்த்து நீங்கள் விண்ணப்பித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளக் கூடிய நிலை இருக்கிறது. ஏனென்றால் வேண்டியவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வாங்கிவிடுவார்களோ என்ற குறை வந்து விடுமோ என்பதற்காக அவர்கள் விளம்பரம் செய்வதோடு விண்ணப்பங்களைப் பெறுவதோடு அவர்கள் இருக்கிறார்களே தவிர இன்னார் அனுப்பவேண்டும், நாங்கள் வாங்கி அனுப்புகிறோம் என்ற நிலைமை இல்லாமல் இருக்கிறது. எனவே, ஒரு 300 கோவில்களுக்கு மேல் விண்ணப்பங்கள் வராமல் இருக்கின்றன. மீண்டும் மீண்டும் விளம்பரம் செய்தாலும் அந்தக் கோவில்களின் வருமானம் குறைவாக இருப்பதால்,

அதற்கு முக்கியத்துவம் குறைவாக இருப்பதால் அந்தக் கோவில் களுக்கு அறங்காவலர்களாக வருவதற்கு யாரும் விரும்புவது இல்லை. இப்டிப்பட்ட சூழ்நிலையில் பல கோவில்களுக்கு அறங்காவலர்கள் போடமுடியாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் போடவேண்டும் என்று சொன்னார்கள். எங்கள் ஊரைப்பொறுத்தவரையில், நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த ஊரில் 16 ஆண்டு காலமாக திருவிழா நடைபெறாமல் இருந்தது. இப்போது தான் அது நடைபெற்று இருக்கிறது. அதிலே ஒரு அறங்காவலர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 2 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரே ஒருவர் தான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட விரும்புகிறேன். அப்படி எல்லோருமே ஏற்றுக் கொள்கிற அடிப்படையில் தான் அந்தக் கோவில் சிறப்பாக நடைபெறுகின்ற வகையில் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். கட்சி அடிப்படையில் நியமிக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இந்த ஒரு ஆண்டு நீட்டிப்பு என்பது சிறந்த முறையில் அறங்காவலர்கள் நியமிக்கப் படவேண்டும் என்கிற அடிப்படையில்தானே தவிர, ஆளும்கட்சிக் காரர்களை நியமிக்கவேண்டும் என்பதற்காக அல்ல என்பதைக் குறிப்பிட்டுக்கூறி நல்ல அறங்காவலர் குழு அமைய இந்த கால நீட்டிப்புக் கேட்கப்பட்டிருக்கிறது என்கிற அடிப்படையில் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறைக்குத் தனி அதிகாரிகள் இருப்பதை மேலும் ஓராண்டுக்கு நீடிக்கச் வகைசெய்யும் இந்த மசோதாவை இன்று கொண்டு வந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்கவிரும்புகிறேன். ஏற்கனவே 1976ஆம் ஆண்டில் இம்மாதிரி தனி அதிகாரிகள் காலத்தை 4 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த 4ஆண்டுகள் முடிந்த பிறகு இன்றைக்கு மேலும் ஒரு ஆண்டு தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கும் இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. இந்த அரசு ஏற்பட்டு கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த ஆண்டு காலத்தில் ஒரு இரண்டு மாதம் இந்த அரசு இடையில் இல்லாமல் இருந்தது. இருப்பினும் இன்னும் பெரும்பாலான கோவில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஏன் அந்தக் குழு போடப்படவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளவிரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இன்றைக்கு அந்தக் குழு போடும் நேரத்தில் நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்வேன்—எங்களுடைய மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கண்டிப்பாகப் போடாதீர்கள். எங்களுக்கு அந்த ஆவல் இல்லை. ஆனால் அந்தக் குழு போடவேண்டியது மிக மிக அவசியம். அங்கே வெறும் அதிகாரிகள் மட்டும் இருந்தால் அந்தக் கோவிலைச் சரியாக நிர்வகிக்க முடியாது. நேர்மையாக நடந்து கொள்ளும் நிலைமைகள் இருக்காது. அந்தக் கோவில் வருமானத்தில் இருந்து சிலவற்றை தனக்கு உடைமையாக ஆக்கிக்கொள்ளக்கூடும். இப்படி பல்வேறு கோவில்களில் தனி அதிகாரிகள் நடந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்கே போடுகிறவர்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்களா, காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்களா என்பது பிரச்னை இல்லை. நல்லவராக போடுங்கள். அப்படி போடுவதன் மூலம் அந்தத் தனி அதிகாரிகள் ஆதிக்கத்தைக் குறைக்க முடியும். மே 31–ம் தேதி வரையில் அந்த அதிகாரியும் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. மேலும் ஓராண்டு காலத்திற்கு நியமிக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதை நீடிக்காமல் உடனடியாக உத்தரவு போடுவதில் பெரிய சிரமம் ஒன்றும் இல்லை. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்களைப் போடுங்கள். மற்றக் கட்சியைச் சேர்ந்தவர் களையும் போடுங்கள் எந்தக் காரணத்தைக்கொண்டும் இந்த நீடிப்புத் தேவையில்லை என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கோவில்கள் பெயரில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கின்றது. அந்த நிலங்களையெல்லாம் ஏழை எளிய மக்கள் பல நிலப்பிரபுக்கள் பினாமியாகப் பிரித்து எடுத்துக் கொண்டு அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். அவைகள் உள்ளபடியே கோவில் நிலங்களாக எவையெவை இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து அதிலே தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்திக்கொண்டு இருப்பவர்களை வெளியேற்றி, விவசாயிகளுக்கு அதை ஒப்படைவு செய்ய வேண்டும்.

இன்றைக்கு அறநிலையத் துறையில் பரம்பரை அறங்காவலர்கள் பெரும்பாலான கோவில்களுக்கு இருக்கிறார்கள். அந்தப் பரம்பரையை ஏன் நீங்கள் ஒழிக்கக்கூடாது.

[பிற்பகல் 12.10]

இந்த அரசு ஆட்சிக்கு வந்தபிறகு இன்றைக்கு எத்தனையோ பரம்பரைகளை ஒழித்துவிட்டது. ஆனால் இந்த அறநிலைத் துறையில் மட்டும் பரம்பரை என்று வைத்துக்கொண்டு, கிராமத்திலே இருக்கிற பெரிய மனிதர்கள் என்ற போர்வையிலே அட்டூழியங்கள், அட்டகாசங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்; அதை இன்னும் இந்த அரசால் ஒழிக்க முடியவில்லை. ஆகையால்

வெகு விரைவில் இந்த பரம்பரை முறையை இந்தத் துறையில் ஒழிக்க என்ன வழி என்று கண்டறிந்து, இந்த அரசு இந்த பரம்பரைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு அறநிலையத் துறையிலே இலட்சக் கணக்கில் வருமானம் வரக்கூடிய கோவில்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் பழனி தேவஸ்தானம் இருக்கிறது இன்றைக்கு தமிழ்நாட்டில் மிகப்பெறும் அளவுக்கு வருமானம் வரக்கூடிய தேவஸ்தானம் அது. அந்த தேவஸ்தானம் சார்பிலே கல்லூரிகள் இருக்கின்றன; மருத்துவ மனை இருக்கிறது; கருணை இல்லம் இருக்கிறது. அப்படி எல்லாம் இருந்தாலும் கூட இன்னும் அங்கே இருக்கக்கூடிய பணம் கோடிக் கணக்கில் இருப்பில் இருக்கிறது. அந்தப் பணத்திலிருந்து பெரிய மருத்துவமனைகள், கல்லூரி மாணவர்களுக்கு இலவச விடுதிகள், இவை போன்றவைகளை நடத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

அதைப்போல பெருமளவுக்கு வருமானம் வரக்கூடிய இன்னும் பல்வேறு கோவில்கள் இருக்கின்றன. அந்த வருமானத்தை எல்லாம் பாங்கில் போட்டிருப்பதாகக் கேள்விப் படுகிறோம். அந்தப் பணத்தை தேக்கி வைக்காமல் அந்தந்தப் பகுதியில் இருக்கிற சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பலன் அளிக்கின்ற வகையில் ஏதாவது காரியங்கள் செய்ய முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட காரியங்களுக்கு குழுக்கள் இருந்தாக வேண்டும். தனி அதிகாரியால் இதைச் செய்ய முடியாது. ஆகவே, இந்த தனி அதிகாரிகள் மசோதா என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாமீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் செந்தில் ஆண்டவன் தேவஸ்தானம் ஒரு புண்ணிய ஸ்தலமாக இன்று விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்த தேவஸ்தானத்திற்கு சொந்தமான பல இலட்சம் ஏக்கர் நிலங்களும், கட்டிடங்களும் இருக்கின்றன. அந்த தேவஸ்தானம் சம்பந்தமாக இன்றைக்கு செயல்படக்கூடிய அறங்காவலர் குழு மற்ற தேவஸ்தான அறங்காவலர் குழுக்களைப்போல் சுத்தமாக நல்லமுறையில் நடைபெறவில்லை. அதனால் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவன் தேவஸ்தானத்தில் ஆக்கப் பணிகள் நல்லமுறையில் நடைபெறமுடியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே நல்லமுறையில் அறங்காவலர் குழு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். அறங்காவலர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள் கட்சி சார்பாக இல்லாமல், பொதுவாக தெய்வ பக்தி உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களை செலக்ட் செய்து, தேவஸ்தான கமிட்டி அமைத்தால் அது நல்லமுறையில் இயங்க வாய்ப்பு இருக்கும்.

இதற்கு முன்னால் ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை என்பவரை அந்த தேவஸ்தானத்தில் குழுத்தலைவராகப் போட்டிருந்தார்கள். அவர்கள் தன்னுடைய கையிலிருந்து பல இலட்சம் ரூபாய் போட்டு, நன்கொடையாகப் போட்டு பராமரிப்புப் பணிகளைச் செய்து வந்தார்கள். அதைப்போல அமைச்சர் அவர்கள் அங்கே போடக் கூடிய தேவஸ்தான அதிகாரிகளையும், நிர்வாகிகளையும் நல்லவர்களாகப் பார்த்து போட வேண்டும்; கட்சி சார்பு இல்லாதவர்களைப் பார்த்து போட வேண்டும்; அந்த தேவஸ்தானத்தை தொடர்ந்து ஒரு புண்ணிய ஸ்தலமாக பாரமரித்து வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறைக்கு உட்பட்டு, ஆலயங்களை நிர்வாகிக்கின்ற பரம்பரை அற்ற அறங்காவலர் நியமனத்தை, அந்த காலத்தை ஓராண்டு காலம் நீட்டிக்க வேண்டுமென்ற இந்த சட்ட முன்வடிவு மீது கருத்துக்களை வழங்கியிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது, சமீபத்திலேதான் இங்கே இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் விவாதம் நடைபெற்ற போது மாண்புமிகு உறுப்பினர்கள் விவரமாகக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நானும் பதில் அளித்திருக்கிறேன். இன்றைக்கு இந்த கால நீட்டிப்பு எதற்கு என்பதுபற்றி இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய உறுப்பினர் மாண்புமிகு மாணிக்கம் அவர்கள் நான் சொல்ல வேண்டியக் கருத்துக்கள் பலவற்றை விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்ட காரணத்தால் என்னுடைய வேலையைக் குறைத்திருக்கிறார்கள்.

முதலிலே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்று கேட்டார்கள். நான் இரண்டு, மூன்றுமுறை மன்றத்தில் விளக்கமாக பதில் அளித்திருக்கிறேன்.

ஆகவே மீண்டும் அந்தப் பதிலைத் திரும்பச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். சுமார் 25,000 கோயில்களுக்கு இப்படிப்பட்ட அறங்காவலர்களை நியமிக்கவேண்டிய பொறுப்பு இந்த அறநிலையத்துறைக்கு வந்திருக்கின்றது. அப்படிப்பட்ட பொறுப்புக்கள் ஏற்படுகின்றபோது ஆங்காங்கே விண்ணப்பங்களைப் பெற்று அந்த விண்ணப்பங்களிலே குறிப்பிடப்

1981 மே 12] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பட்டிருப்பவர்களின் விவரங்களை எல்லாம் ஆராய்ந்து அறிந்து அதற்குப் பிறகு அதிகாரிகள் அறிக்கை தந்து அந்த அறிக்கையின் மீது குழு கூடி முடிவு எடுத்து அதற்குப் பிறகுதான் அந்த நியமனங்கள் நடைபெறுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட நியமனங்களில் எவ்வளவு காலதாமதம் ஆகும் என்பதை அருள் கூர்ந்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். குடியரசுத் தலைவரின் ஆட்சியிலே இந்த மாநிலம் இருந்தபோது ஒரு உத்தரவின்படி அத்தனை ஆயிரம் அறங்காவலர்களும் நீக்கப் பட்டார்கள். அவ்வாறு நீக்குவதற்கு ஒரு ஆணை போதும். ஆனால் அப்படி ஒரு ஆணையின்படி இத்தனை ஆயிரம் அறங்காவலர்களையும் நியமித்துவிடமுடியாது. அதனாலேதான் இரண்டாண்டுகளுக்கு மேல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படிக் கஷ்டடப்பட்டுப் பார்த்துப் போட்டாலும் கூட 'நீங்கள் மீண்டும் உங்கள் கட்சிக்காரர்களைத்தான் போடுகிறீர்கள்' என்ற குற்றச்சாட்டை திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். அது இயற்கைதான். அதைத் தவிர்க்க முடியாது. அரசியல் கட்சிகள் ஆட்சிகளுக்கு வருகின்றபோது அந்தந்தக் கட்சிகள் குற்றம் சொல்லிக் கொண்டுதான் இருக்கும்.

இடையிலே ஒரு $3\frac{1}{2}$ மாத காலம் இங்கே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இல்லாதபோது என்ன நடந்தது என்பது எல்லாம் கோப்புகளிலே இருக்கின்றன. 1976-லே குடியரசுத் தலைவர் ஆட்சியிலே அன்றைக்கு பொறுப்பிலே இருந்த அறங்காவலர்களை எல்லாம் ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் நீக்கியதைப் போலவே இந்த அரசு வந்து 7 மாத காலம் முயற்சி எடுத்து போட்டிருந்த கொஞ்ச அறங்காவலர்களைக் கூட அந்தப் பணிகளிலே இருந்து நீக்கிவிடலாமா என்பதற்கான ஆணைகளைப் பிறப்பிப்பதற்காக கோப்புகள் எல்லாம் தயாரிக்கப் பட்டு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. அது என்ன காரணத்தினாலோ கடைசி நேரத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருக் கின்றது. இப்படி ஒரு உத்தரவு வந்திருந்தால் கஷ்டப்பட்டு போட்டிருந்த அறங்காவலர்களும் போய் இருப்பார்கள். ஆகவே இப்படி ஊஞ்சல் ஆடுகின்ற நிலைமை அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வருகின்றபோது நடைபெற்றுக் கொண்டிருப்பது என்பது வாடிக்கை யாக மாறிவிட்டது. இருந்தாலும் இந்த அரசைப் பொறுத்த வரையிலே அறங்காவலர்கள் நியமனத்திலே கட்சி சார்பு என்பதை அடிப்படையாக வைத்துக்கொள்ளவில்லை என்பதை நான் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். அது பலமுறை மாண்புமிகு முதல்வர் அவர்களாலே இந்த மன்றத்திலும், நாட்டுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. பட்டியலே தர முடியும் யார் யாரை, வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களை மிக மிகப் பெரிய ஆலயங்களிலே எல்லாம் அறங்காவலர்களாக போட்டிருக்கிறோம் என்று. ஆகவே எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் ஐயப்பாடு வரவேண்டாம். நல்லவர்களாகப் பார்த்து அறங்காவலர்களாகப் போடவேண்டும் என்று எந்தக் கட்சிக்காரர்கள் விரும்பினாலும், அவர்கள் எந்தக் கிராமத்திலே இருந்தாலும், எந்தெந்தக் கோயில்களுக்கு யார்

யாரைப் போட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அப்படிப்பட்டவர்களின் பெயர்களை அரசினிடத்திலே தரலாம். அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப் பல உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் எல்லாம் சிபாரிசு செய்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நாம் போட்டு இருக்கிறோம் அதிலே ஒன்றும் கட்சி வேறுபாடே கிடையாது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஏதோ ஒரு கோயிலிலே 4 பேர் மாத்திரம் போடப் பட்டதாலே அங்கே இன்னும் தலைவர் தேர்தல் நடைபெறாமல் இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் 5 பேர்கள் வரைப் போடலாம் என்பது இன்றைக்கும் சட்டம் அனுமதிக்கின்ற விதி. ஆகவே நான் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அந்த ஊரிலே அந்த ஆலயத்தைப் பாதுகாக்கின்ற நல்லவர்களாக யார் இருப்பார் என்று பெயரை நீங்களே தரலாம். அவர் காங்கிரஸ்காரராக இருந்தாலும் எங்களுக்கு கவலை இல்லை. ஆகவே குறிப்பிட்ட பெயரினை நீங்களே தருவீர்களேயானால் அது பற்றி பரிசிலித்து 5-வது பேராக அங்கே நியமிப்பதற்கு அரசு ஆணையிடும். அதற்காகத்தான் அரசு இரண்டுபேரைப் போடுகின்ற அந்த உரிமையை வைத்துக்கொண்டிருக்கின்றது.

இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் அந்தக் கோயில் பக்கமே தலைவைத்துப் படுப்பது இல்லை என்று சொன்னார்கள் நீங்கள் தலைவைத்துப் படுக்கவேண்டாம், ஆனால் நிர்வாகம் நன்றாக நடைபெற வேண்டும் என்றால் நல்லவர்களாகப் பார்த்து அடையாளம் காட்டுகின்ற வேலையை யாவது நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இல்லையானால் யாராவது, எப்படியாவது உள்ளே நுழைந்துவிட்டால் என்ற அந்தச் சங்கடமும் இன்றைக்கு அற நிலையத் துறைக்கு இருக்கின்றது,

அடுத்து தாமதங்களுக்குப் பல காரணங்கள். அவற்றிலே ஒன்று என்னவென்றால் ஒருவர் ஒரு ஆலயத்திற்கு அறங் காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிடுவாரேயானால் உடனே அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்று இன்னொரு மனு பின்னாலேயே வந்துவிடும். நான் இப்போது ஒன்றைச் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள்பொறுத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர்களது கட்சியைச் சேர்ந்த திரு. துரை முத்துசாமி அவர்களே அவர்களுடைய ஊரைச் சேர்ந்த ஒரு கோயிலிலே அறங்காவலராக நியமிக்கப்பட்ட முறைகளிலே தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொல்லி அரசிடத்திலே தடை ஆணை கேட்டார்கள். நாங்கள் தடை ஆணை கொடுத்திருக்கிறோம். ஆகவே இந்த அரசு கட்சி பேதம் பார்ப்பதே கிடையாது. இதை நிச்சயமாக உறுதியோடு சொல்கிறேன். முன்னாலே இருந்த அந்த அரசுகள் காட்டிய நல்ல உணர்வை, நியாய உணர்வை விட மிக அதிகமான அளவிலே இன்றைக்கு இருக்கின்ற அரசு இந்த அறங்காவலர்கள் விஷயத்திலே

1981 மே 12] [திரு. ஆர். எம். வீரப்பன்]

மிகுந்த பரந்த உணர்வோடு இந்த நாட்டுமக்களுடைய உணர்வுகளை அடிப்படையாக வைத்து காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

இன்னும் சொல்லப்போனால் சுமார் 4,500 ஆலயங்களுக்கு இன்னும் மனுக்களே வரவில்லை. அதற்கும் இப்பொழுது ஒரு வழிகண்டுபிடித்து, அப்படிப்பட்ட மனுக்கள் வராத ஆலயங்களுக்கு யாரையாவது ஒருவரைத் தேர்ந்தெடுத்து நீங்கள் ஒரு அறங் காவலராக நியமித்து விடுங்கள் என்று கேட்டு அரசு ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது.

ஆகவே மிக விரைவிலே, இது தக்கார்கள் என்ற பெயராலே ஒருவர் இருந்து ஆட்சி செய்கிற முறையை மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியும் கலந்துக் கொண்டு, உங்களுடைய கட்சியின் கொள்கைப்படி உங்களுடைய கட்சியினர் அதிலே இருக்க வேண்டாம், ஆனால் நாம் எடுத்திருக்கிற முடிவு ஆலயத்தில் நம்பிக்கையற்றவர்கள் அங்கே இருக்கக்கூடாது என்பது. அதுதான் இங்கே இருக்கிற அடிப்படை விதிகளிலேயும் ஒன்று. ஆகவே நம்பிக்கை இருக்கிறவர்களைப் பார்த்துச் சொல்லி, இவர்களெல்லாம் நம்பிக்கை உள்ளவர்கள், நல்லவர்கள் என்று அடையாளம் காட்டுகிற அளவிலே நீங்கள் துணை நிற்கலாம் என்று கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட பல்வேறு கருத்துக்களை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவைகள் குறித்து மானியக் கோரிக்கையிலேயே நான் பேசுகையில் பதில் அளித்திருக்கிறேன், இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற இந்த சட்டமுன்வடிவு என்பது பரம்பரை முறை அல்லாத அறங்காவலர்களை நியமிப்பதற்கு இன்னும் ஒரு ஆண்டு காலம் தேவைப்படுகிறது என்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த கால நீட்டிப்பைக் கோரும் இந்த சட்டமுன்வடிவினை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்:) பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்த சமய அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.44/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.,,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடபெற்றுப் நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப பெற்றது.

மாண்புமிகு தி ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே "தமிழ்நாடு 1981ஆம். ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

இ. வன(திருத்த) சட்ட முன்வடிவு 1981

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும். என்று மொழிகிறேன்.

* திரு. நட. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. இன்றைக்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்டமுன்வடிவிலே உள்ள சில திருத்தங்களைக் குறித்து, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருததுக்களை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்ட திருத்தங்களை நான் ஆதரித்தாலும் கூட அப்படி ஆதரிப்பதற்கு முக்கிய காரணம், மத்திய அரசாங்கம் இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களின் உள்ள காட்டு இலாக்காக்களிலே ஆக்கிரமிப்பு என்ற பெயரால் உள்ளே புகுந்துக் கொண்டு, இருக்கிற காடுகளை அழிக்கிற சூழ்நிலை தான் இருக்கிறது என்பதைப் புரிந்துக் கொண்டு மத்திய அரசு இது போன்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தது என்பதுதான். ஆகவே, அந்த அடிப்படையிலே வந்திருக்கிற இந்தச் சட்டத்திருத்தத்திலே, ஆக்கிரமிப்பாளர்களை விரைவில் வெளியேற்றுவதற்கும், கடுமையான தண்டணையை அளித்து, தொடர்ந்து, இது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படாமல் தடுப்பதற்கும், இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதாக அறிகிறேன்.

ஆனால் இதில் இருக்கிற திருத்தங்களைப் பற்றிச் சொல்கிற நேரத்தில், ஒரு திருத்தத்தில், வனத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு, இதிலே சற்று கூடுதலாக அதிகாரங்கள் வழங்கி அதன் மூலமாக, ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒன்றை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். புதுக்கோட்டையில் காமராஜபுரம்

* 1981-ம் ஆண்டுஏப்ரல் மாதம் 9 ஆம்தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெறறுள்ளது.

1981 மே 12] [திரு. நா. சுந்தரராஜ்]

என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள பெரும் பகுதிகள் கடந்த பல ஆண்டுகளாக வனப்பகுதியாகவே இருந்தன.

இன்றைக்கு அதை சில நபர்கள், தனிப்பட்ட நபர்கள் சிலர் நாங்கள் உங்களுக்கு வீட்டுமனைகள் தருகிறோம் என்று சொல்லி அதன் மூலமாக அவர்கள் பல நபர்கள், வசதிப் படைத்தவர்கள், வீட்டுச் சொந்தக்காரர்கள் எல்லாம் வீடுக ள பிரித்துத் தருகிறோம் என்று சொல்லி இன்று இடங்களைப் பிரித்து அதன் மூலமாக பல ஆயிரம் அல்ல பல இலட்சக் கணக்கான ரூபாய் சம்பாதிக்கிற ஈட்டுகிற ஒரு சூழ்நிலை அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் கூட அது சம்பந்தமாக இங்கே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த நேரத்தில் அதை தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆக, நான் சொல்வது அரசாங்க நிலங்கள் பாதுகாக்கப்படவேண்டும். உண்மையில் ஏழை மக்களுக்கு அந்த நிலங்கள் அல்லது இடங்கள் கிடைக்க அரசாங்கள் நடவடிக்கை எடுத்தால் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் ஒரு சில தனிப்பட்ட நபர்கள் தங்கள் சொந்த இலாபத்திற்காக அந்த இடத்தை வைத்துக்கொண்டு அதைப் பிரித்துக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு போட்டி அரசாங்கத்தை உருவாக்கியிருட்பதாகக் கருதுகிறேன். ஆகவே இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றி ஏழைகளுக்குக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று பல கிராமங்களில் குறிப்பாக குளங்கள் வன இலாகா இடங்களில் யூகாலிப்டஸ் போன்ற மற்ற மரங்களை பயிர் செய்கிறார்கள். அப்படிப் பயிர் செய்து அந்தப் பயிரிடப் பட்ட பிரதேசத்தில் ஒரு கிராமவாசி கூட நடக்கமுடியாத அளவிற்கு தடுக்குப்படுகிறார்கள். அல்லது அப்படி மீறி நடந்தால் போலிஸ் வழக்குகள் தொடரப்படுகின்றன. கிராமங்களில் ஆடு மாடுகள் மேய்வதற்கு வேறு மேய்ச்சல் இடங்கள் இல்லாத தால் குளங்களில்தான் மேயவேண்டியிருக்கிறது. அப்படி மேயும் போது அந்த ஆடு மாடுகளை பவுண்டுக்கு அழைத்துச் சென்று அல்லது வேறு வகையாக கையூட்டு பெற்று அவற்றை ரிலிஸ் செய்கிற அளவிற்கு கிராமங்களில் இன்றையதினம் சில தவறுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நாம் கட்டுப் படுத்தவேண்டும். கிராமங்களில் ஆடு மாடுகள் மேய்வதற்கு இடமில்லாமல் அந்த இடங்களைத்தான் அவர்கள் பயன்படுத்த வேண்டும். இதுபோன்ற நிலைகளில் கடுமையான நடவடிக்கைகள் இல்லாமல் சற்று தளர்த்தவேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று ஆக்கிரமிப்பு என்ற பெயரால் ப்ளெயின்சில் உள்ள வர்கள் பலர் குடும்பங்களாக மலைகளீல் மலைப்பகுதிகளீல் குடி யேறுகிறார்கள் என்றால் வேறு இடம் இல்லாததால் தான் அங்கே

குடியேறியிருக்கிறார்கள். ஆகவே 'மெரிட்ஸ்'-ன் அடிப்படையில் ஏழைகளா, பணக்காரர்களா, வசதி உள்ளவர்களா என்ற அடிப்படையில் தரம் பிரித்துப் பார்த்து ஏழைகளாக இருந்தால் அந்த இடங்களை அவர்களுக்கு பட்டாபோட்டுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். வசதி உள்ளவர்கள், பொழுது போக்காக வைத்துக் கொண்டு இலாபம் சம்பாதிக்கிறார்கள் என்றால் கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களை அகற்று வதற்கு நிச்சயமாக நாங்கள் எங்கள் ஒத்துழைப்பை அரசுக்குத் தருவோம் என்று கூறி பொதுவாக 'ஆன் பிரின்ஸ்பில்' இதை ஆதரிக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

*திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவைப் பொதுவாக பார்க்கிறபோது இன்றைக்கு வனத்துறை என்ற பெயரால் பல்வேறு இடங்களில் ஏழை எளிய விவசாய பெருங்குடி மக்கள் பல ஆண்டுகளாக உழைத்துப் பயிரிட்ட நிலங்களையெல்லாம் இன்று வனத்துறையில் சேர்த்திருக்கிறார்கள். நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நாடோடி மன்னனில் பாடினார்கள் சும்மாக் கிடந்த நிலத்தைக் கொத்தி சோம்பல் இல்லாமல் பயிர் வளர்த்து' என்று அந்த அடிப்படையில் ஆங்காங்குள்ள நீர் பிடிப்பு உள்ள இடங்களை, காடாக இருந்த நிலங்களையெல்லாம் ஏழை மக்கள் பயன்படுத்தி இன்றைக்கு அவற்றை விளைநிலங் களாக மாற்றி இருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் இன்று வன இலாகா தன்னிடத்தில் எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அந்த இடங்களில் விவசாய மக்களை, ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களை வெளியேற்றம் செய்வதற்காக இன்று கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் வசதி படைத்தவர்கள் வலிவுமிக்க வர்கள் பல்வேறு வகைகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நீர்வள முள்ள நிலங்களை மலை நிலங்களை தன்னகப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள், இப்படிச் செய்வதால் நல்ல பல திட்டங்கள் கூட தேங்கிக்கிடக்கின்றன. குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் கொடுமுடியாறு அணைத்திட்டம் இன்று நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட முடியாமல் இருக்கிறது என்று சொன்னால், இப்படிப்பட்ட சில வசதி படைத்தவர்கள் அரசுக்கு சொந்தமான பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டுக்கொண்டு, தோப்பு என்ற பெயரால் வளைத்துப்போட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது இன்று நம் அரசாங்கச் சட்டம் எட்டு கிறதா என்றால் சட்டம் பணிந்து கொள்கிறது. அதே நேரத்தில் ஏழை எளிய மக்கள் மீதுதான் சட்டம் கடுமையான முறையில் அடக்குமுறையை ஏவிக்கொண்டிருக்கிறது.

குறிப்பாக, நெல்லை மாவட்டத்தில், செங்கோட்டை தாலுகாவில் இன்றைக்கு சொல்ல வேண்டுமென்றால், தெற்குமேடு என்ற பகுதியிலே வாழக்கூடிய அரிசன மக்கள் அங்கே இருக்கக்கூடிய காட்டு நிலத்தைப் பண்படுத்தி, விவசாயம் செய்கிறார்கள். அது முந்திய காலத்தில் கேரள சரசாங்கத்திடம் இருந்தது. ஆனால், இன்றைக்கு பண்படுத்தப்பட்ட இந்த நிலங்களை, பயிரிடக் கூடிய நிலங்களை வன இலாகாவிற்கு மாற்றி, அந்த விவசாய ஏழை அரிசன மக்களை வெளியேற்றுவதற்காக அவர்கள்மீது பல்வேறு பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, நெல்லை மாவட்டம், சிவகிரி தாலுகா, கடலூர் பகுதியில் இப்படிப்பட்ட வெளியேற்றம் செய்யக்கூடிய காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல. இன்றைக்கு அமைச்சர் அவர்கள் மரம் நடும் விழா, மற்றும் வனத்தைப் பாதுகாப்பதற்கு பல சட்டங்களை இயற்றிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதே கால கட்டத்தில் விளாத்திகுளம் பகுதியில், அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் ஆயிரக் கணக்கான பனை மரம் இன்றைக்கு தமிழகம் இழந்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆயிரக்கணக்கான பனைமரங்கள்மீது சொந்தம் கொண்டாடும், வசதி உள்ளவர்கள், அந்தப் பனை மரங்களை தாங்கள் தான் உருவாக்கினோம் என்று சொல்லி, 25, 30 ஆண்டுகளாக வளர்ந்த பிறகு, அந்த மரங்களை இன்று வெட்டிச் சென்றுவிட்டார்கள். அவர்கள்பால் இந்தச் சட்டம் செல்லவில்லை.

இதை நான்ஏன் சுட்டிக் காட்டுகிறேன் என்று சொன்னால் இப்படி இருக்கின்ற காரணத்தினால், நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்கு பல்வேறு இடங்களில் நல்ல நீர்ப்பிடிப்பு நிலங்களை, பயிர்செய்யும் விளைநிலங்களை வனத் துறைக்கு மாற்றி, அப்படிப்பட்ட இடங்களில் ஏழை அரிசன மக்கள் பயிர் செய்திருந்தால், பண்படுத்தியிருந்தால், ஒரு மக்கள் குழு அமைத்து அந்த நிலங்களை அந்த ஏழை எளிய மக்களுக்கு பட்டாப் போட்டுக் கொடுக்க வேண்டும். இங்கே கூட இந்த ஷரத்தில். அப்படியாராவது வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்தால், கட்டிடங்கள் கட்டியிருந்தால், அவைகளை எடுத்து ஏலம் விடுவதற்கு, அவர்கள் விற்பனைசெய்வதற்கு ஆணை பிறப்பித்திருப்பதாகவும் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதுவும்கூட எந்த அதிகாரி அந்தச் சொத்தைப் பறிமுதல் செய்கிறாரோ அந்த அதிகாரியிடத்தில் நடவடிக்கை எடுக்கின்ற முறையில் அவர்களிடத்திலே அனுமதி பெறவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், எந்த அதிகாரி நடவடிக்கை எடுத்தாரோ, அவர்களிடத்திலே அந்த முறையீடு இல்லாமல், வேறு ஒரு இடத்தில் மேல் முறையீடு செய்துகொள்வதற்குவகை செய்யப்பட வேண்டும். இதிலே எந்தக் கட்சிகள் என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. நல்லவர்களைக் கொண்ட ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்து, எங்கெங்கே நிலத் தகராறு ஏற்படு

கின்றதோ, அவைகளைத் தீர்ப்பதற்கு வழிவகை காண வேண்டும். அந்த உயர்மட்டக் குழுவின் பரிசீலனையின் அடிப்படையில், அந்த இடங்களை யாருக்கு வழங்க வேண்டும், அரசு எடுக்க வேண்டும் அல்லது விவசாயம் செய்கிறவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு மரம் நடுவிழாவை முன்னிட்டு நீர்ப்பிடிப்புகள் உள்ள இடங்களில், கருவேல் மரங்களை நடுகின்றார்கள் அப்போது பயிர் செய்யக்கூடிய பட்டா நிலங்கள் வனத்துறையில் எல்லைக்குள் வந்துவிடுகிறது. அப்படிப் பட்ட தகராறுகள் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன. நான் அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம், இப்படி வனத்துறைக்குச் சொந்தமான நிலங்களை யார் வைத்திருந்தாலும், எப்படிப்பட்டவர் வைத்திருந்தாலும் அந்த நிலங்களை கையகப்படுத்த வேண்டுமென்பதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறுபாடு இல்லை. அந்த நிலங்களின் தன்மை, அங்கேயிருக்கக்கூடிய மக்களின் தன்மை ஆகியவைகளைப் பொறுத்து, அந்த நிலங்களை வழங்கவேண்டும்: வழங்குவதில் அரசு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. டி.மணி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வனத்துறை காடுகளை பாதுகாப்பது சம்பந்தமான இந்த சட்ட முடிவின்மீது நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வனம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற பிரச்சினையிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அப்படி பாதுகாக்க வேண்டுமென்ற சட்டத்தை அமுலாக்குகின்ற நேரத்தில், முதல் முறையாக நீண்ட நெடுங்காலமாக அங்கே வாழ்ந்து வருகின்ற ஆதிவாசி பழங்குடியினருக்கு இன்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலங்களை காட்டிலாகக அதிகாரிகள் பறிக்கின்ற, பறிமுதல் செய்கின்ற நிலைமை இருக்கிறது, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், குறிப்பாக இந்த ஆதிவாசி பழங்குடி மக்களுக்கு 3 ஏக்கர் முதல் 5 ஏக்கர் நிலம் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது, அந்த நிலங்களை அவர்களிடம் ஒப்படை செய்து, பட்டாப் போட்டுக் கொடுத்தால், இந்த நிலை இருக்காது. ஆனால், மத்திய சர்க்கார் இந்த விஷயத்தில் மாறுபட்டிருக்கிறது. ஆகவே, நீண்ட நெடுங்காலமாக பயிர் செய்து கொண்டிருப்பவர்களைப் பாதுகாக்கின்ற முறையில் அவர்களுக்கே குடும்பத்திற்கு மூன்று ஏக்கர்கள் முதல் 5 ஏக்கர்க வரை அவர்களைப் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக, நான் இதைச் சொல்வதற்குக் காரணம், கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளாம்பிகாணி என்ற இடத்தில் 52 குடும்பங்கள் ஒரு பதியிலே வசித்துக்கொண்டு வருகிறார்கள். இப்போது அங்கே இந்த வனத் துறை குறிப்பாக அவர்கள் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, பாதிக்கு மேல் வெளியேற்றியிருக்கிறார்கள். அதேபோல், தூறாம்மையில், ஆறுகாணி, மருதம்பாறை, கூவக்காடு, மூக்கறக்கல் போன்ற பகுதிகளிலே இந்த நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக சிறு விவசாயிகள், ஏறத்தாழ 30, 35 ஆண்டுகளாக நம்முடைய சின்னஞ்சிறு விவசாயிகள் மலையோரப் பகுதிகளிலே, பெரிய காடுகள் இல்லாத பகுதிகளிலே ஒரு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். வீடுகள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விவசாயிகள் வெளியேற்றப்படாமல் அவர்களுக்கு குறைந்த குத்தகையிலே அந்த நிலங்களை கொடுத்தாக வேண்டும். அதை குறிப்பாக சொல்கிறபோது வட ஆற்காடு மாவட்டத்தில், குடியாத்தம் தாலுகாவில் பாதாமி, பனமடங்கி, காளம்பட்டு, மாளியம்பட்டி ஆகிய இடங்களில் இருக்கிறார்கள். என்ன விவசாயம் செய்கிறார்கள் என்றால் சோளம், கேழ்வரகு, மணிலா போன்றவைகளை விவசாயம் செய்கிறார்கள். அதைப்போலத்தான் இலவம்பஞ்சு போன்ற மரங்களை நட்டு அவர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற முறையிலும், குறைந்த குத்தகையிலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இதைப்போல பிரச்சினை ஒன்று இருக்கிறது. பேச்சிப்பாறை நீர் தேக்கத்திற்கு மேற்கு பக்கத்திலே சுமார் 500 வீடுகள் இருக்கிறது. 50 சென்டிலிருந்து ஒரு ஏக்கர் வரையிலும் வைத்திருக்கிறார்கள். சமீபத்தில் வனத்துறையைச் சார்ந்தவர்கள் சர்வே செய்து வனத்துறை பகுதியாக மாற்றியுள்ளார்கள். இப்படிப்பட்ட நிலை வரும்பொழுது வெளியேற்றம் வராத நிலையை உருவாக்க வேண்டும். 50-க்கு அதிகமாக வீடுகள் அங்கே இருக்கின்றன. குறிப்பாக காந்தி நகர், கடுப்புமோடு, மீஞ்சலாம்மடக்கு, கோதையாறு என்ற பகுதிகளிலே ஒரு பஜார் இருக்கிறது. அதிலே ஒரு பதினாறு ஏக்கரில் 100 வீடுகள் வைத்துக்கொண்டு தங்கியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். அவர்களை வெளியேற்றக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெரிய முதலாளிகள் ஏற்கனவே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் நிலங்களை பட்டா போட்டு வாங்கிக் கொண்டு வனப்பகுதியை 100 ஏக்கர், 50 ஏக்கர் வரை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக இரண்டு, மூன்று விஷயங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாலமூர், நாம் ஏற்கனவே பேசிய சமாச்சாரம். இந்த பாலமூரிலே அதிகப்படியான ரெவின்யூ நிலங்களை, காட்டு பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று தேவகிரி, மகேந்திரகிரி, கருங்கமலை என்று சொல்லப்படுகிற இடத்திலே ஒரு தனி நபரிடம் 13, 15 ஏக்கர் வரை காட்டு நிலம் இருக்கிறது. அங்கு 100 ஏக்கர் காட்டு நிலங்கள், வனப் பகுதியை ஆக்கிரமித்து, அங்கே இருக்கிற மரங்களை எல்லாம் வெட்டி எடுத்து லட்சக்கணக்கான ரூபாயை கொள்ளை அடித்திருக்கிறார்கள். அதைப்போலதான் கொடைக்கானல் பகுதியிலே பாச்சலூர், செம்பிராம்குளம், பெரும்பள்ளம் பகுதிகளிலே இருக்கிற நிலங்களில் 5 ஏக்கர்தான் பட்டா இருக்கிற நிலங்கள். அதற்கு அருகாமையிலே நிலங்களை எல்லாம் பெருவாரியாக

ஆக்கிரமித்து கொண்டிருக்கிறார்கள். அதை ரீசர்வே பண்ண வேண்டும். ரீசர்வே செய்ததற்குப் பின்னாலே அவர்களுக்கு தேவையான நோட்டீசை கொடுத்து, ஒரு கால வரம்பிற்குள்ளே நாம் எடுத்துக் கொள்கிற மாதிரி ஒரு நிலையை மேற்கொள்ள வேண்டும்.

சுமார் இருபது ஆண்டுகளாக ரெவின்யூ இலாக்காவின் கையிலே இருந்த நிலங்களை காட்டு இலாக்கா கைமாற்றம் செய்திருக்கிறார்கள். அங்கே மரங்களை நட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. பெரிய காடுகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. குறிப்பாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். களியல் தாலுகாவில் தொடலிகாடு என்ற பகுதியிலே 362 ஏக்கர் ரெவின்யூ நிலமாக இருந்தது. அந்த நிலத்தை வனத்துறைக்கு மாற்றினார்கள். அங்கே இலவம் பஞ்சு உற்பத்தி செய்வதற்காக முள்ளளவு என்ற மரத்தை நட்டார்கள். தீக்குச்சிக்காக பெருமரத்தை நட்டார்கள். ஆனால் 20 ஆண்டுகளுக்குள் அதனுடைய வளர்ச்சி என்பது ஒரு ஐந்து இஞ்சாகத் தான் இருக்கிறது. ஏனென்றால் $2\frac{1}{2}$ அடிக்கு கீழே, மண்ணுக்கு கீழே பாறை. வளர்வதற்கு வாய்ப்பில்லை. ஆகவே அந்தப் பகுதி விவசாயிகளிடத்திலே இருந்தால் மரவள்ளிக் கிழங்கு, வாழை முதலியவற்றை விவசாயம் செய்து பிழைத்துக் கொள்வார்கள். அப்படிப்பட்ட பகுதிகளை ரெவின்யூ துறைக்கு திரும்பக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, காடு புறம்போக்கு என்று இருக்கிறது. குறிப்பாக இது எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. எனக்கு கிடைத்த தகவல்படி களியல் கிராமத்திலே காடு புறம்போக்கு என்று வைத்திருக்கிறார்கள். கிளாசிபிகேஷன் வேண்டுமென்றால் வனத் துறை அங்கீகாரம் வேண்டும். அந்த வனத்துறை அந்த அங்கீகாரம் கொடுக்கவில்லை. நான்கு புறமும் பட்டா பூமிகள். பெரிய தோட்ட முதலாளிகள், அதிலே நடுப்புறத்திலே மட்டும் காடு புறம்போக்கு என்று வைத்திருக்கிறார்கள். பல மாவட்டங் களிலே இருக்கிறது. ஆகவே அந்த விவசாயிகள் தங்கியிருக்கிற அந்த பகுதி என்று சொல்லும் போது ஒடவள்ளி, கொளப்பாறை, அயித்துள்ளி, வெள்ளச்சிப்பாறை ஆகிய இடங்களில் நீண்ட காலமாக விவசாயிகள் வீட்டை கட்டி, விவசாயம் செய்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே கிளாசிபிகேஷன் இல்லாத காரணத்தால் வனத்துறையைச் சார்ந்தவர்கள் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த நிலையைப் பற்றி, குறிப்பாக பழங்குடியினரைப் பற்றியும், ஏழை, எளிய விவசாயிகளை பாதுகாப்பது பற்றியும், பெரு முதலாளிகள் கொள்ளை அடித்து வைத்திருக்கிற அந்த நிலங்களை எடுத்துக்கொள்கிற முறையிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

1981 மே 12]

[பிற்பகல் 12.40]

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே இன்றையதினம் மாண்புமிகு செய்தி, சுற்றுலா, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த வனத்துறை பற்றிய சட்ட முன்வடிவின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய சில கருத்துக்களை முன்வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுவாகவே வனம் என்பது மிகச் சிறந்த ஒரு ஸ்தாபனம். குறைந்த முதலீடு செய்து நிறைந்த வருவாய் பெறக்கூடிய ஒரு அரசு இயந்திரம். வெஜிடேரியன், நான்-வெஜிடேரியன் என்று சொல்லக்கூடிய இருவருக்கும் தேவையான அம்சம். மனிதன், மிருகம் என்ற இருவருக்கும், கால்நடைகளுக்கும் மனிதனுக்கும் தேவை என்று சொல்லப்படுகிற அம்சம். ஏழைக்கும் பணக்காரருக்கும் தேவையான அம்சம் இந்த வனத்துறை ஆகும். வனத்துறையினால் மிகக் குறைந்த முதலீடு செய்து நிறைந்த வருவாயை அரசு பெறக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இன்றைய தினம் மரம் வளர்ப்பு என்பது தமிழகத்திலே சீராக செப்பனிடப்பட்ட முறையிலே முன்னேறி வருவது பாராட்டுகின்ற ஒன்று. பாதையோரத்திலே மரம் வளர்த்தல், ஏரிகளிலே கருவேலம் போன்ற மரங்களை வளர்ப்பது எல்லாம் எதிர்காலத்திலே வருணபகவானுக்கு மனுப் போடக்கூடிய நிலைமை இல்லாமல் மாதம் மும்மாரி பெய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டுமென்பதை அடிப்படையாக கொண்டு இந்த அரசு தீவிரத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். ஆனால், நம்முடைய அரசு நிலங்கள் இன்றைய தினம் சரியாக சர்வே செய்யப்படவில்லை என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அரசு நிலங்களை ஏழை எளியவர்களும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள், பணக்காரர்களும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். எப்படிப்பட்ட சூழ்நிலையில் யார் எவ்வளவு நிலங்களை ஆக்கிரமித்து இருக்கிறார்கள், அரசு நிலம் எவ்வளவு, வனத்துறை நிலம் எவ்வளவு, பட்டாக்களுக்குரிய நிலம் எவ்வளவு என்பதைப் பற்றி வெகு விரைவிலே அரசு முடிவுசெய்ய வேண்டும். ஏற்கெனவே எடுத்திருக்கின்ற முடிவை வேகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோயில் நிலங்கள், மேட்டு நிலங்களாக எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் மரங்களை வளர்க்கக்கூடிய திட்டத்தை உருவாக்கவேண்டும். இன்றைக்கு சண்டைச் சச்சரவுகள் இல்லாமல் கோயில் நிலங்களிலிருந்து வருவாய் பொதுத்துறைக்குப் போய்விடக்கூடாது, தனியாரிடத்திலே மட்டுந்தான் இருக்க வேண்டும் என்ற முறையிலே அதிலே கொள்ளையடித்து வாழவேண்டுமென்ற வகையில் அவர்கள் உண்மையான வருவாயை அரசுக்குக் காண்பிப்பது இல்லை. அதை ஆராய்ந்து பார்த்து எங்கெங்கே மேட்டு நிலங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் மரம் வளர்ப்பதற்கான சூழ்நிலை இருக்கிறதா என்பதைப் பார்த்து வளர்ப்பதற்கு பேரூராட்சிகள் ஊராட்சிகள் மூலமாக அவைகள் மேலும் வருவாய் பெறக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், அதன் மூலமாக சண்டைச் சச்சரவுகளையும் குறைக்கமுடியும் என்பதையும் இந்த

நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, காட்டில் மரம் வளர்த்தல், செடி வளர்த்தல் என்ற நிலைமை இருக்கிறது. காட்டில் சாகுபடி செய்து வருகிறவர்கள் ஏழைகள் இருக்கின்றார்கள், ஆனால் அங்கே மரம் வளர்க்கவேண்டுமென்று அரசு திட்டம் போடுகிறது. எந்தச் சூழ்நிலையில் ஏழை எளிய வர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள், அது மரங்களை உரு வாக்குவதற்கு ஏற்ற இடந்தானா என்பதையெல்லாம் சம்பந்தப் பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அடங்கிய குழுவின்மூலம் ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நாடு முழுவதும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. அமைச்சரிடம் மனுக் கொடுக்கிறார்கள் ஸ்டே வேண்டுமென்று. எங்களுக்கு எப்படியாவது ஸ்டே கொடுங்கள், நீண்டகாலமாக இருந்து வருகிறோம், வழி செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் மனுக்கொடுப்பதும் தொடர்ச்சி, நாம் உறுதிமொழி அவர்களுக்குக் கொடுப்பதும் தொடர்ச்சி என்று இல்லாமல் எந்த எந்த நிலங்கள் கொடுக்கமுடியாது, எது எதற்கு மாற்று நிலம் கொடுக்கலாம், இதை வைத்து நீங்கள் பிழைத்துக் கொள்ளலாம் என்ற முறையிலே திட்டத்தை உருவாக்குவதற்கு முடிவு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன். வளங்கள் நிறைந்த நாடு வறுமையால் வறட்சியால் பாதிக்கப்படுவதில்லை. வனத்துறையின் மூலமாக அத்தனையும் உணவு, பயன், பலன், என புளி, மா, பலா, பனை, மூங்கில் தைல மரங்கள், சந்தனம், தேக்கு, ரப்பர், சவுக்கு, தீக்குச்சிமரம் இவையெல்லாம் இருந்து வருகின்றன. வனங்களின் மூலமாக தொழிற்சாலைகளைப் பெருக்குவதற்காகவும் அன்னியச் செலா வணியைப் பெருக்குவதற்காகவும், குடிசைத் தொழில்களைப் பெருக்குவதற்காகவும் ஏழை எளியவர்கள், பணக்காரர்கள் இரு வரும் பயன்படத்தக்க வகையில் உள்ளது வனத்துறை என்பதை உணர்ந்து அரசாங்கம் தீவிரத் திட்டம் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இதை மேலும் செம்மைப்படுத்துகின்ற முறையிலே மாவட்ட, வட்ட அளவில் இருக்கின்ற சிற்சில குழப் பங்களைப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். என்னுடைய தொகுதியான காவேரிப்பட்டணம் தொகுதியில் மட்டும் இதுபோன்ற ஆக்கிரமிப்பு அல்லது அவர்கள் சாகுபடி செய்து கொண்டிருக்கும் பகுதிகள் என்று சொல்லப்படக்கூடிய மார்வாடி, மதகேரி, முருக்கல் நத்தம், பிக்கனஹள்ளி, குண்டான் காடு, போர்டர் காடு, கொத்தளம், பாறைக்கொட்டா, திம்ப ராம்பட்டி, குளிக்காடு பாலூத்து, கரத்தமாரம்பட்டி என்ற பகுதிகளிலெல்லாம் மிகமிக பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பகுதி களாக இருக்கின்றன. மாவட்ட ஆட்சித்தலைவர்களிடத்திலேயும் மாவட்ட வன அலுவலரிடத்திலேயும், ஏன் மாண்புமிகு அமைச் சரவர்களிடத்திலேயும் கூட அவ்வப்பொழுது முறையிடப்பட்டி ருக்கிறது. கோர்ட்டுகளிலே வழக்காடும் நிலையெல்லாம்கூட ஏற்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக அவர்கள் நிம்மதி பெறும் அளவிற்கு அவசரமாக, மாவட்ட ஆட்சித் தலைவர், வன அலுவலர், சட்ட மன்ற உறுப்பினர் ஆகியோர் கொண்ட

குழு ஒன்றை நியமித்து நல்லதொரு முடிவுக்கு வர வேண்டுமென்பதற்காகத் தீவிரமான பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரையிலும், 33 வருடங்களாக இல்லாத அளவிற்கு மிகப் பெரிய சீர்திருத்தத் திட்டமாக, வளர்ச்சித் திட்டமாகக் கருதி இந்த வனத்துறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கு முனபு எக்ஸ்ட்ரா பார்ட்ஸ் மாதிரி இருந்த திட்டத்தை மாற்றி, இவையெல்லாம் தேவையான மானியங்கள் என்ற அளவிற்குக் கொண்டு வரத்தக்க அளவிற்குப் பணம் ஒதுக்கி இதுபோன்று கொண்டு வருவதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பாராட்டி அமர்கிறேன், வணக்கம்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வன (திருத்த) சட்டமுன்வடிவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை அவைமுன் வைக்க விழைகிறேன். 1969 ஆம் ஆண்டில் ஜமீன் ஒழிப்புச் சட்டம் வந்தது. அதன்மூலமாக நீலகிரி மாவட்டத்தில் ஜென்ம பூமி என்பதை அரசு எடுத்திருக்கிறது. ஆனால் 12 ஆண்டுக்காலமாகியும் ஜமீன் பூமியை அரசு எடுத்தும்கூட நிலமற்ற ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்குகின்ற சூழ்நிலை ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்தில் பரிதாபத்தோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பட்டாவை வழங்க வேண்டுமென்று சொல்லி அங்கே பெரும் ஆர்ப்பாட்டங்கள் ஒருபுறமும், பட்டா வழங்குவதற்கு முன்னால் வனத்துறைக்குச் சொந்தமான அந்த நிலத்தை ஜென்ம பூமியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று முயற்சி செய்து அந்த நிலங்களைத் தனியார் பக்கத்து மாநிலத்திலிருந்து ஆக்கிரமித்து, அங்கு ஜாதிக் கலவரம், இனக்கலவரம் ஆகியவற்றைத் தூண்டி விடும் விதத்தில் பூமிகள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுக்காவில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பு என்ற பெயரில் என்க்ரோச்மென்ட் என்ற முறையில் பல்வேறு தரப்பைச் சேர்ந்தர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது; காட்டை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

லூயிஸ் என்பவர்கூட தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்; பட்டா வழங்க வேண்டுமென்று கோரி தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட தீவிர நடவடிக்கை எடுத்து அந்த லூயிஸ் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையை வழங்கியதை மறந்து விடுவதற்கு நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கோவைத்தம்பி] [1981 மே 12

ஆனால் இன்று அந்த ஜென்ம பூமி என்று கருதப்படும் அந்த நிலையில் இருககின்ற கூடலூர் தாலுக்காவில் இருக்கின்ற நிலங்களில் தனியார் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அதில் அவர்கள் பயிரிடுகிறோம் பயிரிடுகிறோம் என்ற பெயரில் வனத்தை அழித்து, காட்டைச் சேதப்படுத்தி வரும் காட்சிகளைப் பார்க்கிறோம். ரிசர்வ் ஃபாரஸ்ட் என்று சொல்லப்படக்கூடிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் பரந்த அந்த நிலத்தில் தேயிலை பயிரிட வேண்டும் அல்லது காபபி பயிரிட வேணடும் என்று சொல்லி தென் மாநில தேயிலைத் தோட்ட முதலாளிகள் சங்கத்தின் சார்பாக அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் அந்தத் தோட்ட முதலாளிகளின் கோரிக்கையை ஏற்றுக்காண்டு, ரிசர்வ் ஃபாரஸ்டை அழித்துத் தேயிலைத் தோட்டத்தைச் செப்பனிடுவதற்கும், தேயிலைத் தோட்டத்தை விஸ்தரிப்பதற்கும் அரசு முன்வந்து தேயிலை தோட்ட அதிபர்களுக்கு முன் நடவடிக்கையாக ஏதாவது நிலங்களைக் கொடுத்திருக்குமேயானால் அதுகூடப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை என்னுடைய தனிப்பட்ட கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று ஜென்ம பூமி என்பது ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்படி பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே உருவான அந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்டது. ஆனால் கடந்த 12 ஆண்டுக்காலமாக மாற்றங்கள் ஏற்படாமல் அப்படியே இருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் எவ்வளவு தீவிர நடவடிக்கை எடுத்து, வருவாய்த்துறை அமைச்சரவர்களின் மூலமாக, வனத்துறை அமைச்சரவர்களின் மூலமாக அந்தக் கூடலூர் பகுதியைப் பல்வேறு கட்டங்களில் நாம் சோதனை செய்துகூட அங்கு வனம் அழிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று 10 பைசா, 20 பைசா, 50 பைசா, ஒரு ரூபாய் என்று ஏக்கர் ஒன்றுக்கு லீஸ் என்ற அடிப்படையிலே, குத்தகை என்ற அடிப்படையிலே, வெள்ளைக்காரன் போட்ட சட்டத்தில் உள்ளவாறு அந்தக் குத்தகையை மாத்திரம் தென்னிந்திய தோட்ட அதிபர்கள் கட்டிக்கொண்டு வருகிறார்கள். என்பதையும், அந்தக் குத்தகையையெல்லாம் உயர்த்தக்கூடிய எண்ணம் அரசுக்கு இருந்தும், அதை எவ்வளவு உயர்த்துவது என்பதை வனத்துறையும், வருவாய்த்துறையும் முயற்சி செய்து அந்தத் துறையில் அவர்களுக்குரிய குத்தகையைக்கூட உயர்த்திக் கொடுத்து, அவர்களுக்கு அடிப்படையாக இருக்கின்ற அந்த ரிசர்வ் ஃபாரஸ்ட்களைத் தேயிலைத் தோட்டங்களாக மாற்றுவதற்கு அல்லது காப்பித் தோட்டங்களாக மாற்றுவதற்கு அரசு அனுமதியளித்தால் நாம் தேயிலை மூலமாகவும், காப்பி மூலமாகவும் கூட அந்நியச் செலவாணியையும் இந்த மாநிலத்தில் பெருக்க முடியும் என்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981 மே 12] [திரு. கோவைத்தம்பி]

[பிற்பகல் 12·50]

ஜென்ம பூமியிலிருந்து அரசால் எடுக்கப்பட்ட அந்த ஜமீன் ஒழிப்பு நிலங்கள் இன்று யாருக்கும் பயனற்ற விதத்தில், திருட்டுத் தனமாக உள்ளே நுழைகின்றவர்களுக்குப் பயன்படக்கூடிய விதத்தில் இருக்கிறது என்பதையும், அப்படி 10 ஏக்கரா, 20 ஏக்கரா என்று ஆக்கிரமிப்பு நடத்துகிறவர்கள் அரசு அதிகாரிகளை ஏமாற்றி, இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அதிகமாக வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்கூட, கர்நாடகம், கேரளா போன்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அங்கு ஆக்கிரமிப்புச் செய்து இனக் கலவரத்தைத் தூண்டுகின்ற விதத்தில் நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வரலாற்று சிறப்புமிக்க மேற்கு மலைத் தொடர்ச்சியின் ஒரு பகுதியான நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியிலிருக்கிற வனத் துறைக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களை ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் அரசு கையகப்படுத்தியுங்கூட அந்த ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்மூலம் கையகப்படுத்திய அந்த ஜமீன் பூமியில் விவசாயம் செய்யக்கூடிய தன்மை உள்ளவர்கள் அல்லது, வனப் பாதுகாப்பின்மூலம், வனப் பயிர்களின்மூலம் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உடையவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கக்கூடிய முழு முயற்சியை மிகவும் சீக்கிரமாகச் செய்தால் வனம் காப்பாற்றப் படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கிற ஒரு பகுதியான வெள்ளியங்கிரி மலை கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. அங்கு பல்வேறு தரப்பட்ட, வனத் தன்மைகள் அடங்கிய செடிகள் இருப்பதாக மலைஜாதி மக்கள் சொல்கிறார்கள். ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களில் இருக்கிற ஆட்கொல்லி செடிகள் கூட அங்கே இருப்பதாகச் சொல்கிறார்கள். பல மலை ஜாதியைச் சேர்ந்தவர்கள் விறகு பொறுக்கச் செல்கின்றவர்கள், திரும்ப வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது அரசு கவனத்திற்கு வந்ததோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், அங்கு இருக்கிறவர்கள் எங்களுடைய சொந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தால் இதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்கொல்லிச் செடிகள் கூட, விசித்திரமான செடிகள், அந்த வெள்ளியங்கிரி மலைப்பகுதியில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆட்கள் செல்லும்போது, அந்தக் கொடி சுற்றி. சினிமா படத்தில் காட்டுவதைப்போல், ரத்தத்தை உறிஞ்சிவிடுகின்ற அளவுக்குக் கூட பல்வேறு செடிகள் அங்கே இருப்பதாகவும், விலை உயர்ந்த, விலை மதிக்க முடியாத மூலிகைகள்கூட, அந்த வெள்ளியங்கிரி, மேற்குத் தொடர்ச்சி மலையில் இருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆகவே, அரசு அதற்குத் தனி கவனம் செலுத்தி, தக்க

[திரு. கோவைத்தம்பி] 1981 மே 12

நடவடிக்கை எடுத்து, விலை மதிக்கமுடியாத அந்த மூலிகைகளைப் பயன்படுத்தக்கூடிய நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்மூலம் கொடுக்கப்பட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு இன்று குறைந்த குத்தகைக்குத் தோட்டத் தொழில் அதிபர்கள் வைத்திருக்கிற அந்த நிலங்களுக்கு அதிக குத்தகையைக் கொடுத்துப் பாதுகாக்கக்கூடிய நிலையில், வனத்துறையைப் பாதுகாப்பதற்கும். பயிரிடக்கூடிய தன்மையில் அந்த வனப் பகுதியை, தென் மாநிலத்தில் இருக்கிற தேயிலைத் தோட்ட அதிபர்களுக்கு, டீ, காபி போன்ற பயிர்களைப் பயிரிடுவதற்கும் வழிவகை செய்யுமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு, வனத்துறைச் சம்பந்தமான திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்று விடை பெற்றுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தினுடைய ஒரு பகுதியாக இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவின் மீது கருத்துக்களை வழங்கி, அநேகமாக பேசிய எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும், இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கத்தை ஏற்றுக்கொண்டு, அதை வரவேற்றும் அதே நேரத்திலே அவர்களுக்கு எழுந்துள்ள ஐயப்பாடுகளை எடுத்துச் சொல்லியும் கருத்தைத் தெரிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆக்கிரமிப்பை வெளியேற்றுவதற்கு வசதி செய்கிற இந்தச் சட்டத்தின் பிரிவு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, ஏழை, எளிய மக்களுக்கோ, அல்லது நீண்ட காலமாக, அங்கே வாழ்ந்து கொண்டு, வேறு வகையற்ற, வாழ்விற்கு வேறு எந்த விதமான வழியும் இன்றி, ஏழை விவசாயிகளாகவோ அல்லது காடுகளுக்குள்ளே நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்ற பழங்குடி, மலைவாழ் மக்களுக்கோ, இடையூறு ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்படவில்லையென்பதை நான் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நாடு முழுவதும் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், ஏன் உலகம் முழுவதும் காடுகள் வளர்க்கப் பட்டாகவேண்டும் பெருக்கி ஆகவேண்டும். காட்டுப் பகுதிகள் இன்னும் மக்கள் வாழ்கிற நிலப்பரப்பிலே 3-ல் 1-பங்கு வனப் பகுதியாக மாற்றப்பட்டாக வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் மிகக் கடுமையான நடவடிக்கைகளை இந்திய அரசும், மாநில அரசும் மேற்கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாம் மிகப் பெரிய அளவிலே முயற்சிகளை மேற்கொண்டு, பல்வேறு வன வளர்ப்புத் திட்டங்களை, வனப் பெருக்கத் திட்டங்களை நிறைவேற்றிக்

கொண்டு வருகிறோம். அப்படி நிறைவேற்றிக் கொண்டு, வருகிறபோது, இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் என்பது அங்கே சமவெளியிலே, சில பொட்டலாக இருக்கின்ற பகுதிகளிலே அல்லது விளை நிலங்களாக மாற்றக் கூடிய பகுதிகளிலே ஏழை எளிய மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்களே அவர்களை அப்புறப்படுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. அடர்ந்த காட்டுப் பகுதிகள், சோலை போன்ற மரங்கள் உள்ள பகுதிகள் ரிசர்வ் பாரஸ்ட் என்று அழைக்கப்படுகிறது. மலைகள் மேல் உள்ள பகுதிகள், இப்படிப்பட்ட பகுதிகளுக்குள்ளே, அதிலும் குறிப்பாக இந்த மாநிலத்தினுடைய எல்லைப் பகுதியிலே, அங்கே நுழைந்து ஆக்கிரமிப்பு செய்வது என்பது இன்றைக்கு வளர்ந்து கொண்டு வருகின்ற மிகக் கடுமையான நடவடிக்கையாக தடுத்து நிறுத்தப்பட வேண்டிய நடவடிக்கையாக இன்றைக்கு வளர்ந்து வருகின்றது. ஆகவே அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு களை அகற்றுவதிலே பல சட்டச் சிக்கல்கள் எழுந்த காரணத் தினால்தான் இந்தச் சட்ட முன்வடிவு வனத் துறை சட்டத்திலே இன்றைக்கு இணைக்கப்படுகிறது. ஆகவே அந்த அடிப்படை உணர்வை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப் பினர்கள் பேசுகின்றபோது ஏழை எளியவர்கள், விவசாயிகள் போன்றவர்களை அங்கே இருந்து வெளியேற்றக் கூடாது என்று தெரிவித்தார்கள். இங்கே சமுதாயக் காடுகள் (சோசியல் பாரஸ்ட்) என்ற திட்டத்தின்கீழ் இன்றைக்குத் தமிழகத்திலே மிகச் சிறப்பு வாய்ந்த திட்டமாக, இந்தியா முழுவதும் போற்றுகின்ற திட்டமாக, அகில உலகத்திலேயும் புகழ்ந்து தமிழகத்திற்கு உதவி வழங்குகிறோம் என்று ஸ்வீடன் நாடு முன் வருகிற ஒரு சிறப்பு பெற்ற திட்டமாக இருக்கிற சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், இன்றைக்குக் கிராமப் பகுதியிலே இந்த மரங்களை வளர்க்கின்ற முயற்சி களிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். அது 1960 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டது என்றாலும், அது 1,000 ஹெக்டேரிலே தொடங்கப்பட்டு, இன்றைக்கு ஒரு ஆண்டுக்கு 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் புதிய மரங்களை நடுகின்ற முயற்சி யிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். இப்படிப்பட்ட வெற்றியை பார்த்ததற்கு பிறகுதான் இந்தியாவில் வேறு எந்த மாநிலங்களிலும் இந்தத் திட்டம் வெற்றி பெறவில்லை என்கிற அடிப்படையில் தமிழகத்திலே இந்த சமுதாயக் காடுகள் எந்த அளவுக்கு நல்லமுறையில் நிறைவேற்றப் படுகிறது என்பதை உணர்ந்துதான் ஸ்வீடன் நாடு, இங்கே ஒரு 10 ஆண்டு திட்டத்தில் 105 கோடி ரூபாய் அளவுக்கு உதவு வதற்கு, இந்திய அரசோடு தொடர்பு கொண்டு, இன்றைக்கு முன் வந்திருக்கிறார்கள். விரைவிலே அது நிறைவைப் பெறுகின்ற அந்த நிலைமையை நாம் அடைந்திருக்கிறோம். அந்தத் திட்டம் என்பது இன்றைக்கு நம்முடைய ஏழை மக்கள் வாழ்கிற கிராமப் பகுதிகளிலே ஏரிக்கரைகள், ஏரி உள்வாயில் அல்லது

(திரு. ஆர். எம். வீரப்பன்) [1981 மே 12

சாதாரண தரிசு நிலங்களாக கிடக்கின்ற பகுதிகள், எங்கெங்கெல்லாம் மரங்களை நட முடியுமோ அந்த இடங்களில் மரங்களை நடுவது அதனுடைய திட்டம். ஆகவே அப்படிப்பட்ட மரங்களை நடுகின்றபொழுது, அது அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குப் பயன்படுகிற ஒரு தொழில் இணைப்புத் திட்டமாகத்தான் உருவாக்கப்படுகின்றது. அதிலே மரம் நடுகின்றபோது, தினசரி அதற்கு வேலைக்கு எடுக்கிற ஆட்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே இருந்துதான் எடுக்கப்படுகிறார்கள். தினசரி வேலை வாய்ப்பு தரப்படுகிறது. மீண்டும் அந்தப் பஞ்சாயத்துக்கு, வேறு வருமானமே இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு, அந்தப் பஞ்சாயத்துப் பகுதியிலே அந்த மரங்கள் நட்டால் 8 அல்லது 10 ஆண்டுக் காலத்தில் அந்தப் பஞ்சாயத்திற்கு 8 அல்லது 10லட்சம் ரூபாய்கள் வருமானம் வருகிறபோது, அதிலே பாதியை அந்தப் பஞ்சாயத்துக்கு தருகிற திட்டம்தான் இந்த சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம். ஆகவே இப்படிப்பட்ட முயற்சிகளிலே வனத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் ஈடுபடுகிறபோது, நம்முடைய நாட்டு மக்களுக்கு இயற்கையிலேயே கூடப் பிறந்த குணம். ஒரு காரியத்தை செய்கிறபோது, அதை சில நேரங்களிலே உண்மையோடும் தடுக்கிறார்கள். சில நேரங்களிலே தடுக்க வேண்டும் என்றும் தடுக்கிறார்கள். அல்லது ஏதோ ஒரு அச்ச உணர்வின் அடிப்படையில் தடுக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையிலே நாங்கள் வனத்துறை அதிகாரிகளுக்கு மிகத் தெளிவான ஆணைகளைத் தெரிவித்திருக்கிறோம். அப்படி கிராமப் பகுதகளிலே இந்தக் காடுகளை வளர்ப்பதற்காக மரங்களை நட முயற்சிக்கிறபோது அந்தப் பஞ்சாயத்து பகுதியிலே இருக்கிற பெரியவர்கள். கிராமப்புறத்திலே இருக்கிற முக்கியமானவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற பி.டி.ஒ. போன்ற அதிகாரிகளை ரெவின்யூ துறையைச் சேர்ந்த அதிகாரிகளை அழைத்து வைத்து அந்தப் பகுதியிலே இந்தத் திட்டத்தைத் தொடங்கப் போகிறோம்.

(பிற்பகல் 1-00)

இவ்வளவு ஏக்கர் நிலத்தில் மரங்களை நடப்போகிறோம். இப்படி மரம் நட்டால் இந்தப் பகுதியிலே இத்தனை மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பஞ்சாயத்துக்கு இவ்வளவு ரூபாய் வரும் என்று விவரங்கள் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி, அவர்கள் ஆட்சேபணை ஏதாவது தெரிவிப்பார்களானால், அதை மேலே உள்ள அதிகாரிகளிடத்தில் தெரிவித்து, பரிசீலித்துவிட்டு அந்தச் செடிகளை நட வேண்டும என்று எல்லாம் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். இவ்வளவுக்கும் பிறகும் அவர்கள் நடுகிறபோது அங்கேயிருக்கின்ற யாரோ ஒருவர், இருவர் அவர் அந்தப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, ஏற்கெனவே ஏரியின் உள் வாயிலில் போய் விவசாயம் செய்து கொண்டு, ஏரியின் நீர்ப்பிடிபபு பகுதியிலேயே விவசாயம் செய்து கொண்டு, இது நான் விவசாயம் செய்து இருக்கும் நிலம். இங்கே மரத்தை நடுவது கூடாது என்று இந்த ஆதிக்க உணர்வுள்ளவர்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அந்தக் கிராமத்தை ஆட்டிப் படைத்துக்கொண்டு இருப்பவர்கள், முன்னாலே நின்றுகொண்டு மக்களின் பெயரை உபயோகித்துக் கொண்டு தடுக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட முயற்சிகளை நாம் கடுமையாகத் தடுத்து நிறைவேற்றவேண்டிய அவசியம் நம்முடைய வனத்துறைக்கு மாத்திரமல்ல, நமக்கு எல்லோருக்குமே இருக்கிறது.

இல்லையென்றால், இன்று வரையில் மலைப் பகுதிகளிலே இருக்கின்ற மரங்களை வெட்டித்தான் எரிபொருள்களைப் பயன்படுத்திக்கொண்டு வந்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டபிறகுதான் கடந்த இரண்டாண்டு காலமாகத்தான் விறகுக்காக—காடுகளை கூப்புகளை மலைப் பகுதியில் இருந்து வீழ்த்தக்கூடாது என்று கடுமையான முறையில் வரையறுத்து தடுத்து இருக்கிறோம், குறைத்து இருக்கிறோம். வேறு வழியில்லை என்கிறபோது, சில பகுதிகளை மாத்திரம் தேவைகளை மனதிலே எண்ணி அந்த விறகுக்காக கூப்புகளை வெட்ட அனுமதிக்கிறோம்.

மலையிலே இருக்கின்ற மரங்களை எரிக்கின்ற விறகுக்காக வெட்டிக் கொண்டு வந்துவிட்டால் மரம் வளராது, மழையும் கிடைக்காது. ஆகவேதான் சமவெளியில் காடுகளை உற்பத்தி செய்து, எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கு, அந்த தேவையை நிறைவு செய்வதற்கு இந்தச் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் இன்றைக்கு செயல்படுத்தப்படுகிறது. இதைப் போலவே இந்த ஏரிகளில் கருவேலம் நடுவதால், இன்னொரு நன்மையும் இருக்கிறது. அந்த இலை தழை ஆகியவை தண்ணீரில் விழுந்து அந்தத் தண்ணீர் பாசனத்திற்குப் போகிறபோது அதுவே உரமாகவும் இருக்கிறது. ஆகவே, இப்படி பல நன்மைகள் இதிலே இருக்கிற காரணத்தால், இந்தச் சமுதாய காடு வளர்ப்புத் திட்டத்தை இன்றைக்குத் தமிழகத்திலே மிகப் பெரிய அளவிலே வெற்றிகரமாக நாம் நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம்.

ஆங்காங்கு சில பிரச்சினைகள் வருகிறது. எங்களுடைய ஆடு, மாடுகள் மேய்வதற்கு இடம் இல்லை. ஆள் போவதைக்கூட தடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் ஆள் போவதை யாரும் தடுப்பது இல்லை. ஆனால் என்ன நடைபெறுகிறது என்றால், நம்முடைய அலுவலர்கள் ஆயிரக் கணக்கானரூபாய் செலவு செய்து அங்கே செடிகளை நட்டுவிட்டு வந்தால் அடுத்த நாள் போனால் அதையெல்லாம் பிய்த்து எறிந்து விட்டு இருக்கும் சாதாரணமாக இதையெல்லாம் மிருகங்கள்தான் செய்யும். இப்போது அந்த வேலையை மனிதர்களும் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கும் குறைகளை மேலே இருப்பவர்களிடத்தில் சொல்லலாம், சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் தெரிவிக்கலாம் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அங்கே ஒரு பிரச்னை எந்தக் கட்டத்திலே, எந்தப் பகுதியிலே தோன்றினாலும், அங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள்

(திரு. ஆர். எம். வீரப்பன்) [1981 மே 12

மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் அவர்களோடு கலந்து பேசி அவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள் என்று சொல்லி யிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால், சிக்கல் நிறைந்த மாவட்டங்கள் சில இருக்கின்றன. என்னிடத்தில் இருக்கும் தகவல்படி நம்முடைய வனத்துறையில் ஏறத்தாழ 20,000 ஏக்கர் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாக சமவெளிப் பகுதிகளிலே ஏழை எளிய மக்கள் தங்களுடைய வாழ்விற்கு வேறு ஆதாரம் இல்லாமல் எங்கெங்கே இருக்கிறார்கள், அதிலே எத்தனை ஆண்டு காலம் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்கள் விவசாயம் செய்வது உண்மையாக இருக்குமானால், ஒரு வேளை அது வனப்பகுதியை ஒட்டி இருக்குமானால், அந்த இடத்தைவிட்டு அவர்களை அப்புறப்படுத்தவேண்டிய கட்டாயம் இருக்கிறது. வனத்துறையில் நாம் பலவேறு பாதுகாப்புகளை ஏற்படுத்துகிற போது அவர்களையும் அங்கே கொண்டுபோய் வைத்துக் கொண்டால், பலபேர் இதையொட்டி அந்த வனத்திற்குள்ளே போவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. பல மரங்களைத் திருடுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மலைவாழ் மக்களுக்கு—காணிகள் என்று உழைக்கின்றவர்களுக்கு அங்கேயிருக்கும் நிலங்களை அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கவில்லையென்றால் கூட, அவர்களே அதை அனுபவிப்பதற்கு உரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். நாம் வனத் துறையிலே ஒரு புதிய கருத்தை இப்போது உருவாக்கியிருக் கிறோம். அந்த மலை வாழ் மக்களுக்கும், வனத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் சரியான சுமுகமான உறவே இதுவரையில் இருந்தது இல்லை. காரணம் அவர்கள் எதிரிகள் என்று கருதிக் கொண்டு இருந்தனர். இவர்களும் அவர்கள் தவறு செய்கிறவர்களாக அவர்களைப் பார்த்துக்கொண்டு இருந்தனர். அதற்கு அடிப்படையும் இருக்கிறது. இன்றைக்குச் சந்தன மரங்களை திருடுகிறார்கள் என்று சொன்னால், காட்டுக் குள்ளே சோளா பாரஸ்டுகள் என்று அழைக்கப்படுகிற இயற்கை வளம் நிறைந்த காட்டுக்குள்ளே மரங்களை வெட்டுகிறார்கள் என்றால் இந்த மலைவாழ் மக்களைத் தவிர வேறு யாரும் போய் வெட்ட முடியாது. ஆகவே இந்த மரத்தை வெட்டு கிறவர்கள் அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கு கொஞ்சம் அதிகம் ரூபாய் கொடுத்து, பயன்படுத்துகிறார்கள். இன்னும் சில இடங்களில் இன்றைக்கு அவர்கள் சார்ந்திருக்கிற குமரி மாவட்டத்தில் நம்முடைய ரப்பர் தோட்டத்தில் பல தொழிலாளர்களை நியமித்திருக்கிறோம். அப்படி நியமிக்கப் பட்ட அவர்கள் அங்கே காட்டுக்குள்ளே குடிசைப்போட்டிருக் கிறார்கள். இப்போது திரு. மணி அவர்களே, பல குற்றச் சாட்டுக்களைத் தெரிவித்து, நீங்கள் நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே ஒரு குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டது. தேக்கு மரங்களை வெட்டிப் போகிறார்கள் என்பது அந்தக் குற்றச்சாட்டு. அது எப்படி நடக்கிறது என்றால், எந்தத் தொழிலாளர்கள் அங்கே குடிசைகள் போட்டிருக்கிறார்களோ அவர்கள் உதவியின் மூலம் அந்த தேக்குமரங்கள் வெட்டிக் கடத்தப்படுகின்றன, அது இன்றைக்குக் கண்டுபிடிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கு போடப்பட்டிருக்கிறது.

காட்டு எல்லையாக இருந்தால் அங்கே இருப்பவர்களை வேறு ரெவின்யூ நிலங்களுக்கு மாற்றும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். காட்டை ஒட்டிய நிலமாக இருந்தால், புதிதாக அந்த இடத்தைக் காடாக மாற்றும் நிலை ஏற்பட்டால், அங்கே ஏழை எளிய மக்கள் இருக்கிறார்களா என்ற கணிப்புகளை ஆழ்ந்து சிந்தித்து, பரிசீலித்த பிறகுதான் அந்தப் பகுதியை காட்டு நிலமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; காட்டு நிலமாக எடுத்துக் கொள்ள வேண்டும். என்று தெளிவாக ஆணை பிறப்பித்திருக்கிறோம். அதனால் ஏழை எளிய மக்கள் அதனால பாதிக்கப்படுவார்கள் என்ற பிரச்சனை அங்கே இருந்தால் உடனடியாக அந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது உடனே தீர்க்கப்படும். சம்பந்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கின்ற அதே நேரத்தில் ஒரு பக்கத்திலே காலி செய்து கொண்டு போனால் இன்னொரு பக்கம் ஆக்கிரமிப்பு செய்வது என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது.

நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. சிலர் சில இடங்களில் சொல்கிறார்கள். ''அங்கே போய் குடிசை போடு, பின்னால் பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்பவர்களை சமுதாய விரோதிகளாக நாம் ஏற்றுக் கொண்டு அந்த தடுக்கிற முயற்சியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் துணையாக நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே அருமை நண்பர் கோவைத்தம்பி அவர்கள் கூடலூர் ஜென்ம நிலங்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த கூடலூர் ஜென்ம நிலம் என்பது 1969-ல் கொண்டுவந்த ஜென்ம ஒழிப்பு சட்டத்தின் விளைவாக நமக்கு கிடைத்த நிலமாகும். அப்படி எடுக்கப்பட்ட நிலம் சுமார் 42,000 ஏக்கர். அதில் 28,000 ஏக்கர் நிலம் இன்னும் வில்லங்கத்தில் உள்ளது. காரணம் அந்தச் சட்டம் செல்லுபடி ஆகுமா, ஆகாதா என்பது. எற்கெனவே எஸ்டேட் ஓனர்ஸ், தோட்டச் சொந்தக்காரர்களாக இருக்கிற பலர் இதை நாங்கள் விலைக்கு வாங்கியிருக்கிறோம், இது எங்களுக்குச் சொந்தமானது, இதை நீங்கள் எடுத்துக்கொள்ள முடியாது என்று நீதி மன்றத்தில் போட்டு சுப்ரீம் கோர்ட்டில் அது ஆண்டுக் கணக்கில் நிலுவையில் இருக்கிறது. இடையிலே சுப்ரீம் கோர்ட் ஒரு தடை ஆணையும் பிறப்பித்திருக்கிறது. அப்படி தோட்டச் சொந்தக்காரர்கள் விலை

கொடுத்து வாங்கியதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு மரங்களை வெட்டலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் வெட்டக்கூடாது என்று தடுத்துவிட்டோம். அதன்பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். அதன்பிறகு வெட்டப்பட்ட மரங்களை வெளியேற்ற சுப்ரீம் கோர்ட் சில நிபந்தனைகளைப் போட்டிருக்கிறது. அதன்மீது இப்போது நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, கூடலூர் ஜென்ம நிலத்தை பொறுத்தவரையில் திரு. கோவைத்தம்பி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதிலிருந்து நான் முற்றிலும் மாறுபட்டு இருக்கிறேன்.

கூடலூர் ஜென்ம நிலம் என்பது, அதை நாம் எடுக்கக் காரணம் ஏழைகளுக்கு பங்குபோட்டு பிரித்துக்கொடுக்க அல்ல. மிகச் சிறந்த காடுகள் அங்கே உள்ளன. மிக அடர்த்தியான காடுகள் ''சோளா பாரஸ்ட்'' என்று சொல்வார்கள். சோளா பாரஸ்ட் என்றால் மனிதன் உள்ளே போக முடியாத காடு. அதைப்போல ''வெர்ஜின் பாரஸ்ட்'' என்று சொல்வார்கள். மனிதன் கால் அடி எடுத்து வைக்க முடியாத காடுகள் அவை. அப்படிப்பட்ட காடுகள் அங்கே இருக்கின்றன. அற்புதமான மரங்கள் பல்லாண்டுகளாக வளர்ந்த மரங்கள், பல நூற்றாண்டுகளான மரங்கள், ஓங்கி வளர்ந்த மரங்கள் அங்கே ஏராளமாக இருக்கின்றன. அதனால்தான் தோட்டச் சொந்தக்காரர்கள் காப்பி, டீ தோட்டம் போடுகிறோம், அது எங்கள் உரிமை, அரசாங்கம் அதை தடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அவர்களுடைய இந்த முயற்சிக்கு காரணம், டீ தோட்டம் போட்டு தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து அதன் பிறகு லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதல்ல. காப்பித் தோட்டம் போட்டு, அதன் பிறகு லாபம் சம்பாதிப்பதற்கு அல்ல.

(பிற்பகல் 1.10.)

அதற்குள்ளே இருக்கின்ற மரங்களை வெட்டி விற்றாலே பல இலட்சக் கணக்கிலே இன்றைக்கு அவர்களுக்கு பணம் வரும். நான் இலட்சக் கணக்கிலே என்று சொல்கிறேன். இன்றைக்கு அங்கே இருக்கின்ற ரோஸ் வுட் போன்றவற்றை எல்லாம் கணக்கிட்டால் கோடிக்கணக்கிலே வரும். ஆகவே அரசினுடைய தெளிவான கொள்கை அந்த கூடலூர் ஜென்மம் நிலங்களை வாங்கினால், எடுத்தால், கைப்பற்றினால் சட்டப்படி நமக்கு வந்து சேர்ந்ததற்குப் பிறகு அவற்றை அப்படியே காடுகளாகப் பாதுகாப்பது என்பதுதான்: இந்த அரசினுடைய கொள்கை முடிவு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். இன்றைக்கு காபித் தோட்டம் வேண்டுமா, டீ தோட்டம் வேண்டுமா, அல்லது உயர்ந்த மரங்கள் நிறைந்த காடுகள் வேண்டுமா என்பது பிரச்சினையாக இருக்கின்றது. ஆகவேதான் கேரளாவிலே மிகப்புகழ் பெற்ற அந்த அமைதிப் பள்ளத்தாக்குப் பிரச்சினை இன்றைக்கு அலைமோதிக் கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு மின்சாரத் தேவைக்காகக் கூட காடுகளை அழித்து நீர்த்தேக்கங்களை உருவாக்குவது கூடாது என்ற அளவுக்கு உலக ஆராய்ச்சி, நிபுணர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் சில திட்டங்களைப் போடுகின்றபோது மலையின் மீது 5,000 அடி உயரத்திலே இருக்கின்ற காடுகளை வைத்துத்தான் திட்டங்களைப் போடுகிறார்கள். 5,000 அடி, 6,000 அடி உயரத்திற்கு மேலே இருக்கின்ற அடர்ந்த காடுகளை வைத்துதான் இவ்வளவு மழை ஆண்டுக்கு பெய்கிறது என்றும் அணையைக் கட்டலாம் என்றும் திட்டம் போடுகிறார்கள். அவ்வாறு திட்டம் போட்டதற்கு பிறகு நடக்கின்ற முதல் வேலை அந்த 6,000 அடி உயரத்திற்கு மேலே இருக்கின்ற மரங்களை வெட்டுவதுதான். அவ்வாறு வெட்டி காடுகளை அழிக்கிறார்கள். சில காடுகளை அழித்ததற்குப் பிறகு அணைகளைக் கட்டி முடித்ததற்குப் பிறகு பார்த்தால் அவர்கள் எதிர் பார்த்த மழை அங்கே பெய்யவில்லை. இன்றைக்குப் பரம்பிக்குளம், ஆளியாறு போன்ற இடங்களிலே போய்ப்பார்த்தால் தெரியும், திட்டம் நிறைவேறுவதற்கு முன்னாலே பெய்த மழையின் அளவு என்ன? இன்றைக்கு திட்டம் நிறைவேற்றப் பட்டதற்குப் பின்னாலே பெய்த மழையின் அளவு என்ன? அதை போலத்தான் மணிமுத்தாறு திட்டமும். மணிமுத்தாறு மலையிலே இருந்து தாமிரபரணிக்கு இயற்கையாக தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அங்கே ஒரு இடத்திலே தடுத்து நிறுத்தி ஒரு வாய்க்காலை கட்டவேண்டும் என்று முன்னாலே இருந்தவர்கள் திட்டமிட்டு மணிமுத்தாறு அணையைக் கட்டினார்கள். ஆனால் அந்த அணைக்கட்டுக்கு மேலே அந்த கேச்மென்ட் ஏரியா என்று சொல்கின்ற நீர்ப்பிடிப்புப் பகுதியினை சிங்கம்பட்டி ஜமீன் தார் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற தேயிலைத் தோட்ட கம்பெனிக்கு குத்தகைக்கு கொடுத்து விட்டார்கள். அவர்கள் 3,000 அடி 4,000 அடி உயரத்திலே உள்ள மரங்களை எல்லாம் வெட்டிவீழ்த்திவிட்டார்கள். ஆகவேதான் இன்றைக்கு மழை குறைந்துவிட்டது. மணிமுத்தாறு அணைக்கு தண்ணீர் வரவில்லை. எந்த நோக்கத்திற்காக அதாவது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலே தண்ணீர் வந்தால்தான் அந்தக் கால்வாயிலே விடமுடியும் என்று எண்ணி முடிவு எடுக்கப்பட்டதோ அங்கே இப்போது 3, 4 ஆண்டுகளாக தண்ணீர் வரவில்லை என்பது நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு தெரியும். இயற்கையாக வருகின்ற தண்ணீர்தான் தாமிரபரணிக்கு போகிறது. அவர்கள் வழக்கமாக அனுபவித்துக் கொண்டிருக்கிற உரிமையை கொடுத்து விட்டுத்தான் மேலே இருக்கின்ற இந்தக் கால்வாயிலே தண்ணீர் விட வேண்டும் என்பதுதான் அந்த அணை போடுகின்றபோது ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமாகும்.

ஆக இன்றைக்கு மலைமுகடுகளிலே கொண்டுபோய் மரங்களை எல்லாம் வெட்டி காடுகளை அழித்ததற்கு பிறகுதான் மக்களுக்குத் தேவையான, மிக அவசியமான மின் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்ற சூழ்நிலையிலே அணை வேண்டுமா வேண்டாமா என்ற ஆராய்ச்சிக்குரிய பிரச்சினை. தோன்றியுள்ளது. இப்படிப்

பட்ட சூழ்நிலையிலே டீ தோட்ட முதலாளிகள் எல்லாம் 'நாங்கள் இந்த மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்திவிட்டுத் தான், காடுகளை எல்லாம் அழித்து லாபம் சம்பாதித்துவிட்டுத் தான் டீ தோட்டம் போடுவோம்' என்ற வகையிலே தோட்டம் போடுகிறார்கள். ஆகவே இன்றைக்கு நாட்டு மக்களின் முன்னாலே இருக்கின்ற கேள்விக்குறி தேயிலைத் தோட்டம் வேண்டுமா? அல்லது மழை வேண்டுமா என்கிற கேள்விதான். மழை இருந்தால் உலகம் செழிக்கும். தேயிலை இல்லை என்றால் உலகம் அழிந்துவிடாது. ஆகவே தேயிலை என்றாலே மலை முகடுகளிலே உள்ள மரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்திவிட்டுத்தான் தேயிலைத் தோட்டமே போட முடியும். காப்பித் தோட்டம் என்றாலாவது ஓரளவுக்கு மரத்தை வைத்துக்கொள்ளலாம். அதாவது ஷேட் ட்ரீஸ் வேண்டும். ஆனால் டீ தோட்டத்திற்கு அப்படி அல்ல. நமது வனத்துறையைச் சேர்ந்த ஒரு தேயிலைத் தோட்டக் கழகமே இருக்கின்றது. இப்போது இந்த அரசு வந்ததற்குப் பிறகு விஸ்தரிப்புத் திட்டம் என்றால் மரங்களை வெட்டி வீழ்த்திவிட்டு விஸ்தரிப்புத் திட்டம் கிடையாது. எங்கே புல்தரையாக இருக்கின்றதோ எங்கே அடர்ந்த மரங்கள் இல்லையோ அங்கேதான் தேயிலைத் தோட்டங்களுக்குரிய இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர மரங்களை வெட்டி வீழ்த்திவிட்டு தோட்டப்பயிரைப் போடக் கூடாது என்ற கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைத்தம்பி அவர்களைக் கேட்டுக்கொள்வேன், அவர்களிடத்திலே யாராவது கேட்டால் கூட அதாவது மலையின் மேலே அந்த மரங்களை வெட்டி விட உரிமை வழங்குகின்ற அந்த சட்டமே கிடையாது என்றும் அது நம்மை நாமே அழித்துக் கொள்கின்ற திட்டம் என்பதையும் சொல்லவேண்டும் என்று நான் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவு எந்த மழைகளையும் பாதிப்பதற்காக அல்ல, நீண்டகாலமாக இருக்கிற விவசாயிகளையும் பாதிப்பதற்காக அல்ல; அல்லது மலை வாழ் மக்களுக்கு தொல்லை கொடுப்பதற்காகவோ அல்ல. ஆனால் மலைகளிலோ அல்லது காடுகளிலோ திடீர் திடீர் என்று உள்ளே புகுந்துக் கொண்டு மரங்களை வெட்டி அழித்துக் கொண்டு இருப்பவர்களை, அப்படி மரங்களை அழிப்பவர்களுக்கு துணையாக இருந்துக் கொண்டிருக்கிற ஆக்கிரமிப்பாளர்களை, வெளியேற்றுவதில் இருந்த சட்ட சிக்கலை தீர்ப்பதற்காகத்தான் இந்த சட்ட முன்வடிவினை கொண்டு வந்திருக்கிறேன் என்பதை தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவினை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன சில உண்மை நிலைகளை, கருத்துக்களை வனத்துறை இதனைச் செயல்படுத்துகிறபோது நிச்சயமாக பரிசீலனையில் எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

1981 மே 12]

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1981.) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்குப் விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

9. அறிவிப்புகள்.

(அ) கைத்தறி தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்டமுன்வடிவு, 1981 (ஆ. இ).

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்): பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1981-ஐ பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் —(தொடர்ச்சி).

(ஈ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1981) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

என்று மொழிகிறேன்.

*1981ம் ஆண்டு மே மாதம் 5ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) பற்றிய இந்தச் சட்ட முன்வடிவினை நான் வரவேற்கிறேன். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 5.56 லட்சம் தறிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதிலே கூட்டுறவுத் துறையிலே 1.7 லட்சம் தறிகளும், எஞ்சியுள்ளவை தனியார் துறைகளிலும் இருந்துக் கொண்டிருக்கின்றன. நாட்டில் உள்ள மொத்த கைத்தறிகளிலே தமிழகத்தில் மட்டும் 20 சதவீதம் கைத்தறிகள் இருக்கின்றன. அதிலே தமிழ்நாட்டின் துணி தேவைகளில் 50 சதவீதத்தை இந்தக் கைத்தறி தொழில் நிறைவு செய்துகொண்டிருக்கின்றது.

தமிழ்நாட்டிலே உள்ள கைத்தறி தொழிலாளர்களுக்கு, அல்லது அந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்களுக்கு இதுவரையில் தொழிற்சங்க அமைப்பே இல்லாத ஒரு தொழிலாகத்தான் அது இயங்கிக் கொண்டிருந்தது. ஊதிய நிர்ணயம், வேலை பாதுகாப்பு, மற்றும் பல பணி நன்மைகள் இதுபோன்ற இதர தொழில்களில் ஈடுபட்டிருக்கிற மற்ற தொழிலாளர்களுக்கு கொடுக்கக் கூடிய எந்த ஒரு வகையான பாதுகாப்பும் நெசவாளர்களுக்கு இல்லாத நிலை இதுவரையில் இருந்து வந்திருக்கிறது. இந்த நிலை தமிழகத்தில் என்று மட்டும் அல்ல, இந்தியா பூராவும் அதே நிலை தான், நீண்ட நெடுநாட்களாகவே நெசவுத் தொழிலாளர்கள் இதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணிகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அவ்வப்போது அவர்களால் எழுப்பப்பட்டு வந்தன. உலகத்திற்கே பொதுவான நீதிமறை வழங்கிய திருவள்ளுவர் கூட நெசவுத் தொழிலாளராகத்தான் தம்முடைய வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்று சொல்கிறார்கள். அந்த வள்ளுவனுடைய காலத்திலிருந்து இன்று வரை நெசவுத் தொழிலாளர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லாத நிலைமைதான் இருந்து வந்திருக்கிறது.

(பிற்பகல் 1–20)

வள்ளுவன் காலத்திலிருந்து இன்றுவரை கைத்தறி நெசவாளர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ள நம் அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களை நான் உளப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். முதல்படியாக தமிழ்நாட்டில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. இதைத் தொடர்ந்து இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள் என்ற காரணத்தால் அவர்களை எங்கள் இயக்கம் சார்பில் பாராட்டுகிறேன்.

இந்தச் சட்டத்தில் பல முக்கியமான அம்சங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. இதுவரை இருந்து வந்த நிலைமை என்ன வென்றால் நெசவுத் தொழிலாளி ஒருவன் மாஸ்டர் வீவர்ஸ் அல்லது அவர்களுக்கு மூலப்பொருள்களை யார் கொடுக்கிறார் களோ அவர்கள் தயவில்தான் தொழிலாளர்கள் இருந்தாக வேண்டிய நிலைமை இதுவரையில் இருந்து வந்தது. மாஸ்டர் வீவர்கள் அல்லது தரகர்கள் இந்த நெசவாளர்களுக்கு மூலப் பொருள்கள் கொடுக்கமுடியாது அல்லது வேலை இன்றைக்கு இல்லை என்று சொன்னால் இல்லைதான். அவர்கள் எதுவும் செய்யமுடியாத நிலைமை. அவர்கள் கொடுக்கிற குறைந்த பட்சக்கூலியை பெற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே இந்த மூலப் பொருள்கள் வழங்கப்படும் அல்லது வேலை கொடுக்கப் படும் என்று சொன்னால் அரைப்பட்டினி கிடக்கக்கூடிய நெசவாளர்கள் அதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வழி இல்லை என்ற நிலைமையில்தான் இன்றுவரை இருந்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றி இந்தத் தொழிலாளர்களுக்கு முழுப் பாதுகாப்பும் கொடுக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டத்தில பல அம்சங்கள் இருப்பதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக தொழிற் சாலை வளாகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு தொழிலுக்கு வேண்டிய அந்த மூலப் பொருட்களை கொடுக்க மறுத்தால் தொழில் தகராறுக்குக் காரணமாகும் என்ற பகுதியை நான் உளப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். இது ஒரு புரட்சிகரமான நடவடிக்கை.

அதேபோல் நெசவாளர் தொழிலாளர் ஒரு சேலை அல்லது ஒரு துணி நெய்துகொண்டு வந்து கொடுத்தால் மாஸ்டர் வீவர் அல்லது இடைத்தரகர் அதில் குற்றங்குறைகள் சொல்லி எந்தக் காரணமும் இல்லாமல் அந்த நெசவாளரை வஞ்சிக்கும் நோக்கத் தோடு அதை நிராகரிக்க முடியும். அவர்கள் அப்படி செய்து கொண்டுதான் வந்தார்கள், இவ்வளவு நூற்றாண்டு காலமாக. அதற்கு இந்தச் சட்டம் ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. நெசவுத் தொழிலாளர்கள் தயாரித்த நிறைவு பெற்ற பொருள் களை ஏற்றுக்கொள்ள காரணம் இன்றி மறுத்தால் அது தொழில் தகராறுக்குக் காரணமாகும் என்று இந்தச் சட்ட முன்வடிவில் திட்டவட்டமாக தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நெசவாளர்களுக்கு, நெசவுத் தொழிலாளர்களுக்கு அவர்கள் கோரிய பாதுகாப்பு கிடைத்திருக்கிறது என்பதால் நான் மனநிறைவு அடைகிறேன்.

அதேபோல் நிறைவு பெற்ற பொருளில் குறைபாடு உள்ளது என்று தொழில் அதிபர் கருதி குறைபாடுகளுக்கான காரணங் களை எழுத்துமூலம் கொடுத்தாலன்றி ஒரு தொழிலாளரின் ஊதியத்தைக் குறைப்பதோ, ஊதியம் குறைவாக வழங்குவதோ தொழில்தகராறுக்கு காரணமாக இருக்கும் என்று இந்தச் சட்ட முன்வடிவின் 35 ஆவது பகுதி தெளிவாகச் சொல்கிறது. ஆகவே தொழிலாளர்களை வஞ்சித்து சுரண்டி வந்த முறைக்கு இந்த சட்ட முன்வடிவின் இந்த பகுதி முற்றுப்புள்ளி வைக்கிறது.

அதேபோல் தகுந்த காரணங்கள் இல்லாமல் எழுத்துமூலம் ஒரு மாதம் முன் அறிவிப்பு கொடுக்காமல் தொழில் அதிபர் எவரும் ஒரு தொழிலாளியையும் வேலைநீக்கம் செய்யக்கூடாது என்று இந்தச் சட்டமுன்வடிவின் 36 ஆவது பகுதி கூறுகிறது. இதை நான் உளப்பூர்வமாகப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இதுவரையில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லாமலிருந்தது. இதுபோன்ற பல நல்ல அம்சங்கள் உள்ளன. இதில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பாதுகாக்கக் கூடிய, அவர்கள் வாழ்க்கையில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுத்தக்கூடிய, அவர்களுக்கு புது வாழ்வு அளிக்கிற வகையில் நல்ல பல அம்சங்கள் இதில் இருக்கின்றன. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். நேரமாகும் என்ற காரணத்தால் அவற்றை இங்கே சொல்லவில்லை. தமிழகத்தில் வாழ்கிற ஐந்து இலட்சம் நெசவாளத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய அந்தச் சட்டம் ஒரு புரட்சிகரமான சட்டமாகும். மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் இதைக் கொண்டுவந்ததற்காக பாராட்டுகிறேன். இந்தியா பூராவும் மற்ற மாநிலங்களிலும் இதுபோன்ற சட்டம் வரவேண்டும் என்று அந்த மாநிலங்களிலுள்ள நெசவுத் தொழிலாளர்கள் போராடுவதற்கு அந்தந்த மாநில அரசுகளை வற்புறுத்துவதற்கு இந்தச் சட்டம் ஒரு வழியை வகுத்துத் தரும். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். இந்தச் சட்டம் அமுலில் வரும்போது, குறைபாடுகள் இருந்தாலும், அப்போது தெரியவரும். அப்படிப்பட்ட குறைபாடுகள் வருகின்ற நேரத்தில், அதை நம்முடைய அனுபவமிக்க அமைச்சர் அவர்கள் கவனித்து, இந்தச் சட்டத்திற்கு வேண்டிய திருத்தங்களைச் செய்துகொள்வதற்கு அவர்கள் முன்வர வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டி, இந்தச் சட்டத்தை எங்களுடைய காமராஜ் காங்கிரஸ் கட்சிச் சார்பிலே நாங்கள் முழு மனதாக வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாகர்கோயில் தொகுதியில் சுமார் 10,000 நெசவாளர்கள் உண்டு. அவர்களைப் பாதுகாக்கும் சட்டமாகையால், என்னையே இந்தச் சட்டம் பாதுகாக்கிறது என்ற மன நிறைவோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் ஏழை நெசவாளத் தொழிலாளர்கள் வீழ்ந்து விடக்கூடாது என்பதற்காக கைத்தறித் துணியை தோளிலே' சுமந்து விற்றார்கள். ஏழை நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் இன்று புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி அதை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணும்போது, இன்று இந்தத் தமிழகம் பூரித்து நிற்கிறது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் கைத்தறித்

தொழிலாளர்கள், தொழிற்சங்க அமைப்பின்கீழ் வராததால், இது வரை இந்த தமிழகத்தில் நெசவுத் தொழிலாளர்கள் வேலைக்குப் பாதுகாப்பு இல்லை. வேலை நேரம் வரையறுக்கப்படவில்லை. பண்டிகை விடுமுறை இல்லை. சம்பளத்துடன் கூடிய லீவ் இல்லை. உரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை. முதலாளி, தொழிலாளி உறவு இல்லை. சுகாதார வசதியில்லை. ஆனால் இந்தச் சட்டத்தின் மூலம் இன்றையதினம் நெசவுத் தொழிலாளர்கள் வேலைக்கு பாதுகாப்பு கிடைத்துவிட்டது; வேலைக்குரிய சம்பளம் உறுதியாக கிடைத்துவிட்டது. சம்பளத்துடன் லீவ் கிடைத்துவிட்டது. பண்டிகை விடுமுறை கிடைத்துவிட்டது. சுகாதார வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டு விட்டன. இவை களை எல்லாம் நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா?

மாஸ்டர் வீவர்களின்கீழ் வறுமையில் போராடிக் கொண்டிருந்த இளைஞர்கள் வாடும் நிலைமை அடியோடு ஒழிக்கப் பட்டு விட்டது. 16 வயதிற்கு கீழ் உள்ளவர்களை வேலைக்கு நியமிக்கக் கூடாது என்ற கட்டாய அறிவிப்பைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? கைத்தறித் தொழிற்சாலை ஒன்றில் 50 பெண்களுக்கு மேல் பணியாற்றினால், அங்கே குழந்தைகளைக் காத்திட, குழந்தைகள் காப்பகம் அமைத்திட சட்டம் வழிவகுத் திருப்பதை பாராட்டாமல் இருக்கமுடியுமா? தினம் 8 மணி நேரம் தான் வேலை; கூடுதல் நேரம் வேலை செய்தாலும், தினம் 10 மணி நேரம்தான் வேலை நேரம் இந்த—புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில். இந்தப் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? வேலை நேரத்தில் ஒய்வுக்கு நேரம் ஒதுக்கிவிட்டதை, நாம் எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்? வழக்கமாகவார அரசு விடுமுறை தவிர, ஆண்டுக்கு ஒரு முறை சம்பளத்துடன் விடுமுறை. வேலை செய்த பெரியவர்களுக்கு 20 நாட்களுக்கு ஒரு நாள், இளைஞர் களுக்கு 15 நாட்களுக்கு ஒரு நாள், குடும்பக்கட்டுப்பாடு செய்யும் ஆணுக்கு 6 நாள், பெண்ணுக்கு 14 நாட்கள் சம்பளத்துடன் விடுமுறை என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. இதைப் பாராட்டாமல்இருக்க முடியுமா?

வேலை செய்கின்ற கைத்தறித் தொழிலாளர்களுக்கு நூல் போன்ற கச்சாப் பொருள்கள் கொடுக்க மறுக்கக் கூடாது. செய்து முடித்த பொருள்களை பொதுவாக நிராகரிக்கக் கூடாது. அதற்குச் சம்பளத்தில் வெட்டு கூடாது என்பதை பாராட்டாமல் இருக்க முடியுமா? ஆறு மாதங்களுக்கு மேல் பணியாற்றுகின்ற வர்களை நீக்கினால், தகுந்த காரணத்துடன் ஒரு மாதச் சம்பளத்துடன் நீக்கவேண்டும். அந்த ஊழியர் மேல் முறையீடு செய்தால், அதிகாரிகளின் தீர்ப்பை மீறி கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்பதற்குச் சட்டம் வகுத்த புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? ஒரு சபாஷ் சொல்லக்கூடிய கடமையிருக்கிறது,

[திரு. மி. வின்செண்ட்] [1981 மே 12

[பிற்பகல் 1.30]

இந்த சட்ட விதிகளை மீறுகிற தொழில் அதிபர்களுக்கு ஜெயில் தண்டனை என்று சட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியை 'வெல்டன்' என்று பாராட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள், நாம் ஒன்றாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய நாட்டில் நெசவாளர்களுக்கு வசதிகளும், பாதுகாப்பும் செய்து கொடுத்த பாதுகாப்பு சட்டம் வேறு எந்த மாநிலத்திலேயும் இருக்கிறதா என்றால் இது இந்த தமிழகத்தின் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தான் வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. வி. வி. சுவாமிநாதன்) பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். விவாதம் மாலை தொடர்ந்து நடக்கும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. மி. வின்செண்ட் அவர்கள் பேசலாம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு 1981—தொடர்ச்சி.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் பேசிய பேச்சின் தொடர்ச்சியாக நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய நாட்டில் நெசவுத் தொழிலாளிக்கு வேலைக்குரிய சம்பளம் கிடைக்க உறுதி, சம்பளத்தோடு கூடிய லீவ், பண்டிகை விடுமுறை, சுகாதார வசதிகள், தொழிலாளி—முதலாளி ஆகியவர்கள் உறவுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற சட்டம் வேறு எந்த மாநிலத்திலாவது இந்தியாவில் உண்டா என்றால் இல்லை என்பதையும் புரட்சித் தலைவர் ஆட்சி நடக்கும் தமிழ் மாநிலத்திலே மட்டுமே இத்தகைய பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய நாட்டு நெசவுத் தொழிலாளிக்கு பாதுகாப்புக் கொடுக்கும் வழிகாட்டியாக இருக்கின்றவர்கள் புரட்சித் தலைவர் அதைப் போலவே இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக இருப்பது தமிழ்நாடு தான் என்பதையும் திருப்பியும் ஒரு முறை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், மேற்கு வங்கத்திற்கும் கேரளத்திற்கும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1981 மே 12] [திரு. மி. வின்செண்ட்]

கூட இந்தச் சட்டம் துணையாக நிற்குமென நான் நம்புகிறேன். பட்டாடை அணிகின்ற நிலையினை நெசவுத் தொழிலாளி கட்டிய மனைவிக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லை என்ற நிலைமை மாறி, நெசவுத் தொழிலாளியின் மனைவி பட்டாடை கட்டுவாள், நெசவாளர்களின் தரம் உயர்ந்துவிட்டது, அவர்களுடைய வாழ்வு மலர்ந்துவிட்டது, ஆடுவான், இனி நெசவுத் தொழிலாளி பள்ளுப் பாடுவான், சுதந்திர வாழ்க்கையை தந்து நெசவுத் தொழிலாளர்களின் அடிமை விலங்கை அறுத்து விட்டார், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இந்தப் பாதுகாப்புச் சட்டம் நல்லமுறையில் நடைமுறையாக்க தனி அதிகாரிகள் அல்லது குழுக்களை அமைக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் வள்ளுவர் இல்லையே என வருந்துகிறேன். ஏனெனில் வள்ளுவர் செய்த தொழில் நெசவுத் தொழில். வள்ளுவர் செய்த தொழிலுக்குப் பாதுகாப்பு கொடுத்துவிட்டார் புரட்சித் தலைவர். வள்ளுவர் உலகத்திற்குத் தேவையானவைகள் அனைத்தையும் பற்றிப் பாடினார். ''உழவு'' எனத் தலைப்பிட்டுப் பாடினார்; ஆனால் ''நெசவு'' என்று தலைப்பிட்டுப் பாடவில்லை. ஏன் தெரியுமா? நெசவுத் தொழிலாளிக்கு வள்ளுவர் காலத்தில் சட்டப் பாதுகாப்பு இல்லை. இன்று வள்ளுவர் இருந்திருந்தால் ''நெசவு'' என்று தலைப்பிட்டுப் பத்துப் பாடல்களைப் பாடியிருப்பார்; நெசவுத் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்த புரட்சித் தலைவர் என்று தலைப்பட்டுப் பத்துப் பாடல்களைப் பாடியிருப்பார்.

நெசவுத் தொழிலாளிக்குத் தொழில் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வருவது என்பது சிரமமான காரியமே. ஆதலால்தான் மற்ற மாநிலங்கள்கூட இதற்குமுன்னால் இந்த முயற்சியினை மேற்கொள்ளவில்லை என்பதையும் நாம் அறிகிறோம். ஏனென்றால் இது ஒரு அன்-ஆர்கனைஸ்ட் செக்டார்.

தொழிலாளிகளின் நலனுக்காக, பாதுகாப்புக்காக இந்தக் கடினமான, துணிவான முயற்சியைச் செய்து நல்ல சட்டத்தை வடிவமைத்துத் தந்த தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களையும் மாண்புமிகு அண்ணன் தொழிலாளர் நல அமைச்சரவர்களையும் பாராட்டி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு முதன்முறையாக இந்தச் சட்ட மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டப் பாதுகாப்பினைப் பாராட்டுகின்றேன். ஏற்கனவே கைத்தறி நெசவாளர்களுக்காகப் போடப்பட்ட ஆய்வுக் குழு 1976 ஆம் ஆண்டிலே பல மாவட்டங்களுக்கும், மாவட்டங்களிலுள்ள முக்கியமான தலைநகரங்களுக்கும் சென்று பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதிலே குறிப்பாக அன்றையதினம் இருந்த விலைவாசிக்கேற்ப குறைந்தபட்சம் ஒரு நெசவாளிக்கு 250 ரூபாய் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று அந்தக் குழு பரிந்துரை

செய்திருக்கிறது. அந்தக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட இந்த சிபாரிசு 1976 ஆம் ஆண்டிலே வேண்டுமானால் சரியாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றையதினம் விலைவாசி ஏறியிருக்கின்ற காரணத்தால், சட்டம் கொண்டு வருகின்ற இதே சமயத்தில் உள்ள விலைவாசியைக் கருத்திற்கொண்டு அந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நெசவு நெய்கின்றவர்களுக்கு மட்டும் அந்தக் கூலி பற்றி, அந்தச் சம்பளம் பற்றி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நெசவுக்காகப் பாவோடுதல், பாவு பிணைத்தல் போன்ற தொழில்களும் இருக்கின்றது. அந்தத் தொழில்களில் இருக்கின்ற தொழிலாளிகளுக்கும் இந்தத் துறையிலே இருக்கின்ற அளவிற்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாஸ்டர் வீவர்களிடம் நூல் வாங்கி நெய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு நூல் கிடைக்கவில்லை, அல்லது சாயப் பொருட்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு வேலையில்லாமல் செய்யக்கூடிய நிலையில் இருக்கும் நிலையிலே அரசு பாதுகாக்கின்ற முறையில், ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற, அதாவது கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து அந்தச் சங்கங்களுக்கு நாம் எப்படி நூல் விநியோகம் செய்கிறோமோ அதைப்போன்று இந்த மாஸ்டர் வீவர்களுக்கும் நூல் விநியோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்ற நேரத்தில் கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற துணிகளைச் சிலசமயங்களில் கோவாப்டெக்ஸ் மூலமாக நாம் வாங்குகிறோம். அம்மாதிரித் துணி தேக்கமில்லாமல் தமிழக அரசே, தேங்கியிருக்கின்ற துணிகளை வெளிநாட்டுக்கு அனுப்பவும் அல்லது அரசுத் தரப்பிலே நாம் கொடுக்கும் அந்த உபயோகத்திற்கும் கொடுக்க அதை நாமே கொள்முதல் செய்து குறிப்பிட்ட காலத்தில் அவர்களுக்கு வேலை சுணக்கம் இல்லாமல் நடைபெற நாம் அந்தப் பணத்தைக் கொடுத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

(மாலை 4.10)

இப்பொழுது கொண்டு வரப்படுகிற சட்டத்திலே அறுவை சிகிச்சை செய்து கொள்கிற ஆண்களுக்கு ஒருவாரவிடுமுறையும், பெண்களுக்கு 15 நாள் விடுமுறையும் சம்பளத்தோடு கொடுக்கப்படும் என்று இருக்கிறது. அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் முழுமையாக ஒரு வாரத்தில் வேலை செய்ய முடியாத நிலைமையில் இருப்பார்கள். ஆண்களாக இருந்தாலும் அல்லது பெண்களாக இருந்தாலும், அவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒருமாதத்திற்கு விடுமுறை விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று பீடித் தொழிலாளர்களுக்கென கொண்டுவரப் பட்டிருக்கிற சட்டத்திலே, வீட்டிலே வேலை செய்யக்கூடிய நபர்களுக்கு எப்படி அந்தச் சட்டத்தின் நன்மை கொடுக்கப் படுகிறதோ அதைப்போல, இத்தொழிலில் வீட்டில் வேலை செய்பவர்களுக்கும் பொருந்துகிற அளவுக்குச் சட்டத்தைத் திருத்த வேண்டும். தொழில் தகராறு வருகிறபொழுது, தொழிலாளர்களுக்கு இச்சட்டத்தை அமுல் நடத்த வேண்டும். அப்பீலுக்கு விடக் கூடாது. பிரவிடன்ட் ஃபன்ட் மற்ற நிதி வசதிகள் அனைத்தும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

போனஸ் பொறுத்தவரை, இன்றையதினம் பவர் லூம் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அல்லது மாஸ்ட்டர் வீவர்களிடம் செய்யக்கூடிய தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் நினைத்து என்ன கொடுக்கிறார்களோ, அதைத் தான் பெற வேண்டியதாக இருக்கிறது. கடந்த தீபாவளி சமயத்தில், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் போனசைப் பற்றி ஒரு சிறு தகராறு ஏற்பட்டபொழுது போனஸ் என்கின்ற நிலையில் நாங்கள் கொடுக்கமாட்டோம். போனஸ் என்ற வார்த்தையைச் சேர்க்கக் கூடாது, இனாமாக நாங்கள் கொடுப்போம் என்று சொன்னார்கள். சட்டப்படி ஏனைய தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் அளவில் இவர்களுக்கும் போனஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஜனதா ரக துணிகள் உற்பத்தி செய்ய குறைந்த விலையில் நூல் விநியோகம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சட்டத்தை நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததாலே அவர்களை நான் பாராட்டுகிறேன். இந்தச் சட்டம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு எல்லாவகைத் தொழிலாளர்களுக்கும் நல்லதொரு கூலி கொடுக்க வேண்டும், வாய்ப்பு கொடுக்க வேண்டும், அவர் களுடைய வாழ்வு மலர வேண்டுமென்று சுதந்திரத்திற்குப் பிறகு சட்டம் கொண்டு வரப்பட்டாலும் காலதாமதம் ஆவதற்கு நான் வருந்துகிறேன். ஆனால், 1976 ஆம் ஆண்டு ராஜா சுப்பிரமணியம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரைகளும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. காலதாமதமாகக் கொடுத்தாலும், கொடுக்கப்பட்ட குழுவின் அறிக்கையிலே, அதிகமானவைகளை, கிட்டத்தட்ட 8 அத்தியாயத்திலே, 46 பரிந்துரைகளை உடையதாக இந்த அரசு கந்தச் சட்டத்தினைக் கொண்டு வந்ததற்கு நாம் மகிழ்ச்சி அடையலாம். இந்தியாவிலே இருப்பவர்களில் கிட்டத்தட்ட 20 சதவீதத்தினர், தமிழகத்திலே இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக் கிறார்கள். 50% துணிகள் தமிழகத்திலே மட்டும் உற்பத்தி செய்யப்படுகிறது.

இச்சட்டத்தில் இத்தனை பிரிவுகள் இருந்தாலும் அவர்களுடைய குறைந்தபட்சக் கூலி எவ்வளவு என்பதை இன்னமும் நிர்ணயிக்கவில்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது எவ்வளவு என்று சொல்லவேண்டும். குழுவின் அறிக்கையிலே குறைந்தபட்சம் ரூ. 250 இருக்கவேண்டுமென்று சொல்லியிருப்பது அன்றைய நிலையிலே குழு சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால், இன்றைய நிலையிலே, விலைவாசி உயர்ந்துள்ள நிலையிலே, குறைந்தபட்சம் ரூ.300 ஆவது இருக்க வேண்டும். அதை அரசு எண்ணிப் பார்த்துச் செய்யும் என்று நான் நம்புகிறேன்.

கிட்டத்தட்ட இங்கே 6 லட்சம் கைத்தறித் தறிகள் இருக்கின்றன. இவைகளிலே 13 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். கிட்டத்தட்ட 873 பிரதம கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. எந்த சட்டங்கள் செய்தாலும், முறைப்படி என்றைக்கு அதை நோட்டிபிகேஷன் செய்கிறார்களோ அன்றிலிருந்துதான் அது அமுலுக்கு வரும் நிலைமை தற்போது இருக்கிறது. ஆகவே நான் வேண்டுவது எல்லாம், ஒவ்வொரு சமயமாக செய்து கொண்டு காலம் கடத்துவதைவிட என்றைக்கு சட்டம் அமலுக்கு வருவதற்கு அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதோ அன்று முதல் அந்தத் தொழிலாளர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளிலே மீண்டும் காலதாமதம் ஆகாமல் செய்வோமானால் மிகச் சிறந்ததாக இருக்கும் என்று அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். மனிதனுடைய மானத்தைக் காக்கின்ற துணியை செய்யும் அந்தச் சமுதாய மக்களுக்கு நாம் காலம்கடந்து செய்தாலும், மேற்கொண்டு காலதாமதம் இன்றி செய்வோம் என்று உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மேலும் அவர்களில் தனியாகச் செய்கிறவர்களும் இருக்கிறார்கள். மாஸ்டர் வீவர்ஸ்களை தங்களுக்கு எசமானர்களாக வைத்துக் கொண்டு அவர்களின் கீழ் இயங்கிக் கொண்டு இருக்கிறார்கள். மூலப் பொருள்களை வாங்கி அந்த மூலப் பொருள்களை, தங்களுக்குச் சவுகரியமான இடங்களில், தான் முதலாளியாக இல்லாவிட்டாலும், தன்னுடைய கஷ்டத்தினால், அந்தத் தொழிலுக்கு அதிபதியாகவும், அந்தத் தொழிலில் கிடைக்கும் பலனை அடைகின்ற விதத்திலே கஷ்டமான வேலையைச் செய்கின்றவர்களும் ஒரு பகுதியாக இருக்கிறார்கள். ஆகவே இந்த 3 பகுதிகளிலே மூலப் பொருள்களை வாங்கி தானே அந்தத் தொழிலைச் செய்து முன்னுக்கு வர வேண்டும் என்று இருக்கிறவர்களுக்கு அவர்களின் நலனிலே நாம் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். மூலதனத்தை வாங்குகின்ற நிலைமையில் இருக்கின்றவர்கள், உழைப்பையும் கொடுக்கும் நிலைமையில் இருக்கின்றவர்கள், அவர்களுக்கு மூலதனம் கிடைக்க வேண்டிய அளவுக்கு நாம் செய்கின்ற சட்டங்களிலே அவர்களுக்கு நேரடியாகப் போய் சேருமா என்பதை கவனிப்பதற்கு சட்டங்கள் எத்தனையோ இயற்றப்பட்டாலும், அந்தச் சட்டங்களை அமல்

நடத்த வேண்டியவர்கள், இருக்க வேண்டும். ஆனால் தொழிலாளர்கள் சட்டத்துக்கு வேண்டியவர்களாக இருந்தாலும், இதைத் தனியாக எடுத்து அந்த நெசவுத்தொழிலைச் செய்கின்ற மக்களுக்கு இந்தச் சட்டத்தின் நன்மைகள் அவர்களுக்கு நேரடியாக சேருவதற்கான தனி அமைப்பை உண்டாக்கினால் ஒழிய, நாம் குறைந்த பட்சக் கூலி சட்டத்தை விவசாயிகளுக்குச் செய்துவிட்டு, தாசில்தார்கள் கையிலேயும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் கையிலேயும் விட்டுவிட்டு, அவர்களுக்கு எந்த அளவிலேயும் சட்டத்திற்கு மதிப்பும் இல்லை, சட்டம் அமல் நடத்தப்படவும் இல்லை. சமூக விரோதிகள் அவர்களைப் பல வழிகளிலே இழுத்துச் செல்லுகிறார்கள். அந்தப் பாவமான காரியத்தை இவர்களும் அடையவேண்டிய அவல நிலையிலே அரசு கொண்டு வந்து விடாமல், அவர்களுக்காக தனி அமைப்பை உண்டாக்கி இந்தச் சட்டத்தின் நன்மைகள் நேரடியாக அவர்களுக்குச் சேர வேண்டிய வழிவகைகளை அரசு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நாம் செய்கின்ற சட்டங்களை நல்ல எண்ணத்தோடு செய்கிறோம். மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்றுதான் செய்கிறோம். அரசாங்கத்தில் இருக்கின்ற அதிகாரிகள் கூட, இந்த குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலே இந்த 8 அத்தியாயங்கள் 46 பிரிவுகளையும் மிகவும் தீர்க்கமாக சிந்தித்து நல்ல எண்ணத்தோடு செய்திருந்தாலும், அதை அமல் செய்ய வேண்டிய நிலைமையிலே நாம் அலட்சியமாகவும், மெத்தனமாகவும் இருப்போமேயானால் நாம் செய்கின்ற சட்டத்தின் பலன் அவர்களுக்கு சேராமலேயே போய்விடும் என்று அஞ்சுகிறேன். அந்த அச்சத்தைத் தவிர்ப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

அதேபோல மாஸ்டர் வீவர்ஸ்களிடம் வேலை செய்கின்றவர்களுக்கு தனியாக பதிவேடு இருக்க வேண்டும். அவர்கள் எப்படி எல்லாம் வேலை செய்கிறார்கள். எத்தனை மணி நேரம் வேலை செய்கிறார்கள், அவர்களுடைய மொத்த எண்ணிக்கை என்ன, அவர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்த கூலி கொடுக்கப்படுகிறதா? போனஸ் கொடுக்கப்படுகிறதா? அவர்களுடைய நிலைமை என்ன என்பதை எல்லாம் அந்தப் பதிவேடு அமைக்கப்பட வேண்டிய நிலைமை—மாஸ்டர் வீவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டிய நிலைமையில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அவர்களுக்குக் கார்டுகள் வழங்கப்பட வேண்டும். அங்கே வேலை செய்கின்றவர்கள் எப்போது அமர்த்தப்பட்டார்கள் என்ன சம்பள விகிதத்தில் அமர்த்தப்படவில்லை அவர்கள் எத்தனை நாள் வரப்படவில்லை. அதற்கு வேறு குறுக்கு வழியிலே சட்டங்கள். அது நல்லதாக வந்துவிட்டதனால், அவர்களைக் குறுக்கு வழியிலே வளைப்பதற்காக அந்த சட்டங்கள் வேறு விதமாக தங்களுடைய வசதி காரணமாக வாய்ப்பு காரணமாக, பொருளாதாரத்திலே அவலம் உள்ள மக்களாக நிலைமையைக் காரணம் காட்டி, அதை வேண்டிய வகையிலே தங்களுக்குச் சாதகமாக செய்து கொள்ளாத முறையிலே அவர்களுக்கு அந்தக் கார்டுகள் வழங்கப்படுமானால்,

அவைகள் அத்தனையும் அந்தக் கார்டுகளில் குறிப்பிடுகின்ற நிலைமையை நாம் சீர் செய்வோமானால், நிச்சயமாக நல்ல எண்ணத்தோடு அரசு செய்த சட்டமும் அதிகாரிகள் அதற்கு உறுதுணையாக எடுத்துக்கொண்ட முயற்சியும், வருங்காலத்திலே அந்த மக்களுடைய நல்வாழ்வுக்கு வேண்டிய அஸ்திவாரத்தை செய்கின்ற பணியை காலம் கடத்தாமல் நாம் செய்யவேண்டும் என்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4.20]

அந்தக் குழுவினுடைய அறிக்கையிலே பக்கம் 3, 5-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 20 பெண் தொழிலாளர்கள் இருந்தால் அவர்களுக்கு ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் இருந்தால் அந்தக் குழந்தைகளுக்கு காப்பகங்கள் செய்து கொடுக்கவேண்டு மென்று குழு பரிந்துரை செய்திருக்கிறது. அரசும் அதை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

அதைப்போல பக்கம் 5-ல் இன்ஷூரன்ஸ் திட்டம் வருங்கால வைப்புநிதித் திட்டம் என்றெல்லாம் குழு பரிந்துரை செய்திருக் கிறது. அவைகளையும் அரசு கவனத்தில் கொண்டு, ஆவன செய்தால் தான் காலம் கடந்து இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டாலும், அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் பலன் கிடைக்கும், சலுகைகளை அவர்கள் அனுபவிக்க முடியும். ஆகவே, குழு பரிந்துரை செய்திருப்பதை அரசு அப்படியே ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசு அறிவித்திருக்கிற 20 அம்சத் திட்டத்தில்கூட 10,000 கைத்தறி நெசவாளர்கள் இருந்தால் அவர்களுக்கு ஒரு நல்ல திட்டம், அதைப்போல 1000 கைத்தறிகள் இருந்தால் அவர்களுக்கு ஏற்றுமதித் திட்டம் என்று மத்திய அரசு பல உதவிகளை அறிவித்து, செய்துகொண்டிருக்கிறது. அதை முழுமையாக நம்முடைய அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மத்திய அரசிடம் கேட்டு இந்த நெசவாளர் களுக்கு செய்யவேண்டிய நல்ல காரியங்களை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையிலே, மத்திய அரசிடமிருந்து தேவையான உதவிகளை காலாகாலத்தில் கேட்டுப் பெற்று, அவைகளை செய்ய அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 36 கோடி ரூபாய்க்கு இந்த கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்படுகிறது என்றால் அதிலே கிட்டத்தட்ட 18 கோடிக்கு கோவாப்டெக்ஸ் மூலம் உற்பத்திசெய்து, நல்ல முறையிலே விற்பனை செய்து நல்ல பெயரை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நல்ல காரியங்களுக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுவது மட்டுமல்ல, வாழ்த்துகிறேன். ஆனால் இந்தச் சட்டத்தை என்றைக்கு அமுலாக்குகிறோமோ அன்று முதல் தமிழ்நாடு முழுவதும் அமுல்படுத்த வேண்டும். நோட்டிபிகேஷன் என்ற பெயரை வைத்துக் கொண்டு காலதாமதத்தைப் படுத்த

கூடாது. அதோடு அவர்களுக்கு குறைந்தபட்ச கூலி 300 ரூபாய்க்குக் குறையக்கூடாது. மற்ற தொழிலாளர்களுக்கு இருக்கிற சலுகைகள் எல்லாம் நெசவாளர்களுக்கும் கிடைக்க வேண்டும் மற்றபடி அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையில் என்ன சொல்லியிருக்கிறதோ அதை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே இன்றைக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பாலான மக்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தொழில் இந்த நெசவுத்தொழிலை வளர்க்கவேண்டும். அந்தத் தொழிலை மேற்கொண்டிருக்கிற மக்கள் துயரைப் போக்க வேண்டும். அவர்களுடைய வாழ்விலே நல்ல மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இன்றையதினம் தமிழக அரசு, தமிழ் நாட்டில் கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாப்பதற்காக இந்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து, நிறைவேற்றுகின்ற நிலையில் என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் பல்வேறு சட்டதிட்டங்களை இங்கே நாம் கொண்டு வந்து நிறைவேற்றுகிறோம். நெசவுத் தொழிலாளர் களுடைய வாழ்க்கையில் அவர்கள் மேம்பாடு காண முடியாத அளவுக்கு பன்னெடும் காலமாக மாஸ்டர் வீவர்களால் அவர் களுடைய இரத்தம் உறிஞ்சப்பட்டு வருகிறது. இப்படி நல்ல ஆதாயம் தேடுகின்ற அந்த முதலாளிகள் நெசவாளர்களுடைய நல்வாழ்வில் அக்கறை செலுத்த வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தை இன்றைய தினம் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் ஒரு நல்ல மறுமலர்ச்சி இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்று கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இதிலே ஒன்றிரண்டு விளக்கங்களையும் நாம் பெற வேண்டியிருக்கிறது. இங்கே வீட்டு நெசவாளர்கள் என்றும் தனிப்பட்ட நெசவாளர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. வீட்டு நெசவாளர் என்றால் மாஸ்டர் வீவர்கள் வைத்திருக்கிற கொட்டகையில் தனிப்பட்ட முறையில் தொழில் செய்வதா அல்லது அந்த முதலாளிகளிடத்திலே நெசவுத் தொழிலாளி உரிய பொருட்களைப் பெற்றுக்கொண்டு வந்து தன்னுடைய வீட்டிலே வைத்து நெசவு செய்கின்ற தனிப்பட்ட தொழிலாளியா என்பதை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுகிறேன். இந்தச் சட்டத்தின்படி தனிப்பட்ட நெசவாளர்கள் என்று இருக்கிற சட்டம் அவர்களுக்கு பயன்படாமல் இருக்கிறதா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

அதைப்போல 8 மணி நேரம் வேலை என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. பொதுவாக நெசவாளர்கள் முதலாளிகள் இடத்திலே நெசவுத் தொழிலுக்குத் தேவையான பாவையும், பட்டையும்

வாங்கிக் கொண்டு சென்று தங்களுடைய வீட்டிலே வைத்து நெய்து முதலாளிகளிடம் கொடுத்து, அதற்குரிய கூலியைப் பெற்றுச் செல்வார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த வீட்டிலே எவ்வளவு நேரம் நெசவு செய்ய வேண்டும் என்று சொல்ல கேட்க யாரும் கிடையாது.

ஆகவே அதை எல்லாம் நல்லமுறையிலே வரைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து குறைந்தபட்சக்கூலி என்று இங்கே கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஒரு ஆடைக்கு இவ்வளவு கூலி அல்லது ஒரு மீட்டருக்கு இவ்வளவு கூலி என்று கொடுக்கிறார்கள். ஆனால் அது குறைந்தபட்சகூலி என்பது எந்தவகையில் இருக்க வேண்டும் என்பதைப் பொறுத்தவரையிலே இன்னின்ன ரகத்தற்கு இத்தனை இத்தனை மீட்டருக்கு இவ்வளவு இவ்வளவு கூலி கொடுக்கவேண்டும் என்ற வகையிலே குறைந்த பட்சக்கூலி நிர்ணயிக்கவேண்டும். அதுபோன்று பல்வேறு வசதிகளை இன்றையதினம் அந்தத் தொழிலை நடத்துகின்ற பணம் ஈட்டு கின்ற முதலாளிகள் நெசவாளர்களுக்குச் செய்து கொடுக்க வேண் டும் என்று சட்டத்திலே தெளிவாகக் கூறி இருக்கிறோம். மருத்துவ வசதி, நெசவாளர்களின் குழந்தைகளுக்கு படிப்பு வசதி வீட்டு வசதி போன்ற பல்வேறு வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்று மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். அந்த அளவிற்கு இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் நெசவாளர்களுக்கு விடி விளக்காக வும், விடி வெள்ளியாகவும் திகழ்ந்து வருகிறார்கள். ஆகவே தான் இந்தியத் துணைக்கண்டத்திலே எந்த ஒரு மாநிலத்திலே யும் இல்லாத அளவிற்கு நெசவாளர்களுடைய ஒருமையைப் பாதுகாப்பதற்கும் அவர்களுடைய வாழ்க்கை நிலை மேம்பாடு அடைவதற்கும் இங்கே சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற இருக்கிறோம். இதிலே இன்னொன்றை தெளிவுபடுத்தவேண்டும். நெசவாளர்களுக்கு, எனக்கு முன்னாலே பேசிய திரு. நல்லப்பன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இன்சுரன்ஸ், பிராவிடன்ட் பன்ட் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும். நம்முடைய சட்டங்கள் எல்லாம் நல்லமுறையிலே செயல்படுகின்றதா என்பதையும் கண்காணிக்கவேண்டும். திரு இளயபெருமாள் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஆங்காங்கே ஏற்பாடுகள் செய்து கண்காணிக்கவேண்டும். நெசவாளர்களின் வாழ்க்கை மேம்படுகின்ற அளவுக்கு கண்காணிப்பு இருக்க வேண்டும்.

நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வழி வகைகளிலே நாம் முக்கியமாகச் செய்யவேண்டியது இருக்கின்ற அத்தனை நெசவாளர்களையும் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாக ஆக்கினால் நெசவாளர்கள் அனைவருக்கும் நல்ல கூலி கிடைக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பல்வேறு வசதிகள் அவர்களுக்கு கிடைக்கவும் வழிவகைகளைச் செய்து கொடுக் கிறார்கள், இன்சூரன்ஸ் திட்டத்தை கொடுத்திருக்கிறார்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை போனஸ் கொடுக்கிறார்கள். இவ்வாறு நல்லமுறையிலே கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுவதால் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை நெசவாளர்களையும் கூட்டுறவு அமைப்பின் கீழ கொண்டு வருகின்ற சீரிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய நெசவாளப் பெருங்குடி மக்களுடைய சீரிய வாழ்விற்கும் அவர்களுடைய முன்னேற்றத்திற்கும், அவர்களுடைய மேம்பாட்டிற்கும் கொண்டுவரப்பட்ட இந்த சட்ட முன்வடிவை வரவேற்று இந்த சட்ட முன்வடிவினைக் கொண்டுவருவதற்காக அரும்பாடுபட்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. ஏ. கே. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்டத்தை வரவேற்றுப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை காணிக்கையாக்கிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்து பெரும்பாலோர் ஈடுபட்டிருக்கின்றனர் இந்த நெசவுத்தொழிலிலே. அந்த நெசவாளர்களைப் பாதுகாக்க இந்த சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. பொதுவாக இந்திய நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் வழிகாட்டுவதாக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. நெசவாளர்கள் எந்தவிதமான போராட்டமும் நடத்தாமல், எந்தவிதமான கோரிக்கைகளும் வைக்காமல், அந்தக் கோரிக்கைகளுக்காக எந்தவிதமான அடையாளமும் காட்டாமல் இருக்கின்ற நிலையிலே அரசே முன்வந்து அந்த மக்களின் நிலைமையைப் புரிந்து கொண்டு அவர்களுக்கான பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 4.30]

நெசவாளர்களுடைய பொற்காலம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலம்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நெசவாள தொழிலாளர்கள் மக்களின் மானத்தைக் காக்க ஆடை நெய்யும் தொழிலை செய்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலமாக, நெசவாளத் தொழிலாளர்களின் மானத்தையும், வாழ்க்கையையும் காப்பாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. முக்கியமாக நெசவுத் தொழிலாளர்கள் தனியார்களிடத்தில் கொடுமைகள் அனுபவித்து வந்ததை தடுப்பதற்காகவும், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காகவும பல விதிமுறைகள் அடங்கிய இந்தச் சட்டத்திருத்தத்தினை நமது அரசு கொண்டு வந்திருக்கிறது. தொழில் தொடங்குவதற்கு

லைசன்ஸ் கொடுக்கும் திட்டத்தையும், அதே நேரத்தில் தொழிலாளர்களின் நலன் கருதி, பாதுகாப்பு கருதி ஆய்வாளர் நியமிக்க இருக்கும் முறையினையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக தொழிற்சங்கங்களே இல்லாத இந்த நெசவு அமைப்புகளுக்கு, இத்தகைய ஆய்வாளர்களை நியமிப்பதன் மூலம் அந்த ஆய்வாளர்களை அவர்கள் தலைவராக ஏற்றுக் கொண்டு, அவர்களின் தொழில் வாழ்க்கைக்கு பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த முறையினை கொண்டு வந்திருப்பதற்காக நான் அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த நெசவுத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் காசநோயினால் பீடிக்கப்பட்டு அல்லலுறுகின்ற நிலைமை இருக்கிறது. இதற்கு மூலகாரணம் அவர்கள் மிக நெருக்கடியான இடங்களில் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து கொண்டு தங்கள் நெசவுத் தொழிலை செய்வதுதான். ஆகவே, இதை தவிர்க்கும் பொருட்டு இந்தத் தொழில்களுக்கு லைசன்ஸ் வழங்கும்போது, அந்த இடங்கள் சற்று விசாலமான இடங்களாக இருக்குமாறு அரசு கவனித்துக்கொள்ள வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் இந்த நெசவுத் தொழிலாளர்கள் காச நோயினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, நகரின் எந்தெந்தப் பகுதிகளில் அந்த நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ, அந்தந்தப் பகுதிகளில் மொபைல் மருத்துவமனை என்று சொல்லக் கூடிய அளவில், நடமாடும் மருத்துவ மனைகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு காச நோய்க்கான சிகிச்சையை உடனுக்குடன் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல இந்த நெசவுத் தொழிலாளர்களை குறைந்தபட்சம் 70 சதவீதத்தினரை கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும், அவர்கள் புதிதாக கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த முன் வந்தால் அவைகளை ஊக்குவிப்பதற்கும் பதிவு செய்வதற்கும் தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதற்கும் அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்கள் வேலை செய்வதற்கான காலத்தை நிர்ணயித்திருக்கும் இந்தச் சட்டத்திலே, மாண்புமிகு உறுப்பினர் வெள்ளைச்சாமி அவர்கள் சொன்னது போல, ஒரு பிரச்னை உன்னிப்பாக கவனித்தால் அடங்கியிருப்பது தெரிகிறது. தனி முதலாளிகளிடத்திலே பாவு வாங்கிக்கொண்டு வந்து நெய்து கொண்டு போய்க் கொடுக்கும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு 3 சேலைகள் நெய்தால், ஒரு சேலைக்கு 100 ரூபாய் என்று வைத்துக் கொண்டால், 300 ரூபாய் அந்தத் தொழிலாளி பெறக்கூடிய நிலைமை உண்டு. அதிகமான நேரத்தை அவர் பயன் படுத்தினால் 3 என்பதை 5 ஆகக் கூட அவரால் நெய்ய முடிந்தால், இன்னும் அதிகமான அளவில் அவரால் பயன்பெற முடியும். ஆகவே இந்தக் காலத்தை

1981 மே 12] [திரு ஏ. சி. சண்முகம்]

நிர்ணயிக்கும் பணியினை இன்னும் சற்று ஆழமாக சிந்தித்து செயல்பட்டால், அது அவர்களுக்கு இன்னும் உபயோகப்படும் விதத்தில் மாற்றினால் அவர்களுக்கு அது மிகுந்த நன்மையைக் கொடுக்கும் என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நெசவாளர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி போன்றவைகளைக் கொடுக்கும் வகையில் இந்தச் சட்டத்திலே வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆய்வாளர்களின் பணிகளை குறிப்பிடுகையில் விசாரணையைப் பற்றி வெளியிடப்படுவது தடுக்கப்படுவதோடு மட்டும் அல்லாமல், அப்படிச் செய்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தொழிற் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் மேல் முறையீடு செய்து கொள்ளவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. தகுந்த காரணம் இல்லாமல் ஒரு மாத நோட்டீஸ் கொடுக்காமல் எந்த தொழிலாளரையும் வேலையிலிருந்து நீக்க முடியாது என இச்சட்டத்தின் மூலமாக பாதுகாப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நெசவுத் தொழிலாளி, முதலாளியிடமிருந்து பெற்று வந்த பொருள்களைக் கொண்டு துணியை நெய்து கொண்டு திரும்ப எடுத்துச் சென்றால், அதிலே வேண்டுமென்றே குற்றம் குறைகள் கண்டு பிடித்து எடை சரியில்லை, கலர் சரியில்லை, இழை சரியாக இழைக்கப்படவில்லை என்பதுபோன்ற பல பிரச்னைகளையெல்லாம் சொல்லி, அவர்களுக்கு சரியாக பணம் கொடுக்காமல் பழி வாங்கும் நிலைமைகள் எல்லாம் இருப்பதை தடுப்பதற்காக, தடை செய்வதற்காக இந்த சட்டத்திலே வழி செய்யப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல குறைந்த பட்சக் கூலி வரையறுக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளை, ஏற்பாடுகளை நமது அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களுக்கு விடுப்பு, மாதத்திற்கு இவ்வளவு நாட்கள் விடுப்பு, வருடத்திற்கு இவ்வளவு விடுப்பு என்று சம்பளத்தோடு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒய்வுகாலச் சலுகைகள் நெசவாளர்களுக்கு இதுவரையில் இல்லை. அரசு கருத்தில்கொண்டு நெசவுத் தொழில் செய்பவர் ஓய்வுகால ஊதியம் பெற வழிவகைகளை ஆராயவும், கூட்டுறவு சங்கங்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வந்த இந்த அரசையும், வீட்டு வசதித் திட்டம்மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் இந்த அரசையும், நெசவாளர்கள் குடும்பங்களின் துயர் துடைக்கும் இந்த அரசையும், இப்படி பல்வேறு பணிகளில் ஈடுபட்டுகொண்டிருக்கும் இந்த அரசையும் இந்தச் சட்டத்தையும் நெசவாளர் பெருமக்கள் வரவேற்கிறார்கள் என்று கூறி இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்று விடை பெறுகிறேன்,. நன்றி.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றரை இலட்சம் நெசவுத் தொழிலாளர்களுடைய, அவர்களுடைய ஒட்டுமொத்தமான 25 இலட்சம் பேர்களுடைய வாழ்க்கை வசதிகளுக்கு விடிவெள்ளியாக

பாதுகாப்புச் சட்டத்தை நான் மனமுவந்து வரவேற்கக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மிகக் குறிப்பிட்ட ஒரு அம்சமாக விளங்கியது இந்த கைத்தறி நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருவோம் என்ற கோரிக்கையை நடைமுறைப்படுத்துகிற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு உருவகத்தைத் தருகிற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தமைக்காக அவர்களை நான் பாராட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நீண்டநெடுங்காலமாக நெசவாளர்களை நெசவுத் தொழிலாளர்கள் என்று அங்கீகரிக்கிற இந்தச் சட்டம் வராதா, நெசவாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற இந்தத் தொழில் சட்டம் இந்த நாட்டிலே உருவாக்கப்படமாட்டாதா என்று ஆயிரக்கணக்கான பேர்கள், இலட்சோபலட்சம் பேர்கள் ஏங்கி பல காலகட்டத்தில் தவித்துக்கொண்டிருந்தார்கள் என்பது நாம் கண்டு கொண்டு வந்த ஒரு உண்மையாகும். அதை நடைமுறைப்படுத்துகிற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை இன்றைக்கு கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொன்னால் நெசவாளர்களுடைய வரலாற்றில் ஒரு பொன்னேட்டைத்துவக்குகிற சட்டமாக இந்தச் சட்டம் இன்றைக்கு அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட இருக்கிறது. குழிக்குள்ளே இருந்தவர்கள், தங்களுடைய வாழ்க்கை பள்ளமாக மாறக்கூடிய அளவிற்கு ஒரு பாதுகாப்பும் இல்லாமல் வைத்தியவசதி கிடைக்காமல் வேறு எந்தவிதமான சலுகையும் பெறமுடியாத இக்கட்டான சூழ்நிலையில் அந்த இலட்சோபலட்சம் நெசவுத்தொழிலாளர்கள் கடந்த காலத்தில் பாழ்பட்ட நிலையில் விளங்கி வந்தார்கள் என்பது நாம் அறிந்திருக்கிற ஒரு உண்மையாகும். அவர்கள் துயரைத் துடைக்கிற முறையில் அவர்கள் துன்பத்தை அகற்றுகின்ற தன்மையில் இந்த அரசு இந்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. காங்கிரஸ் அரசாங்கம் ஆண்ட நேரத்திலும் அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டை ஆண்டு வந்த தருணத்திலும் நெசவாளர்களுடைய சார்பாக இப்படிப்பட்ட கோரிக்கைகள் எடுத்து வைக்கப்பட்டன. ஆனால் அந்தக் கோரிக்கைகளுக்கு வடிவம் தருகிற முறையில் எந்த ஆட்சியும் செய்யாத, செய்ய முன்வராத செய்யத் துணியாத இந்த நல்ல காரியத்தை நமது இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுகூற கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் திராவிட சமுதாயத்திற்கும் நெசவாளர் பெருமக்களுக்கும் இறுக்கமான ஒரு உறவுப் பாலம் இருந்தது என்பதை வரலாற்றில், சரித்திரத்தில் படித்திருக்கிறோம். பல்வேறு சமயங்களில் அந்த நெசவாளர்களின் வாழ்க்கை நிலைமை சோதனைக் கட்டத்தை எய்துகொண்டிருந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்த திராவிட சமுதாயமும் அந்த நெசவாளர்களுடைய துயரைத் துடைப்பதற்காக எவ்வளவு பாடுபட்டார்கள் என்பதை நாம் மறந்திருக்க நியாயம் கிடையாது.

1981 மே 12] [திரு. ஆர். மணிமாறன்]
[மாலை 4-40]

1973 ஆம் ஆண்டிலேகூட ஆத்தூர் தொகுதியிலே இருக்கக் கூடிய சின்னாளப்பட்டியில் உள்ள நெசவாளர்கள் எல்லா நெய்வதற்கு நூல் கிடைக்காமல் கஷ்டப்பட்டு வாழ்க்கையிலே வாடி தங்களுடைய இருப்பிடங்களை விடுத்து வேறு சில இடங்களுக்கு குடிபெயர்ந்து போகின்ற ஒரு அவல நிலைமை இருந்த கால கட்டத்தில்தான் நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரு அறிக்கையை வைத்து தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய கழகத்தோழர்கள் எல்லாம் உண்டியல் வாயிலாக அந்த காசு பணங்களை வசூல்செய்து, அந்த சின்னாளப்பட்டியில் வறுமைக் கோட்டிலே வாடிக் கொண்டிருந்த அந்த நெசவாளர் குடும்பங்களுக்கு அளித்திட வேண்டுமென்று சொல்லி, ஒரு அறிக்கையினை விடுத்தார்கள். ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் அன்றைக்கு சின்னாளப்பட்டியில் அல்லல்பட்டுக் கொண்டிருந்த நெசவாளர் குடும்பங்களுக்கு அன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அள்ளித் தந்ததை நாம் மறந்திருக்க நியாயம் கிடையாது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனே, யார் யார் ஆட்சிப் பீடத்தில் இருந்த நேரத்தில், இந்த நெசவாளர்களுக் குரிய பாதுகாப்புச் சட்டத்தை கொண்டு வருவதற்குண்டான சாத்தியக கூறுகளை இந்த அரசு எப்படி உருவாக்க முனைய வில்லை என்றெல்லாம்கூட இந்த சட்ட மன்றத்திலே குரல் கொடுத்தார்கள். நெசவாளர்களுக்கு சட்டம் இல்லையா, அவர் களுக்கு சட்டம் கொண்டுவரக்கூடாதா, இந்த நெசவாளர்களை தொழிலாளர்களாக அங்கீகரிக்க சட்டம் என்றைக்கு வரும் என்ற கேள்விக் கணைகள் இந்த மாமன்றத்திலேகூட எதிரொலித்தன. அந்த நேரத்தில்தான் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இங்கே அந்தச் சட்டத்தை அறிமுகம் செய்தார்கள். அறிமுகம் செய்து, அதற் குண்டான செலக்ட் கமிட்டி அமைத்து, அதனுடைய உறுப் பினர்கள் நாடு பூராவும் சுற்றி வந்து, என்னென்ன தேவைகள் என்னென்ன வசதிகள், என்னென்ன வாய்ப்புகள் தொழிலாளர் களுக்கு உருவாக்கித் தரவேண்டுமென்ற புள்ளிவிவரத்தோடு பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்றதற்குப் பின்னர், கடந்த பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி தென் ஆற்காடு மாவட்டத் திற்குச் சென்று அங்குள்ள நெசவாளர்களையெல்லாம் கண்டு, அவர்களுடைய சாட்சியங்களை எடுக்க முனைகிறார்கள். ஆனால், 17 ஆம் தேதி அந்த செலக்ட் கமிட்டி சிதம்பரம் போகின்ற அந்த நேரத்தில்தான், அந்த இரவிலேதான் திடீ ரென்று ஜனநாயகத்தின் சார்பாக, ஜனநாயக நெறிமுறைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசாங்கம் பிப்ரவரி மாதம்

17 ஆம் தேதி கலைக்கப்படுகின்றது என்ற செய்தி அன்றைக்கு எட்டியது. அதற்குப் பிறகு வடஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்கள்தான் பாக்கி இருந்தன. அனைத்து மாவட்டங்களிலும் இந்த கமிட்டி சுற்றுப் பயணம் செய்து புள்ளி விவரங்கள், சாட்சியங்களைத் தயார் செய்துவிட்ட நிலையில், இடையிலே நான்கு மாத காலம் ஒரு தொய்வு. அன்றைக்கு வந்திருக்க வேண்டிய சட்டம், இன்றைக்கு காலந்தாழ்ந்து மீண்டும் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆட்சிப் பீடத்திலே அமர்ந்ததற்குப் பிறகு மறுபடியும் ஆய்வு செய்யவேண்டும் என்று தீர்மானித்து, அந்தக் கமிட்டியைச் சார்ந்தவர்கள் ஆய்வு செய்து, அந்த ரிப்போர்ட்டை அந்த புள்ளிவிவர அறிக்கையை சமர்ப்பித்ததற்குப் பிறகும்கூட, இங்கே பல வினாக்கள் எழுப்பப்பட்டன. கடந்த சட்டமன்றக் கூட்டத்திலேகூட, எங்கே சட்டம் வரவில்லை, ஏன் சட்டம் வரவில்லை, சட்டம் கொண்டு வரக்கூடாதா என்றும் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைப் பார்த்து, உங்களுக்குப் பயமா, அந்தச் சட்டத்தைக் கொண்டுவரக் கூடாதா என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கூட, அதனுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே குரல் கொடுத்தார்கள். ஆனால், எதை எந்த நேரத்திலே, எப்படி, எந்தச் சமயத்தில், எந்த முறையில், எந்த வகையில் செய்ய வேண்டும் என்பதை அறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அருமையான சட்டத்தை இன்றைய தினம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை பாராட்ட, நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நெசவாளர்கள் தொழிலாளர்கள் போல் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, சில சங்கங்கள் குரல் கொடுத்தது மாத்திரம் அல்லாமல், அரசியல் கட்சிகளும் குரல் கொடுத்த நிலை இருக்காது என்று சொல்லத்தக்க அளவில் 46 பிரிவுகளை உள்ளடக்கிய, இந்த 46 பிரிவுகளும் நல்ல மாணிக்கங்களாக அமைகின்ற அளவில், இந்த $3\frac{1}{2}$ இலட்சம் நெசவாளர்கள் வாழ்க்கையில் இன்பத் தென்றலை இணைத்திடுகின்ற வகையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை நான் மனப்பூர்வமாகக் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், காற்றோட்டம், மருத்துவ வசதி எவ்வளவு நெசவாளர்களுக்குத் தேவை என்பதை அறிந்து, அதிலே 10 வது பிரிவிலே, அந்தக் காற்றோட்டம் நெசவாளர்களுக்கு இருக்க வேண்டும் என்பதை ஆதாரமாக, மையமாக வைத்து, அந்தப் பிரிவை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதைப் போல 28-வது பிரிவில் இரண்டாவது உட்பிரிவில் தொழிலாளர் ஒருவர் ஓர் ஆண்டில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டால் அல்லது நீக்கப்பட்டால் அல்லது அவரே பணியிலிருந்து

1981 மே 12] [திரு. ஆர். மணிமாறன்]

விலகினால் (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள வீதத்தில் ஊதியங்களுடன் கூடிய விடுப்பை பெறுவதற்கு அவர் உரிமையுடையவராவார். இது தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அரசாங்கம் என்று எடுத்துக்காட்டுகிற பிரிவாக இந்த பிரிவு அமைந்திருக்கிறது என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல 36-வது பிரிவை எடுத்துப் பார்க்கிறபொழுது, ஆறு திங்கள் அல்லது அதற்கு அதிகமான கால அளவிற்கு பணிபுரிந்த எந்த ஒரு தொழிலாளரையும் தக்க காரணம் இருந்தாலன்றி மற்றப்படி, அத்தொழிலாளர்களுக்குக் குறைந்தது ஒரு திங்களுக்கு முன்னதாக எழுத்து மூலமான அறிவிப்பு கொடுக்காமலும், அவ்வாறான அறிவிப்புக்கு பதிலாக ஊதியம் கொடுக்காமலும், தொழிலதிபர் எந்த ஒரு தொழிலாளரையும் பணி நீக்குதல் கூடாது என்பதாக இந்த பிரிவு எல்லா தொழிற் சங்கங்களும் ஏற்றுக் கொள்கிற பிரிவாக இருக்கிறது என்பதை நான் அறிவுறுத்தி, உணர்த்த கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்டம் வேண்டுமென்று சொல்லி அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலே ஆளுநர் அவர்களிடத்திலேகூட நாம் விண்ணப்பங்கள் தந்தோம். அந்த விண்ணப்பங்களைத் தந்து நெசவாளத் தொழிலாளர்களின் சார்பாக இதை அவசரச்சட்டத்தின் மூலமாக நீங்கள் நிறைவேற்றவேண்டுமென்று சொல்லிக்கூட, கடந்த நான்கு மாத கால இடைவெளியில், ஆட்சி கலைக்கப்பட்டதற்கு பின்னால் ஆங்காங்கே பொதுக்கூட்டங்களிலே அதன் வாயிலாக எடுத்துச் சொல்லி, நெசவாளத் தொழிலாளர்களின் ஊர்வலங்களை விட்டு உண்மையான நியாயமான கோஷங்களை வெளிக்காட்டி, முழக்கங்களை வெளிப்படுத்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை சந்தித்து, நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு சட்டத்தை உடனடியாக அவசர சட்டத்தின் வாயிலாக கொண்டுவர வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி ஆகிய தொழிலாளர் இயக்கத்தின் மீது பற்று பாசம் வைத்திருக்கக் கூடிய அனைத்து இயக்கங்களும் அன்றைக்கு இந்த கஷ்டங்களை எடுத்து வைத்ததை நாம் மறந்திருக்க நியாயம் இல்லை.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கூட நாம் மகஜர் வாயிலாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அன்றைக்கு இல்லாத சட்டம், ஆளுநர் ஆட்சியில் கொண்டு வரப்படாத ஒரு சட்டம், பன்னப்பன்னி கேட்டபோதும் கேளாத காதினராக அன்றைக்கு புறக்கணிக்கப்பட்ட ஒரு சட்டம் இன்றைக்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னால் லட்சோப லட்சம் நெசவாளர் குடும்பங்களின் சார்பாக அந்த சட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூன் விழுந்த முதுகோடு, குழி விழுந்த கண்களோடு, ஒட்டிய கன்னங்களோடு, உலர்ந்த ஈரப் பசை இல்லாத உதடுகளோடு, எக்ஸ்ரே கருவிக்கு தேவை

[[திரு. ஆர். மணிமாறன்] [1981 மே 12

யில்லாமல் மார்பிலே இருக்கிற எலும்புகளை படம் பிடித்து காட்டுகிற அளவிற்கு வறுமைக்கோட்டின் கடைசி கட்டத்திலே நின்று கொண்டிருக்கிற நெசவாளர்களை, அவர்கள் இன்றைக்கு உயர்த்தப்பட்டு விட்டோம் என்ற தன்னம்பிக்கையில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. கனவிலோ அல்லது கற்பனையிலோ அவர்களது வாழ்க்கை உயர்த்தப்படும், பாதுகாக்கப்படும் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, 3½ லட்சம் நெசவாளர்கள் எல்லாம் கனவிலே அல்லாது எண்ண ஓட்டத்திலே வரக்கூடிய நடைமுறை சாத்தியக்கூறுகளை, இந்த அரசினுடைய முயற்சிகளை எண்ணி எண்ணி வரவேற்கிறேன் என்பதைச் சொல்லி இந்த சட்டத்தை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர வர்களே, தமிழ் நாடு கைத்தறி நெசவாளர்கள், வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும் என்ற சட்டமுன்வடிவில் பேசுவதற்கான வாய்ப்பினை நல்கிய எங்களது புரட்சித் தலைவருக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களை கூற விழைகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை இந்த நூலிலே எந்தளவு சிக்கல் இருக்கிறதோ, அந்த அளவு சிக்கல் வாய்ந்த வாழ்க்கையை நெசவாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று தமிழகத்திலே ஏற்பட்ட ஒரு சங்கடமான சூழ்நிலையில் சொன்னார்கள். அந்த மாதிரி சங்கடமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற நெசவாளர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த அனைத்து பெருமக்களும் பயனடையக்கூடிய இந்த சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிற மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை நான் மனமார பாராட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை

[மாலை 4-50]

தொழிலாளர் நலத் துறையில் பல நல்ல காரியங்களை ஆற்றி வரும் நம்முடைய அமைச்சர் அவர்கள் நெசவாளர்களுக்கும் நன்மை பயக்க வேண்டுமென்ற முறையிலே ஒரு நல்ல எண்ணத்தோடு இந்த சட்ட முன் வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டமுன் வடிவிலே குறுந்தலைப்பின் கீழ் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் இந்த அரசு அறிக்கையின் மூலம் வரையறுக்கும் நாளிலிருந்து செயலுக்கு வரும்; வெவ்வேறு பகுதிகளுக்கும், இச்சட்டத்தின் வெவ்வேறு விதித் துறைகளுக்கும் வெவ்வேறு நாட்களை வரையறுக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் வெவ்வேறு நாட்களிலே வெவ்வேறு பகுதிகளிலே இதை அமலுக்குக் கொண்டு வரலாம் என்ற முறையிலே இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருப்பதன் மூலமாக வெவ்வேறு நாட்களில் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது, இந்தச் சட்டத்தை ஒவ்வொரு

பகுதிக்கும் வெவ்வேறு நாட்களில் அமலுக்குக் கொண்டுவரலாம் என்று கொண்டுவந்தால் அந்த அந்தப் பகுதியிலே உள்ள முதலாளிகள் தவறாக இதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். அது மட்டுமல்ல, நோட்டிபைடு டேட் என்பது தமிழகமெங்கும் ஒரே தேதியிலிருந்து அமலுக்கு வர வேண்டுமென்ற முறையிலே இதை திருத்தியமைக்கும்படி நான் தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களைக் கேட்டு கொள் கிறேன். இந்த லைசன்ஸ் வழங்குகின்ற முறை பற்றி சட்டமுன் வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. லைசென்ஸைப் பெறுவ தற்கும் அதைப் புதுப்பிப்பதற்கும் வரைமுறைகள் தரப்பட்டி ருக்கின்றன. நடைமுறையில் லைசென்ஸ் பெறுகின்ற எந்த முதலாளியும் சாதாரண கட்டணத்தைக் கட்டி விட்டு லைசென்ஸ் பெறலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கு மாற்று யோசனை ஒன்றை நான் தொழிலாளர் நலத் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். லைசென்ஸ் பெறுகின்ற முதலாளியினுடைய போட்டோவை அல்லது அந்த பங்குதாரருடைய போட்டோவை லைசென்சிலே ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் ஏதேனும் ஒரு காரணத்தினால் அந்த முதலாளி அந்தத் தொழிலை மூடுகிற நேரத்திலே அந்தத் தொழி லாளர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லைசென்சை தன்னுடைய மகன் பெயரிலோ அல்லது சொந்தக்காரர் பெயரிலோ மாற்றி ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கும்; அந்த முறையை எப்படித் தடுத்தால் நலமாக இருக்கும் என்பதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன். இந்தச் சட்ட முன்வடிவிலே பெரும்பாலும் மாதச் சம்பளம் வாங்குகிற ஒரு தொழிலாளிக்கு கொடுக்கப்படுகிற சம்பளம், மற்றச் சலுகைகள், காரியங்களும் வழங்கப்படுகின்ற முறையிலே இந்தச் சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நெசவாளி உற்பத்தி செய்கின்ற உருப்படிகளின் அடிப் படையிலே அவர்களுக்கு கூலி வழங்கப்படுகிறது. எனவே உற்பத்தி அடிப்படையிலே கூலி வழங்கப்படுகின்ற முறையிலே—மாதச் சம்பளத்திலே உள்ள அந்த அடிப்படையிலே அல்ல—இந்தச் சட்ட முன்வடிவை மாற்றி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நெசவாளி எவ்வளவு உருப்படிகள் தயாரிக்கிறாரோ அதற்கு எவ்வளவு ஊதியம் தோராயமாக கிடைக்குமோ அதைப் பார்த்து அந்த அடிப்படையிலே கிடைக்கு மாறு செய்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்ஸ்ட் எய்டு பற்றி, சுகாதாரத் தேவைகள் பற்றி தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களைச் செய்திருக்கிறார்கள். தொழிலாளர் நலச் சட்டங்களின் பலன்கள் அனைத்தும் சாதாரண நெசவாளிகளுக்கும் கிடைக்க வேண்டுமென்ற முறையிலே செய்திருக்கிறார்கள். ஒரே ஒரு யோசனையை மட்டும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்று கருதுகிறேன். சாதாரணமாக கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்திலே காமன் குட் பண்ட், பொது நல

நிதி என்று இருக்கிறது. அந்த நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு எப்படி ஈட்டுறுதி மருத்துவ மனைகள் கட்டித்தரப்பட்டிருக்கின்றனவோ அதைப் போன்று நெசவுத் தொழிலாளர்களுக்கும் அவர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் மருத்துவ மனைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் அந்தத் தொழில் செய்கிற நெசவாளிகளை அதிகமாகப் பாதிப்பது டி.பி. ஆகும். திரு. சண்முகம் அவர்கள் கூறியதைப் போல் அவ்வாறு மருத்துவ மனைகளை ஏற்படுத்தி, மொபைல் யூனிட்டுகளை ஏற்படுத்தி அது போன்ற பகுதிகளுக்கு எல்லாம் சென்று மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதைக் கூட இந்தச் சட்ட முன்வடிவில் உள்ள நல்ல குறிக்கோள்களை வரவேற்கிறேன். இவைகளை நல்லமுறையிலே செயல்படுத்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. கு. ஓமனி : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, நீண்ட நாட்களாகத் தமிழகத்தில் கைத்தறி நெசவாளர் மக்கள் எதிர்பார்த்திருந்த, அவர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டு வந்து முன் வைத்திருக்கின்ற இந்த அரசையும், அரசின் சார்பில் கொண்டு வந்திருக்கின்ற அமைச்சரவர்களையும் நாங்கள் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இது எல்லாவிதமான குறைகளையும் தீர்த்து விட்டது என்று ஒரே யடியாக இன்றைக்கு நாம் பேசிக்கொண்டிருக்க வேண்டிய அவசிய மில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்; தெரியும், மற்றவர்களுக்கும் தெரியும்.

இந்தச் சட்டத்தை, மற்றச் சட்டங்களைப் போல அல்லாமல் பல்வேறு தொழிலாளர்களுக்கு அனுகூலமான சட்டங்களினுடைய சக்திகளையெல்லாம் எடுத்து அவற்றை இந்தச் சட்டத்திலே பயன்படுத்தி கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுப் பதற்கான வழிகளைச் செய்துள்ள ஒரு முக்கியமான அமைப்பாக இந்தச் சட்டம் ஏற்பட்டுள்ளது.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே, இந்தச் சட்டம் இந்தக் கூட்டத்திலேயே கொண்டு வரப்படுமா அல்லது கொண்டு வராமல் போய்விடுவார்களா என்று கூட நான் கேட்டதுண்டு. ஏனென்றால் நாளாகிக் கொண்டிருந்தது. அப்பொழுது சொன்னார்கள், இந்தச் சட்டத்திலே எல்லாவித மான பாதுகாப்புக்களையும், எந்தவிதமான ஊனமும் செய்ய முடியாத அளவிற்கு பாதுகாப்புகளைப் போடுவதற்குச் சகல முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறேன், கொஞ்சம் தாமத மானாலும் சட்டம் வந்துவிடும் என்று சொன்னார்கள். அப்படிப் பட்ட அம்சங்களெல்லாம் இந்தச் சட்டத்திலே ஓரளவுக்கு இருக்கிறது.

1981 மே 12] (திரு. கு. ரமணி)

இதிலே முக்கியமான அம்சங்கள் என்று எடுத்துக் கொண்டு பார்க்கலாம். ஊதியம், வேலைப் பாதுகாப்பு, பணி நிலைமைகள் போன்றவைகளில் இன்றைக்குக் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு பாதுகாப்பும் இல்லை என்பது தெளிவான ஒரு விஷயம். மாஸ்டர் வீவர்களாலும், இடைத்தரகர்களாலும் கொடுமையாகச் சுரண்டப்பட்டவர்கள் அவர்கள். அது இன்றைக்கு நாடு முழுவதும் ஒத்துக்கொள்ளும் விஷயமாகும். சுமார் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்களில்—இரண்டரை இலட்சம் பேர் கூட்டுறவிலே இருப்பவர்கள் போக, வெளியிலே இருப்பவர்கள் எல்லா விதத்திலேயும் இந்தக் கட்டாயச் சுரண்டலுக்கு ஆட்படுகிறார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் பல கோடிக்கணக்கிலே செலவு செய்து கூட்டுறவில் இருக்கின்றவர்கள் உட்பட அவர்களைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மில் தொழில், இன்னும் மற்ற முதலாளிகளோடு எதிர்த்து நின்று போராடுவதற்குக் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்துத்தான் இந்தக் கைத்தறித் தொழிலை நாம் நிலைநிறுத்தி வைத்திருக்கிறோம். 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஜனங்கள் கொண்ட இந்தத் தொழில் மூலம் வாழக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு தருகிறோம். நீண்ட நாட்களாக இந்தச் சட்டத்திற்காகத் தொழிலாளர்கள் போராடி இருக்கிறார்கள். எப்படி இந்த அரசையும், அமைச்சரவர்களையும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காகப் பாராட்டுகிறோமோ அதேபோன்று இந்தமாதிரி சட்டம் வேண்டுமென்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சிறை புகுந்தது உண்டு; அடிபட்டது உண்டு; பல கஷ்டங்களுக்கு ஆளானதும் உண்டு. அவ்வளவு தியாகங்களை ஒரு பக்கத்தில் அவர்களும் செய்திருக்கிறார்கள். அதையெல்லாம் சேர்த்துக்கொண்டுதான் இன்று இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு நல்ல சட்டமாக நமக்கு முன்னால் வந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, தொழிற்சாலை சட்டத்தில் இருக்கின்ற பல அதிகாரங்களும் இதில் பயன்படுத்தப்படும் அளவிற்கு இணைக்கப்பட்டுள்ளது.

சம்பளப் பட்டுவாடாச் சட்டம், மத்தியச் சட்டம் 1936 என்ற அந்தச் சட்டத்தில் உள்ள பல்வேறு அம்சங்களும் இணைந்து இதில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தொழிற்சாலை வேலை நிலைமைகள் சட்டம் Standing Orders Act, 1946 என்ற அந்தச் சட்டத்தில் இருக்கும் பல அம்சங்களும் இதற்கும் பொருந்தும்படி செய்து பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

மகப்பேறு உதவிச் சட்டம் Maternity Benefits Act, 1961 என்ற அந்தச் சட்டத்தில் உள்ள பல அம்சங்களும் இதில் சேர்க்கப்பட்டு இந்தச் சட்டத்திற்கு ஒரு சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது.

தொழில் தகராறு சட்டம் 1947-ல் உள்ள பல அம்சங்களும் இந்தச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டு, அதையும் பயன்படுத்தும் அளவில் உள்ளது.

இப்படிப் பல மூலச் சட்டங்களான நான்கைந்து பெரிய சட்டங்களில் இருக்கும் அம்சங்கள் இந்தச் சட்டத்தைப் பலப் படுத்தி உருவகப்படுத்தியிருப்பது நமக்குத் தெரிகிறது.

இந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்த வேண்டிய அடுத்த கட்டத்திற்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. தொழிற்சங்கங்களின் பலமான இயக்கமும், அரசாங்கத்தின் பக்க பலமும் கொண்டு இதை அமலுக்குக் கொண்டு வர வேண்டும்.

ஒரு நெசவுத் தொழிலாளி, ஒருவரிடத்தில் வேலை செய் கிறார் என்றால், அதற்காக அவர்களைப் பதிவு செய்து கொள் வது என்பது மிகவும் முக்கியமானதாகும்.

(மாலை 5-00)

அது இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு கடமை எனக்கிருக் கிறது. இதிலே, தொழிலாளிகள் மூன்று விதமாக வருகிறார்கள். 'இன்டிபென்டன்ட் வீவர்ஸ்'—சுதந்திரமான தொழிலாளர்கள் வருகிறார்கள்; பிறகு 'மாஸ்ட்டர் வீவர்ஸ்' போன்ற மற்றவர் களிடம் பொருள்களை வாங்கி வந்து தங்கள் வீட்டிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் வருகிறார்கள்; பிறகு, தொழிற் சாலை வளாகத்துக்குள்ளே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் இதிலே வருகிறார்கள். இந்த மூன்று விதத்திலிருக்கிற தொழிலாளி களைத் தனித்தனியாக, தொழிற்சாலைகளிலே எப்படி செயல் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்று பார்த்து, அது போல் திட்டவட்டமாகப் பதிந்து அதற்கு அடையாளமாக, அவர்களுக்கு அடையாளச் சீட்டோ, அட்டையோ, புஸ்தகமோ, எதுவோ, அவர்களுக்கு வழங்கப்பட்டு, உத்தரவாதம் அளிக்க வேண்டும். இல்லாவிட்டால், அதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முதலாளிகள் முயற்சி செய்வார்கள். அதேமாதிரியாக முதலாளிகளை பதிவு செய்து கொள்ள வேண்டும். ஃபாக்டரியில் இருக்கிற முதலாளிகள் என்றால் பதிவு இருக்க வேண்டும். அது இல்லாமல் தப்பிக்கும் படியான நிலைமைகள் வரும். உதாரணமாக, சிறு குரூப்புகளாகப் பிரித்துக் கொண்டு, 10 பேர்கள் இருப்பதை, 2 பேர், 3 பேர்களாக ஆக்கித் தொழிலாளிகளைப் பிரித்து விடுகிறார்கள். அப்படிப் பட்டப் பிரிவினைக்கு இடம் அளிக்கக் கூடாது. அதே மாதிரி பெயர் மாற்றம் செய்து, ஏதாவது செய்ய முயற்சி எடுப்பார்கள். அதற்கு இடம் அளிக்கக்கூடாது. அப்படிப்பட்ட முறையில் முதலாளிகள் இத்தொழிலில் ஏமாற்று வேலைகளில் ஈடுபடு வார்கள். அவர்களையும் இதில் பதிவு செய்வது என்பது, இந்தச் சட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கிற பாது காப்பைப் பலப்படுத்த அவசியமாகும்.

1981 மே 12] (திரு. கு. ரமணி)

அதே மாதிரி வீட்டுத் தறிக்காரர்கள், ஃபாக்டரி தறிக்காரர்கள், சுதந்திரமான தறிக்காரர்கள் இவர்கள் எல்லோரையும் அப்படிப்பட்ட முறையிலே ஒரு பதிவின் மூலம் உத்தரவாதம் செய்து விட்டால் முதலாளிகளுடைய மற்ற எந்தத் தந்திரங்களும் பலிக்கமுடியாதபடி இந்தச் சட்டத்தினுடைய முழு அம்சங்களையும் பயன்படுத்த முடியும்.

அதே மாதிரி சிலர் சொல்வார்கள், நான் நூல் விற்கிறேன், அவன் சுதந்திரமாக வாங்கிப் போய்விட்டான். துணியை உற்பத்தி பண்ணி, எனக்குக் கொண்டு வந்து கொடுத்தான். நான் அதைச் சுதந்திரமாக விலைக்கு வாங்கி விட்டேன் என்று சொல்லக் கூடிய ஏமாற்று வித்தைகளுக்கு இடம் கொடுக்காமல், தொழிலாளர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளையும் அதற்கான வழி வகைகளை செய்து கொடுக்க வேண்டும். ஏனென்றால், பீடித் தொழிலாளர்கள் வாழ்க்கையில் தப்பு என்ன நடந்தது என்பது நம்முடைய அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கும் நாம் அதிலே இருக்கிற குறைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம்.

அவைகளுக்கு மேல் ஒரு முக்கியமான விஷயம். இந்தச் சட்டத்திலே அவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான என்ன வருமானம் கொடுக்க வேண்டுமென்று வரையறுக்கக்கூடிய பிரிவு இல்லை. இது எல்லாவிதமான பாதுகாப்பும் கொடுக்கக்கூடிய ஒரு சட்டமாக உருவாகி இருக்கிறது. இப்பொழுது அவர்களுக்கு சிலபல முறைகளிலே ஊதியம் கிடைக்கிறது. பிறகு, ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டிய ஒரு ஏற்பாட்டை அதில் செய்தாக வேண்டும். அவர்களுடைய வேலை, அதில் இருக்கும்படியான திறமை, அதில் என்ன, என்ன அம்சங்கள் இருக்கிறதோ, அதையெல்லாம் கணக்கெடுத்துக் கொண்டு நிச்சயமாக அரசாங்கம் அதைச் செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வளவு காரியங்களையும் செய்து விட்டு, நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் இளையபெருமாள் சொன்னது போல், ரூ. 300 கூட குறைந்தபட்ச சம்பளம் கைத்தறி நெசவாளர்களுக்குக் கிடைக்கவில்லையென்றால், அவர் எப்படி குடும்பத்தோடு வாழ முடியும்? குடும்பத்தோடு வாழக்கூடிய கைத்தறி நெசவாளி, ரூ. 300 சம்பளத்தைக் கொண்டு வாழ முடியாது. ஆகவே, நியாயமான ஊதியத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு நடவடிக்கையை நிச்சயமாக அரசு முன்னுக்கு வந்து, இந்தச் சட்டத்திற்கு மகுடம் வைக்கிற மாதிரி, அமுலுக்குக் கொண்டு வந்து, தொழிலாளர்களுக்குத் திருப்தி ஏற்படும் முறையிலே, அவர்கள் கூலி நிர்ணயித்ததிற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டியிருக்கிறது.

மற்றொரு விஷயம், ஏற்கனவே சொல்லப்பட்ட விஷயமாக இருந்தாலுங்கூட, அதிலே ஒரு சின்ன திருத்தத்தை நாங்கள் பிரேரேபித்திருக்கிறோம். அந்தத் திருத்தம் என்னவென்றால், விதி 1-லே, 3-வது உட்பிரிவிலே நாம் என்ன சொல்கிறோம்

என்றால், தமிழகம் முழுவதும் பின்னால் ஒரு தேதியில், அரசு பிரகடனப்படுத்தும்போதுதான் அந்தச் சட்டமே தமிழகத்திலே அமுலுக்கு வரும் என்று இல்லாமல், ஒரே நாளில் இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது என்று மாற்றுவது மிகமிக அவசியமாகும். பின்னாலே சில குறிப்பிட்ட ஏரியாக்களைப்பற்றி, சில விதிகளைப் பற்றி,ஏதாவது, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், இந்தச் சட்டம் அரசு பிரகடனப்படுத்துகிறபொழுதுதான் அமுலுக்கு வரும் என்றில்லாமல், இந்தச் சட்டத்திலேயே நிர்ணயிப்பதுடன் சட்டம் தமிழகம் முழுவதும் அமலுக்கு வரும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். அந்த நடவடிக்கையை எடுத்துவிட்டால், நிச்சயமாக கைத்தறி நெசவாளர்கள் இதுகாறும் அனுபவித்த பல துன்பங்களுக்கெல்லாம், கொஞ்சம் சமாதானம் கிடைக்கும் முறையில் கட்டாயச் சுரண்டலை எதிர்த்து நின்று போராடுவதற்கு அவர்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல அனுபவமாக இந்தச் சட்டம் அமையும். அப்படிப்பட்ட முறையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றி அமுலாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கூலி விஷயத்தில் காலம் தாழ்த்தாமல் சீக்கிரத்தில் அதற்கும் ஒரு முடிவு காண அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கூறிக்கொண்டு இந்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பரிபூரணமாக வரவேற்று அமருகிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற கைத்தறி நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்தை வரவேற்று, ஆட்சிக் கட்சியின் சார்பில், ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரித்துக் கொள்கிறேன். செய்யும் தொழிலை சீர்தூக்கிப் பார்த்தால், நெய்யும் தொழிலே தலை என்ற வளளுவர் கூறினார். நாடு சுதந்திரம் அடைந்து ஏறத்தாழ 34 ஆண்டுகள் ஆகின்றன. இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வந்தும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை அவர்களுடைய நிலையை அவர்கள் மறந்துவிட்டார்கள். 1977 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பின்னர்தான், கைத்தறி நெசவாளர் நிலைமை என்ன என்பதை சீர்தூக்கிப் பார்க்க ஆரம்பித்தார்கள். 1958 ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளாகள் வாழ்வில் இருள் கவ்வியது. நெருக்கடி ஏற்பட்டது. அன்றைய தினம் அவர்கள் பஞ்சம், பட்டினியால் பாதிக்கப்பட்டார்கள். 1954 ஆம் ஆண்டு, அன்றைய அரசு தமிழகம் எங்கும் கஞ்சித் தொட்டிகளைத் திறந்தார்கள். 1957 ஆம் ஆண்டு நம்முடைய மானம் காக்கின்ற துணியை துணியை நெய்கின்ற கைத்தறி நெசவாளர்கள் இல்லங்களிலே அணைத்து கிடக்கின்ற அடுப்பை எறிப்பதற்காக கைத்தறி துணிகளை அணியவேண்டும் என்று தமிழக மக்களின் உள்ளங்களில் உணர்ச்சியை ஏற்படுத்தினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறித் துணியை தோளில் சுமந்து கொண்டு தெருத் தெரு

வாகச் சென்று கைத்தறித் துணியை விற்று அவர்களுக்குப் புதிய வாழ்வைத் தேடித் தந்தார்கள். இன்றைக்கு நாடு சுதந்திரம் அடைந்து 34 ஆண்டுகள் ஆகியும், 1977 ஆம் 1977 ஆம் ஆண்டில் புரட்சி தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர்தான் அவர்களின் வாழ்க்கையை சீர்தூக்கிப் பார்த்து, கைத்தறித் தொழிலாளர்களுக்கு என்று தனி அமைச்சரை நியமித்தார்கள். இன்றையதினம் வேறு எந்த ஆட்சியிலும் கைத்தறி துறைக்கென்ற தனியாக ஒரு அமைச்சரைப் போட்டதாக வரலாற்றில் காண முடியவில்லை. நம்முடைய தமிழக முதல்வர் புரட்சி தலைவர்தான் கைத்தறித் தொழிலாளர்களின் நிலையை, அவர்களுடைய நிலையை உணர்ந்து, அவர்கள் வாழ்க்கையை மேம்பாடடையச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன், ஒரு தனி அமைச்சரை நியமித்திருக்கிறார்கள்.

சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் கைத்தறி மேம்பாட்டுக்காக ஒரு குழுவை அமைத்திருந்தார்கள். தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அந்தக் குழுவிற்குத் தலைவராக இருந்தார். நானும் அந்தக் குழுவில் ஒரு உறுப்பினனாக இருந்து தமிழ்நாடு பூராவும் மூலை முடுக்கு எல்லாம் சென்று இந்தக் கைத்தறி தொழிலில் ஈடுபட்டிருக்கிற பல்வேறு ரகங்களை துணிகளை நெய்கின்ற நெசவாளத் தோழர்களை எல்லாம் சந்தித்து அவர்களுடைய சாட்சியங்களை எல்லாம் பதிவு செய்து அந்தக் குழுவின் கூட்டம் 1980 ஆண்டு பிப்ரவரி திங்கள் சிதம்பரத்தில் கூடுகிற நேரத்தில், நள்ளிரவில் ஆட்சி கலைக்கப்பட்டது, யாரோ ஒரு கயவன் சொன்னான். நள்ளிரவில் சுதந்திரம் வந்ததால் இன்னும் விடியவே இல்லை என்று. அதைப் போல நள்ளிரவில் இந்த ஆட்சி கலைக்கப்பட்டது. ஏழை வாழ்வு விடியவே இல்லை, ஏழைகள் வாழ்வில் ஏற்றம் பெறவில்லை. அப்படி இந்த ஆட்சியைக் கலைத்த பின்னர் நாங்கள் நேரில் சென்னைக்கு வந்து, சட்டமன்றச் செயலளரைப் பார்த்து இந்தக் குழுவின் கூட்டத்தைக் கூட்டச் சொன்னபோது அவர் இந்த சட்டமன்றத்தைக் கலைத்து விட்டார்கள் இனி மேல் இந்தக் குழுவைக் கூட்ட முடியாது என்று சட்ட நுணுக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். இருந்த போதிலும் மீண்டும் இந்த சட்டத்தை புரட்சித் தலைவர் அவர்களே கொண்டு வந்து இந்த கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையைப் பொற்காலமாக ஆக்கவேண்டும் என்று, தமிழக மக்கள் மீண்டும் இந்த அரசைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.

நமது மாண்புமிகு எதிர்கட்சி நண்பர்கள் இந்த அரசுக்கு எத்தனையோ நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள் 'என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய் நன்றி கொன்ற மகர்க்கு' என்பதைபோல இந்த அரசுக்கு அவர்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களும் இதை வரவேற்க வேண்டும். காரணம் 450 நாட்கள் ஒருவன் தொடர்ந்து தற்காலிகமாக வேலை செய்தால்:அவன் 6 ஆண்டுகள்: 10 ஆண்டுகளாக என். எம். ஆர். அப்ரன்டிசாக இருந்து தொழிலாளிகள் உழைப்பை வாங்கி முதலாளிகள் கொழுக்கின்ற நேரத்தில், 450 நாட்கள் அந்தத் தொழிலாளி வேலை செய்தால் அவர் நிரந்தரமாக ஆக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டத்தை இந்த அரசுதான் கொண்டுவந்தது.

[மாலை 5-10]

இது தொழிலாளி வர்க்கத்திற்கு புரட்சித் தலைவர் அரசு அறிவித்த 'மே தினப் பரிசு' அல்லவா? இதை நம்முடைய எதிர்க் கட்சி மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்று, இந்த அரசுக்கு நன்றி செலுத்த வேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தற்காலிகமாக சட்ட விரோதமாக வேலை நீக்கம் ஒருவரை ஒரு முதலாளி செய்து விட்டால் அவர் 90 நாட்களுக்கு மேல் அப்படி வேலை நீக்கம் செய்யப் பட்ட நிலையில் இருந்தால் 50% ஊதியம் தர வேண்டும் என்றும், 120 நாட்களுக்கு மேல் இருந்தால் 75% ஊதியம் தர வேண்டும் என்றும், 180 நாட்களுக்கு மேல் இருந்தால் முழுச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் சட்டம் கொண்டு வந்து இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது. இந்தச் சட்டத்தையும் கைத்தறி நெசவாளர்களுக்குப் பொருந்தும் வகையில் இந்தத் தமிழக அரசு கொண்டு வந்து இருக்கிறது. சுதந்திரம் அடைந்த இந்த 34 ஆண்டுகளில் எத்தனையோ தொழிலாளர் நல அமைச்சர் கள் இருந்து இருக்கிறார்கள். அந்த தொழிலாளர் நல அமைச்சர்களுக்கு எல்லாம் இல்லாத ஒரு பெருமை, இந்த தொழிலாளர் நல அமைச்சருக்குத்தான் இருக்கிறது. அவர் களுக்கு எல்லாம் இல்லாத பூரிப்பு மாண்புமிகு தற்போதைய தொழிலாளர் நல அமைச்சருக்குத்தான் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தன்னுடைய வாழ்நாளை ஒரு தொழிற்சங்க வாதியாக ஆரம்பித்தார்கள். தொழிற்சங்க வாதியாக இருந்த காரணத்தால், இந்த நாட்டில் உள்ள தொழிலாளர்களின் உண்மையான நாடியைப் பிடித்துப் பார்த்து அறிந்து இருக்கின்ற காரணத்தால், அந்தத் தொழி லாளர்களின் கஷ்ட நஷ்டங்களை அறிந்து உணர்ந்துள்ள காரணத் தால், அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறை வேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே: இந்த மசோதா மீது 10 உறுப் பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைச் சொன்னார்கள், பேசிய எல்லா உறுப்பினர்களுமே சட்டத்தை மிக நன்றாகத் துருவித் துருவித் படித்துப் பார்த்து, பாராட்ட வேண்டிய அளவில் பாராட்டினார்கள். இந்தச் சட்டமன்றத்திலே நான் அடிக்கடி குறைபட்டுக்கொண்டு இருந்தது உண்டு. நாங்கள்

எவ்வளவோ நல்லச் சட்டங்களை எல்லாம் கொண்டு வந்து நிறைவேற்றுகிறோமே. ஒரு வார்த்தைப் பாராட்டக்கூடாதா என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே நான் சொன்னேன். இப்போது அந்தக் குறையை நீக்கும் அளவில் நிரம்பப் பாராட்டினார்கள். இது தான் புரட்சித் தலைவர் அரசு, இதற்குத்தான் புரட்சி என்று பொருள்.

புரட்சித் தலைவர் அரசு என்று நான் சொல்வது எனக்கு கிடைத்த தகவல்படி , யாரும், எந்த அரசும் இதுவரையில் கொண்டு வராத, கொண்டு வருவதற்கு மிகவும் சிரமமான ஒரு சட்டத்தை, கைத்தறி நெசவுத் தொழில் செய்பவர்களின் நன்மைக்காக இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது என்பது சாமான்யமானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக்கொண்டு வர வேண்டும், கொண்டு வர வேண்டும் என்று இங்கே பேசியபோது எல்லாம் நிச்சயமாக நாங்கள் இந்தச் சட்டத்தைக்கொண்டு வருவோம் என்று சொல்லி, இதிலே உள்ள பல சிக்கல்களை எடுத்துச் சொல்லி, இந்த சட்டம் வந்தால் அதிலே அதிகமான அளவில் ஓட்டைகள் இல்லாமல், வகுனா இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு நாங்கள் சற்று காலதாமதம் செய்தாலும், கட்டாயமாக கொண்டு வருவோம் என்று சொன்னேன். சொல்லியபடி இப்போது கொண்டு வந்து இருக்கிறோம். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் புரட்சித் தலைவர் ஆட்சியின் அந்த மகுடத்தில் ஒரு புதிய முத்து வைத்ததுபோல் இது விளங்குகிறது என்பதை நான் மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் பாராட்டினார்கள். பாராட்டுகின்ற நேரத்தில் கொஞ்சம் பொடி வைத்துப் பாராட்டியவர் மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள்தான். அவர் பேசும் போது தான், அடிக்கடி காலதாமதம் ஆனாலும் கொண்டு வந்து விட்டீர்கள் மகிழ்ச்சி என்று காலதாமதம் ஆனதை அடிக்கடி சொல்லிக் காட்டினார்கள்,

அப்படி காலதாமதம் ஏற்பட்டதற்குக் காரணமே, அவர் தான் என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மணிமாறன் அவர்கள் பேசும்போதும், மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போதும் எடுத்துச் சொன்னார்கள். முன்பே நாங்கள் இந்தச் சட்ட முன்வடிவை இந்தச் சட்டமன்றத்தின் முன்பு கொண்டு வந்து அறிமுகப்படுத்தி, அதை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு விட்டு, தமிழகம் பூராவும் அந்தக் கமிட்டி சுற்றிப் பார்த்து, கருத்துக்களை அறிந்து, எல்லா இடங்களிலும் சாட்சியம் பெற்று, அந்தச் சட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கக்கூடிய நேரத்தில் எக்காரணமும் காட்டாமல். ஷோகாஸ் நோட்டீஸ் கொடுக்காமல், எக்ஸ்பிளனேஷன் கேட்காமல், திடிரென்று இந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்து

விட்டார்கள். இந்த அரசை டிஸ்மிஸ் செய்தவர்களுக்கே எதற்காக டிஸ்மிஸ் செய்தார்கள் என்று தெரியவில்லை. எங்களுக்கும் இன்னும் தெரியவில்லை. அவர்களுக்கும் தெரியவில்லை என்றாலும் மக்களுக்குத் தெரிந்து விட்டது. அப்படி டிஸ்மிஸ் செய்தது தவறு என்று. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையே மீண்டும் இந்த நாட்டின் முதலமைச்சராக வர வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களை தேர்ந்தெடுத்து, அவரே மீண்டும் இந்த சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறார்கள், அந்த இடைவெளியில் ஏற்பட்ட மாற்றம் தான், இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வந்து நிறைவேற்ற காலதாமதம் ஆகிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பாராட்டியவர்கள் எல்லாம், குறிப்பாக திரு. ரமணி அவர்கள் நன்றாகப் படித்து விட்டு எல்லாவற்றையும் தெளிவாகச் சொன்னார்கள். திரு. நெடுமாறன் அவர்கள் அதிகமாக கிளாஸ் 35-ன் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் இவ்வளவு ஆழமாகப் படித்து விட்டு, அதிகமாக குறை சொல்லாமல் இனிமேல் இந்தச் சட்டத்தை ஒழுங்காக செயல்படுத்த வேண்டும் என்று சொல்லி, அவர்களுடைய பாராட்டுக்களைப் பெறுவதற்காகத்தான் அதிக காலத்தை செலவாக்கி, உருவாக்கியிருக்கிறோம்.

இந்த நேரத்தில் அந்த கூட்டுக் குழுவிலே இருந்த, ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியிலே இருந்த உறுப்பினர்களுக்கும், சட்டத் துறைக்கும், இராஜா சுப்பிரமணியம் அவர்களுக்கும், கமிஷனர் அவர்களுக்கும் மற்றும் இந்தத் துறையிலே இருக்கிற செயலாளர், துணைச் செயலாளர்களுக்கும், இதில் சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் அரசின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இந்தச் சட்டம் கொண்டுவருவது அவ்வளவு சிரமமானது என்பதை அனைவரும் ஒப்பு கொண்டிருக்கிறீர்கள். இது ஒரு முன்னோடி. இதைப் பார்த்து தான் இந்தியாவிலே வேறு எங்கு வேண்டுமானாலும் கொண்டு வர வேண்டும். அந்த அளவுக்கு ஒரு நல்ல சட்டத்தை புரட்சித் தலைவர் அரசு கொண்டுவந்திருக்கிறது என்பதிலே நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கூலியை (வேஜஸ்) பற்றிச் சொன்னார்கள். இந்தச் சட்டத்திலே கூலி நிர்ணயிக்கப் படவில்லை என்பது தெரியும். ஆனால் சர்வீஸ் கண்டிஷன், வேலை நிலைமைகளைபற்றிச் சொல்லும்போது கூலி நிர்ணயம் செய்யாமல் போனால் அவ்வளவு சரியாக இருக்காது என்ற காரணத்தால்தான் 20-4-1981 அன்றே, சென்ற மாதம் 20-ந்தேதியே இரண்டு குழுக்கள்அமைத்து விட்டோம். ஹான்ட்லூம்ஸ், பட்டுநூல்லூம்ஸ் இரண்டுக்கும் தனித்தனியாக குழுக்கள் அமைத்து, குறைந்த பட்சம் கூலி நிர்ணயம் செய்ய அந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இந்தச் சட்டம்நிறைவேற்றப்பட்டு, செயல்முறைக்கு வருவதற்குள் இன்னும் 5,6 மாதங்களுக்குள் அந்த ஊதிய நிர்ணயம் பற்றிய

பரிந்துரையும் வந்து செயல்பட ஆரம்பித்துவிடும் என்பதால் கைத்தறி நெசவாளர்கள் நல்ல பலன்களை அடைந்து, அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று கருதுகிறேன். இதற்கு எல்லாத் தொழிற்சங்கங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

கைத்தறித் தொழிலாளர்களுக்கு எங்கெங்கே சங்கம் இல்லையோ அங்கே எல்லாம் சங்கங்களை ஆரம்பித்து-யார் ஆரம்பிக்கிறார்கள் என்றல்ல, யாராக இருந்தாலும் ஆரம்பித்து இந்தச் சட்டத்தை செயல் படுத்துவதிலே அவர்கள் அக்கரை காட்டினால் எங்காவது ஓட்டைகள் இருந்தால் அதை எடுத்துச் சொன்னால் எங்கெல்லாம் மாஸ்டர் வீவர்ஸ், முதலாளிகள் இந்தச் சட்டத்தை மீறுகிறார்களோ அதை எடுத்துச் சொன்னால் அவைகளுக்கு உரிய முறையிலே நடவடிக்கை எடுத்து, நல்ல முறையில் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்த வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரமணி அவர்கள் சொல்லும்போது 6 இலட்சம் குடும்பங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஆக 6 இன்ட் 4 என்ற முறையிலே சாதாரணமாக ஒரு குடும்பத்திற்கு 5 என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்: ஆகையால் 6 இன்ட் 5 என்று சொல்ல வேண்டுமென்றாலும் சயின்டிஃபிக்காக 6 இன்ட் 4 என்று சொல்வது வழக்கம்-24 அல்லது 25 இலட்சம் பேர்கள் பலன் பெறும் வகையில் இந்தச் சட்டம் செயல்பட வேண்டுமென்றால் எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் இதிலே கட்சி வேறுபாடு இல்லாமல் ஒத்துழைக்க வேண்டும். எங்கெங்கே முதலாளிகள் தவறு செய்கிறார்கள், எங்கெங்கே சட்டத்தைச் செயல்படுத்த மறுக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொல்லி, எப்படி எல்லாம் இன்னும் இந்தச் சட்டத்தை மாற்றியமைத்தால் நன்றாக இருக்கும் என்பதற்கான ஆலோசனைகளை எல்லாம் சொல்வதாக இருந்தால் நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டவனாக இருப்பேன்.

இந்த அரசு டிஸ்மிஸ் ஆகியிருந்தபோது கூட, திரு. மணிமாறன் அவர்கள் சொன்னதைப்போல இதை ஒரு அவசரச் சட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று ஆளுநரைக் கேட்டோம்: முடியவில்லை. எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதிலே இந்த அரசு அக்கரையோடு இருந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் மனதிலே கொள்ளப்பட்டு, இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். அதே நேரத்தில் இதை செயல்படுத்துவதற்காக அதிக அதிகாரிகள் இன்னும் தேவை என்றுதான் இந்த அரசு கருதுகிறது. அந்த வகையிலே அதிகமான அதிகாரிகளைப் போட்டு செயல்படுத்துவதற்கு ஃபைனான்ஸ் டிபார்ட்மென்ட், மற்ற இலாக்காக்களை கலந்து, மேலும் தொழிலாளர் நலத்

துறையில் அதிக அதிகாரிகள் தேவை என்றால் அதைப்பற்றியும் பரிசீலனை செய்து, கொண்டு வந்திருக்கிற சட்டத்தை முழுமையாக தொழிலாளர்களுக்கு பயன்படுத்த இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்,

இங்கே ஒரு திருத்தம் என்ற முறையில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் நினைப்பதைப்போல தனித்தனியாக அங்கங்கே செயல்படுத்த மாட்டோம். அது ஒரு 'எனேபிளிங் மெஷர்' தான். தஞ்சை மாவட்டத்தில் ஒரு டைம் நேரத்திலும், அதிலிருந்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் கழித்து திருச்சி மாவட்டத்திலும் என்று செயல்படுத்துவோம் என்று யாரும் கருத வேண்டாம். சட்டத்தைச் செயல்படுத்தும்போது தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் செயல்படுத்த இந்த அரசு முயற்சி செய்யும். எனேபிலிங் மெஷர்ஸ் என்பது,

Apprentice Act 1961
Beedi and Cigars Act 1961
Employees Insurance Act
Shops and Establishments Act 1948

இப்படி எல்லாவற்றிலும் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைப்பதைப் போல ஒரு பகுதியில் செயல்படுத்தி சிறிது நாட்கள் கழித்து வேறொரு பகுதியிலே சில மாதங்கள் கழித்து இன்னொரு பகுதியிலே அமுல் படுத்தப்படும் என்ற முறையில் இருக்காது.

[மாலை 5-20]

ஆகவே இது ஒரு இன்ஸ்டிரக்ஷன் என்ற முறையிலே அங்கே அந்த க்ளாஸ் இருக்குமே தவிர செயல்படுகின்றபோது எல்லோரும் பயன்" அடையும் வகையிலேதான் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக 4, 56 என்ற பிரிவுகளை நன்றாக உணர்ந்து தெரிந்துகொண்டு தொழிற்சங்கம் நடத்தக்கூடியவர்கள் அதைச் செயல்படுத்துவதற்காக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த இரண்டு பிரிவும் தொழிலாளர், முதலாளி என்ற ரிலேஷன்ஷிப்பை உண்டுபண்ணுகின்றது. அதாவது மாஸ்டர் அன்ட் சர்வன்ட்: இதுவரையில் இருந்த நிலை என்னவென்றால் நாங்கள் நூலைக் கொடுத்துவிடுகிறோம், அவர்கள் எடுத்துக்கொண்டு போகிறார்கள், அவர்களுடைய வீட்டிலே வைத்து நெய்து கொண்டு வருகின்றார்கள். ஆகவே அவர்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்று முதலாளிகள் சொல்கின்ற நிலை இருந்தது.

ஆனால் இந்தப் பிரிவுகளின்படி இனிமேல் அந்த மாஸ்டர், சர்வன்ட் என்ற அந்தத் தொடர்பு உண்டு என்பதை இங்கே நிலைநாட்டி இருக்கிறோம். ஆகவே இந்த 4 ம், 56 ம் மிக மிக முக்கியமான பிரிவுகள். இந்த சட்டத்தின் சிறப்பு அம்சமே இவைதான். ஆகவே இனிமேல் வேலை விட்டு நீக்குவது போன்றவை நடக்காது.

அடுத்து இவர்கள் வேலை செய்யக்கூடிய நேரம் 8 மணி நேரம் என்பது இல்லையே என்பது பற்றி கேட்டார்கள். அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இங்கே ஓர்க்கர் அன்ட் எம்ப்ளாயர் என்ற முறையிலே வந்துவிடுகின்ற காரணத்தால் எல்லா சலுகைகளையும் அவர்கள் பெறக்கூடிய முறை ஏற்படுகின்றது.

பிரிவு 22 (2)-ன்படி அவர்களுக்கு வாரத்திற்கு ஒருநாள் ஊதியத்தோடு கூடிய விடுமுறை கொடுக்கப்படுகின்றது. மற்ற ஃபேக்டரியிலே கூட இந்த முறை கிடையாது. இங்கே ஊதியத்தோடு கூடிய வார விடுமுறை தர வேண்டும் என்று இந்தப் பிரிவின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

அடுத்து பிரிவு 19-ன்படி அவர்களுக்கு ஓவர் டைம் உண்டு. அதாவது அதிகநேரம் வேலை செய்தால் அதற்கு ஊதியம் உண்டு. அடுத்து தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் குறைந்த பட்சம் 9 நாட்கள். நான்கு நாட்கள் தேசிய விடுமுறை, 5 நாட்கள் பண்டிகை விடுமுறை அவர்களுக்கு கிடைக்கும். ஊதியத்துடன் ஆண்டு விடுப்புகள் உண்டு. ஒவ்வொரு 20 நாட்களுக்கும் ஒரு நாள் என்று கணக்கிட்டு அவர்களுக்கு 14 அல்லது 15 நாட்கள் லீவு உண்டு. ஃபேக்டரிகளிலே கூட 240 நாட்கள் ஒரு ஆண்டிலே வேலை செய்தால் 20 நாட்களுக்கு ஒருநாள் அடுத்த ஆண்டிலே எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கின்றது. ஆனால் இங்கே வேலை செய்த ஒவ்வொரு 20 நாட்களுக்கும் ஒருநாள் லீவு உண்டு என்ற சிறப்பான அம்சம் இருக்கின்றது.

அடுத்து குடும்பநல அறுவை சிகிச்சை செய்துகொள்ளக் கூடியவர்களுக்கு ஆண்களாக இருந்தால் 6 நாட்களும், பெண்களாக இருந்தால் 14 நாட்களும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு தரப் படும்.

அடுத்து பிரிவு 35. அதை எடுத்து மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னார்கள். வேலை நிறைவு பெற்ற பொருட்களில் குறைபாடுகள் உள்ளது என்று தொழிலதிபர்கள் கருதினால் அந்தக் குறைபாடுகளையும் அதற்கான காரணங் களையும் எழுத்து மூலம் கொடுத்தாலன்றி ஊதியத்தைக் குறைப்பதோ, ஊதியத்தைச் சுருக்கி வழங்குவதோ தொழில் தகராறுகளை உண்டாக்கும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. லே ஆஃப் செய்துவிட்டால் உடனே தொழில் தகராறு என்று கருதி லே ஆஃப் செய்யப்பட்ட காலத்திற்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கின்ற அதிகாரமும் கொடுக்கப்பட் டிருக்கின்றது.

அடுத்து பிரிவு 47. இது மிக மிக முக்கியமானது. இதிலே வீட்டு வசதி, மருத்துவ வசதி போன்றவற்றை நிர்ணயிப்பதற்கான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே இப்படிப் பட்ட விதிமுறைகளைத் தயாரித்து மிக அக்கறையோடு அந்தத் தொழிலாளர்களுக்கு பலன் கிடைக்கக்கூடிய அளவிலே இந்த அரசு செயல்படும் என்று சொல்லி இந்த மசோதாவை வரவேற்ற எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு இதை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித் துறைகளும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு—2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரே நாளிலே அமல்படுத்தப்படும் என்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து உறுதிமொழி வந்ததன் அடிப்படையிலே நான் கொடுத்த திருத்தத்தைத் திரும்பப்பெற்றுக் கொள்கிறேன்.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 முதல் 57 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு—1

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி மொழி அளித்திருப்பதின் காரணமாக என்னுடைய திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 மே 12]

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் என்னுடைய திருத்தத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்.

திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

உ. குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1981 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன்வடிவினை நான் இந்த நேரத்திலே தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். காரணம் ஏற்கெனவே தொழிலாளர் நல மானியக் கோரிக்கையின் மீது எடுத்து வைக்கப் பட்ட விவாதத்திலே நான் பேசுகிற வாய்ப்பு பெற்ற நேரத்திலே, ஒரு கருத்தினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். பவர் லூம் சம்பந்தமாக கொடுக்கப்பட்ட அவார்டிலே, அந்த முத்தரப்பு கமிட்டியிலே ஒருவர் இடம்பெறவில்லை என்ற காரணத்தால், சென்னை உயர்நீதி மன்றத்திற்கு நிர்வாகத்தின் தரப்பிலே கொண்டு செல்லப்பட்டு, அந்த தீர்ப்பினை மாற்றுகிற முறையாக, அந்த தீர்ப்பை செயல்படுத்த முடியாத அளவிற்கு ஆக்கப் பட்டதை நினைவுகூர்ந்து, அதை தீர்ப்பதற்காக உடனடியாக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை நாங்கள் எல்லாம் கேட்டோம்.

*1981ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்] [1981 மே 12

அனைத்துக் கட்சியிலும் உள்ள, தொழிற்சங்கத் தலைவர்களாக செயல்படும் மாண்புமிகு உறுப்பினர்கள் — அருமை சகோதரர்கள் எல்லோரும், அந்த விவாதத்திலே கலந்துக் கொண்டார்கள். அந்த வகையிலே குறைந்தபட்ச ஊதியத்தை சீரமைக்க, ஒருங்கிணைக்க முறைப்படுத்த ஒரு வாரியமோ, குழுவோ அமைக்கப்படுகிறபோது, அந்தக் குழுவிலே யாராவது ஒருவர் இடம் காலியாக இருக்கும் பட்சத்தில், அல்லது அந்த உறுப்பினர் இல்லாத சூழ்நிலையில், ஒரு தீர்ப்பு தொழிலாளர்களுக்கு ஆதரவாக வருமேயானால், அந்தக் காரணத்தைக் காட்டி, உயர்நீதி மன்றத்திற்குப் போய், அந்தத் தீர்ப்பே அடிப்பட்டு விடக் கூடாது என்ற முறையிலே, இந்தக் குறைந்தபட்ச ஊதிய சட்ட முன்வடிவிலே, அப்படி நீதிமன்றத்திற்குப் போகக் கூடாது என்ற அளவிலே; தொழிலாளர்களுக்கு நன்மைதரும் முறையிலே கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தச் சட்ட முன்வடிவினை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

[மாலை 5-30]

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது அவை முன் வைக்கப்பட்டிருக்கிற 1981-ம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. ஏற்கனவே பல ஆலோசனைக் குழுக்கள் போடப்பட்டு அதன் அடிப்படையில் ஏதாவது தீர்மானங்களைக் கொண்டு வந்தால் அதற்கு ஏதாவது காரணத்தைச் சொல்லி ஹைகோர்ட் அல்லது சுப்ரீம்கோர்ட்டுக்குப் போய் அந்தச் சட்டத்தைப் பற்றி பரிசீலனை செய்கிறபோது எங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை, அவர்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்று சொல்லி அதன் அடிப்படையில் இந்தச் சட்டம் சட்டப்படி செல்லுபடியாகாது என்று வாதாடி நாட்கள் நீட்டிக்கப்பட்டு கடைசியில் அந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு வரக்கூடிய அபாயம் பல நேரங்களில் இருந்திருக்கிறது. அது நம்மை நேரடியாக வந்து பாதித்தது. சென்ற தடவை பவர் லூம் தொழிலாளர்கள் நலனைப் பாதுகாப்பதற்காக போடப்பட்ட குறைந்தபட்ச ஊதியக் குழு பல்வேறு சிரமங்களை ஏற்று கடைசியாக ஒரு குறைந்தபட்ச ஊதியத்திற்கான சிபார்சினை கூறியபோது மாஸ்டர்வீவர்ஸ், எங்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கவில்லை என்று ஹைக்கோர்ட் போய், அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்று காரணம் காட்டி, அதன் அடிப்படையில் அந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்று சொல்லப்பட்டது. ஆக, கஷ்டப்பட்டுக்கொண்டு வந்த சட்டம் அப்படியே நின்றுவிட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் பலன் கிடைக்காமல் போய் விடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சி. ஐ. டி. யு. வின் சார்பிலும் வரவேற்று அமர்கிறேன்.

1981 மே 12]

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-ம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற ஏ.ஐ.டி.யு.சி. சங்கம் சார்பாகவும் வரவேற்கும் நேரத்தில் பல நேரங்களில் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய குழுக்களில் எங்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி அமைச்சரவை அல்லது அரசாங்கம் அறிவிக்கக்கூடிய அறிவிப்புக்களை அமல்நடத்தவிடாமல் சில நேரங்களில் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று அந்த சட்டங்கள் செல்லுபடியாகாத அளவிற்கு தீர்ப்புகள் வாங்கிக் கொண்டு வந்து பல நேரங்களில் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காத அளவிற்கு நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அந்த ஒரு சிக்கலைப் போக்கக்கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தச் சட்டம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது மட்டுமல்ல, எதிர்காலத்தில் 'அன் ஆர்கனைஸ்ட் செக்டார்ஸ்'-ல் உள்ள தொழிலாளர்களுக்கெல்லாம் அரசாங்கம் அறிவிக்கக்கூடிய சலுகைகள் எல்லாம் கிடைக்கும் முறையில் இந்த சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதை நான் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு வரவேண்டியதன் காரணத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1971 ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்காக, அதில் மூன்று பேர்கள் தொழில் அதிபர்களின் சார்பாக, மூன்று பேர்கள் தொழிலாளர்கள் சார்பாக என்று ஆறு பேர்கள், இருவருக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதாக, இருந்தார்கள். முதலாளிகள் சார்பாக இருந்த இரண்டு பேர்களில் ஒருவர் இறந்துவிட்டார், ஒருவர் கூட்டத்திற்கு வராத காரணத்தால் அவர் பதவி இழந்துவிட்டார். பிறகு மூன்றாவது உறுப்பினர் சில நாட்கள் கழித்து அவர்களு' அந்தக் குழுவிலிருந்து விலகவேண்டிய நிலை வந்துவிட்டது. அதற்குப் பதிலாக ஸென்சுவரி ப்ளவர் மில்ஸைச் சேர்ந்தவர் செகரட்டரிக்குப் பதிலாக பர்ஸனல் ஆபீஸர் அவர்களைப் போட்டார்கள். அந்த பெர்ஸனல் ஆபீஸர் தானே விலகிவிட்டதாக அவர்கள் ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டார். ஆனால் மறுபடியும் பல கூட்டங்கள் நடந்தன. அவருக்கு அழைப்பு அனுப்பிக் கொண்டிருந்தார்கள், அந்தக் குழு தலைவர். அந்த இடத்தை வேறு ஒருவர் பூர்த்தி செய்யாமல்—31-5-75ல் அவர் விலகினார். ஆனால் மறுபடியும் குழு கூடி தொழிலாளர்கள் சார்பாக மூன்று பேர்கள், தொழில் அதிபர்கள் சார்பாக இரண்டு பேர்கள் இருந்து பல கூட்டங்கள் நடத்தி 30-10-75ல் பரிந்துரை வழங்கினார்கள். அரசு அதை ஏற்று அறிவித்தது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆனால், குறைந்தபட்ச ஊதிய நிர்ணயச் சட்டத்திலே பிரிவு 9-லே ஈகுவல் ரெப்ரசென்டேஷன் அதாவது சமமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். இதில் 3 பேர்கள் என்றால், அதில் 3 பேர்கள். தொழிலாளர்கள் 2 பேர்கள் என்றால், முதலாளிகள் 2 பேர்கள்; தொழிலாளர்கள் 3 பேர்கள் என்றால், முதலாளிகள் 3 பேர்கள் என்று ஈகுவலாக இருக்கவேண்டும். ஆனால் பல கூட்டங்களில் அப்படியில்லாமல், 3 தொழில ளர்கள் என்றால், 2 தொழில் அதிபர்கள் என்று இருந்த காரணத்தினால் இந்த குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்தது செல்லாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்தது. அந்த அளவிலே நாம் அதை ஏற்றுக் கொண்டால் விளைவுகள் என்ன ஆகும்? நாம் கஷ்டப்பட்டு, ஏழைத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதற்காக சில தொழில்களை ஷெடியூலில் சேர்த்து, அதற்குப் பிறகு, குழு அமைத்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரையைப் பார்த்து, ஆராய்ந்து அதை வெளியிட்டு அமுல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தாலும், அதை சரியாக அமுல்படுத்துவதில்லை தொழில் அதிபர்கள் பல பேர்கள். பல குறைகளைக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். ஆனால், தொழில் அதிபர்கள் பிரதிநிதி ஒருவர் வராமல் இருந்தால், வேண்டுமென்றே வராமல் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அதற்குப் பதிலாக இன்னொருவரை நியமிக்கிறோம். அவரும் வராமல் இருக்கிறார். அப்படி வராமல், வேண்டுமென்றே இந்த குறைந்த பட்ச கூலி நிர்ணயத்தை நடைமுறையில் செய்ய முடியாத காரியங்களை அவர்களால் செய்ய முடியும். எனவேதான், இந்த 9-ஏ திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை அனைவரும் வரவேற்றதற்காக நான் நன்றி தெரிவித்து, இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1981-ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1981" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

1981 மே 12] [மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்]

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, "1981-ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1981" நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஊ) விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு 1981. மற்றும்

(எ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு விற்பனைவரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்த சட்டமும் இந்தச் சட்ட முன்வடிவைப் போன்றே இருக்கின்ற காரணத்தினால் அதையும், நான் மொழிந்து விடுகிறேன். உறுப்பினர்கள் இரண்டிலும் பேசி தங்கள் கருத்தை தெரிவிக்கலாம்.

தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 47/1981), தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்

* 1981ம் ஆண்டு மே மாதம் 11ம தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

@ 1981ம் ஆண்டு மே மாதம் 11ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

வடிவு எண் 48/1981 ஆகியவைகளை நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன்னாலே வைக்க விரும்புகிறேன். பொதுவாக, வணிக வரி என்பது நான் அன்றைக்குச் சொன்னது போல், மூதறிஞர் இராஜாஜி அவர்களாலே தமிழகத்தில் மதுவிலக்கு அமுல் செய்யப்பட்ட காலத்திலே, அதனால் ஏற்பட்ட இழப்பைச் சரிக்கட்டுவதற்காக கொண்டுவரப்பட்டது வணிக வரியாகும். இந்த வணிகவரி இன்றைக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, பல்வேறு கிளைகளாகப் பிரிந்து எங்கெங்கும் நிறைந்திருக்கிற பரம்பொருளாக விரிந்திருக்கிறது. ஒவ்வொரு அமைச்சர் அவையும் வருகின்றபோது, வணிக வரியைப் பொறுப்பேற்கும் அமைச்சர்கள் தங்கள் தங்கள் பங்காக கொஞ்சம் கொஞ்சமாக பல்வேறு இனங்களில் வணிக வரியை உயர்த்திக் கொண்டு வந்திருப்பதை இந்த மாமன்றம்

[மாலை 5—40]

கண்டிருக்கிறது. பழமொழி சொல்வார்களே, வாங்கிப் பழகிய கை, போட்டு பழகிய பை, சொல்லிப் பழகிய—நான் சொல்லவில்லை அது 'அன்பார்லிமென்ட்ரி' என்று சொல்லி விடுவார்கள். உண்மைக்கு மாறான என்று சொல்லி,—உயர்த்தி பழகிய வணிக வரி என்ற புதுமொழியையும் சேர்த்துக் கொள்ளலாம் போல இருக்கிறது. கொஞ்சம், கொஞ்சமாக வணிக வரியை பல்வேறு கட்டங்களில் உயர்த்தி வருவதை நாம் பார்க்கிறோம்.

1981—82 நிதி நிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையிலே 49-ம் பக்கத்திலே 67-வது பாராவிலே பல ஆண்டு காலமாக சென்னை மாநகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாமல் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது, மாநகராட்சி எல்லைக்குள் பல வசதிகளை மேம்படுத்துவதற்காக அண்மையில் உலக வங்கியினுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. கூடுதலான பொறுப்புகளை சமாளிக்க, நிலையான வழியில் மாநகராட்சிக்கு உதவிகள் செய்வது அவசியமாகிறது. ஆகவே, தற்போது சென்னை மாநகராட்சி எல்லையிலும், சென்னை மாநகராட்சிக்கு சுற்றி 32 கிலோ மீட்டர் பகுதியிலும் இருக்கக் கூடிய பகுதிகளில் விதிக்கப்படும் விற்பனை வரியில் மேல்வரியும், தற்போதுள்ள 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. கிடைக்கும் கூடுதல் வரியிலிருந்து கணிசமான பகுதி மாநகராட்சிக்கு ஒதுக்கப்படும். இந்த மாற்றங்களுக்கான சட்ட வரைவு இக்கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். ஆக இன்றையதினம் சென்னை மாநகராட்சிக்கு செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகளுக்காக, சென்னை நகரை சுற்றியிருக்கிற நகரப்பகுதிகளுக்கு வணிகம் செய்கிற அந்த வணிகப் பொருள்களுக்கான கூடுதல் மேல்வரி விதிக்கப்படுகிறது, என்று இந்த சபைக்கு சொல்லி, சபையினுடைய ஒப்புதலை வாங்கிவிட்டு, ஆனால் இன்றைய

தினம் காரண நோக்க விளக்கத்தை பார்க்கிற நேரத்திலே அது தமிழகம் முழுமைக்கும் என்ற முறையிலே அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். காரண நோக்க விளக்கத்திலே இந்த மசோதாவிலே சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டிலே நிதியாதாரங்களைப் பெருக்குவதற்காக விற்பனை வரி மீது கூடுதல் மேல்வரி அரசு முடிவு செய்துள்ளது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது நிதிநிலையில் ஒன்றைச் சொல்லிவிட்டு, சென்னை மாநகரத்திற்கு மட்டும்தான் என்று மசோதாவிலே கொண்டு வந்து, அதை இங்கேயிருக்கிற உறுப்பினர்கள் சரியாக படிக்கிறார்களா, இல்லையா என்று, வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல, தமிழகம் முழுமைக்கும் அதை விரிவாக்கம் செய்வது என்ன நியாயம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இந்த மசோதாவின் மூலமாக தமிழக மக்களை இந்த அரசு ஏமாற்ற விரும்புகிறதா? திசைத் திருப்ப விரும்புகிதா? என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், அன்றையதினம் சென்னை மாநகரத்திற்கு மட்டும் தான் வருகிறது என்று சொல்லி ஏதோ சென்னை நகரத்திலே வளர்ச்சிப் பணிகளுக்காக இதைக் கொண்டுவருகிறோம் என்று சொன்ன நேரத்திலே நாங்கள் நினைத்தோம், சென்னை நகரத்திற்கு மட்டும் என்று சொல்லி விட்டு, சென்னையைச் சுற்றி 32 கிலோ மீட்டர் தூரத்திற்கு என்று ஏன் போடுவானேன்? சென்னை நகரத்திலே இருக்கிற மக்களுக்கு மட்டும் அதைப் போட்டிருக்கலாமே; சென்னை நகரத்திலே நாள்தோறும் வந்து போகிற பல லட்சக்கணக்கான மக்களை பாதிக்கிற அளவிலே இந்த வரியை ஏன் போடவேண்டும் என்று நினைத்த நேரத்திலே, இப்போது அதனுடைய எல்லை தமிழகம் முழுவதும் என்று விரிவடைந்திருக்கிறது. சென்னை மட்டுமல்லாத திருச்சி, மதுரை, கோவை, சேலம், இன்னும் தமிழகத்தில் இருக்கிற 32 'ஏ' கிரேடு முனிசிபாலிட்டிகளுக்கும், இது பொருந்தும் என்று நான் கருதுகிறேன். அமைச்சரவர்கள் வேண்டுமானால் சொல்லலாம், நாங்கள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்கிறோம், ஆனால் சென்னை மாநகரத்தை சுற்றி மட்டும் போடலாம் என்று சொல்லலாம். ஆனால் இந்த மசோதாவில் இருக்கிற நிலைகளை பார்க்கிற நேரத்திலே தமிழகம் முழுமைக்கும் ஏதோ நம்முடைய அமைச்சருடைய பணியாக அதை அதிகமாக போட்டிருக்கிறார்கள். மதுவிலக்கை தளர்த்து கிறோம் என்று பெயராலே மதுக்கடைகளை திறக்க தயாராக இருக்கிறீர்கள், நீங்கள் எதிர்பார்க்கிறதை விட பல லட்சக் கணக்கான பணம் இந்த அரசுக்கு வரவிருக்கிறது. ஏழை, எளிய மக்களுடைய, நடுத்தர மக்களுடைய வயிற்றிலே அடித்து கோடிக்கணக்கான பணம் வரவிருக்கிறது. அப்புறம் என்ன காரணத்திற்காக இந்த வரி, கொஞ்சம் தாராள மனப்பான்மை யுடன் இந்த சில்லறை வரிகள் எல்லாம் வேண்டாம் என்று பெருந்தன்மையுடன் இருக்கலாமே. ஆகவே எந்தெந்த இனங்களில் வரியை பெறலாமோ, அந்தந்த வழிகளிலே எல்லாம் பெறலாம் என்று தான் இந்த அரசாங்கம் இந்த மசோதாவை கொண்டுவருகிறது.

அதுமட்டுமல்ல இப்படி மேல் வரியை உயர்த்துவதாலே நிச்சயமாக விலைவாசி உயரும். கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டே போகும். அதனால் ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள். இவ்வாறு கொஞ்சம், கொஞ்சமாக கூட்டுவதாலே நாம் எதிர்பார்க்கிற இனங்களிலே வரி வருவதை விட, வரியை பலர் தவிர்ப்பதற்கான முறைகள் வளர்வதற்கு வாய்ப்புகள் இருக்கிறது என்பதை நான்குறிப்பிட விரும்பு கிறேன். அதுமட்டுமல்ல இந்த அரசாங்கம் அன்றைக்கு பெட் ரோலிலே 5 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக வணிக வரியை உயர்த்தியிருக்கிறது; டீசலில் 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக வணிகவரியை உயர்த்தியிருக்கிறது. டீசலை உயர்த்துகிற காரணத் தினால், இன்றையதினம் லாரிகள் மூலமாக பொருள்கள் எல்லாம் ஒரு இடத்திலிருந்து, இன்னொரு இடத்திற்கு கொண்டு போகப் படுகிறது. அதனால், பொருள்கள் விலை மறைமுகமாக கூடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எல்லாவற்றையும் விட இன்றைய தினம் விவசாய பெருமக்கள், வறட்சியான நேரத்தில் பாசனம் செய்வதற்கு, கிணற்றிலிருந்து நீர் இறைப்பதற்கு ஆயில் என்ஜின்களை பயன்படுத்துகிறார்கள். டீசல் விலை உயர்த்தி யிருக்கிற காரணத்தால் விவசாய பெருமக்களும் பாதிக்கப்படுகிற ஒரு நிலை இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோதாவிலே புதிய இனங்களிலே வரி போடப்படுவதாக தெரிகிறது. உதாரணமாக 160வது இனத்திலே எம்பயர் துணி, ஸ்லீவ்ஸ் என்று 10 சதவீதம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான அறிவிப்பு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட வில்லை. நிதிநிலை அறிக்கையில் சொல்லப்படாத புதிய இனத்தின் மீது வரிப் போடப்பட்டு இந்த மசோதா வந்திருக் கிறது. அதைப் போன்றே 91 வது இனத்திலே சோடா, கலருக்கு எல்லாம் 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக வரி உயர்த்தப்படு கிறது. ஆகவே பணக்காரர்களை மட்டுமல்ல, ஏழை எளியவர் களையும் நடுத்தர மக்களையும் கொஞ்சம் மறைமுகமாக தாக்குகிற வரியாக இருக்கிறது. ஆகவே நான் முன்பே சொன்னதைப் போல் இந்த இனங்களில் வரியை வசூல் செய்யாது மறு பரிசீலனை செய்ய வேண்டும். வேறு இனங்களில் வரி வசூலிக்கின்ற நிலைமையில் கூடுதலாக வருமானம் வருகின்ற காரணத்தினால் இதுபோன்ற இனங்களில் வரிவேண்டியதில்லை என்பதைச் சொல்லி இதை மறுபரிசீலனை செய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் எதிர்க் கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு விற்பனைவரித் திருத்தச் சட்ட முன்வடிவையும் விற்பனைவரி மேல்வரி திருத்தச் சட்ட முன்வடிவையும் பற்றி பேசுவதற்கு இங்கே வாய்ப்பு அளித்த வருவாய்த்துறை அமைச்சர் அவர் களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விற்பனை வரிச் சட்டத்திலே சில நடைமுறைச் சங்கடங்கள்

இருக்கின்றன, விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பணியாற்றுகின்ற அலுவலர்களைப் பொறுத்த வரையில் அசெஸ்மெண்ட் செய்வதற்கும் ஒரே அதிகாரி, வசூல் செய்வதற்கும் ஒரே அதிகாரி என்று இருக்கிறார்கள். வசூல் செய்வதற்கு ஒருவரும், கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்கு ஒருவரும் என்ற முறையிலே தனித்தனியாக இரண்டு இலாக்களாகப் பிரித்துக் கொடுத்து தனித்தனி அதிகாரிகளை நியமித்து அதன் மூலமாக அரசு வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

அடுத்தப்படியாக நம்முடைய மாநிலத்திலே தொழில் செய்து வருகின்ற மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ராஜஸ்தானைச் சேர்ந்த பகுதிகளிலிருந்து இங்கே வந்து ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள் தங்களுடைய தொழில்களைச் செய்து நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டிய வரிபாக்கிகளைக் கொடுக்காமல் அவர்கள் தங்களுடைய சொந்த மாநிலத்திற்குச் சென்று விடுகிறார்கள். அவர்கள் தங்களுடைய மகன் அல்லது சொந்தக்காரர்கள் பெயரிலே தங்கள் தொழில்களை நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் வெளிமாநிலத்திற்கு வரி பாக்கியைக் கட்டாமல் சென்று விட்டதால் கோடிக்கணக்கான ரூபாய் நம்முடைய மாநிலத்திற்கு பாக்கியிருக்கிறது. அந்த வரிப் பாக்கிகளை வசூலிப்பதற்காக என்போர்ஸ்மென்ட் விங் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு கூடுதலாக அதிகாரங்கள் வழங்கப்படுவதன் மூலமாக அவர்கள் தங்கள் பணிகளை செம்மையாகச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலதிபர்கள் லைசென்ஸ் வாங்குகிறபோது ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை பெற்றுக்கொண்டு அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படுகிறது. அதோடு அவர்கள் அல்லது பங்குதாரர்களுடைய போட்டோவை லைசென்ஸிலே ஒட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கும் உத்திரவிட்டால் அந்தத் தொழிலதிபர்கள் வேறு மாநிலங்களுக்கு செல்வதை வரி ஏய்ப்பதைத் தடுக்க முடியும். மற்ற மாநிலங்களிலிருந்து இங்கே தொழில் செய்ய வருகின்றவர்கள், மகாராட்டிரத்திலேயும் ராஜஸ்தானிலும் இருந்து வருகின்றவர்கள் தங்கள் சொந்த மொழியிலேயே கணக்கு வழக்குகளை வைத்துக்கொள்கின்ற காரணத்தினாலே அவர்களுடைய கணக்கு வழக்குகளை எல்லாம் நம்முடைய அதிகாரிகள் கண்காணிக்க முடியவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. ஒரு சிலரை நம்பி அதைக் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் சில வியாபாரிகள் அந்த ஒரு சிலரை தங்கள் கைக்குள்ளே போட்டுக் கொண்டு வரியை ஏய்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்கள் அவர்களுடைய மொழியிலே கணக்கு வழக்குகளை எழுதுவதோடு, ஆங்கிலத்திலேயும் கட்டாயமாக எழுத வேண்டுமென்று உத்திரவிட்டால் அவர்களுடைய கணக்கு வழக்குகளை ஒழுங்காகக் கண்காணிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒருமுனை விற்பனை வரியை நல்ல முறையில் அமல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த வகையிலே எப்படி முடியுமோ அதை செய்வது நல்லது. மேல் வரித் திருத்தச்

சட்டம் வருவதற்கு முன்னாலேயே பத்து சதவீதத்தை பொது மக்களிடமிருந்து வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த இடைக்காலத்தில் அவர்கள் வசூல் செய்த தொகை அரசுக்குக் கிடைப்பதில்லை. அதை அந்த வியாபாரிகளே அனுபவித்துக்

[மாலை 5–50]

கொள்ளும் சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இப்படி இருக்கின்ற அந்த சட்டபூர்வம் அல்லாத வசூலை அரசு எப்படிப் பெற வேண்டுமோ அந்த வகையில் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றுகூறி, இந்தச் சட்ட முன்வடிவுகளை நான் வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம், நன்றி.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி, (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு மற்றும் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு ஆகியவைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. அது வரவேற்கவில்லை.

பொதுவாக இந்த விற்பனை வரியே மதுவிலக்குச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் என்ற நோக்கத்திற்காகத்தான் முதன் முதலாகப் போடப்பட்டது. ஆனால் இப்பொழுது மீண்டும் அந்த மதுவிலக்கு ரத்து செய்யப்படுகிறது. (குறுக்கீடு) தளர்த்தப்படுகிறது. இந்த அரசாங்கத்தினுடைய மொழியில் சொல்லபோனால், திருத்தப்படுகிறது. இந்த நேரத்தில் இப்படிக் கூடுதலாக விற்பனை வரியைச் சுமத்துவது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன். எனவே, இதை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

இதில் ஒரு கொள்கைப் பிரச்னையும் இருக்கிறது. பொது மக்களைப் பற்றி இந்த அரசாங்கத்தின் அணுகுமுறை எப்படி அமைந்திருக்கிறது என்பதுதான் இதன் எடுத்துக்காட்டாக இருக்கிறது. சுதந்திரம் அடைந்த காலத்தில் விற்பனை வரி அல்லது நேர்முக வரி, மறைமுக வரி என்பதில் அதிகம் வித்தியாசம் இருந்தது. சுதந்திரம் அடைந்த காலத்தில் நேர்முக வரி என்பது மிகவும் அதிகமாக, அதாவது கிட்டத்தட்ட 70 சதவீதம் என்றும், மறைமுக வரி என்பது கிட்டத்தட்ட 30 சதவீதம் என்றும்தான் இருந்தது. மறைமுக வரி என்பது பொதுமக்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடாது. அவர்கள் புளியோ அல்லது வேறு அத்தியாவசியப் பண்டங்களோ வாங்கும் நேரத்தில் போடப்படும் வரி இது. அதில் யாருமே தப்பிக்க முடியாது.

1981 மே 12] [திரு. ரா. கிருஷ்ணன்]

பொதுமக்கள் என்றால் மிகப் பெரும்பான்மையான பொது மக்கள் யார்? சாதாரண, ஏழை, நடுத்தர மக்கள்தான் மிகப் பெரும்பான்மையாக இருப்பவர்கள். ஆனால் நேர்முக வரி குறைந்து கொண்டே போகிறது. சமீபத்தில்கூட மறைமுகவரி 81 சதவீதமாகவும், நேர்முகவரி 19 சதவீதமாகவும் கணக்கிடப் பட்டது. ஆனால் நிலைமை என்னவென்றால், நேர்முக வரி செலுத்துபவர்கள் பெரிய வசதிக்காரர்கள், தொழிலதிபர்கள், பெரும் பெரும் வியாபாரிகள். அப்படிப்பட்டவர்கள், இன்கம்டாக்ஸ் மூலமாகச் செலுத்தும் வரி. ஆனால் வரி, குறிப்பாக மேல் தட்டிலே இருப்பவர்கள் செலுத்தும் வரி கணிசமாகக் குறைந்து கொண்டே போகிறது ஒவ்வொரு ஆண்டும்,

ஆனால் இப்பொழுது இந்த மறைமுக வரி, சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்கள் செலுத்தும் வரி கூடிக்கொண்டே போகிறது. நாலுகால் பாய்ச்சலில் கூடிக்கொண்டே போகிறது. இரண்டு மடங்கு, அதாவது 5 சதவீதம் என்பது 10 சதவீதம் என்ற அளவிற்கு உயர்த்தப்படுவது உண்மையிலேயே நியாயமல்ல. எனவே, அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டியது மிகமிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

அடுத்து இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் என்பது காமதேனு என்று வருணிக்கப்படுகிறது ஒரு மாநில அரசாங்கத்திற்கு காமதேனு என்று வருணிக்கப் படுகிறது. அப்பொழுதைக்கப்போது நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குப் பயன்படும் வரி என்றெல்லாம் வருணிக்கப் படுகிறது. மாநில அரசுக்கு ஒரேயொரு வழியாக இருக்கின்ற இப்படிப்பட்ட இந்த நிதி ஆதாரத்திற்குக் கூட இப்பொழுது ஆபத்து வந்திருக்கிறது என்று இந்த அரசு நிச்சயமாகக் கருதுகிறது. அதிலும் குறிப்பாக, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்சமீபத்தில் முதலமைச்சர்கள்மாநாட்டிலேஅது சம்பந்தமாகப் பேசப்பட்டது. இனிவரும் காலங்களில் அத்தனை விற்பனை வரிகளையும்மத்திய அரசாங்கமே ஒட்டு மொத்தமாக வசூலித்துக்கொண்டு, அதை ஏதோ பிச்சை போடுவது மாதிரி, அந்த நிதி ஆதாரத்தைக் கொடுப்போம் என்ற அளவிற்குப் பேசப்பட்டிருக்கிறது. அதை, காங்கிரஸ் அல்லாத சில அரசாங்கங்கள் எதிர்த்து இருப்பது வரவேற்கத் தக்கது. அப்படி. எதிர்க்கின்ற ஒரு முறையை இன்னும் தீவிரப்படுத்தவேண்டும்க் மத்திய அரசாங்கத்தினுடைய இப்படிப்பட்ட உணர்வைத்தடுக்க கூடிய அளவிற்கு நாம் வலியுறுத்துகின்ற அளவிற்கு இன்னும் வலுவாக நின்று, அதை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் இருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னதைப் போல, நிதிநிலை அறிக்கையில் சென்னை மாநகரம், சுற்றியிருக்கும் பகுதி மக்களுக்கு மட்டும் மேல் வரி போடப்படும் என்று சொல்லிவிட்டு, இப்பொழுது தமிழகம் பூராவும் அப்படிப்பட்ட வரியைப் போடப்போகிறோம் என்று சொல்வது நியாயம் அல்ல. பொதுவாக சென்னை மாநகரத்தைப்

பொறுத்த வரையில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். உலக வங்கியின் ஆலோசனையின்படி இப்படிப்பட்ட வரி போடப் படுகிறதா என்பதும் பெரியசந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது.

சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சி பணிகளுக்கு வேகமான நிதி ஆதாரங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக இப்படிப்பட்ட வரிகளைப் போட வேண்டுமென்று உலக வங்கி ஆலோசனை கூறியதா? உலக வங்கியிலிருந்து வரக்கூடிய ஒவ்வொரு உதவிக்கும் இப்படிப்பட்ட சாதாரண ஏழை மக்களுடைய வாழ்வு பாதிக்கக்கூடிய அளவு, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஏற்படுத்துவதற்கு இந்த உலக வங்கி ஆலோசனை கூறுகிறதா? அப்படிப்பட்ட ஆலோசனை வரக்கூடிய நேரத்தில், மாநில அரசு கடுமையாக எதிர்க்க வேண்டியதும், அது சாதாரண ஏழை மக்களைப் பாதிக்கும் என்று நாம் சொல்ல வேண்டியதும் அவசியம் என்பதை நான் கூறவிரும்புகிறேன். ஏற்கனவே இந்த அரசைப் பொறுத்தவரையில், இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு விவசாயிகளுக்கு சில சலுகைகள் கொடுத்திருக்கிறோம். சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், என்றால் ஒரு சலுகை. அதே போன்று கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வாங்கிய கடனை வசூல் செய்வதிலே சிறு விவசாயிகள், அல்லது நடுத்தர விவசாயிகள் என்று பாகுபடுத்தி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு நல்ல திட்டத்தை அமுல்படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் இன்றைக்கு எல்லா பகுதி மக்களும், குறிப்பாக பெரும்பான்மையாக இருக்கக்கூடிய ஏழை மக்கள், நடுத்தர மக்கள் பாதிக்கக்கூடிய அளவுக்கு இப்படிப்பட்ட வரிகளைப் போடுவது இந்தச் சூழ்நிலையில் சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் குறிப்பாக, மதுவிலக்கு தளர்த்தப்படுகிற இந்த நேரத்தில், இப்படிப்பட்ட வரிகள் போடாமல் இருப்பதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப் போனால் நிதி ஆதாரத்தை நிச்சயமாகப் பெருக்க முடியும். ஏற்கனவே, இன்கம்டாக்சைப் பொறுத்த வரையிலும், மற்ற டாக்ஸ்களைப் பொறுத்தவரையிலும் எவேஷன் ஏராளமாக நடக்கிறது, டாக்ஸ் எவேஷன் என்பது இன்றைக்குக் கடுமையான அளவு இருக்கிறது. அதுவும் குறிப்பாக, சில அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருப்பதையும் நாம் பார்க்கிறோம். இன்னும் சொல்லப் போனால், திருமணம் ஆகக் கூடிய நேரத்தில், பெண்ணுக்கு மாப்பிள்ளை யார் என்று சொல்கிற நேரத்தில், வரி வசூல் ஆஃபீசில் வேலை செய்கிறார் என்றால் உண்மையிலே அவர்களுக்கு விசேஷமான அந்துஸ்து இருப்பது நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமை. அதற்கு என்ன அர்த்தம்? எல்லா அதிகாரிகளும் அப்படி இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால், பெரும்பான்மையான அதிகாரிகள், குறிப்பாக, வரித்துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் என்பது உண்மை. ஆகையால், இந்தச் சூழ்நிலையில், வியாபாரிகளுக்குச் சலுகை

1981 மே 12] [திரு. ரா. கிருஷ்ணன்]

செய்வதோ அல்லது வரியை வசூல் செய்வதில் சில சலுகைகளோ, அந்தப் போக்கைக் கட்டுப்படுத்தக்கூடிய முறையில் கண்காணிக்கக் கூடிய முறையில், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு, வியாபாரிகள் கணக்குக் காட்டுவதைப் பொறுத்த வரையில், இங்கே சொல்லப்படுகிறது, 'ஏற்கனவே அவர்களது வியாபாரம் குறித்து முழுமையான முழு விவரங்களையும் காட்டும் நாளது வரையிலான உண்மையான, சரியான கணக்குகளை வைப்பது' என்று குறிக்கப்பட்டுள்ளது. அது நல்லதுதான். ஆனால், அது எங்கே அமுல்படுத்தப்படும்? அதுதான் பிரச்னை பெரும் வியாபாரிகளிடமும் அமுல்படுத்தப்படுமா? அல்லது, சாதாரண சிறு வியாபாரிகளிடமோ, அல்லது நடுத்தர வியாபாரிகளிடமோ மட்டும்தான் அமுல்படுத்தப்படுமா? நடைமுறையில் எப்படி இருக்கிறது? எல்லா வியாபாரிகளும் சரியான கணக்கு வைத்திருக்க வேண்டும். முறையாக வசூலிக்க வேண்டுமென்பதில் எந்தவித மாற்றமும் கிடையாது. அது நியாயம்தான். பெரும் பெரும் வியாபாரிகள் அதை எவேட் பண்ணக்கூடிய அளவுக்கு, ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களே, ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த அதிகாரிகள் அதன்மீது கடுமையான அக்கறை எடுத்து, அவர்களைக் கண்காணித்து முறையான வரியை வசூல் செய்வதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இங்கே குறிப்பி விரும்புகிறேன்.

அதோடு, இப்பொழுது டீசலுக்கு 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக வரி கூட்டப்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் ஏற்கனவே பல மாநிலங்களில் கூட்டப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். ஆனால், நான் சொல்ல விரும்புவது இன்றைக்கு பஸ்ஸில் பயணம் செய்பவர்களுக்கு கட்டண உயர்வு கூடாது என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், போக்குவரத்துத் துறையைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு டீசல் விலை கூடிவிட்டது, ஸ்பேர் பார்ட்ஸ் விலை கூடிவிட்டது என்றெல்லாம் சொல் கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட நேரத்தில்ஏற்கனவே சாதாரண ஏழை மக்கள் வறட்சியாலும் வேலையில்லாமையின் காரணமாகவும் மற்ற காரணங்களினாலும் வேகமாகப் பாதிக்கப்படுகிற நேரத்தில் இப்படி டீசல் விலையைக் கூட்டுவதாலே, நிச்சயமாகப் போக்கு வரத்துக் கட்டணம் கூடத்தான் செய்யும். அதைக் கூட்டாத அளவுக்குத் தடுப்பது இந்த அரசினுடைய கடமை. பஸ்ஸில் பயணம் செய்யக்கூடியவர்கள் சாதாரண மக்கள். இன்னும் கூடுதலாகக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அதனால் அவர்கள் பாதிக்கப்படுவர்கள். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்த அளவிற்கு மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பெட்ரோல், டீசல் போன்ற பொருள்களின் மீது எக்சைஸ் வரி போடுவதை தடுப்பதற்கு மாநில அரசாங்கம் முழுமையான அக்கறை செலுத்த வேண்டுமென்று கூறி முடிக்கிறேன்.

[மாலை 6.00]

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்ட முன் வடிவில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி பேசுகிறேன்.

இந்தத் திருத்தச் சட்டத்தை நான் வரவேற்பதோடு, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்களும் இந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டார்கள். மத்தியிலே இருக்கிற காங்கிரஸ் அரசு மாநில அரசாங்கங்கள் நிதி ஆதாரங்களை பெருக்குகிற முயற்சிகளிலே ஈடுபடுவதில்லை என்றும் அப்படி மாநில அரசுகள் நிதி ஆதாரங்களைப் பெருக்குகிற முயற்சியிலே ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடுவதன் மூலம்தான் அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய உதவி இல்லாமல் மாநில அரசாங்கங்களே தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்றும் மத்திய நிதி அமைச்சரகம் சொல்லுகிறது. ஆனால் இங்கே நம்முடைய அரசாங்கம், இருக்கின்ற கொஞ்சம் நிதி ஆதாரங்களைப் பலப்படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபடுகிறபோதே அப்படிப்பட்ட முயற்சியிலே நீங்கள் ஈடுபடக் கூடாது என்று சொல்லி இந்த அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடியை உண்டாக்க வேண்டும் என்கிற எண்ணத்தால் தான் அவர்கள் சொல்லுகிறார்கள் என்று நான் கருதவில்லை. இருந்தாலும் எதிர்கட்சியாக இருக்கின்ற காரணத்தால், அப்படி எதிர்க்கிறார்கள் என்று நான் கூறுகிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டபோது, பெட்ரோல், டீசல் விலை இன்று உயர்த்தப் பட்டிருப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் எக்சைஸ் வரிவிதிப்பு தான் காரணம் என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் பஸ் போக்குவரத்து லாரிபோக்குவரத்து கட்டணங்களைஉயர்த்துவது என்பது ஒரு மாநில் அரசாங்கத்தால் மட்டும் இல்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூற முடியும். மத்திய அரசாங்கம் இரும்பு விலை, மற்றும் டீசலுக்கு எக்சைஸ் போன்றவற்றைக் கூட்டியிருக்கிறது. அதைப்போல ரயில்வே கட்டணத்தை கூட்டியிருக்கிறது. இப்படி பல்வேறு விதமாக வரிகளைக் கூட்டி அதற்கான நிதி ஆதாரங் களை மாநில அரசாங்கம் மட்டும்தான் திரட்டவேண்டும், அப்படி மாநில அரசாங்கங்கள் திரட்டுகிறபோது அதை எதிர்ப் போம் என்று சொல்வது எந்த வகையில் நியாயம் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதனாலேதான் கேரளாவில் பஸ் கட்டண உயர்வு ஏற்பட்ட போது அங்கே காங்கிரஸ் கட்சி எதிர்த்துப் போராடியது. கர்நாடகத்திலேயும், ஆந்திராவிலேயும் பஸ் கட்டண உயர்வு ஏற்பட்டபோது அங்கே எதிர்க்கட்சிகள் போராடின. ஆனால்

உண்மையை எண்ணிப்பார்க்கவேண்டும், பஸ் கட்டண உயர்வு டீசல் விலை உயர்வினால் மட்டும் ஏற்படுவதில்லை. மற்றப் பொருள்களின விலை உயர்வு, சம்பளம் கட்டுபடியாகக் கூடாத மற்ற காரணங்களினாலும் இங்கே கட்டண உயர்வு ஏற்படுகிறது. அதற்கு, டீசல் இன்று அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்ட காரணத்தினாலே அதனாலே இந்த விலை உயர்வு ஏற்படுகிறது. இந்தக் கட்டண உயர்வுகள் தவிர்க்கப்பட முடியாமல் இருக்கிற காரணத்தால்தான், அப்படி இருந்தும்கூட மற்ற மாநிலங்களை விட தமிழகத்திலேதான் குறைவாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அதைப்போல மத்தியிலே இருக்கிற அரசாங்கம் விற்பனை வரியை மாநில அரசாங்கம் வசூலிப்பதை, தன்னுடைய பட்டியலுக்கு கொண்டு வந்து தானே வசூலித்து அதை மாநில அரசாங்கங்களுக்கு அளிக்கிறோம் என்று சொல்லி, மாநிலங்களில் விற்பனை வரி விதிக்கின்ற அதிகாரத்தை கூட அவர்களிடத்திலே எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை கேரளாவும், தமிழகமும், மேற்குவங்காளமும் தான் எதிர்த்திருக்கின்றன. மற்ற காங்கிரஸ் அரசாங்கங்கள் மத்திய அரசாங்கம் விற்பனை வரியை விதிக்கலாம் என்ற அளவுக்கு முன்வந்திருக்கின்றன. எனவே இப்படி மாநில அரசாங்கங்கள் நிதி ஆதாரங்களைப் பெருக்குகிற முயற்சியிலே ஈடுபடும்போது மத்திய அரசாங்கம் இன்று தன்னுடைய கரத்தை வைக்கிறதே ஒழிய, மாநில அரசாங்கத்திற்கு உதவி அளிக்கிற நிலைமையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள், சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்காக, நிதி ஆதாரத்தை பெருக்குவதற்காக, வரி வசூலிப்பதாக சொல்லிவிட்டு, இன்று நகரங்கள் அனைத்திற்குமே வரி வசூலிக்கின்ற திட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்களே என்று சொன்னார்கள். இந்த வரி விதிப்பின் மூலம மாநகராட்சிக்குத் தனியான பணத்தை நேரடியாகக் கொடுத்துவிட முடியாது. அர்பன் டெவலப்மென்டு ஃபண்டுக்குத்தான் அந்தப் பணம் சென்றுவிடும். அப்படி சென்னை மாநகரத்திற்கு மட்டும் வசூலிக்கக்கூடிய பணம், மற்ற நகராட்சிகளுக்கும் செல்லக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தினாலே எல்லா நகராட்சிகளிலும் வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த மக்களுக்குக் கிடைக்க • கூடிய ஆதாயங்களை அடிப்படையாகக் கொண்டு, அந்தப் பகுதிகளிலேயும் வரி விதிக்கின்ற வகையிலேதான் இந்த சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. எனவே இந்த சட்டத்தை வரவேற்று நான் அமர்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன்வடிவு மீதும், தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு மீதும், இந்த இரண்டு சட்டங்கள் மீதும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களைச் சொல்வதற்கு நான் விரும்புகிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1981 மே 12

இந்த இரண்டு சட்டங்களையும் அமைச்சர் அவர்கள் கொண்டு வரப்போவதாக ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்தில் நம்முடைய நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கின்றபோதே அறிவித்து இருக்கிறார்கள். சென்னை மாநகராட்சி போன்ற இடங்களில் மேல் வரி விதிப்பதற்கான சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றையதினம் அது முழுமையாகச் சட்டமாக வடிவம் பெறுகின்றபோது, இது சென்னை மாநகராட்சிக்கு மட்டுமல்ல, மற்ற நகர்புறங்களிலும் பொருந்தக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தின் மூலம் மேல் வரி விதிக்கும் அதிகாரத்தை பெறும் வகையிலே இதிலே ஷரத்துக்கள் போடப்பட்டுள்ளன. இப்படி மேல்வரி பல்வேறு இடங்களில் விதிப்பதன் மூலமாக இன்றையதினம் ஏற்கனவே உயர்ந்து இருக்கும் விலைவாசி மேலும் உயரும் என்ற காரணத்தால் இந்த மேல்வரி விதிப்பது என்பது சரியான நடைமுறையாக இருக்காது. ஆகவே, இந்த மேல்வரி விதிப்பதைக் கைவிட வேண்டும் என்று நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பத்தில் கூறப்பட்டது. இதைக் குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கொண்டு வருகிறோம் என்று கூறப்பட்டது. சென்னை மாநகராட்சியின் அபிவிருத்திப் பணிக்கு இம்மாதிரியான உபரி வரி விதிப்பது பயன்படுத்தப்படும். அபிவிருத்திக்கு நிதி தேவைப் படுவதால் இதைக்கொண்டு வருகிறோம் என்று சொல்லப் பட்டது. ஆனால் எந்த நோக்கத்திற்காகக்கொண்டு வருகிறோம் என்று குறிப்பிட்டார்களோ அந்த நோக்கத்தைக் கைவிட்டுவிட்டு முழுமையாக மக்கள் மீது ஒரு வரி பளுவை சுமத்தும் முறையில் இது தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வரிவிதிப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்பதைக் கூறவிரும்புகிறேன். இதன் காரணமாக மக்கள் மீது மேலும் சுமை அதிகமாகும் என்பதைத் தெரிவித்து இதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டத்திலே சில திருத்தங்களைக் கொண்டு வர இருப்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக இருக்கும் சில திருத்தங்கள் சம்பந்தமாக நான் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே சட்டத்தை அமல் செய்யும் முறையில் வியாபாரிகளுக்கு ஏற்படும் சிக்கல்களை நான் சட்டமன்றத்தில் பலமுறை சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறேன். பொதுவாக, இன்றையதினம் வியாபாரிகளுக்கு விற்பனை வரி அதிகாரிகளைச் சந்திக்கக் கூடிய நேரத்தில் ஒரு அச்ச உணர்வு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு ஜனநாயக அரசாங்கத்தில் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியை வசூலிப்பதில், அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்காக போடப்படுகின்ற வரிகளை வசூலிப்பதில் அரசாங்கம் எந்தவிதமான அச்ச உணர்வும் ஏற்படாத வகையில் செயல்படவேண்டும். ஆகவே, இம்மாதிரி உணர்வுகளைப் போக்கக்கூடிய முறையிலே அதற்குரிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநில மட்டத்தில்

1981 மே 12] [திரு. இரா. கருப்பையா]

மாநில அதிகாரிகள், வியாபாரிகள் கொண்ட ஆலோசனைக் குழு போட்டு, அதிலே அதிகாரிகள், வியாபாரிகள், சட்டத்தின் மூலமாக அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியை எப்படி வசூலிப்பது என்கிற நடைமுறையை வகுத்து, அதன்மூலம் வரி வசூல் முறையைக் கையாளவேண்டும் என்று இந்தச் சநதர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே 54(ஏ) பிரிவிலே ஏற்கனவே உள்ள அதிகாரத்தைவிட அதிகமான அதிகாரத்தை அரசாங்கம் அளிக்கிறது. அதாவது—''இச்சட்டத்தின் கீழ் வரி விதிக்கும் அதிகாரி அல்லது மேல் முறையீட்டு அதிகாரி அல்லது வரி வீதங்களைத் திருத்தியமைக்கும் அதிகாரி அல்லது வணிகவரி உதவி அதிகாரியின் பதவித் தரத்துக்குக் குறையாத பதவித் தரமுடைய வணிகவரிகள் துறையைச் சேர்ந்த அதிகாரி எவரும் ஒரு நபரிடம் அல்லது அதிகாரியிடம் உள்ளதும் இச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு நடவடிக்கை எடுப்பதற்குப் பயன்படுத்தக்கூடியதும் அல்லது பொருத்தமாக இருக்கக்கூடியதுமான தகவலை, விவரங்களை அல்லது பதிவேடுகளைத் தாக்கல் செய்யுமாறு ஒரு நபருக்கு அல்லது அதிகாரிக்கு எழுத்து மூலமாகக் கட்டளையிடலாம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இருக்கக்கூடிய அந்த 54(ஏ) பிரிவை அமல் செய்யக்கூடிய நேரத்தில் என்ன சிரமம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. காரணம் எங்கே இருக்கக்கூடிய அதிகாரியும், எந்த இடத்திலும் சென்று, எந்த நேரத்திலும் நடவடிக்கை எடுக்கலாம் என்பது முறையற்ற ஒரு அதிகாரம் ஆகும். அந்த வகையில் இந்த ஷரத்து அமைந்து இருக்கிறது. ஆகவே, இது தேவையில்லை என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக ஏற்கனவே அந்தந்தப் பகுதியில் அதிகாரிகள் இருக்கிறார்கள், விற்பனை வரி அதிகாரிகள் இருக்கிறார்கள். ஒரு தாலுக்கா நகரம் என்று சொன்னாலும் அதற்கு என்று தனியாக அதிகாரிகள் இருக்கிறார்கள்.

(மா. ல 6.10)

அதற்குமேல் இருக்கக்கூடிய அதிகாரிகள் இருக்கிறார்கள்; மேலதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அது மட்டுமல்ல. பிளையிங் ஸ்க்வார்டு போன்ற பல ஸ்க்வார்டுகள் இந்த வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்க இருக்கிறார்கள், ஆகவே, இந்த அளவுக்கு இருக்கக்கூடிய நேரத்தில் எந்த அதிகாரியும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் எதையும் செய்யலாம் என்ற தங்குதடையற்ற அதிகாரம் இருக்கின்ற வகையில் இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

அடுத்து, இந்த வரி விகிதங்களை மாற்றும் நோக்கத்தோடு சில வரி மாற்றங்களை இந்த சட்ட முன்வடிவில் கொண்டு வந்திருக்கிறீர்கள். குறிப்பாக 91 வது ஐட்டம் இருக்கிறது. அதிலே சிலவற்றை அறிவித்திருக்கிறீர்கள். இந்த மாநிலத்தில்

முதலில் விற்பனை வரி 5% ஆக இருந்த சில பொருட்களுக்கு இப்போது 8% ஆக உயர்த்த வேண்டுமென்று அதில் கூறியிருக்கிறீர்கள்.

அதேமாதிரி சாப்ட் டிரிங்க்ஸ், பானங்கள் இருக்கின்றன. சோடா, கலர் பானங்கள் எல்லாம் சாதாரணமாக எல்லோரும், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறவர்கள் என்று அல்லாமல், அருந்தக்கூடியது. அந்த பானத்திற்கு 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக வரியை உயர்த்தியிருக்கிறீர்கள்.

அதேமாதிரி இன்றையதினம் பெட்ரோலுக்கு ஏற்கெனவே இருந்த 5% வரி 11 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. உயர் வேக டீசல் வரி 8 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. குறைந்த வேக டீசல் வரி 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. இவை அனைத்தும் விவசாயத்தை பெரிதும் பாதிக்கும். ஏனென்றால் இன்றைகு விவசாயத்திற்கு டீசல் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் அறிவோம். டீசல் வரியை உயர்த்துவதன் மூலம் ஏற்கெனவே உயர்ந்திருக்கும் பஸ் கட்டணத்தையே மக்கள் தாங்க முடியாமல் இருக்கிறபோது இதை சாக்கிட்டு மேலும் பஸ் கட்டணம் உயரும், அதனால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவார்கள். விவசாயிகளுடைய விளைபொருட்களுக்கு மேலும் உற்பத்திச் செலவு அதிகரிக்கும், ஆகவே அவர்களும் கஷ்டப்படுவார்கள். விளை பொருட்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கும் இந்த விலையேற்றம் ஒரு சுமையாக இருக்கும். ஆகையால் இந்த வரி வீதத்தை உயர்த்துவது சரியல்ல.

அதிலும் குறிப்பாக நாம் இந்த சட்டமன்றத்தில்தான் மது விலக்கை தளர்த்துவது என்ற முடிவை எடுத்து, ஜூலை மாதம் 1-ந்தேதியிலிருந்து தளர்த்த இருக்கிறோம். அதன் மூலமாக குறைந்த பட்சம் 200 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த அளவுக்கு வருமானம் வரக்கூடியதை எதிர்பார்க்கிற இந்த நேரத்தில் இந்த சாதாரண பொருட்களுக்கு வரியை உயர்த்துவதினால் என்ன பெரிய வருமானத்தை நாம் எதிர்பார்க்கிறோம்? அதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த வரி உயர்வு தேவை இல்லை.

இங்கே ஆரம்பத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல விற்பனை வரியானது மதுவிலக்கு கொண்டு வந்த காலத்திலே கொண்டுவரப்பட்டது. இன்றையதினம் மது விலக்கை தளர்த்தி, அதை ரத்து செய்யக்கூடிய காலத்தில் மக்களுக்கு இருக்கக்கூடிய சுமையை நீக்கக்கூடிய முறையிலே இந்த வரியை குறைப்பதுதான் வரவேற்கக்கூடிய அம்சமாக இருக்கும். ஆகவே, அந்த அடிப்படையில் இந்த உபரி வரியை நகரங்களில் விதிப்பதையும், புதிதாக பல்வேறு பொருட்களுக்கு வரியை உயர்த்துவதையும் நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆட்சேபிக்கிறேன்; இந்த வரி விதிப்பை கைவிட வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 மே 12]

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறபோது இதை வரவேற்று பேசினார்கள் என்று நான் சொன்னால் உடனே இல்லை என்று எழுந்துவிடுவார்கள். பேசுகின்றபோது சில விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவுதானே தவிர, பூரணமாக எதிர்க்கவில்லை என்பது நமக்கு நன்றாகத் தெரியும.

இன்றைக்கு போடப்பட்டிருக்கிற வரியைப் பற்றிச் சொல்லுகிறபோது ஒவ்வொன்றாக நான் எல்லோருக்கும் பதில் சொல்லாவிட்டாலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சர்சார்ஜ் என்று இன்றைக்குப் போடப்பட்டிருக்கிறது. அது கூடாது என்றும், முதலிலே அது சென்னைக்கு மட்டும் என்று சொல்லி, பிறகு தமிழ்நட்டின் எந்தப் பகுதிக்கும் போடுகிற அதிகாரத்தைப் பெற்றிருக்கிறீர்களே; இன்றைக்கு இல்லை என்று சொல்லிவிட்டு நாளை போடுகின்ற அதிகாரம் அரசுக்கு இதனால் வந்துவிடுகிறதே என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் சொன்னார்கள்.

அதிகாரம் வந்துவிடுமே என்ற அந்த ஐயப்பாடு வேண்டுமென்றால் தேர்ந்தெடுக்கப்படாத மன்னர் காலத்திலே இருந்து கொடுங்கோல் அரசு காலத்திலே கொடுங்கோலன் கைக்கு அதிகாரம் போய்விடுமே என்ற அச்சம் தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது அப்படிப்பட்ட அச்சம் தேவையில்லை. இப்போது 5 சதவீதம் என்று இருப்பதை 10 சதவீதம் சர்சார்ஜ் என்று போட முடியும். ஆனால் எதற்காக அடிஷனல் சர்சார்ஜ் என்று போட்டிருக்கிறோம் என்றால், அதாவது சர்சார்ஜ் என்று போடாமல் அடிஷனல் சர்சார்ஜ் என்று போட்டிருக்கிறோம் என்றால் அது அரசியல் சட்டப்படி பிரச்சினையைக் கிளப்பிவிடும். அதாவது சர்சார்ஜ் என்று போட்டு சென்னைக்கு ஒன்று, வேறு இடங்களுக்கு இன்னொன்று என்றும் போட்டால் அரசியல் சட்டத்தின்படி பாகுபாடு இருக்கக்கூடாது என்று இருக்கின்றது, ஆகவே நீதிமன்றத்திற்குப் போய் அது தோற்றுவிடும். மேலும் அடிஷனல் சர்சார்ஜ் என்று போட்டு அது சென்னைக்கு மட்டும் தான் என்று போட்டுவிட்டாலும் அதுவும் அரசியல் சட்டப்படி செல்லுபடியாகாமல் போய்விடும். ஆகவே மிகவும் கவனமாக ஆலோசனை செய்து அதற்குப் பிறகுதான் சர்சார்ஜ் என்று போட்டு, அந்த 10 சதவீதம் என்பது தமிழ்நாடு பூராவுக்கும் போடவேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே சட்டத்திலே வழிவகைகள் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் அடிஷனல் சர்சார்ஜ் என்று போட்டு தமிழ்நாடு பூராவுக்கும் போடுவதற்குரிய அதிகாரத்தை வைத்துக் கொண்டு அதை சென்னை மாநகரத்திற்கு மட்டுமே போடப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அருமை சகோதரர் திரு. சித்தன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது வாங்கிப் பழக்கப்பட்ட கை வாங்கிக்கொண்டே இருக்கின்றது என்று சொன்னார்கள். அதேபோல் எந்த அமைச்சரானாலும், வருகின்ற எல்லா அமைச்சர்களுமே வரியை எடுத்துக்கொண்டு போகிறார்கள்

சொன்னார்கள். அதாவது சொல்வதற்கு சுவையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதாவது காலையிலே இருந்து மாலை வரையிலே பேசிக்கொண்டிருக்கின்றபோது இப்படி எல்லாம் சொன்னால்தான் சுவையாக இருக்கும் என்பதற்காகச் சொன்னார்களே தவிர உள்ள உணர்விலே அவ்வாறு அமைச்சர் கள் வரியை எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லி இருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அதேபோன்றுதான் வாங்கிப் பழக்கப்பட்ட கை வாங்கிக் கொண்டே இருக்கின்றது என்ற அந்த வார்த்தையை அப்படிப்பட்ட பொருளிலே நிச்சய மாகச் சொல்லி இருக்க மாட்டார்கள் என்றும் நான் கருது கிறேன். ஆகவே சொல்கின்றபோது சாதாரணமாகத்தான் அதைச் சொன்னார்கள்.

அடுத்து திரு. வெங்கடசுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற போது சில இடங்களிலே ஆங்கிலத்திலே எழுதாமல் வட மொழி யிலே எழுதுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட தகவல் எனக்கு வரவில்லை. தமிழிலே எழுதவேண்டும் இல்லா விட்டால் ஆங்கிலத்திலே எழுதவேண்டும் என்றும் அல்லது ஆங்கிலத்திலே எழுதுவதற்கு கிளார்க் போன்ற வேலை ஆட்களை வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அருமை கிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது இதனை சென்னை நகருக்குப் போடுவதாகச் சொல்கிறோம். ஆனால் உலக வங்கி அப்படிச் சொன்னதா, இல்லையா என்ற சந்தேகத்தை கிளப்பினார்கள். உலக வங்கி இப்படி எல்லாம் சொல்லுமா ,அவர்கள் பணம் கொடுக்கிறார்கள் என்ற காரணத் திற்காக என்று கேட்டார்கள். உலக வங்கி என்பதல்ல, உள்ளூரிலே இருக்கின்ற வங்கிகள் கூட பணத்தைக் கொடுப்பதற்கு முன்பு பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்குரிய சக்தி இருக் கின்றதா என்று பார்க்கின்றபோது உலக வங்கி எவ்வளவு தூரத்திற்கு பார்க்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் பணம் கொடுக்கின்றபோது சொல்லியிருக் கிறார்கள் ''உங்களிடத்திலே நிதியாதாரம் சரியாக இல்லை, அப்படிச் சரியாக இல்லாதபோது நாங்கள் கொடுக்கின்ற பணத்தை மட்டும் வைத்துக்கொண்டு செலவு செய்தால் எப்படி திருப்பிக் கொடுப்பீர்கள், ஆகவே உங்களுடைய நிதியாதாரத்தை அதிகப்படுத்துங்கள்'' என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே நிதியாதாரத்தை உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசின் நிதியமைச்சர் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். உலக வங்கியும் சொல்லி இருக்கின்றது. ஆகவே இன்றைக்கு இதைச் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாலை 6.20]

சென்னை மாநகரம் என்றால் உங்களுக்கே தெரியும். இந்திய துணைக் கண்டம் சுதந்திரம் அடைவதற்கு முன்னாலேயே, இந்தியாவில் இருக்கிற பெரிய நகரங்களில் 3வது

பெரிய நகரமாக இருந்தது. இன்றைக்கு 4-வது பெரிய நகரமாக இருக்கும் என்று நினைக்கிறேன் ஆனால் 3-வது பெரிய நகரமாக இருந்த இந்த பழைய நகரத்திலே இன்றைக்கு அதனுடைய வருட வருமானம் எவ்வளவு என்று கேட்டால்—சுமாராகத்தான் சொல்ல முடியும்—அமைச்சர் இருந்தால் எவ்வளவு என்று அவரையே கேட்டிருப்பேன்—அமைச்சர் இல்லை ஆகவே சுமாராகத்தான் சொல்கிறேன்—23 கோடி தான் அதனுடைய வருடவருமானம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள், இந்த 23 கோடி வருட வருமானத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு சங்கடப்படுவார்கள் என்பதையும் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது மட்டும் அல்லாமல் அவர்கள் சொல்கிறபோது பெரிய வியாபாரிகளிடத்திலே எல்லாம் கணக்குகளை சரியாக பார்ப்பார்களா என்கிற ஒரு சந்தேகத்தையும் கிளப்பி யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சந்தேகத்தை வேறு யாராவது கிளப்பியிருக்கலாம், ஆனால் அருமை சகோதரர் கிருஷ்ணன் அவர்கள் கிளப்பியிருக்கக் கூடாது. சலுகை கொடுக்கும் விஷயத்தில் எனக்கு பெரிய வியாபாரிகளே கண்ணுக்குப் படமாட்டார்கள். ஏழை எளியவர்கள் தான் என் கண்ணிலே படுவார்கள். இந்தச் சட்டத்திலே என்ன கொண்டு வந்திருக்கிறோம் என்றால், ஒன்றும் பெரிய மாற்றம் இல்லை. கணக்குகளை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் True and correct accounts என்று இருந்தது. அப்படி True and correct accounts என்று சொன்னால் 2, 3 வருடத்திற்கு முன்னாலே இருக்கிற கணக்கைக் கூட காட்டி விடலாம்.

அதற்காகத்தான் இந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிறோம் "upto date true and correct account" என்று. பெரிய மாற்றமாக ஒன்றும் செய்து விடவில்லை என்றாலும், இந்தச் சட்டத்தைப் பார்க்கிறபோது, தேவையான இடத்தில், இருக்கிற சில தவறுகளை திருத்தியிருக்கிறோம். சும்மா வெறுமனே என்று சொல்லிவிட்டால், 2, 3 வருடத்திற்கு முந்தைய கணக்குகளை வைத்து விடலாம். இதோ 78-வது வருட கணக்கு, 79-வது வருட கணக்கு பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடலாம். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் "up to date true and correct accounts" என்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்ததாக நம்முடைய அருமை சகோதரர் கருப்பையா அவர்கள் பேசியபோதுகூட, இதிலே சொல்லியிருப்பதைத் தான் பெரும்பாலும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஜனநாயக நாட்டில் சுதந்திர நாட்டில், இந்த நாட்டினுடைய குடிமகன் அச்சம் இன்றி இருக்க வேண்டாமா என்றார்கள், சுதந்திர நாட்டில் வாழும் குடிமகன் அச்சம் இன்றித்தான் இருக்கவேண்டும். ஆனால் எப்படி நாம் சொன்னாலும் அச்சப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் இருந்துதான் ஆவார்கள். காரணம் என்ன? கிராமப்புறங்களிலே

சொல்வார்கள்—மொட்டை மரம் காத்துக்கு அஞ்சாது என்று. புயல் வந்து பலத்த காற்று அடித்தால் கூட மொட்டைமரத்தை அது என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, அச்சம் இன்றி யார் வாழ முடியும்? நேர்மையானவர்கள், தூய்மை யானவர்கள் அச்சம் இன்றி வாழமுடியும். யார் அச்சத்துடன் வாழ்கிறார்கள்? இன்றைக்கு படுத்தால் யார் வந்து கொள்ளை அடிப்பார்களோ, எந்தக் கணக்கை யார் பார்ப்பார்களோ என்று நினைத்துக் கொண்டே இருப்பவர்கள்தான் அச்சப்படுகிறார்கள். அதாவது தவறு செய்தவர்கள். ஒரு தவறை முழுமையாகவோ, பாதியாகவோ யார் செய்கிறார்களோ, அவர்கள் அச்சப்பட்டுத் தான் ஆக வேண்டும். ஆகவேதான் மடியிலே கனம் இல்லா விட்டால் வழியிலே பயம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

பயம் ஏன் வருகிறது? மடியிலே கனம் இருப்பதால், ஆகவே நான் சொல்ல விரும்புகிறேன், வியாபாரிகளில் நேர்மையானவர்கள் தூய்மையானவர்கள் அதிகாரிகளைக் கண்டு அஞ்ச வேண்டிய தில்லை. அதிகாரிகள் வந்தால் எழுந்திருக்கக் கூடத் தேவை யில்லை. தாங்கள் உட்கார்ந்துக் கொண்டே, அவர்கள் உட்காருவதற்கு ஒரு சேர் போட்டு உட்காருங்கள் என்று சொல்வி என்ன வேண்டும் உங்களுக்கு? கணக்குதானே பார்க்க வந்திருக் கிறீர்கள் — அதோ இருக்கிறது கணக்குகள். பார்த்து விட்டுப் போங்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு தைரியம் வேண்டும். எங்கே வருகிறது அந்தத் தைரியம்? எல்லோருக்கும் வரவில்லை என்று சொல்லவில்லை, சிலருக்கு வரவில்லை என்று சொல்கிறேன். ஆகையினால் நான் தெரிவித்துக் கொள்கிறேன் — எனக்கு இருக்கிற ஒரு பயம் — பயம் என்று அதை சொல்லக் கூடாது — வருத்தம் என்று சொல்லவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்கள் கூட அப்படிச் சொல்லலாமா என்பதுதான். வியாபாரி கள் பயப்படுகிறார்கள் என்று அவர்கள் சொல்லலாமா? சிறிய வியாபாரிகள் என்று சொன்னால் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், அவர்களுக்கு என்ன சங்கடங்கள் வந்தாலும் என்னிடத்திலே சொல்லுங்கள். பொதுவாக சிறிய வியாபாரி களுக்கு இன்ன விதத்தில் சங்கடம் என்று சொன்னாலும் சரி அல்லது குறிப்பிட்ட இந்தந்த வியாபாரிகளை இந்தந்த அதிகாரிகள் இப்படிச் செய்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னாலும் சரி, நான் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். இந்த நேரத்தில் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதன் முழு அளவு விவரத்தையும் நான் இங்கே வெளியில் சொல்லக் கூடாது. ஆனாலும், இந்த அரசு வந்த பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட பிறகு, நான் பொறுப் பேற்றிருக்கிற இந்த வருவாய் வாரிய, வணிகத் துறையிலே எத்தனையோ பெரிய, பெரிய அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள்.

அப்படி வீட்டுக்கு அனுப்பியதை ஏன் பத்திரிகைகளிலே போட வில்லை என்றால் ஒரு அச்ச உணர்வு வந்து விடும் நாட்டிலே உள்ள மற்றவர்களுக்கு என்றுதான். ஆனால் இந்த விஷயத்தில் அப்படி ஒரு அச்ச உணர்வு நல்லது அல்லவா அதனால் பத்திரிகைகளில் போட்டிருந்தால் மற்றவர்களுக்கு தெரியுமே என்று கேட்டால், சம்பந்தப்பட்ட இலாகாவினருக்கு - அதில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்ன நடந்திருக்கிறது என்று. ஆகவே, அவர்களுக்கு மட்டும் தெரிந்தால் போதும் என்ற வகையில்தான் இதை நாங்கள் செய்திருக்கிறோம் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருமானம் அதிகமாக வந்துவிடுமே என்று சொன்னார்கள். நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். அதிகமாக வருமானம் வந்துவிடுமே என்று யார் அச்சப்பட வேண்டும்? எப்போது அச்சப்பட வேண்டும்? நான் முதலிலேயே சொன்னதைத் திருப்பிச் சொல்கிறேன். வருமானம் அதிகமாக வந்தால் ஊதாரிச் செலவை யார் செய்வார்கள்? ஊதாரிப்பிள்ளை செய்வான். அந்த ஊதாரிப்பிள்ளையைக் கண்டித்து கேட்பதற்கு அவர் தாய், தகப்பனார், அண்ணன் இருக்கும்போது எப்படி ஊதாரித்தனம் செய்யமுடியும்? மன்னர் காலத்தில் வேண்டுமானால் கேட்பாரற்று ஊதாரித்தனம் செய்யமுடியும். ஆனால் இன்று ஊதாரிச் செலவு செய்யமுடியாது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஊதாரிச் செலவு செய்தால் நாட்டு மக்கள் கேட்பார்கள், நாட்டு மக்கள் சார்பில் நீங்கள் கேட்பீர்கள். ஆகவே ஊதாரிச் செலவை யாரும் செய்யமுடியாது. இன்று அரசாங்க அலுவலர்களுக்கு தொழிலாளர்களுக்கு, மற்றவர்களுக்கெல்லாம், ஆசிரியர் களுக்கெல்லாம் சம்பளம் போதவில்லை என்று சொல்கிறபோது எண்ணி எண்ணிப் பார்த்து- எவ்வளவு கஷ்டமாகக் கொடுக்கப்படு கின்றது, இந்த அரசு கொடுக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். சிலயிடங்களில் பணம் கொடுக்கிறபோது கட்டு கட்டாக எடுத்துப் போட்டு விடுவார்கள். இதோ ரூபாய் நூறு, எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள், இதோ ஆயிரம் ரூபாய் இருக்கிறது, எண்ணிப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று போடு கிறார்கள் சிலர். நம் வீட்டில் ஒரு பத்து ரூபாய் கொடுக்கிறோம் என்றால் ஒரு ரூபாய் நோட்டாக ஐந்து, ஐந்து ரூபாய்க்கு அரை ரூபாய், கால் ரூபாய் என்று சில்லரையாக பத்து ரூபாய் கொடுத்து அந்த பத்து ரூபாயை பத்து தடவை எண்ணிப் பார்த்துக் கொடுப்போம். இப்படி பத்து ரூபாயை பத்து தடவை எண்ணிக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள், ஆயிரம் ரூபாயை அப்படியே தூக்கிக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். இந்த அரசு பத்து ரூபாயை பத்து தரம் எண்ணிப் பார்த்து ஒழுங்காகக் கொடுக்கிற அரசு என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே ஊதாரித்தனமாக செலவை நிச்சயமாக செய்ய மாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மே 12

மற்றொன்று. திரு. கருப்பையா சொல்கிறபோது ஒன்றைச் சொன்னார்கள். இன்று அதிகாரத்தை யாருக்காவது கொடுத்து விட்டால் தவறாகப் பயன்படுத்திக் கொள்வார்களே என்று. அப்படியல்ல. உங்களுக்குத் தெரியும். என்போர்ஸ்மென்ட் விங் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அந்த அதிகாரிகளுக்கு இன்றிருக்கிற சட்டத்தில் உள்ளபடி வியாபாரிகளைப் பார்த்துக் கணக்கைக் கொடு என்று கேட்கிற அதிகாரம் இல்லை. அஸெஸிங் அதாரிட்டி, கமர்ஷியல் டாக்செஸ் அத்தாரிட்டி என்று போட்டிருக்கிறோமே தவிர அவர்களுக்கு என்று அதிக அதிகாரம் இல்லை. அப்படி இல்லாமல் இருப்பதால் இன்று யாராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று "..any officer of the Commercial Taxes Department not lower in rank than an Assistant Commercial Tax Officer...." என்று போட்டிருக்கக் காரணம் புதிதாக நாங்கள் ஒரு அதிகாரியைப் போடுகிறோம் தேவைப்படுகிறபோது அல்லது ஒரு டிப்பார்ட்மென்டில் ஒரு விங் ஏற்படுத்துகிறோம் என்றால், அப்படி போடவேண்டுமென்றால் இன்று "என்போர்ஸ் மென்ட் விங்கில்" உள்ளவர்களுக்கு அந்த அதிகாரம் இல்லை, அவர்களுக்கு முக்கியமாக இந்த அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்று இது போடப்பட்டிருக்கிறது.

இந்த அரசு எதைச் செய்தாலும் மக்களின் நன்மைக்காகத் தான் செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலான திருத்தங்கள், பொதுவாக விளக்கங்கள் என்றளவில்தான் இருக்கின்றன. பக்கம் பக்கமாக அடித்திருக் கிறதே தவிர பெரும்பாலானவை விளக்கங்களே, சந்தேகங்கள் போக்கப்படும் அளவிற்கு — என்போர்ஸ்மென்ட் விங்கிற்கு அதிகாரம் இல்லை, அதைக்கொடுக்கிறோம் என்று சொன்னேன். பெரும்பாலானவை விளக்கங்களாகவே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெட்ரோலுக்கு வரிபோட்டது பற்றிச் சொன்னார்கள். பெட்ரோலுக்கு வரி போடுகிறபோது, உங்களுக்கு ஏற்கனவே படித்துக் காண்பித்திருக்கிறேன். தமிழ்நாட்டில் போடப் பட்டிருக்கிற வரி மற்ற அண்டை மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்த மாநிலங்களில் உள்ளதை விட இங்கே பெரும்பாலானவை குறைவாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. உங்களுக்குச் சொல்லவேண்டுமென்றால் போடப்பட்ட வரியில் இன்று அதிகம் வராது. பெட்ரோலுக்கும் டீஸலுக்கும் சர்சார்ஜை நீக்கி இருக் கிறோம். சர்சார்ஜ் முதலில் 5 சதவிகிதம் என்றிருந்தது. அதை இப்போது நீக்கியிருக்கிறோம் என்றால் இன்று இந்த வரி உயர்த்தியதையும் அதை நீக்கியதையும் பார்க்கும்போது அரசின் வருமானம் அதிகமாக வரவில்லை. சரியாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாலை 6-30]

ஆகவே, புதிதாக வரிகள் அதிகம் போடவில்லை. குறைத்திருக்கிறோம். பல இடங்களில் கையால் செய்யப்பட்ட பேனா, கையால் செய்யப்பட்ட நிப்பு, அது இருடியம் வைக்கப்பட்டதா. இல்லையா என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். மாண்புமிகு அன்புச் சகோதரி இராஜாம்பாள் அவர்கள் பலமுறை கேட்டார்கள். சந்தேகத்திற்கு இடமில்லாமல், இருடியம் வைத்ததா, இல்லையா, அது பிளாடினமா என்பதையெல்லாம் சந்தேகம் இல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக அதிலே பல திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். வரிகள் அதிகமாகப் போடவில்லை என்று சொல்லி, இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களை, இதை ஏற்று, நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில், தமிழகம் முழுவதுமாக இந்த கூடுதல் சர்சார்ஜ் வரியை போடுவதற்கான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டாலும், சென்னை நகரத்திலே மட்டும் போடப்படும் என்று சொன்னார்கள். ஏற்கனவே, நான் நிதி நிலை அறிக்கையின்மீது பேசும்போது சென்னை நகரத்திற்கு மட்டும் போடப்படும் என்று சொல்லி இருக்கின்ற காரணத்தினால், இதை சென்னை நகரத்திற்கு மட்டும் என்று வைத்துக் கொண்டாலும், மற்ற இடங்களுக்கும் போடப்படும் அதிகாரத்தை ஏன் வைத்துக் கொள்ளவேண்டும் என்பது ஒன்று. அதைப்போல், சிலவகை பானங்கள் அதாவது சோடா, கலர் மீது போடப்படும் வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். சிலவகை துணிகளுக்கு வரியை ஏற்றியிருக்கிறீர்கள். நிதி நிலை அறிக்கையிலே சொல்லாமல், இப்போது சொல்லியிருப்பதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்திருந்தேன். இதைச் சென்னைக்கு மட்டும் என்று சட்டத்திலே போட்டுவிட்டால், இன்றைக்கு அரசியல் சட்டப்படி அது செல்லுபடியாகாது. நான் அதிலே அடிஷனல் சர்சார்ஜ் என்று போட்டதன் நோக்கம் -— சர்சார்ஜ் என்று வரி போட முடியாது சென்னைக்கு மட்டும் 10 சதவிகிதம் என்று. மற்றும் சில நகரங்களிலே 5 சதவிகிதம் என்று எல்லா இடங்களிலும் இருக்கிறது. 5 சதவிகிதம் என்று சொல்லிவிட்டால் அது செல்லாது. ஆகையால், சர்சார்ஜ் என்று எங்கும் போட முடியாது. அடிஷனல் சர்சார்ஜ் என்று போட்டு, அதிலே மாநிலம் பூராவும் என்று சொல்லி, பை நோடிபிகேஷன் மூலமாக, அறிவிப்பின் மூலமாக இங்கே மட்டும் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக கிளாத்திற்கு வரி போடவில்லை. சில மெஷினரி ஒயர்களுக்கு எல்லாம் எப்படி போடப்படுகிறது என்று சரியாகச் சொல்லப்படவில்லை. அது இன்றைக்கு விளக்கமாக சொல்லப்

பட்டு இருக்கிறது; வேறு ஒன்றும் இல்லை. பானங்கள் மீதும் எந்தவிதமான வரியும் போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே டிரேட் மார்க், டிரேட் மார்க் இல்லாதது என்பதைப் பொறுத்து சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, புதிய வரியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : வித் டியூ பர்மிஷன் ப்ரம் தி சேர், நான் சில விளக்கங்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். சில பானங்களுக்கு 5 சதவிகிதம் என்றும், 91 ஆம் இனத்தின்கீழ் உள்ள இனிப்பு பானங்களுக்கு 8 சதவிகிதம் என்றும், 5 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். ஆனால், வரி போடவில்லை என்று சொல்லி உயர்த்தியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இதிலே இருக்கிற மாதிரி சாதாரண பானங்கள் சோடா போன்றவைகளுக்கு இல்லை என்றும், அதிலே ரிஜிஸ்திரேஷன் செய்யப்பட்ட பானங்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறதென்றும், ஆனால் உயர்த்தவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கான அதிகாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். என்போர்ஸ்மென்ட் அதிகாரிகள் தேவை என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, தனியாக என்போர்ஸ்மென்ட் அதிகாரிகள் என்ற முறையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யாருக்கும் எந்தவிதமான அச்சமும் ஏற்படுவதற்கான அவசியம் இல்லை. ஆகவே, அந்த முறையில் வியாபாரிகளைப் பொறுத்த அளவில், சாதாரண வியாபாரிகளைக் குறிப்பிட்டேன். பெரும், மொத்த வியாபாரிகளைக் குறிப்பிடவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், ஆலோசனைக் குழுக்கள் மாவட்ட அளவில், மாநில அளவில் வியாபாரிகளைக் கொண்டு இந்தச் சட்டத்தை முறையாக அமுல் படுத்தி, முறையாக அரசுக்கு சேரவேண்டிய பணத்தை.......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தேன். என்போர்ஸ்மென்ட் என்று மட்டும் போட்டால் நாளைக்கு மறுபடியும் புதிதாக ஒரு விங் ஏற்படுத்தினால் அதில் சேர்த்துக் கொள்ளப்படும். சாதாரணமாக ஒரு ஜாதி சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்றால், 'நாட் லோயர் தேன் தி ராங்க் ஆப் தாசில்தார், டிபுடி தாசில்தார்' என்று சொல்கிறோம். அப்படி போடுகின்றபோது, எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காகப் போடுகிறோமே ஒழிய, என்போர்ஸ்மென்ட் என்று போட்டு விட்டால், நாளைக்கு ஒன்று புதியதாக விங் வருகிறபோது, அது சேர்த்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில குழுக்களைப் பற்றிச் சொன்னார்கள். அது போடப்பட்டு, அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாவட்டங்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை வரும்போது, நான் தெரிவித்திருக்கிறேன். மாவட்டக் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை தாங்குவார். மாநிலக் குழு போடப் பட்டிருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் தலைமை தாங்குவார் என்று முதலிலேயே நான் தெரிவித்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1981—ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 47/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 47/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)—

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 48/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 48/1981) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

ஏ. இந்திய முத்திரைத் தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"1981-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 50/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

[மாலை 6.40]

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு முத்திரைத்தாள்சட்ட முன் வடிவின்பேரில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். வரி வருவாயைப் பெருக்கும் விதத்தில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி நீங்கலாக ஏனைய நகரங்களிலே போடப் படுகின்ற இந்த வரியைப் பொறுத்தவரையில் சொத்துரிமை களை ஏமாற்றுவதற்காக பிரித்து எழுதி வைக்கின்றவர்களுக்கு வரியை அதிகமாகப் போட்டால் அதிலே எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் அதே சமயத்திலே குறைந்த பட்சம் 1000 ரூபாய் அல்லது 500 ரூபாய் என்ற அளவிலே இருக்கின்ற சொத்துக்களைப் பிரித்து எழுதுகிற போது சாதாரண மக்கள் பிரித்து எழுதுகிறபோது முத்திரைத் தாள் வரியைக் குறைக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே குத்தகைதாரர்கள் 1000 ரூபாய், 500 ரூபாய் 200 ரூபாய், 300 ரூபாய் அளவுக்குக் குத்தகைக்கு நிலத்தைப் பிடித்து உழுகின்ற போது அதற்காக குத்தகைக்கு எழுதுகிறப் பத்திரத்தைப் பொறுத்தவரையில் குறைவாகக் கட்டணத்தை வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, சொத்துக்களைப் பிரித்து எழுதுகிற போது மகன், மகள், தத்து எடுக்கப்பட்டு அவர்கள் அந்த உரிமைகளைப் பதிவு செய்கின்ற நேரத்திலே அதற்காக குறைத்து வாங்கலாமே தவிர அவர்கள் பதிவு செய்யாமல் இருக்கின்றார்கள் என்று தெரிந்தால் அதைப் பார்த்து அவர்களுக்கு பதிவு இல்லாமல் உரிமை வராது என்று காரணத்தினால் அப்படி எழுதி வைக்கிறவர்களுக்கு அவர்களுக்குக் அதிகமானக் கட்டணத்தை விதிக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். முத்திரைத்

* 1981ம் ஆண்டு மே மாதம் 11ம்தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

தாள்களைப் பொறுத்த வரையில் பிரித்து எழுதுவதற்கு அல்லது கிராமங்களிலே குறிப்பிட்ட இடத்திலே கேட்கிறபோது முறையாக அவர்களுக்குகிரையத்திற்கு கிடைப்பதில்லை. அப்படி கிடைக்காத நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே ஆயிரம், 2 ஆயிரம் 5 ஆயிரம் என்ற அளவுக்கு முத்திரைத்தாள் வேண்டுமென்று கேட்டால் மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கின்ற நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலை இப்போது கிராமங்களிலே இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்ற இந்த நேரத்திலே அதையும் பரிசீலித்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவிலே பினாமி முறையைக் கண்டு அறிவதற்கும் அதற்கான கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்ற முறையிலே இந்த முறையை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லப்பன் அவர்கள் தெரிவித்ததைப் போல ஏழை எளிய மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கின்ற பாகப் பிரிவினைகள் குறைந்த பட்சத் தொகைக்குள் இருக்குமானால் அதற்கு இதிலிருந்து விதிவிலக்குத் தர வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கேற்றவாறு இதிலே மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 5 ஆயிரம், 10 ஆயிரம், பெறுமானமுள்ள சொத்துக்களை வாங்குவதற்கும் பதிவு செய்வதற்கும் குறைந்த அளவுக் கட்டணத்தை மட்டுமே நிர்ணயித்து 20 ஆயிரம், 30 ஆயிரம், பெறுமானமுள்ள சொத்துக்களை வாங்குகிறவர்களுக்கு அல்லது பதிவு செய்கின்றவர்களுக்கு கட்டணத்தை உயர்த்தி வாங்கலாம் என்றும் அந்தமுறையிலே சட்டத்தைத் திருத்திக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அரசுக்கு வருமானம் வரும். பினாமி ஏற்பாடுகளையும் கண்டுபிடிக்க முடியும். ஆகவே சாதாரண மக்களுக்கு பங்கு பாகத்தைப் பிரிக்கிற போது அல்லது வாங்குகிறபோது குறைந்த அளவிலே விதிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

•

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் திருத்த சட்ட முன் வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தில் அரசு வருவாய்களைக் கூட்டுவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்ற காரணம் சொல்லப்பட்டிருந்தாலும்கூட அரசுக்கு கூடுதலாக வருமானம் வருகிறது என்பதைவிட பொதுமக்களுக்கு இருக்கின்ற சிரமங்களைக் குறைக்கின்ற சட்டமாகவும் இது இருக்கிறது என்பதால் நான் இதை வரவேற்கிறேன். காரணம் பெரும்பாலான கிராமப்புறங்

களிலே செட்டில்மென்ட் என்றுப் போட்டு எழுதப்படுகிற போது ஸ்டாம்ப் டியூட்டியைக் குறைக்கவேண்டுமென்பதற்காகவே அவ்வாறு எழுதப்படுகின்ற நிலைமை இருக்கிறது. கிரையப் பத்திரம் எழுதவேண்டுமென்று இருந்தால் 100 ரூபாய்க்கு இப்போது 3 ரூபாய் என்று இருக்கிறது, இந்தச் சட்டம் திருத்தப்படுவதற்கு முன்பு, இப்போது 100க்கு 13 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே உள்ள விவரம் தெரியாதவர்கள் கிரையம் என்பதற்குப் பதிலாக செட்டில்மென்ட் என்று எழுதிவிடுகின்ற காரணத்தினாலே—முத்திரைத்தாள் கட்டணம் குறைவாக வரும் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அவ்வாறு செய்கிறார்கள்—அவர்கள் படுகின்ற தொல்லைகளுக்கு எல்லையே கிடையாது. செட்டில்மென்டிற்கு குறைந்த முத்திரைத்தாள் கட்டணம் என்ற காரணத்தால் செட்டில்மென்டை எழுதிவைக்கிறார்கள், அதன் காரணத்தினாலே இன்றைக்கு நீதிமன்றத்திலே கிட்டத்தட்ட 25 சதவீதம் வழக்குகள் இருக்கின்ற நிலைமை தான் இருக்கிறது. ஒருவர் செட்டில்மென்ட் எழுதி வைத்துவிட்டு பின்னர் அதையே ஒரு பத்திரத்திரத்தின் மூலமாக கேன்சல் செய்து விட்டால் அது செல்லுபடியாகுமா செல்லுபடியாகாதா என்று வழக்காடிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அல்லது கூட்டு குடும்ப சொத்தில் செட்டில்மென்ட் எழுதி வைத்தால் செல்லுமா செல்லாதா என்ற வழக்குகளும் நடந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட வழக்குகளுக்கு வழிகோலுவதாகஅமைந்திருக்கிறது இந்த செட்டில்மென்ட் எழுதி வைக்கின்ற முறை குறைந்த பட்ச முத்திரைத்தாள் கட்டணம் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் எழுதி வைக்கிறார்கள். இதன் காரணமாக நீண்ட நெடிய காலத்திற்கு அவர்கள் நீதிமன்றங்களின் படிக்கட்டுகளிலே ஏறியிறங்கிக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட நீதிமன்றத்திற்கு செல்லுகின்ற தொல்லை இல்லையென்றாலும்கூட மத்திய அரசு இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னாலே கிப்ட் டாக்ஸ் ஆக்டிற்கு கொண்டு வந்த திருத்தப்படி செட்டில்மென்ட் எழுதி வைக்கின்றவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதிலி ந்து கிராமத்தார் தப்பித்தாலும்கூட அந்த சொத்தினுடைய மதிப்பு 5 ஆயிரம் இருக்கிற,து என்றால் அதனுடைய மதிப்பு 50 ஆயிரம் இருக்கும் என்று இன்கம்டாக்ஸ் அதிகாரிகள் அவர்களை கேட்கிற நிலைமையும் அவர்கள் அதற்காக கிப்ட் டாக்ஸ் கட்டவேண்டுமென்று நோட்டீஸ் அனுப்புகின்ற நிலைமையும் இருக்கின்றது. ஆகவே ஏதாவது ஒரு வகையிலே தொல்லை என்ற முறையிலே ஒன்று நீதிமன்றத்தின் படிக்கட்டுகளிலே ஏறியிறங்கவேண்டியிருக்கிறது அல்லது மத்திய அரசின் வருமானவரி அதிகாரிகளின் கெடு பிடிக்கு ஆளாக நேரிடுகிறது. முத்திரைத்தாள் கட்டணம் குறைவாக இருக்கிறது என்ற ஒரே காரணத்தினாலே செட்டில்மென்ட் எழுதிவைக்கின்றார்கள் என்றால் நீங்கள் இவ்வளவு சொத்தை தானமாகக் கொடுத்திருக்கிறீர்கள், ஆகவே அதற்கு கிப்ட் டாக்ஸ் கட்ட வேண்டுமென்று சொல்லக்கூடிய அவலமான

1981 மே 12] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

நிலைமை இருக்கிறது. ஆகவே எப்படிப்பார்த்தாலும் கிராமப்புறங்களிலே செட்டில்மென்ட் எழுதி வைப்பதாலே நீதி மன்றத்தினாலே தொல்லைகள் அல்லது மத்திய அரசு வருமான வரித் துறை அதிகாரிகள் கொடுக்கின்ற தொல்லைகள் என்ற நிலைமைதான் இருக்கிறது. இப்போது 3 ரூபாயிலிருந்து 13 ரூபாய் என்று மாற்றப்பட்டிருக்கின்றதே உண்மையிலேயே மிகவும் குறைவான தொகை தான் உண்மையிலேயே 5,000 ரூபாய் பெறுகின்ற சொத்துக்குக்கூட வருமானவரி அதிகாரிகள், 50,000 ரூபாய் இந்தச் சொத்து பெறும், ஆகவே அதற்கு 10 சதவீதம், 5,000 ரூபாய் கிப்ட் டாக்ஸ் நீ கட்டவேண்டுமென்று அந்த செட்டில்மென்ட் பத்திரம் எழுதியவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து விடுகிறார்கள். அங்கே 5,000 ரூபாய் கொடுக்கின்ற கொடுமையைவிட இங்கே மாநில சர்க்காருக்கு, 3 ரூபாயிலிருந்து 12 ரூபாய் ஆக உயர்த்தியிருப்பது குறைந்த பட்சம் இப்படிப்பட்ட முத்திரைத்தாள் கட்டணங்களில் இருக்கின்ற சலுகைகளுக்காக எழுதி அவர்கள் நித்தம் நித்தம் நீதிமன்றங்களுக்கும், வருமான வரித்துறை அதிகாரிகளின் அலுவலகங்களுக்கும் ஏறி நிற்பதைவிட இந்த அரசுக்குக் கொடுக்கலாம் என்ற வகையிலும், அதே போல செட்டில்மென்ட் பத்திரத்திற்கும் கிரயப் பத்திரங்களுக்கும் இருக்கின்ற தொகை மிகக் குறைவாக ஆக்கப்பட்டிருக்கிறது. செட்டில்மென்ட் பத்திரம் எழுதுகின்ற போக்கையே விட்டு, கிரயப் பத்திரம் எழுதுகின்ற ஒரு நோக்கம் வந்துவிடுமேயானால் அரசாங்கத்திற்கு வருகிறது என்பதவிட ஏதோவொரு சமயத்திலே நிலங்களைக் கிரயத்திற்கு வாங்குகின்றவர்கள் நீதிமன்றத்தினுடைய நீண்ட நெடிய படிக்கட்டுகளிலே ஏறி இறங்குகின்ற பிரச்னையிலிருந்தும் அதைப்போல மத்திய அரசினுடைய வருமான வரித் துறை அதிகாரிகள், இங்கே எவ்வளவு கூட்டப்பட்டிருக்கின்றதோ அதைவிடப் பலமடங்கு கிப்ட் டாக்ஸ் வரி என்று வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒரே பாவம், செட்டில்மென்ட் என்று அந்த டாகுமெண்டிலே போட்ட காரணத்தினாலே, 100—க்கு 3 ரூபாய் என்று பாட்டமரி பாண்டிலே இருக்கின்ற அளவிற்குச் சலுகைக்காக எழுதினோம் என்கின்ற குற்றத்திற்காக எத்தனை கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த வகையில் அரசுக்கு வருமானம் வரவேண்டுமென்ற நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது என்பதைவிட இந்தச் சிறு பிரச்னையால் நித்தம் நித்தம் பொது மக்கள் கஷ்டப்படுகிறார்கள், ஆகவே அதிலிருந்து, செட்டில்மென்ட் எழுதுவதை மாற்றி அரசுக்குக் கூடுதலாக முத்திரைத்தாள் கட்டணம் செலுத்தினாலும் பரவாயில்லை, கிரயப் பத்திரம் எழுதுவோம் என்ற வகையிலே இது சாதகமாக இருக்கிறது என்ற முறையிலே வரவேற்கப்பட வேண்டியது. அதே நேரத்தில் இதிலே சில விதிவிலக்குகள், குடும்பத்திற்குள்ளே எழுதப்படுகின்றவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பது பாராட்டப்படுகிறது என்றாலும்கூட அதிலேயும்கூட, கொடுக்கப்பட்டிருக்கின்ற விதிவிலக்கிலேயும்கூட சில கட்டுப்பாடுகள் வேண்டுமென்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. வேடச்சந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்] [1981 மே 12

ஏனென்றால், சட்டத்திலே ஒரு கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பையன்கள், ஒரு தகப்பனார் என்றால் மூன்றிலே ஒரு பாகத்தை வேண்டுமென்றால் அவன் செட்டில் மெண்ட் எழுதுகின்றபொழுது இந்த விதிவிலக்கின் அடிப் படையிலே பாட்டமரி பாண்டைப்போல, ஆர்ட்டிகிள் 16—இல் இருப்பதைப்போல என்று விதிவிலக்கு அளிக்கலாம். ஆனால் தனக்கு எவ்வளவு சட்டபூர்வமான உரிமை இருக்கிறதோ அதற்கு மீறிய சொத்தை எழுதி வைக்கின்றபொழுது இது கிரயமாகவே வந்து விடுகிறது. ஆகவே, தனக்கு சட்டப்படி உள்ள பங்குக்கு எழுதுகின்றபொழுது இப்படிப்பட்ட விதிவிலக்கு அதற்குக் கூடுதலாக, சட்டப்படி தனக்கு எவ்வளவு அந்த உரிமை இருக்கிறதோ அதற்குக் கூடுதலாக இதே செட்டில் மெண்ட் என்று எழுதிவைக்கின்ற பொழுது அதற்கு விதி விலக்கிலிருந்து ரத்து செய்து, அரசினுடைய வருமானத்தை இன்னும் அதிகரிக்க வழி செய்கின்ற வகையிலே பின்னாலே இதைப்பற்றி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்ற கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைபோல இன்று பினாமி டிரான்சேக்ஷனை ஒழிப் பதற்காக என்று சில யோசனைகள் சொல்லப்படுகிறது. உண்மையிலேயே பல சமுதாய நலச் சட்டங்கள் இந்த பினாமி டிரான்சேக்ஷன்களால் முறியடிக்கப்படுகின்றன. ஏனென்றால் பல சமுதாய நலச் சட்டங்கள் தோல்வியடைவதற்கு, அந்தத் தோல்வியை உருவாக்குகின்ற ஊற்றுக்கண்ணாக இருப்பதே இப்படிப்பட்டவைகள்தான். ஆகவே, அந்த வகையில் பினாமி டிரான்சேக்ஷன்களை ஒழிக்கின்ற வகையில் செய்ய வேண்டும். பினாமி டிரான்சேக்ஷனுக்கு குறைந்த அளவுத் தொகை இருக்கின்ற காரணத்தினால், 100—க்கு 3 ரூபாய் என்ற கிரயத்தை, சட்டத்திற்கு பயந்துகொண்டு இன்னொருவருக்கு எழுதிவைப்பதும், அந்தச் சட்டத்தினுடைய ஆளுகை போய்விட்ட பிறகு திரும்ப விடுதலை எழுதி அந்த நபரிடமே வாங்குகின்ற நிலையை மாற்றுகின்ற வகையிலே அதற்குக் கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. இதே சமயத்தில் செட்டில்மெண்டுக்கு குடும்பத்திற்குள் அப்பனுக்கும் மகனுக்கும், அல்லது மகனுக்கும் அப்பனுக்கும் இடையே பரிவர்த்தனையைப் போல எழுதுவதற்கு செட்டில்மெண்டிலே விதிவிலக்கு அளித்து 100-க்கு 3 ரூபாய் என்ற கட்டணம் என்று கொடுத்திருக்கிறது. அதேபோல இந்த விடுதலைக்கும் அளிக்க வேண்டியது மிகவும் நியாயம். ஏனென்றால் ஒரு குடும்பத்திலே இருக்கின்ற தகப்பன் மகனுக்கு விடுதலை எழுதிக் கொடுக்கலாம். அதுவும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்து வாரிசுரிமைச் சட்டப்படி பெண்களுக்குப்பங்கு என்று இருக்கிறது. சில பெண்கள் தொகையைக் குடும்பத்திலேயிருந்து பெற்றுக்கொண்டுகூட அவர்களுடைய உரிமையை விடுதலை செய்து கொடுக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலைமையில் அதேபோல குடும்பங்களுக்கு, செட்டில்மெண்டிலே கொடுக்கப்

பட்டதைப்போல இங்கேயும் கொடுக்க வேண்டும். இந்த ரிலீஃப்பையும், குடும்பத்திற்குள்ளே இருக்கின்ற ஒரு பெண், அல்லது மகன் தந்தைக்கு எழுதிக் கொடுக்க வேண்டுமென்றால் அவைகளுக்கும் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஸ்டாம்ப்டியூட்டியைப் பொறுத்தவரையில் குறைவாக மதிப்பீட்டு விட்டார்கள் என்று நடவடிக்கைகள் எடுப்பது. இந்த ஸ்டாம்ப் ஆக்டின்படி ஒவ்வொரு கிராமத்திலேயும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே எந்த மதிப்பைப் போடுவது என்பதிலே பெரிய தகராறே இருந்து கொண்டிருக்கிறது. இதையும் தயவு செய்து வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் கைட் லைன் வேல்யூ என்று ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். கிராமங்களில் உள்ளவர்கள் அதைப் போடுவதா அல்லது அவர்கள் நிர்ணயிக்கின்ற மார்க்கெட் வேல்யூவா? கைட் லைன் வேல்யூ என்று போட்டால் கைட் லைன் வேல்யூவா? கைட் லைன் வேல்யூ போட்டிருப்பது சரியலல என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஆகவே, எந்த மதிப்பை பத்திரங்களில் குறிப்பிடுவது என்கின்ற சந்தேகங்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, ஸ்டாம்ப் ஆக்டில் ரெஜிஸ்தர் ஆபீசிலே கைட் லைன் வேல்யூ என்று போடப் பட்டிருப்பதைச் சட்டப்பூர்வமாக ஆக்க வேண்டும். அதேபோல கைட் லைன் வேல்யூவை எப்படி நிர்ணயிக்க வேண்டும் என்கின்ற ஒரு முறையையும் சட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று கூறி இந்தச் சட்டத்தினை வரவேற்று அமர்கின்றேன்.

[மாலை 6-50]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையிலும் நான் அதிகமாக எதுவும் சொல்லத் தேவையில்லை யென்று கருதுகிறேன். ஏனென்றால் எல்லாருமே அதை வர வேற்றிருக்கிறார்கள். அந்தச் சட்ட முன்வடிவில் சில திருத் தங்கள் கொண்டு வந்தாலும், குறிப்பாக, அதில் சொல்கிற பொழுது, சென்னை மதுரை, சேலம், கோவை, திருச்சி, ஆகிய நகரங்களுக்கு 8 சதவீதமும் மற்ற இடங்களுக்கு 6 சத வீதமும் என்று இருந்தது. மற்ற இடங்களிலே இருக்கிற 6 சதவீதத்தை இன்றைக்கிருக்கிற முறையில் அதிகப்படுத்தலாம் என்று நினைத்து ஆறை ஏழாக்கியிருக்கிறோம் என்பதுதான் அதிலே ஒன்று. மற்றவைகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். பினாமியினாலே, சில ரிஜிஸ்டிரேஷன் வருகிற பொழுது, ஏமாற்றுவதைத் தடுப்பதற்கு,

அதைக் கண்டு பிடிப்பதற்கு சட்டத்திலே சில வழிகளைச் செய்திருக்கிறோம். இங்கே அருமை சகோதரர் திரு பாலசுப்பிரமணியம் சொன்னபடி, செட்டில்மென்ட் என்கிறபொழுது அதிலே பல தவறுகள் எல்லாம் வந்துவிட்டன. செட்டில்மென்ட் என்ற முறையிலே எழுதி வைத்து விடுவது, அதற்குக் குறைசலாக பணப் பத்திரம் இருப்பதாலே. திருப்பி மறுதரம் செட்டில்மென்ட்டை ரத்து செய்வது என்பதெல்லாம் வருவதற்குக் காரணம், அதிலே செலழிக்கிற பணம் பத்திரம் மிகக் குறைவாக வாங்கப்படுவதால், செட்டில் மென்ட்டை நினைத்தவுடனே எழுதிவிடுவார்கள். ஏனென்றால், அதற்கு அதிகமான பணம் தேவையில்லை. ரத்து செய்து விடுவது என்றால், உடனே ரத்து செய்து விடுவார்கள். ஏனென்றால், அதிகமான பத்திரம் வாங்கத் தேவையில்லை. இது நிதிமன்றத்திற்குக் கூட அடிக்கடி போவதற்குக் காரணமாயிருக்கிறது அரசுக்கு வருவாய் கொண்டு வர அது இருந்தாலும், நிதித் துறைக்குப் போகாமல் நியாயம் வழங்குவதற்கும் இன்றைக்கு இது கொண்டுவரப்படுகிறது. ஆகையினால், செட்டில்மென்ட் என்றால், யார் யாருக்கு எழுதி வைப்பது என்பது இங்கே விளக்கமாகச் செட்டில் மென்ட் விதிகளிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவை முன்னுள்ள கேள்வி:

"1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்,"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றபெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2,3. பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றபெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்; துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 50/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்;

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ.) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள்— தொடர்ச்சி

(ஐ.) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி—''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

In clause 2,—

(a) for sub-clause (1), substitute the following sub-clauses, namely:—

"(1) in sub-section (1-A), for the expression "Three hu and fifty rupees per mensem", the expression "four hu rupees per mensem, shall be substituted; d

*1981ம் ஆண்டு மே மாதம் 11ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(2) in sub-section (4-B), for the expression "telephone allowance of one hundred and fifty rupees per mensem irrespective of the fact whether he has any telephone or not" the following shall be substituted, namely:—

"telephone allowance of—

(a) (i) one hundred and fifty rupees per mensem with effect on and from 1st July 1980; and

(ii) two hundred and fifty rupees per-mensem with effect on and from the 1st May 1981,

if he has a telephone at his residence;

two hundred rupees per mensem with effect on and fro the 1st July 1980 and

(ii) three hundred rupees per mensem with effect on and from the 1st May 1981,

if he has no telephone at his residence.";

(b) re-number sub-clause (2) as sub-clause (3).

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause 1, for sub-clause (2), substitute the following sub-clause, namely:—

(2) (i) clause (1) of Section 2 shall be deemed to have come into force on the 1st May 1981.

(ii) clause (3) of section 2 shall be deemed to have come into force on the 1st July 1980.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

[1981 மே 12

பிரிவு 1. திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவயின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 13-5-1981 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6.56க்கு ஒத்திவைக்கப் பெற்றது,

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

208. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 501 முதல் 620 வரை).

209. மீனளத் துறையின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் (ஏழாவது சட்டமன்றப் பேரவை) நான்காவது அறிக்கை (தமிழ்).

210. எழுதுபொருள் அச்சுத்துறைப் பற்றிய 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மதிப்பீட்டுக் குழு அளிக்கும் (ஏழாவது சட்டமன்றப் பேரவை) ஐந்தாவது அறிக்கை (தமிழ்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS